
# உள்ளம்



## 94ம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்

## களுவாஞ்சிகுடி

## மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

(தேசிய பாடசாலை)

- 2013 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம்

## 94ம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்

கழுவாஞ்சிகுடி

மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் மகுட வாசகம்

"உள்ளுக எல்லாம் உயர்வு"

*"Thoughts to be Excellent"*

## குறிக்கோள்

சகலருக்கும் கல்வி

சகலருக்கும் சமமான கல்வி

சகலருக்கும் சமமான தரமான கல்வி

## *Aim*

***Education for All,***

***Equal Education for All,***

***Equal and Efficient Education for All***

## *Vision*

***Creating balanced personality students who are to face future challenges of modern technology world***

## தூரநோக்கு

நவீன தொழிநுட்ப உலகின் சவால்களை எதிர்கொள்ளத்தக்க சமநிலை ஆளுமையுள்ள மாணவர் சமூகம்.

## *Mission*

***Creating students possessing modern technical skills, following social values and suitable for the job world with the ability of facing and succeeding the future challenges.***

## பணிக்கூற்று

நவீன தொழில்நுட்பத்திறன் வாய்ந்த வேலையுலகிற்கு பொருத்தமானதும், விழுமியங்களை பின்பற்றக் கூடியதுமான, எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய மாணவர் சமூகத்தினை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் விபரம்.

1. பாடசாலையின் பெயர் - மட்/பட்டிருப்பு ம.ம.வி. தேசிய பாடசாலை. களுவாஞ்சிகுடி.
2. பாடசாலை ID இலக்கம் - 1504011
3. பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம் - 14185
4. கோட்டம் - மண்முனை தென் எருவில் பற்று.
5. வலயம் - பட்டிருப்பு
6. மாகாணம் - கிழக்கு
7. பாடசாலையின் முகவரி - வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி
8. தொலைபேசி இலக்கம் - 065 2250111
9. பாடசாலையின் இணையத்தள முகவரி - www. paddiruppummv.sch.lk
10. பாடசாலையின் மின்னஞ்சல் முகவரிகள்:
    - paddiruppummv@gmail.com.
    - paddiruppummv.kaluwanchikudy@myetisalat.lk
11. பாடசாலை வகை - 1AB, தேசியபாடசாலை
12. வகுப்புக்கள் - 1 - 13 வரை

## பாடசாலை இலச்சினையின் விளக்கம்

❖ நெற் கதிர் - சூழலிலுள்ள விவசாயச் செய்கையை குறிக்கின்றது.

❖ சூரியன் -கிழக்கின் சூரிய உதயம்.

❖ நீர் - நீர் வளம்

❖ சுடர் - பிரகாசமாக இருத்தல்.

❖ புத்தகம் - கல்வி

❖ தாமரை - கள்ளமற்ற வெள்ளை உள்ளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாலயகீதம்

இலகுநல் லிசையொடுவாழ்க-எம
தெழில் கொள் கலாலயம் வாழ்க-இலகு..
கலையறிவியல் லொளிர் சோதி-தெய்வக்
காதலையுட்டுதாயாதி
பலகலைநியமம் பட்டிருப்பு
மத்தியமாவித்தியாலயமே-இலகு

மீனிசைபாடுநல்வாவி-விளை
லோங்குகழனிகள் மேவி
வானுயர்நதபலசோலை-வள
மருவுமெங்கள் கலாசாலை - இலகு


வாழ்வுறுசீர்களுவாஞ்சிகுடி
மாண்புவீங்குகலைநிதியம்
தாழ்விலாதெவருங் கூடித் -தாய்
உரிமைகொள்ளும் ஒருநிலையம் - இலகு

மானிலமீதினில்வாழ வழி காட்டும்
அன்னைநிதம் வாழ்க
வான் நிறைந்தமலைமேலே-மதி
போலவே நிலவிவாழ்க - இலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் ஆசிரியரின் உள்ளத்திலிருந்து ...



94 வது அகவையில் கால்பதித்து கம்பீரமான முறையிலே தனது பெருமையை எடுத்துச் சொல்லி பெருவிழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் "உள்ளம்" சிறப்பு மலர் உங்கள் கைகளில் இருப்பதைப் பார்த்து இப் பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையிலும் இச் சிறப்பு மலரின் ஆசிரியன் என்ற வகையிலும் நானும் எனது பாடசாலையுடன் சேர்ந்து பெருமைப்படுகிறேன்.

மலைபோல் பல தடைகள் வந்த போதும் அவற்றை ஒரு சவாலாக ஏற்று பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளையும் பெற்று வெற்றியின் சின்னமாக உங்களிடம் இம் மலரை ஒப்படைக்கிறேன்.

இம் மலர் சிறப்புற ஆசிச் செய்தி வழங்கிய சுவாமி கபாலீசானந்தா அவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய பெரியவர்களுக்கும், ஆக்கங்களை தந்துதவிய அன்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றும் மாணவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு விடுமுறை நாட்களிலும் தமது வேலைகளை ஒதுக்கிவிட்டு இம் மலரை குறித்த தினத்தில் சிறப்பாக வெளியிட வேண்டும் என சரவைநோக்குனர் பிரிவினரை மனமார வாழ்த்துகிறேன். அத்தோடு எம்மலரை அழகுற வடிவமைத்த இப் பாடசாலையின் பழைய மாணவன் E.P.தாஸ் அவர்களுக்கும், மற்றும் கணனி தட்டச்சு செய்த த.கோபி, யோ.அனுஜா, ர. சுகன்ஜா அவர்களுக்கும், இந் நூலை குறித்த காலத்திற்குள் அழகுற வெளிவருவதற்கு அச்சிட்டு தந்த "மாருதி" அச்சகத்தாருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூல் வெளிவருதற்கு அவ்வப்போது ஆலோசனை வழங்கிய அதிபர் திரு.பொன்.வன்னியசிங்கம் அவர்களுக்கும் தடைகளை தகர்த்தெறிய உரமூட்டிய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் Dr.கு.சுகுணன் அவர்களுக்கும் பல வழிகளிலும் இந் நூல் வெளிவர உதவிநல்கிய அன்புள்ளங்களுக்கும் மலர்க்குழு சார்பாகவும் , பாடசாலை சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலானது தனிப்பட்ட உழைப்பு அல்ல. இந் நூல்குழுவின் அயராத உழைப்பு ஆகும்.

- நன்றி -

இதழாசிரியர்,

**கி.குமாரசிங்கம்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக் குழு

**ஆலோசகர் :-** திரு. பொன் வன்னியசிங்கம் (அதிபர்)

**மேற்பார்வை :-** திரு. க. தம்பிராஜா (பிரதி அதிபர்)
திரு. த. ஜனேந்திரராஜா (பிரதி அதிபர்)
திருமதி. அ. சற்குணராசா (பிரதி அதிபர்)
செல்வி. கோமதி சிவருகு (உப அதிபர்)

**மலராசிரியர் :-** திரு கி. குமாரசிங்கம்

**சரவை நோக்குனர்கள் பிரிவு:**

திருமதி. மாலினிதேவி இன்பராசா
திருமதி. கிருஸ்ணவேனி குணவர்த்தனன்
திருமதி மதிவதனி பிரபாகரன்

**தொடர்பாடல் பிரிவு:**

திரு. P. செசல்லத்துரை
திரு. K. ஜெகதீஸ்வரன்
திரு. V. ரவீந்திரமூர்த்தி
திரு. A.M. பறுஸ்

**புகைப்படங்கள்:**

திரு. சு. துஷாந்

**தகவல் சேகரிப்பு:**

திருமதி R. இராசதுரை
திருமதி. M. நவேந்திரன்
திரு. T. கமலநாதன்
திரு. S. சுரேந்திரன்
திரு. K. பிரபாகரன்
திரு. S. சிவதாசன்
திருமதி. V. பார்த்தீபன்
திருமதி. K. அகிலன்
திருமதி ஐ. வரதராஜன்
திருமதி. J. நடேசானந்தம்

**கணனிப்பிரிவு:**

திரு. R.D. ஜெயராஜ்
திரு. S. விஜயதர்சன்
திரு. S. கோகுல்ராஜ்
செல்வி. T.A. றுத்ஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி கபாலிசானந்தா அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவரின் திருவருளால் தாங்கள் அனைவரும் நலமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க எல்லாம் வல்ல பகவான் துணைபுரிவாராக.

பட்டிருப்புத் தொகுதியின் முன்னோடிப் பாடசாலையான, மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை இவ்வருடம் தனது 94 வது ஆண்டு பூர்த்தியை ஒட்டி ஆண்டு விழாவோடு கூடிய மலர் ஒன்றை மிகச் சிறந்த முறையில் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ, அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை என்று கூறினார் சுவாமி விவேகானந்தர்.

இப்பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் இணைந்து இத்தகைய அறிவுசார் முயற்சிகளில் ஈடுபடுவது பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் மேற்படி செயற்பாடுகள் மாணவர்களின் அறிவின் எல்லையை விரிவடையச் செய்யும்.

உடலும், மனமும் உள்ளிருக்கும் ஆன்மாவோடு இயைந்தபடி சீராக வளர்வதற்குக் கல்வி உதவவேண்டும். சுருக்கமாக சொல்வதானால் ஆளுமை ஒருங்கிணைப்பையும், சிறந்த குண நலன்களையும் அளிக்கக்கூடிய விதத்தில் கல்வி அமைய வேண்டும். நமது கல்வி முறையானது, நமது சமயம், மற்றும் கலாசாரத்தில் அடங்கியுள்ள நீதி, நல்லொழுக்கம், ஆன்மீகக்கருத்துக்களின் அடிப்படையில், உறுதியாக அமையுமாயின் நாம் மேலான சிறந்த பெறு பேறுகளை பெறமுடிம்.

இம்மலர்வெளியீடு, இப்பாடசாலையின் 94ஆம் ஆண்டு கால சரித்திரத்தை, எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ள உதவும் ஒரு ஆவணப்பெட்டகமாக அமையுமானால் சிறப்பாக இருக்குமென நினைக்கிறேன்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று கல்வியை கண்ணெனப்போற்றிப் வளர்த்தவர்கள் நம்மூதாதையர். அந்தப்பாரம்பரியத்தின் வழி நின்று, கல்வியொளி மங்கிவிடாது, மாணவர்கட்கும், ஆசிரியர்கட்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் அதிபருக்கு, எமது மேலான பாராட்டுக்கள். நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற்று விளங்க வாழ்த்துகிறேன். இந்த ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இணைந்துள்ள அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இறைபணியில்,

**சுவாமி கபாலிசானந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ மீள் குடியேற்றப் பிரதியமைச்சரின்

# வாழ்த்துச் செய்தி



படுவான் கரையையும் எழுவான் கரையையும் இணைக்கும் மத்திய நிலையமாக விளங்கும் இடத்திலே ஒரு அறிவுச் சங்கமமாய் மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் அமைந்திருப்பது பட்டிருப்பு தொகுதி மக்கள் செய்த பெரும் பாக்கியமாக நான் கருதுகின்றேன்.

இப்பாடசாலையானது கடந்து வந்த பாதையிலே பல சோதனைகளைச் சந்தித்த போதும் தனது சாதனைகளிலே சாதனைபடைத்த பாடசாலை மட/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் ஆகும். இப்பாடசாலையின் கடந்தகால பரீட்சைப் பெறுபேறுகளை நோக்குகின்ற போது நகர்ப்புற பாடசாலையை விஞ்சுகின்ற அளவுக்கு தரம்-05 புலமைப் பரீட்சை முடிவுகளும் க.பொ.த (சா.த) பரீட்சை முடிவுகளும் க.பொ. த (உ.தர) பரீட்சை முடிவுகளும் பதிவாகி உள்ளமை யாவரும் அறிந்த விடயமே.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் இப்பாடசாலை ஒரு முன் மாதிரியான முதல் தர பாடசாலையாக விளங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலை பல கலைஞர்களையும் வைத்திய கலாநிதிகளையும் பொறியியலாளர்களையும் கல்வியியலாளர்களையும் ஆன்மீக வாதிகளையும் சமூகத் தொண்டர்களையும் வளர்த்தெடுத்து. தனது 94 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை மார்தட்டிக் கொண்டாடிக் கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இந்த வகையில் தனது சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலையின் பழமை மாறாது புதுமைகளைப் புகுத்தி தொழிநுட்ப உலகுக்கு ஏற்ற வகையிலும் சவால்களுக்கு முகங்கொடுக்க கூடிய வகையிலும் மாணவ சமுதாயம் உருவாவதற்கு உரமூட்டிக் கொண்டிருக்கும் அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்களையும் அவரோடிணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர்களையும் மற்றும் மாணவர்களையும் பழைய மாணவர்கள் பெற்றோர் நலன் விரும்பிகள் அனைவரையும் உளமார வாழ்த்துகின்றேன்.

**கௌரவ.விநாயகமூர்த்தி முரளிதரன்,**
மீள் குடியேற்றப் பிரதியமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்

கௌரவ.பொன் செல்வராசா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



பட்டிருப்பு தேசிய பாடசாலை காணும் 94வது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளிப்படவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். நான் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதிப்படுத்தினாலும் பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்தவன் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சிக்குக் காரணம்.

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இக்கல்விக் கூடம் அமையப் பெற்றுள்ளது. இக்கூடம் தேசிய பாடசாலையாகும் முன்னர் மத்திய மகாவித்தியாலயமாக விளங்கியது. அதற்கு முன்னர் பட்டிருப்பு மகாவித்தியாலயமாக இருந்தது. பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 1960, 1970 களில் அத்தொகுதி மாணவர்களுக்கான கல்விப்பயனை வளர்க்க இம் மகாவித்தியலத்தையே நம்பியிருந்தனர். படுவான்கரைப்பகுதி மாணவர்கள் மட்டுமன்றி வடக்கே குருக்கள் மடம் தொடக்கம் தெற்கே பெரிய கல்லாறு வரைக்கும் மற்றும் எருவில், குறுமன்வெளி பகுதி அடங்கலாக பெரும் பகுதி மாணவர்கள் இங்கு கல்வி பயின்றனர்.

***"குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சகத்தே நல்லம் யாமென்றும் நடுவு நிலைமையாற் கல்வி யழகே அழகு"***

என்னும் பாடலுக்கு அமைய கல்வி அழகு பெற தன்னை நம்பி நாடி வந்தவர்களுக்கு இம்மியும் குறையாமல் கல்வி அழகை அள்ளி வழங்கியது. இதற்கு அக்காலத்தில் அர்ப்பணிப்புடன் கல்விப் பணிபுரிந்த ஆசிரியர்கள் காரணகர்த்தாக்களாக அமைந்தனர். நம்மவர்கள் மட்டுமல்ல வடக்கே இருந்து வந்த ஆசிரியர் திலகங்களும் சளைக்காமல் கைகொடுத்தனர்.

1960 களில் இக்கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட போது இருவர் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றனர். இரண்டாவது தடவையில் 13 பேர் அனுமதி பெற்றனர்என்றால் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் கல்வி நடவடிக்கைகள் உன்னத நிலையில் இருந்தது என்பதற்கு வேறு சான்று அவசியமில்லை.

இதே போன்று விளையாட்டு பிறக்கிருத்திய நடவடிக்கைகளிலும் இக்கலைக் கூடம் பின்னிற்கவில்லை. களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த சச்சிதானந்தம், களுதாவளையைச் சேர்ந்த இராசரெத்தினம் போன்ற அக்கால மாணவர்கள் விளையாட்டில் காட்டிய திறமை அபரீதமானது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் அறிவுத் திறன் மனப்பாங்கு இம் மூன்றையும் பட்டிருப்பு மகாவித்தியாலயம் வளர்த்தது.

***"கேடில் விழுச்செல்வம் ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை"***

என்றார் வள்ளுவர். அழிவில்லாத செல்வம் கல்வி. அழியக்கூடிய ஏனையவை செல்வம் அல்ல. மூன்று தசாப்த காலத்திற்கும் மேலான விடுதலை வேட்கைப் போராட்டத்தில் சொத்து, சுகம், விலை மதிக்க முடியாத உயிர் அனைத்தையும் இழந்தோம் ஆனால் கல்வியை மட்டும் நாம் இழக்கவில்லை.

இவ் வித்தியாலயம் மேலும் மேலும் மேலோங்க வேண்டும் 94 ஆண்டுகளைக் கடந்து விட்டோம் என்பது முக்கியமல்ல எவற்றைச் சாதித்தோம் என்பதுதான் முக்கியம்.

காலங்கள் பெருமைப்படக் கூடியவை அல்ல, தரம்தான் பெருமைப்படக்கூடியது. கண்டது கற்க பண்டிதனாவோம். கல்வி கரையில் கற்பனை நாள் சில. தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைந்தூறும் அறிவு. ஆகவே ஆசிரியர்களும் கற்று மாணவர்களுக்கு கற்பித்து அவர்களை மேலும் கற்கத் தூண்ட வேண்டும்.

***"உள்ளுக எல்லாம் உயர்வு"***


**கௌரவ. பொன்.செல்வராசா,**

பாராளுமன்ற உறுப்பினர்.

68, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவனாய் வாழ்த்தும்
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ. பாக்கியசெல்வம் அரியநேத்திரன் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

மீன்பாடும் தேனாட்டில் தமிழ் தேசிய தொகுதியாய் மிளிரும் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் பல்துறை அறிவியல் ஆளுமை விருட்சமாக எழுந்துநிற்கும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் எனும் தேசியக் கல்லூரியானது தொண்ணூற்றி நான்கு அகவைதனில் தடம் பதிப்பதையிட்டு மனதார வாழ்த்துகின்றேன்.

இப் பாடசாலையின் ஒரு பழைய மாணவனாகிய நான், இவ் அகவை விழா இடம் பெறும் இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினராய் இருந்து நான் கல்வி கற்ற பாடசாலைக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியில் கல்விபயின்ற பலர் சமூகம் மதிக்கத்தக்க மனிதர்களாக எமது நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் வைத்தியர்களாகவும், பொறியியளாளர் களாகவும், அரச அதிகாரிகளாகவும், ஆளுமையுள்ள தலைவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும், கலைஞர்களாகவும் ஆற்றல் மிக்கவழிகாட்டியாகவும் உருவாகியுள்ளதை எவராலும் மறுதலிக்கமுடியாது.

எமது அரசியல் ரீதியான கடந்தகாலப் போராட்டங்களிலும் இப் பாடசாலையில் கல்விபயின்ற இளைஞர்கள் பல உன்னத தியாகங்களைப் புரிந்துள்ளதையும் நினைவுகூர விரும்புகின்றேன்.

பல சாதனையாளர்களை கல்வியின் ஊடாகவும், விளையாட்டின் ஊடாகவும், அரசியல் ஊடாகவும் உருவாக்கிய இக் கல்லூரியானது இன்று தேசிய கல்லூரியாய் தலைநிமிர்ந்து இன்றைய உலகமயமாக்கல் திட்டத்திற்கேற்ப மாணாக்கர்களை பன்முக ஆளுமை அறிவான்களாக உருவாக்குவதற்கு இக்கல்லூரியின் முதல்வரும் அவருடன் இணைந்து கல்விபுகட்டும் ஆசிரியர் சமூகமும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதையிட்டு அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பரீட்சையில் சித்தியடைய வைக்கும் கல்வியாய் மட்டும் இல்லாமல் வாழ்க்கையில் ஒழுக்கத்தை கடைப்பிடித்து சமூகத்தில் மதிக்கத்தக்க மனிதர்களாக்குவதற்கான கல்வியையும் இக்கல்லூரி தொடர்ந்தும் முன் எடுக்க வேண்டுமென உரிமையுடன் கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

*" பட்டிருப்பு தேசிய கல்லூரி திக்கெட்டும்*
*பற்றுள்ள சமூகத்தை உருவாக்கட்டும்*
*படிப்போர் மனங்கள் பூரிக்கட்டும்*
*பணிவிடைகள் வெற்றியாகட்டும்*
*பராங்கதன் அதற்கு துணையாகட்டும்"*

**கௌரவ. பாக்கியசெல்வம் அரியநேத்திரன்** (அரியம்)
பாராளுமன்ற உறுப்பினர் .

"இரதாலயம்",
அம்பிளாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**
**கௌரவ. சீனித்தம்பி யோகேஸ்வரன் அவர்களின்**



# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிருப்புத் தொகுதியில் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தனது 94வது ஆண்டு நிறைவு விழாவை பாடசாலை தினம் என்னும் பெயரில் கொண்டாடுவதையிட்டு முதலில் எனது மகிழ்ச்சியை தெரிவிக்கின்றேன்.

இவ்வேளை ஒரு தேசிய பாடசாலையாக மத்திய அரசாங்கத்தின் கீழிருந்து செயற்பட்டு வரும் இப்பாடசாலையானது கலைப் பிரிவு வர்த்தகப் பிரிவு விஞ்ஞானப்பிரிவு கணிதப் பிரிவு உட்பட்ட உயர்தர வகுப்புக்களின் மூலம் வருடாந்தம் ஒரு பதவிக்கு எதிர்காலத்தில் கொண்டு செல்லும் பணியிலும் திறம்பட செய்றப்பட்டு வருகின்றது உன்பதை களுவாஞ்சிகுடி பகுதியில் வருடாந்தம் நடாத்தப்படும் கல்வி, விளையாட்டு உட்பட்ட நிகழ்வுகளின் கலந்து கொள்ளும் போது இங்கு நடாத்தப்படும் கௌரவிப்பு செய்ற்பாடுகளை வைத்து நோக்கக் கூடியதாக உள்ளது. உண்மையிலே பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள மிகப்பழமை வாய்ந்த ஒரு பாடசாலையாக பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் விளங்குகின்றது.

அதுமட்டுமின்றி இப்பாடசாலை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் கூட அதிகமான மாணவர்களை சித்திபெற செய்வதில் ஆர்வம் காட்டி வருவதையும் அறிந்துள்ளேன். கல்வி செயற்பாட்டுடன் விளையாட்டு மற்றும் ஏனைய துறைசார் செயற்பாடுகள் போன்றவற்றிலும் மிகவும் முன்னேற்றத்தில் உள்ளதையும் என்னால் அறிய முடிந்தது.

மேலும் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட்ட பாடசாலை சமூகத்தினருக்கும், வெளிச் சமூகத்தினருக்கும் நெருங்கிய தொடர்பு இங்கு காணப்படுகின்றது. பெற்றார் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் உட்பட்டவைகளும் இப்பாடசாலையை முன்னேற்றுவதில் மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர். அத்தோடு களுவாஞ்சிகுடி பகுதியில் உள்ள பிரத்தியேக கல்வி நிலையங்கள் கூட இப்பாடசாலை மாணவர்கள் விடயத்தில் மிகவும் கரிசனை காட்டிவருவதை சிலகாலமாக களுவாஞ்சிகுடி பகுதியில் வாழ்ந்தவர் என்றவகையில் என்னால் அறிய முடிந்தது.

பொதுவாக இப்பாடசாலையின் முன்னேற்றம் படிப்படியாக உயர்ந்து வருகின்றது. இவ்வேளையில் தான் தமது 94வது அகவையை பூர்த்தி செய்யும் நிலையை இப்பாடசாலை பெற்று விழா கொண்டாடப்படுகின்றது.

எனவே பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் என்னும் தேசிய பாடசாலையின் 94வது ஆண்டு நிறைவு விழாவான பாடசாலை தினத்துக்கு எனது மனப்பூர்வமான நல்வாழ்த்தை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

- வரப்புயர -

**கௌரவ. சீ. யோகேஸ்வரன்**
பாராளுமன்ற உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாடசாலைகளின் கல்விப் பணிப்பாளர்
திரு. ரஞ்ஜித் சந்திரசேகர அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பிரதேசத்தின் மகுடமாக பிரபல்யம் வாய்ந்த தேசிய பாடசாலையாம் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் 94ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி மற்றும் சிறப்பு மலராக வெளியிட இருக்கும் சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றினை வழுங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கல்லூரி கல்வியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பல அடைவுகளைப்பெற்று வெற்றிநடை போட்டுக்கொண்டிருப்பதை நாம் யாவரும் அறிவோம். இக்கலைக் கூடத்தின் வெற்றிக்கு பாடுபடும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள்,பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் மனதார வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

மேலும் 94ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் முகமாக நடாத்தப்படும் கண்காட்சியும், சஞ்சிகை வெளியீடும் சிறப்பாக நடைபெற வேண்டுமென வாழ்த்தி எதிர்காலத்தில் இக்கல்லூரி இன்னும் பல சாதனைகளைப்படைக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

**ரஞ்ஜித் சந்திரசேகர,**
பணிப்பாளர்,
தேசிய பாடசாலைகள்,
கல்வி அமைச்சு,
இசுருபாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய கல்வி அமைச்சின்**
**அழகியற்கலை பாடநெறிக்கான பணிப்பாளர்**
**திரு. துஷார குணதிலக அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

අධ්‍යාපන අමාත්‍යාංශයේ සුභාශිංසනය

මඩකලපුව පදිරිප්පු ජාතික පාසලේ **94** වන වාර්ෂික සංවත්සරය නිමිත්තෙන් පවත්වනු ලබන විශේෂ උත්සවය අතිශයින්ම සාර්ථක වේවායි ප්‍රාර්ථනා කරමි.

වසර **30** ක් පුරාවට පැවැති යුද්ධයේ අමිහිර අත්දැකීම් වලින් අත්මිදී සුවහසක් පැතුම් සමග ඒකාත්මිකව ජාතියේ දරුවන් ගේ ගොනුවට මෙම පාසලේ දරුවන් යොමු කරවීමට විදුහල්පති සහ ආචාර්ය මණ්ඩලය දරනු ලබන උත්සාහය අගය කරමි.

දූ - පුතුන්ගේ කුසලතා අගැයීම සඳහා මෙම විද්‍යාලය ගෙන ඇති පියවර විශිෂ්ඨත්වයෙන් පැවැතීම ප්‍රශංසා කටයුතුය. ග්‍රාමීය දරුවන් සමාජයීකරණය කොට ඔවුන් දේශයේ වැදගත් මෙන්ම ඵලදායී දරු පරපුරක් බවට පත්කිරීමට සිසුන්ගේ කුසලතා අත්වැලක් කොට තිබීම අගනේය.

මෙම **94** වන සංවත්රය සමරන මොහොතේ මෙම විද්‍යාලයේ වර්තමාන ප්‍රගතිය වෙනුවෙන් ගරු අධ්‍යාපන අමාත්‍යතුමා, ගරු අධ්‍යාපන ලේකම්තුමා අතිශය සතුටට පත්වනු ඇත.

මෙම ප්‍රදර්ශනය සංවිධානය කරන විදුහලේ විදුහල්පති ඇතුළු සමස්ත කාර්ය මණ්ඩලයට මගේ ස්තුතිය පුදකරමි.

තුෂාර ගුණතිලක

අධ්‍යාපන අධ්‍යක්ෂ (සෞන්දර්ය)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்
## A.T.M.நிஷாம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பட்டிருப்பு கல்வி வலயத்தில் காணப்படும் ஒரே ஒரு தேசிய பாடசாலை யாகிய மட் / பட்டிருப்பு தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடி, அதன் 94 ஆண்டு கால வரலாற்றுப் புகழை பறை சாற்றும் முகமாக ஏற்பாடு செய்துள்ள கல்லூரி தின சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச் சியடைகின்றேன்.

***"உள்ளுக எல்லாம் உயர்வு"*** எனும் மகுட வாசகத்தை தாங்கி நிற்கும் இப் பாடசாலை தனது கற்றல் கற்பித்தல் பணிக்கு அப்பால் பன்முக ஆளுமை உள்ள சமூக உறுப்பினர்களை செப்பனிட்டு வழங்குவதன் ஊடாக சமூகத்தின் அனைத்து வகையான எதிர்பார்ப்புக்களையும், நிவர்த்தி செய்து இச் சமூகத்தின் உயர்வுக்கான ஓர் ஆணிவேராக திகழ்கிறது.

தொன்று தொட்டு தமிழ் கலாசார, பாரம்பரிய விழுமியங்களை பேணி பாதுகாத்துக் கொண்டு களுவாஞ்சிகுடி கிராமத்திற்கு மட்டுமல்லாது பட்டிருப்புத் தொகுதியின் பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த மாணவர்களும் நவீன உலகிற்குள் பிரவேசிப்பதற்கான அறிவின் நுழைவாயிலாக தொழிற்பட்டு வரும் இப் பாடசாலை பிரதேசத்தின் நீண்ட காலம் தொட்டு சிறப்பான அடைவு மட்டத்தை அனைத்து துறைகளிலும் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த வரலாற்று நிகழ்வை சிறப்பாக நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்கள் உட்பட அவரோடு இணைந்து அயராது உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், ஆகிய அனைத்து தரப்பினரதும் சகல முயற்சிகளும் வெற்றியடைந்து கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்லாது தேசிய அளவில் ஒரு வரலாற்றுச் சுவடுகளாக அமையட்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

**A.T.M.நிஷாம்,**
மாகாணக் கல்விப் பணிப்பளார்,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்ட அரசாங்க அதிபர்**

**அவர்களால் வழங்கப்பட்ட**



# வாழ்த்துச் செய்தி

மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடியின் 94வது ஆண்டு நிறைவையொட்டி பிரகடனப் படுத்தப்பட்டுள்ள கல்லூரி தின விழா சிறப்பு மலருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பட்டிருப்பு தேர்தல் தொகுதியிலும், பட்டிருப்பு கல்வி வலயத்திலும் காணப்படுகின்ற ஒரே ஒரு தேசிய பாடசாலையான இப்பாடசாலை சுற்றுப்புற கிராமங்களிலுள்ள ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் எதிர்கால தலைவிதியை தீர்மானிக்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்து சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை அன்று முதல் இன்றுவரை தூய தமிழ் மரபையும் கலப்பற்ற கலாசார விழுமியங்களுடன் கூடிய வாழ்வியல் வழிமுறைகளையும், விதைத்து தனிமனித சமூக உருவாக்கத்துக்கு அரும் பணியாற்றிவருகின்றது.

இவ்வாண்டு இப்பாடசாலையில் பிரமாண்டமான முறையில் இடம்பெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போது இப்பாடசாலையின் மனிதவளம், கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்ற விடயங்கள் ஒரு நகர்ப்புற பாடசாலையை விட சிறப்பாக காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. ஆனால் கடுமையான வளப்பற்றாக்குறையை எதிர்கொண்டே இச்சிறப்புக்கள் அனைத்தும் அடையப்பெற்றுள்ளன என்பது உண்மையிலேயே இப்பாடசாலையின் அதிபரின் நிருவாகத்திறனையும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் இக்கல்லூரி தினம் இப்பாடசாலையின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றிவிப்பதாய் அமையட்டும் என மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி. P.S.M. சாள்ஸ்,**

மாவட்ட அரசாங்க அதிபர்,

மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை தினம் சிறப்புற வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் வழங்கப்படும்



# வாழ்த்துச் செய்தி

பட்டிருப்பு கல்வி வலயத்தின் கலங்கரை விளக்காகத் திகழும் மட்/பட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாகும்.

சமூகத்திற்குத் தேவையான தலைமைத்துவம் மிக்க நற்பிரஜைகளை உருவாக்கி சமூகத்தினுள் உட்பாய்ச்சுகின்ற பாரிய பணியை காலம் காலமாக முன்னெடுத்து வருவதை நான் நன்கு புரிவேன். சமூகம் இன்று அவாவி நிற்கின்ற அறிவு. திறன், மனப்பாங்கு மிக்க நன் மாணக்கர்களை உருவாக்குவதில் அகல் விரி சிந்தனையுடன் செயற்படுகின்ற பாடசாலை முகாமைத்துவத்தைப் பாராட்டுவதில் பெருமையடைகின்றேன்.

கடந்த 94 வருடங்களாக இப்பாடசாலை பெற்றுக் கொண்ட பட்டறிவை பலரும் பகுத்துணரும் வண்ணம் *"பாடசாலைத் தினத்தினூடாக"* பரவலடையச் செய்திருப்பது கண்டு மனம் மகிழ்வடைகின்றேன். 94 வருட நிறைவு தினத்தை வெறும் சம்பிரதாய பூர்வமான நிகழ்வாகக் கருதி விழாவையெடுக்காமல் பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகளை அழைத்து *"அறிவுச் சுரங்கம்"* எனும் பொதறிவுப் போட்டி *"கருத்துக்களம்"* எனும் சொற்சிலம்பம், மற்றும் மென்பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டி , என்பவற்றை நடாத்தி இவற்றுக்கு எல்லாம் மகுடம் வைத்தாற் போல் பாடசாலையை மையமாக வைத்து எவை எவற்றையெல்லாம் சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றதோ அவை அவற்றை எல்லாம் உள்ளடக்கி மாபெரும் ஊர்வலத்தை நடாத்தி கல்வியினூடாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியமை கண்டு உயிர்த்துடிப்புள்ள பாடசாலையாக இப் பாடசாலை விளங்குவதையிட்டு இப் பாடசாலை சமூகத்தைப் பாராட்டுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விப் பணிகளில் ஈடுபடுகின்றவர்கள் புத்தாக்க சிந்தனைகளில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதான் மாற்றத்தை ஏற்படுத்தி மகிழ்ச்சிகரமான கல்விப் பணிகளில் ஈடுபட முடிவதுடன் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியும் என்பதற்கு இவ் விழா ஒரு தரச்சுட்டியாக அமைந்துள்ளது.

இவ் விழாவின் மையமாக இழையோடும் சிந்தனை வீச்சு பாடசாலையின் செயற்பாடுகளை புதிய கோணங்களில் புதிய களங்களில் பார்க்கத் தூண்டுபவையாக அமைந்திருப்பது கண்டு மன மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலை தினத்தையிட்டு ஆவணப் பெட்டகமாகவும், கல்வியியல் சார்கட்டுரைகளையும் சுமந்து வரும் சிறப்பு மலரும் அறிவை அடித்தளமாகக் கொண்டு நமக்கான இருப்பியல் கேள்விகளை எழுப்ப வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவது கண்டு மனம் நிறைவடைகின்றேன்.

நிறைவாக பாடசாலை தின விழா சிறப்புறவும், சிறப்பு மலர் சிந்தனையைக் கிளறவும் பன்னெடுங்காலம் இப் பாடசாலை மாற்றங்களை உள்வாங்கி கல்விப் பணியாற்றவும் எல்லாம் வல்ல பரம் பொருளை யாசிக்கின்றேன்.

**திருமதி. நகுலேஸ்வரி புள்ளநாயகம்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்
பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம்
களுவாஞ்சிகுடி.

2013.05.21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



மண்முனை தென்எருவில் பற்று பிரதேச பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுள் மட்/பட்டிருப்பு மகா வித்தியாலயம், ஒரே ஒரு தேசியபாடசாலையாக இருந்து பல கல்வி மான்களை உருவாக்கி 94ஆம் ஈண்டு நிறைவு தின விழாவிலே ஒரு நினைவு மலரையும் வெளியிடுவதையிட்டு நான் பெருமையுடன் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையானது மாற்றங்களை ஏற்படுத்தி புதுமைகளை புகுத்தி முன்மாதிரியாக திகழ்வது எதிர் கால சந்ததினருக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

கடந்த 94 ஆண்டு காலப்பகுதிகளில் பெயர் சொல்லுமளவிற்கு பெருமை பெற்ற விளங்குவதற்கு முன்னின்று உழைத்த அதிபரிகளையும் கல்வி சமூகத்தையும் இவ்விடத்தில் நினைவு கூருவது பொருத்தமானதாகும்.

இதே வேளை 2002 ஆண்டு தொடக்கம் இப்பாடசாலையை பொறுப்பேற்ற அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்களின் காலத்திலே பெரு வெற்றி கண்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இவரது காலத்தில் க.பொ.த (உ.த) கணித விஞ்ஞானதுறை புனரமைக்கப்பட்டு பெருமளவாள மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்புவது சிறப்பான அம்சமாகும். இதேபோல் க.பொ.த (சா.த) பரீட்சையிலும், தரம் 05 புலமைபரீட்சை பரீட்சையிலும் மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்வது கோடிட்டுக் காட்ட வேண்டிய விடயமாகும்.

இவரது காலத்திலே இணைப்பாட விதமான செயற்பாடுகளும் அதோடு பௌதீக அபிவிருத்தியும் உயர்வடைந்து பாடசாலை புதுப்பொலிவுற்று விளங்குவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலையை வழிநடத்தி கொண்டிருக்கும் அதிபர் , அவரோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், கல்விசாரா மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை என்பவற்றையும் மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. எஸ்.சுதாகரன்**
பிரதேச செயலாளர்,
ம.தெ. எருவில் பற்று.
களுவாஞ்சிகுடி .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை தின விழா சிறக்க கோட்டக் கல்வி அதிகாரி
அவர்களால் வழங்கப்படும்



# வாழ்த்துச் செய்தி

விரிந்து வரும் சிறகுத் தொகுதியின் ஒரு சிறு பங்கையே கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.பல பங்குகள் பாடசாலைகளால் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளினூடாகவே பெற்றுக் கொள்ளமுடியும். கலைத்திட்டத்தினூடாகவும், அதற்குச் சமாந்தரமாக இணைக்கலைத் திட்டத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளும் அறிவுத்திறன் உவப்பான மனப்பாங்கே கல்வியின் இறுதி இலக்காகிய நற்பிரஜைகளை உருவாக்குகின்றது. இச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் இப் பாடசாலை வெற்றி கண்டுள்ளது. என்பதை காலத்திற்கு காலம் சமூகத்திற்கு வெளிப்படுத்தி வந்துள்ளதை நான் நன்கு அறிவேன்.

சம காலக் கல்விச்சூழலின் யதார்த்தம் பல்வேறு கோலங்களை தரிசிப்புகளை கொண்டதாகவே அமைந்துள்ளது.கல்விச் சுற்று வட்டத்தில் இருந்து வெளிவீசப்படுதலும், இடைவிலகலும், தாழ் அடைவுகளிலே தரித்து நிற்றலுமாகிய சமூக அவலங்கள் நிரம்பிய காலகட்டத்தில் இப்பாடசாலை அதிபர் அவரோடு இணைந்து பணியாற்றும் கல்விச் சமூகம் இணைந்து தமக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள வினைப்பாடுகளில் வினைத்திறனுடன் ஈடுபடுவது கண்டு உளம் பூரிக்கின்றேன்.

அகவை 94 இல் அதன் வரலாற்றுப் பின்புலத்தில் பெற்ற பட்டறிவைப் பற்றிப் பிடித்து மாற்றங்களை உள்வாங்கி சவால் நிறைந்த கல்விப் பரப்பில் தடம் பதித்து செல்வது கண்டு இப்பாடசாலைச் சமூகத்தை பாராட்டுவதில் பெருமையடைகிறேன்.

பாடசாலை தினத்தை சடங்காகக் கருதி கடத்திவிடாமல் அயற்பாடசாலைகளை அழைத்து காலத்தின் கட்டாய தேவைகளை உணர்த்துகின்ற இருப்பை நிலை நிறுத்துகின்ற போட்டிகளை நடாத்தி நிறைவு தினத்தையிட்டு பெருவிழா எடுத்து இருப்பது கண்டு பாடசாலை சமூகத்தை பாராட்டுவதில் மன நிறைவடைகிறேன்

விழாவையிட்டு வெளிவரும் சிறப்பு மலர் வரலாற்று ஆவணமாக திக்கெட்டும் இப் பாடசாலையின் மெய்யான கீர்த்தியை விளக்கும் தளமாக அமையும் என நம்புகிறேன்.

பாடசாலைதின விழா சிறக்க ஆற்றுகை நிலையில் இப் பாடசாலை அதி உச்சத்தை எட்ட, அறிமுறை நிலையில் கல்விப்புலத்தில் இவ்விழா கணதியான இடத்தை பிடிக்க வாழ்த்துவதில் உளப்பூரிப்புடன், உளநிறைவையும் அடைகிறேன்.

**பூ.பாலச்சந்திரன்,**
கோட்டக்கல்வி அதிகாரி,
மண்முனை தென் எருவில் பற்று,
போரதீவுப் பற்று கோட்டக் கல்வி அலுவலகம்,
களுவாஞ்சிகுடி,

2013.05.21.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்திய அத்தியட்சகர்,**
**பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர்,**
**Dr.குணசிங்கம் சுகுணன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



மீன்பாடும் தேன்நாடு என்று வர்ணிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி நகரில் பூத்துக்குலுங்கும் ஒரு பூஞ்சோலை மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை ஆகும். பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள ஒரேயொரு தேசியபாடசாலை இதுவே ஆகும்.

பாடசாலையும் ஆலயமும் இருகண்களாக பொலிவுற்று எங்கு நிகழ்கிறதோ அது பேறுபெற்ற கிராமமாகும். அவ்வகையில் சிறுகத் தொடங்கி பெரு விருட்சமாக உயர்கல்விச்சிகரமாக திகழ்கிறது. எமது மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவர்கள் கல்வியில் உயருவதற்கு ஏற்றவகையில் கல்வி கற்பித்தலும் கற்றலும் நிகழ்வதுடன், ஒழுங்கும் ஒழுக்கமும் சிறந்தோங்கி காணப்படுகின்றது.

மனிதனின் மறுக்கப்படவொண்ணா பிறப்புரிமையாகிய கல்வி மனிதவள மேம்பாட்டிற்கும் அதனால் விளையும் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கும் அடிப்படையாக அமைகின்றது. இலங்கை பொதுக் கல்வி செயன்முறையின் ஆதாரமாக விளங்கும் பாடசாலைகளின் அபிவிருத்தி நிலைமைகள், சாதனைகள் என்பன கல்வி வளர்ச்சியின் குறிகாட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன. ஒரு பாடசாலையின் கல்வி, கலாசாரம் என்பன இக்குறிகாட்டிகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. இவ்வகையில் மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் கடந்தகால மற்றும் நிகழ்கால வளர்ச்சிப் போக்கினை வரலாற்று ஆவணமாக்கும் நோக்கிலும் இப்பாடசாலை தாபித்து 94 ஆண்டு நிறைவையொட்டியும் இவ் விழா மலருக்கான வாழ்த்துக்களை வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி இப் பாடசாலை பழைய மாணவர் என்ற வகையிலும் தற்போதைய பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் என்ற வகையிலும் பேருவகையடைகிறேன்.

மேலும் சிறந்த தலைமைத்துவம், அர்ப்பணிப்பு, விடாமுயற்சி ஆகியவை கொண்ட இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சபையினர், பழைய மாணவர் சங்கம் உள்ளிட்ட பாடசாலைச் சமூகம் இவ் விழா மலரினை காலத்தின் தேவை கருதி வெளியிடுவது பாராட்டுக்குரியது. 94வது ஆண்டு நிறைவையொட்டி முதன்முதலாக கொண்டாடப்படும் பாடசாலை தினத்துடன் இணைந்து வெளியிடப்படும் உள்ளம் சிறப்பு மலர் சிறக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr. குணசிங்கம் சுகுணன்** (வைத்திய அத்தியட்சகர்)
செயலாளர், பாடசாலை அபிவிருத்தி சபை
மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழைய மாணவர் சங்க செயலாளர்
குருகுலசிங்கம் பிரபாகரன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடி, தனது 94வது அகவையில் கால்பதித்து பாடசாலை தினத்தை கொண்டாடுவதையிட்டு பழைய மாணவர் சங்கமாகிய நாங்கள் பெருமகிழ்வு அடைகிறோம்.

**"தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு மனிதனும் தனது தாய் நாட்டிற்கு வழங்கும் உன்னதமான அற்பணிப்பு தேசியவாதமாகும்"** எனும் கான்ஸ் கொன்ஸ் எனும் அறிஞரின் கூற்றுக்கு ஒப்பாகஎமது பழைய மாணவர் சங்கம் இப்பாடசாலை வளர்ச்சிப் படியில் தோள் கொடுக்க காத்திருக்கின்றது.

இன்று இப் பாடசாலை தேசிய பாடசாலை என்ற மகுடத்தைச் சூடி எமது வலயத்தில் ஒரே ஒரு தேசிய பாடசாலையாகவும் வீற்றிருக்கினறது. எனினும் மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளை விட கல்வியூட்டி அனைத்திலும் இதன் தரம் உயர வேண்டும் என்னும் எமது சங்கம் அவா கொள்கின்றது.

களுவாஞ்சிகுடி இன்று நகரமாக மாறிவருவதால் இப்பாடசாலை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் நடுநாயகமாக திகழ்கின்றது. இதனால் மாணவர் தொகையும் கூடிக் கொண்டே செல்கின்றது. இதனால் கல்வி அதிகாரிகள் இன் நிலையைப் புரிந்துகொண்டு அதற்கான வசதிகளை செய்ய வேண்டும் எனவும் எமது சங்கம் கேட்டு நிற்கின்றது. கல்வியில் மட்டும் இன்றி இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் தேசியமட்டம் வரைச் சென்று எமது மாணவர்கள் சாதனை படைத்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சியினைத் தருகின்றது.

இவ் வருடம் பாடசாலை தினத்தை வெகு விமர்சையாக கொண்டாட பாடசாலை நிருவாகம் எடுத்த முயற்சிக்கு எமது சங்கம் உறுதுணையாக செயற்படும். மேலும் எதிர்காலத்திலும் பாடசாலை வளர்ச்சிப்படியில் எமது பங்களிப்பும் நிச்சயம் இருக்கும் என்பதை இவ்வேளை கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனவே எதிர்காத்தில் இப் பாடசாலை பலசாதனைகளைப் புரியவேண்டும் என இறைவனை வேண்டி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு.பிரபாகரன்**
செயலாளர்
பழையமாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
கு. நாகேந்திரன் J.P அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மீன் பாடும் தேனாட்டில் மட்டக்களப்பின் தெற்கே 25km தொலைவில் வங்கக்கடல் வாழ்த்தொலிபரப்ப செந்நெல் கழனிகளும், தெங்குச் சோலைகளும், உயர்ந்த கமுகு மரங்களின் செழிப்பும். செந்தமிழர்களின் செழிப்புறு தன்மையும் சிறந்து விளங்கும் களுவாஞ்சிகுடி நன்னகரம் அமைந்துள்ளது.

*"வங்கக்கடல் கிழகெல்லையாம்*
*வடக் கெல்லை களுதாவளையே*
*ஒந்தாச்சிமடம் எருவில் தெற்கென்று*
*உரைத்தனர் இங்கு அறிவுடையோர்*
*மெத்தமே நீர் பெருகும் மட்டுவாவியே*
*மேற்கென்றார் களுவாஞ்சிகுடிக்கு"*

இவ்வாறு எல்லைகளைக் கொண்டு விளங்கும் களுவாஞ்சிகுடியில் 1919ம் ஆண்டு 04ம் மாதம் 01ம் திகதி உருவாகிய பாடசாலை அதன் வளர்ச்சிக்கேற்ப வேறு வேறு பெயர்களைக் கொண்டு வழங்கி இறுதியில் மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் களுவாஞ்சிகுடி, மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடியாக பட்டிருப்பு தொகுதி மக்களுக்கு

சகலருக்கும் கல்வி
சகலருககும் சமமான கல்வி
சகலருக்கும் சமமான தரமான கல்வி

வழங்க வேண்டும் என்ற குறிக்கோள்களுடன் இப்பாடசாலை இயங்கி வருகின்றது. பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பல கிராமங்களிலும் இருந்து அதிக மாணவர்கள் இப்பாடசாலைக்கு வந்து தங்கள் கல்வி நடவடிக்கையிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டு இப்பாடசாலைக்கு பெருமை தேடித் தந்து தொகுதியிலே சிறந்த பாடசாலையாக மிளிர செயற்பட்டு வெற்றி கண்டுள்ளார்கள்.

இவ்வாறு பாடசாலை தரமிக்க பாடசாலையாக மிளிர முன்னைய காலங்களில் அதிபராக, ஆசிரியர்களாக. கல்வி சாரா ஊழியர்களாக இவர்களோடு சேர்ந்து செயற்பட்ட கல்விச் சமூகத்தை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இத்தகைய பாடசாலையில் 1968ம் ஆண்டில் பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்ட கண்காட்சி நிகழ்ச்சி இன்றும் என் நினைவில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இது போன்ற கண்காட்சி 1981ம் ஆண்டிலும் நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இப்பாடசாலையின் கல்லூரி தினம் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தை செயற்படுத்திய பாடசாலையின் அதிபர் திரு. பொன். வன்னியசிங்கம் அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பாடசாலை சமூகத்திற்கும் பெற்றோர்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலை தினத்தைக் கொண்டாடுமுகமாக பாடசாலை ரீதியாக பொது அறிவுப் போட்டி, விவாத அரங்கு, பழைய மாணவர்களுக்கிடையே கிறிக்கட் சுற்றுப் போட்டி மாணவர்களின் கல்வி எழுச்சி, ஊர்வலம், கண்காட்சி, ஆகியவற்றை நடாத்தி பரிசில்களும் வழங்கி மாணவர்களை ஊக்குவித்து 94வது கல்லூரி தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது. மாணவர்களிடையே அவர்களுடைய ஆக்கத்திறன் போட்டிகளை நடாத்தி அவற்றில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களையெல்லாம் கொண்டு கண்காட்சி நிகழ்வொன்றையும், நடாத்தி இக்கல்லூரி தினத்தை மெருகூட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது பாடசாலைக்கும், மாணவர்களுக்கும் பெருமை தேடித்தருகின்ற நிகழ்வாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம், ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அதிபர், ஆசிரியர்கள், இணைந்து இக் கல்லூரி தினத்தை சிறப்பாக மூன்று நாட்கள் கொண்டாடுவது பெருமைதரும் விடயமாகும்.

இக் கல்லூரி தினம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி அமைகின்றேன்.

**கு. நாகேந்திரன் J.P,**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மட்/ பட்டிருப்பு ம.ம.வி. தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிராமத்தலைவரும்
### முகாமையாலய பரிபாலன சபைத்தலைவர்
### அ. கந்தவேள் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



களுவாஞ்சிகுடியில் அமைந்திருக்கின்ற மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலையின்) பாடசாலை தினவிழாவிலே வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

கிழக்கிலே மட்டுநகருக்கு பதினாறாம்மைல் கல் தொலைவில் தெற்கே பட்டிருப்பு தொகுதியின் மையமாக விளங்குவது எம் ஊர் களுவாஞ்சிகுடி பதியாகும். களுவாஞ்சிகுடி பெருமை சேர்க்கின்ற காரணிகளின் வரிசையிலே சிறப்பு பெறுவது களுவாஞ்சிகுடியிலே அமைந்திருக்கின்ற பட்டிருப்பு தேசிய பாடசாலை ஆகும்.

பட்டிருப்பு தொகுதி மாணவர்களின் அறிவுக் கண்ணை திறக்கின்ற கல்விச் செயற்பாட்டோடு கலை இலக்கியம் விளையாட்டு மற்றும் சமய பண்பாட்டு கலாசார விழுமியங்களை பேணுகின்ற செயற்பாடுகளிலே மாணவர்களை ஈடுபடுத்தி எதிர்காலத்தில் முழு ஆளுமை மிக்க கல்விச் சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியிலே சிறப்புற செயற்படுத்தி வருகின்றது இப்பாடசாலை.

எமது தேசிய பாடசாலையானது தொண்ணூற்று நான்கு ஆண்டுகள் வளர்ந்த நிலையிலே ஆண்டு விழாவையும் பாடசாலை தினத்தையும் விழாவாக கொண்டாட வேண்டும் என்கின்ற அதிபர் ஆசிரியர்களின் கனவை நனவாக்குன்ற பணியிலே முன்னின்று உழைக்கின்ற பழைய மாணவர் சமூகம் பெற்றார் ஆசிரியர் சங்கம், பாடசாலை நலன் புரி அமைப்பு, நலன் விரும்பிகள், ஒத்துழைப்பு வழங்குகின்ற கிராம மக்கள், அனைவருக்குமே எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

அன்னை ஈன்றாள் தந்தை வளர்த்தார் ஏதோ ஒரு துறையில் எம்மை இந்த சமூகத்திற்கு காட்சிப்படுத்துவது நாம் கற்ற கல்வி. அந்தக் கல்விதான் பெருமையை, புகழை, சிறப்பை, அந்தஸ்தை எமக்கு தேடித் தருவது. ஆகவே அறிவை எமக்களித்த கல்விக்கூடத்தின் பாடசாலை தினத்தை வருடம் தோறும் நினைவு கூருதல் அதன்பால் விழா எடுத்தல் மூலம் பாடசாலையின் ஆரம்ப நாளை கற்பித்த ஆசிரியர்களை பாடசாலை வாழ்க்கையை எமது பாடசாலையில் கல்வி கற்று புகழோடு புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் உள்ளூரில் வாழ்கின்ற புத்திஜீவிகள் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற தினமாக இந்த நாள் அமையும்.

பாடசாலை தினத்தை ஒட்டி வெளிவருகின்ற இந்த மலரானது எமது பாடசாலை பற்றிய வரலாற்று பதிவாக ஆவணமாக காலத்துக்கும் அழியாதிருக்கும் என்பதற்கு ஐயமில்லை. எனவே மலர்வெளியீட்டு குழுவினர் சிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்ற மாணவர்களை உருவாக்குவதில் கடின உழைப்பை மேற் கொள்ளுகின்ற அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்குழாம் அனைவருக்கம் 'உள்ளுக எல்லாம் உயர்வு' எனகின்ற மகுட வாசகத்தை தன்னகத்தே கொண்டு செயலாற்றுகின்ற எமது தேசிய பாடசாலை பட்டிருப்பு தொகுதியிலே என்றும் பல துறைகளிலும் தடம் பதிக்கின்ற கல்விச் சமூகத்தை உருவாக்குகின்ற செயற்பாட்டிலே சிறப்பு பாடசாலையாக ஒளிர வேண்டும். என்று எமது களுவாஞ்சிகுடி கிராம மக்கள் சார்பாகவும் நான் சார்ந்த முகாமையாலய பரிபாலனசபை சார்பாகவும் உழைத்திட அனைவருக்கும் உயர்நலம் பெற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**அ. கந்தவேள்**
கிராமத்தலைவரும் முகாமையாலய பரிபாலன சபைத்தலைவர்
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருப்பு ஊர்த் தலைவர்

திரு.பொன்.செல்வரெத்தினம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பட்டிருப்பு தேசிய பாடசாலையின் 94ஆவது ஆண்டு நிறைவு விழா வைகாசித்திங்கள் 30,31 ஆனி 1ம் திகதிகளில் பல்வேறு கல்விசார் நிகழ்ச்சிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கி கொண்டாடப் படுவதை இட்டு மிகுந்த மன நிறைவும், ஆனந்தமும் அடைகிறேன்.

இப்பாடசாலை 01. 04. 1919ம் ஆண்டில் பட்டிருப்பு தமிழ் கலவன் பாடசாலையாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. காலச்சுழற்சியில் படிப்படியாக வளர்ச்சியடைந்த இப்பாடசாலையில் கல்வியிலும் பெரும் பேற்றினை நானும் பெற்றிருந்தேன். கல்வித்தேடலை நாடிய பலதலைமை ஆசிரியர்களின் முயற்சியால் வளர்ச்சியுற்ற இப்பாடசாலை 19ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் பட்டிருப்பு தொகுதியின் மத்திய கல்விக் கூடமாக மாற்றவேண்டிய தேவையேற்பட்டது. எனினும் கலைப்பிரிவைத்தவிர்ந்த ஏனைய விஞ்ஞானம், கணிதம் போன்ற பிரிவுகளுக்கான வளத்தைப் பெற முடியாமல் இருந்தது. 1951ல் நடைபெற்ற 8ம் வகுப்பு ஆங்கில புலமைப் பொதுப்பரீட்சைக்கு அப்போதைய அதிபர் திரு. T.S.வேதநாயகம் அவர்களின் வழிகாட்டலில் ஆங்கில ஆசிரியர் திரு. லீனா மாஸ்ரர் அவர்களுடைய முயற்சியால் எமது பாடசாலையிலிருந்து 7 மாணவர்கள் தோற்றினார்கள். அப்பாடசாலையில் திறமையான சித்தியை நானும் அமரர். திரு. தெய்வநாயகமும் பெற்றுக் கொடுத்தோம். மட்டக்களப்பு தென் பகுதியிலிருந்து தோற்றிய பாடசாலைகளில் எமது பாடசாலை மட்டுமே இதனை சாதித்தது என்று குறிப்பிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைவதோடு அதிபர் T.S.வேதநாயகம் ஆங்கில ஆசான் திரு. லீனா அவர்களையும் நினைவு கூரக்கடமைப் பட்டுள்ளேன்.

எமது காலத்தில் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றும் வசதிகள் மட்டுமே கிடைத்திருந்தது. 1956ல் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றி வெளியேறிய பின் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக பல ஆண்டு காலம் சேவை செய்யும் வாய்ப்பினை பெற்றிருந்தேன். அக்கால கட்டத்தில் சேவையாற்றிய அதிபர்களோடு இணைந்து பாடசாலையின் வளர்ச்சியில் கூடிய பங்காற்றக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். 1958 - 59ம் ஆண்டில் இப்பாடசாலையில் நடந்த பெருவிழாவில் பல மாணவமணிகளின் நடன அரங்கேற்றம் திருக்கோவிலைச் சேர்ந்த நடன ஆசிரியை செல்வி. இராசகுமாரி அவர்களின் வழிகாட்டலின் கீழ் இப்பாடசாலையில் நடந்தேறியதோடு பாடசாலைக்கு பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழையும் தேடித்தந்தது இக்காலப்பகுதியில் பழைய மாணவர்களால் நடித்து அரங்கேற்றப்பட்ட "மன்னன் மகன்" நாடகம் சாகித்திய மண்டல முதல் பரிசையும் யாழ்ப்பாண வீரசிங்க மண்டபத்திலே பெற்று இப்பாடசாலையின் புகழை மேலும் வியாபித்திருந்தது.

அதன் பின்னர் அமரர் சி. மூ. இராசமாணிக்கம் அவர்களது முயற்சியால் 1965 ஆம் ஆண்டில் விஞ்ஞானம், கணிதம் போன்ற மற்றப் பிரிவுகளும் உள்வாங்கப்பட்டு ஆண்டு தோறும் பல சாதனைகளைபெற வழிகாட்டியாக இருந்த அதிபர்கள் திரு. டானியல், அருணாச்சலம் போன்றோரை நினைவு கூருவது சாலப் பொருந்தும் தொடர்ந்து பல சாதனைகளைப் பெற்ற பட்டிருப்பு மகா வித்தியாலயம் சில சோதனைகளையும் சந்திக்க நேரிட்டது. எனினும் அதிபர்களதும் ஆசிரியர்களதும் அயராத சேவையும், மக்களது பாராளுமன்ற பிரதி நிதிகளது பெரும் பங்களிப்புக்களும், பெற்றோர் பழைய மாணவர்களது கூட்டு முயற்சியும் மாணவர்களது கல்வித் தேடலும் இப்பாடசாலையை மீண்டும் எழுச்சிபெற வைத்தது. அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்களது காலத்தில் பட்டிருப்பு மகா வித்தியாலயம் கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளில் அடைந்த பெரு அடைவு மட்ட திறமையினால் இப்பாடசாலை இன்று தேசிய பாடசாலையாக மிளிர்வதோடு அவரது தலைமைத்துவத்தில் அவருக்கு பக்கபலமாக சகல மட்ட உதவிகளை வழங்கும் சகல ஆசிரியர்கள் சகலரையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

பாடசாலை மாணவர்களை சாதனையாளர்களாகவும், வருங்கால முதன்மை தலைவர்களாகவும் மிளிரச் செய்வதே தமது உயிர் மூச்சு என கடமையுணர்வோடு சேவையாற்றும் திரு.பொன்.வன்னியசிங்கம் அவர்களும் அவரது பங்காளிகளாக உள்ள சக ஆசிரியர்களும் இன்று பட்டிருப்பு தேசிய பாடசாலைக்கு ஈட்டித் தந்த வெற்றி தொடரவேண்டும் எனவும் அவர்களது இணையற்ற சேவையால் பட்டிருப்பு தேசிய பாடசாலை மாகாணத்திலே முதன்மையான எழுச்சி மிக்க பாடசாலையாக மென்மேலும் வளர்வதற்கு எல்லாமவல்ல விநாயகப் பெருமான் அவர்களோடு துணை நிற்க வேண்டும் என வேண்டிக் கொண்டு இப் பாடசாலையின் தளரா வளர்ச்சிக்கு மனதார வாழ்த்துவதோடு பெருமிதம் அடைகின்றேன்.

**திரு.பொன்.செல்வரெத்தினம்**
பட்டிருப்பு ஊர்த்தலைவர்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
இளைப்பாறிய கணக்காளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயரெத்தினம் இராசலிங்கம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கற்றவர் நிறைந்த களுவாஞ்சிகுடியில் இற்றைக்கு 94 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 01.04.1919ம் திகதி இக் கிராமத்தில் இரண்டாவது பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதே மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையாகும். இன்று இப்பாடசாலை தனது 94வது ஆண்டு நிறைவை கொண்டாடுவதுடன் இப்பாடசாலையின் வெளியீடாக வெளிவந்த ***"உள்ளம்"*** எனும் பத்திரிகை மாணவர்களினதும், பழைய மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், அரசியல் வாதிகளினதும், கல்வித் திணைக்கள அதிகாரிகளினதும் ஆக்கங்களுடன் சிறப்பு மலராக வெளிவருவதனையும் முன்னிட்டு இப் பாடசாலையின் பழைய மாணவன் என்ற ரீதியிலும், இப் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற முதல் மாணவர்களிருவரில் ஒருவன் (மற்றவர் களுதாவளையைச் சேர்ந்த திரு. சி. தம்பிராசா தற்போது உகண்டாவில் வேலை செய்கிறார்) என்ற வகையிலும் இந்நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெற வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

ஓர் ஆரம்பப்பாடசாலையாக ஆரம்பித்து படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று பட்டிருப்பு கல்வி வலயத்திலேயே ஒரே ஒரு தேசிய பாடசாலையாக மிளிரும் இப்பாடசாலை பல கல்வியாளர்களை வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர், அதிபர்களாக, நிர்வாக சேவை உத்தியோகத்தர்களாக, சுகாதார திணைக்கள ஊழியர்களாக, வங்கியாளர்களாக உருவாக்கிய பெருமைக்குரியதாகும். இதற்காக சமர்ப்பணிப்புடன் கூடிய சேவையினை வழங்கிய ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரை நினைவு கூருதல் அவசியமாகும்.

விசேடமாக என்னைப் பொறுத்த மட்டில் அமரராகி விட்ட இப்பாடசாலையின் முந்நாள் ஆசிரியர் வித்துவான் விருத்தாசலம் மறக்க முடியாதவராவார். சாதாரணதரப் பரீட்சை எழுதி முடித்தவுடன் ஆசிரியர் தொழில் பெறுவதற்கும் அரச திணைக்களங்களில் இலிகிதர் வேலை செய்வதற்கும் மாணவர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்த காலத்தில் பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பெற்று மாணவர்கள் உயர் நிலையை அடையலாம் என்று கூறி அதற்காக இப்பாடசாலையிலே உயர்தர வகுப்பை ஆரம்பித்து வைத்த பெருமை இவருக்குரியது. இதன் பயனாகவே நான் இப்பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் சென்ற முதல்மாணவனானேன். அதைத் தொடர்ந்து பல நூறு பட்டதாரிகள் இப்பாடசாலை மூலம் உருவாகினார்கள். உருவாகிக்கொண்டிருக்கிறார்கள்.


இன்று பாடசாலை கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, பொது அறிவு போன்ற பல துறைகளிலும் முதன்மையிடத்தில் திகழ்வதற்கு ஆக்கமும், ஊக்கமுமளித்துக்கொண்டிருக்கின்ற தற்போதைய அதிபரும், ஆசிரியர்களும் பராட்டப்படவேண்டியவர்களே. பட்டிருப்பு கல்வி வலயத்தில் மட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இப் பாடசாலை முதல்நிலைப் பாடசாலையாக மிளிர வேண்டும் என்றும், ***"உள்ளம்"*** என்ற பத்திரிகை தொடர்ந்தும் தன் சேவையைச் செய்ய வேண்டும் என்றும் இறைவனருளை வேண்டி இந்நிகழ்வுகள் சிறப்புற நடைபெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**விஜயரெத்தினம் இராசலிங்கம்**
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவுஸ்ரேலியாவிலிருந்து
## மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய பழைய மாணவன்,
## சட்டத்தரணி சு.ஸ்ரீகந்தராசா அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலையின் 94 ஆவது நிறைவு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இந்த விழா கணக்கற்ற கல்விமான்களை உருவாக்கிய கல்வித்தாய்க்கு எடுக்கப்படும் பெருவிழா. ஆயிரமாயிரம் அறிஞர்களைத் தோற்றுவித்த ஆலயத்தில் நடைபெறும் திருவிழா.

இந்த வித்தியாலயம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்விப்பணியில் வான்முட்டும் சாதனைகளைத் தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. அவற்றுக்கெல்லாம் முற்றுமுழுக்கக் காரணமாக அமைந்தது இங்கே கற்றுக்கொடுத்த ஆசிரியர்களினது அர்ப்பணிப்புமிக்க சேவையே!

எனவே அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் இந்த வித்தியாலயத்தில் கடந்த காலங்களில் கடமையாற்றியவர்களும், இப்போது கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களும் இந்த மாவட்டத்து மக்களின் நெஞ்சங்களில் நிலையாக இடம்பெற்று, நன்றியுடன் நினைவுகூரப்படவேண்டியவர்கள். மனமார வணங்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் எல்லோரையும் வாழ்த்தி வணங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தவேளையில் என் சிந்தையிலே இன்னும் பசுமையாகப் படர்ந்து கொண்டிருக்கின்ற நினைவுகள் சிலவற்றைப் பகிர்ந்துகொள்வது பொருத்தமென நினைக்கின்றேன். எனது இந்த நினைவுத் துளிகள் இந்த வித்தியாலயத்தின் இமாலய வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் வகையிலான ஒரு சிறுபதிவாக அமையலாம். இதனை வாசிக்கும் நிகழ்கால, எதிர்காலச் சந்ததிகளும் இந்தக் கல்விக்கூடத்தின் வரலாற்றின் சிலபகுதிகளை அறியலாம்.

பாடசாலை வளவின் மத்தியிலே ஒன்றும், வைத்தியசாலைப் பக்கமாக இன்னொன்றுமாக இரண்டே இரண்டு கட்டிடங்கள் இருந்தகாலத்தில் இந்த ஆலயத்தினுள் அடியெடுத்துவைத்தவர்களில் நானும் ஒருவன். அப்போது, முன்வாசலில் இரண்டு மாமரங்கள் காய்த்துக் குலுங்கிக்கொண்டிருந்தன. நாங்கள் பாடசாலையை விட்டு வெளியேறியபோதும் அவை அங்கேயே நிழல் கொடுத்துக்கொண்டு நின்றன. சுற்றிவர ஆலமரங்களும், வேப்ப மரங்களும் நிறைந்திருந்தன. அந்த மரங்களில் நிழல்களிலேதான் பெரும்பாலான வகுப்புக்கள் நடைபெறும். தனித்தனி வகுப்பறைகள் இல்லாத காரணத்தால் கதிரைகளைத் தூக்கிச்சென்று மரங்களின் கீழ் வட்டமாகப்போட்டு வகுப்புக்கள் நடைபெறும். வெயில் நேரத்தில் வேப்பமர நிழலில், இளந்தென்றல் வந்துவீச, ஆசிரியரின் உரத்தசத்தம் வில்லில் இருந்து புறப்பட்ட அப்புபோல நேராகவந்து எங்கள் செவிகளில் பாய்ந்து, பசுமரத்தாணிபோல மூளையிலே இறங்கிப் பதியும். பாடசாலையின் பின்புறத்தில் (இப்போது விளையாட்டு மைதானம் உள்ள இடத்திலும் அதற்கு அப்பாலும்) நாவல்மரங்கள், சுரமின்னா மரங்கள், காரைமரங்களும் காலத்திற்குக் காலம் காய்த்து, பழுத்துக் குலுங்கி நின்று, இடைவேளை நேரத்தில் எங்களை வாவென்று அழைக்கும்.

பத்தாம் பகுப்புப் பரீட்சைக்கு எங்கள் வகுப்பு நண்பர்கள் சிலர் இரவிலே பாடசாலையிலேதான் தங்கியிருந்து படித்தோம். பாடசாலையில் மின்சாரம் இல்லை. சிறிய போத்தல் குப்பிகளில் விளக்குக்களைச் செய்து அந்தக் குப்பி விளக்குக்களிலேயே படித்தோம். காலையில் எழுந்து வீட்டுக்குச் சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கிட்டு, மீண்டும் பாடசாலைக்கு வந்து வகுப்பில் அமர்ந்திருக்கும்போது மண்டபத்தின் தூண்களின் மேல் நாங்கள் வைத்துவிட்டுச் சென்ற விளக்குக் குப்பிகள் எங்களைப் பார்த்துச் சிரிக்கும். அதுபற்றித் தெரிந்துகொண்ட எங்களோடு படிக்கும் உள்ளூர், அயலூர் மாணவ, மாணவிகளும் எங்களையும் அந்தக் குப்பிகளையும் பார்த்துச் சிரிப்பார்கள். அந்தச் சிரிப்புக்களில் கலந்திருந்தது கேலியா அல்லது பாராட்டா என்பதில் இன்னும் எனக்குத் தெளிவில்லை.

வருடங்கள் நகர்ந்தன. பாடசாலையில் மெல்லமெல்ல கட்டிடங்கள் எழுந்தன. விஞ்ஞானகூடம், விளையாட்டு மைதானம், வகுப்பு மண்டபங்கள், அதிபர் விடுதி, ஆசிரியர் விடுதி என்றிப்படிப் புதிதாய் புதிதாய் கட்டிடங்கள் அதிகரித்தன. குழாயிலே தண்ணீர் வந்தது. இடைவேளைநேரத்தில் அயலில் உள்ள வீடுகளுக்குத் தண்ணீர் குடிக்கச் செல்வது நின்றது.

ஆசிரியர் தொகை அதிகரித்தது. பரீட்சைகளின் பெறுபேறுகள் மாவட்டத்தில் ஏற்கனவே ஓங்கி உயர்ந்துநின்ற பாடசாலைகளுக்குச் சவால்விட்டன. பட்டிருப்புத்தொகுதியின் நாலாபக்கங்களிலுமிருந்து மட்டுமல்ல, கல்முனை அதற்கப்பால் பொத்துவில் தொகுதிகளைச்சேர்ந்த மாணவர்களும்கூட வந்து கல்விகற்கும் நிலைவந்தது.

இவ்வாறு, தானும் வளர்ந்து எங்களையும் வளர்த்தெடுத்த இந்த வித்தியாலயத்தின் சிறப்பிற்காகவும், மாணவர்களின் உயர்வுக்காகவும் எத்தனையோ அதிபர்கள் ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் தன்னலம் கருதாத பணியிலே தங்களை ஈடுபடுத்தி உழைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நினைத்துப்பார்க்கின்றேன். கண்கள் பனிக்கின்றன.

அத்தகைய பட்டிருப்பு மகாவித்தியாலயம், மத்தியமகாவித்தியாலயமாக உயர்ந்து, தேசியப் பாடசாலையாகச் சிறந்து ஒவ்வொரு துறையிலும் ஓங்கிய திறனோடு விளங்குகின்ற இன்றைய நிலைமை வியந்து மகிழத்தக்கதாயுள்ளது. அதற்குக் காரணம் நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியும், நடைபெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளும் மட்டுமன்றி, அதற்கும் மேலாக இந்த வித்தியாலயத்தின் விருத்திக்காக இப்போது உழைத்துக்கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், கல்விப்பணியாளர்கள், தொழில்சார் வல்லுனர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் போற்றுதற்குரிய செயற்பாடுகளுமாகும். அவர்கள் அனைவருக்கும் விரிந்த உலகெலாம் பரந்து வாழ்ந்துகொண்டிருக்கும் பழையமாணவர்களின் சார்பாக எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மனதார வழங்கி மகிழ்கின்றேன்.

வித்தியாலயம் விளங்க உழைப்பதோடு, இத்தகையதொரு விழாவினை எடுக்கும் உன்னத பணியில் ஈடுபட்டுக்கொண்டும் இருக்கின்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிகலந்த பாராட்டுக்கள்.

இந்தவேளையில் இங்கே கல்வி பயின்றுகொண்டிருக்கும் மாணவர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் எல்லோருக்கும் நமது வாழ்த்துக்கள். நயமிகு நன்றி.

**சட்டத்தரணி சு.ஸ்ரீகந்தராசா**

பழைய மாணவரும்,

பழையமாணவர்சங்க முன்னாள் செயலாளரும் (1974 -77)

*srisuppiah@hotmail.com*

*12 Newport Street,*

*Lalor, Victoria – 3075*

*Australia*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் பார்வையிலே.....

இப் பாடசாலையின் 94 வருட நிறைவு வரலாற்றிலே மிகக்கூடிய காலம் அதிபராக சேவையாற்றும் பாக்கியத்தை எனக்கு அளித்த எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு முகற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். என்னை இந்நிலைக்கு உயர்த்திய பெற்றோர் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

2001 ஆம் ஆண்டு வரை மத்திய மகாவித்தியாலயமாக இருந்த இப்பாடசாலையை தேசிய பாடசாலையாக நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு நான் அதிபராக 2002 இல் பதவியேற்ற போது என்னைச் சேர்ந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லா ஏனைய பிரபல்யமான தேசிய பாடசாலைகளுடன் ஈடுகொடுத்து தனது நிலையில் பரிணமிக்க வேண்டிய மாபெரும் கடப்பாடு இப் பாடசாலைக்கு இருந்தது. இதற்கான வளங்கள் போதியளவு அக்காலகட்டத்தில் இருக்கவில்லை. எனவே பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்த இப்பாடசாலைச் சமூகம் எதையும் எதிர் கொண்டு வெற்றி கொள்ளத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டது இன்று வரை இந்தத் தாராள மனப்பாங்கே இத் தேசிய பாடசாலைக்கான அத்திவாரம் என்றால் அது மிகைப்படுத்தப் பட்ட கூற்று அல்ல.

அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவச்செல்வங்கள், என்போரது அர்ப்பணிப்பும் அயராத முயற்சியும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை, பழையமாணவர் சங்கம், நலன்விரும்பிகள், கல்வி நிர்வாகத்தின் மேற்பார்வை போன்றவர்களது ஒத்துழைப்புமே இன்று பெயர் சொல்லும் பாடசாலையாக இப் பாடசாலை எழுந்து நிற்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

ஒரு வளம்மிக்க சமுதாயம் பாடசாலையிலேதான் கட்டியெழுப் பப்படுகிறது, படவேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் எனும் அடிப்படையில் மாணவர்களை அவர்களின் திறமைகளைக் கண்டறிந்து அதற்கேற்ற வகையில் தயார் படுத்த வேண்டிய மாபெரும் கடமையை நாங்கள் ஏற்றுள்ளோம். இதன் அடிப்படையில் இப் பாடசாலை தனது கடமையை செவ்வனே ஆற்றிவருகிறது என்பதில் அதிபராக பெருமிதம் அடைகிறேன். இதற்குச் சான்றாக ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்டமட்டத்தில் முதலிடங்களையும், கூடுதலான எண்ணிக்கையில் கூடுதலான அளவு சித்தியையும் இப்பாடசாலை பெற்று வருகிறது. வருடாவருடம் வெளிவரும் கா.பொ.த சாதாரணதரத்தின் பெறுபேறுகள், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் என்பவற்றிலிருந்து இப்பாடசாலை வளர்ச்சிப்பாதையில் செல்கிறது என்பது யாவருக்கும் கண்கூடு.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் கணித, விஞ்ஞானத் துறையில் இப் பாடசாலை முன்னேற்றம் கண்டுள்ளது. பொறியியல்பீடம், மருத்துவபீடம், விஞ்ஞானபீடம், கணிதபீடம் என மாணவர்கள் பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிகளைப் பெற்ற வண்ணம் உள்ளனர். வர்த்தகப் பிரிவில் உயர்தர சித்தியில் இப் பாடசாலைதனக்கென ஒரு தனிஇடத்தைப் பிடித்துள்ளதென்பது எல்லோரும் அறிந்த ஒன்று. கலைப்பிரிவுக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையும் வருடா வருடம் அதிகரித்தவண்ணமேயுள்ளது. இவற்றுக்க கட்டியம் கூறுமாற்போல் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே உள்ளது. இப் பாடசாலை தனது சேவையை கல்வியுடன் மட்டும் மடக்கிவிடாது, விளையாட்டு, IT, கலாசார நிகழ்வுகள், சமயமார்க்க நிகழ்வுகள் என எல்லா துறைகளிலுமே சாதனை படைத்து வருகின்றது.

போதியளவு வளங்கள் இல்லாத நிலையிலும் பெற்றோர் களினதும். பழைய மாணவர்களினதும், நலன் விரும்பிகளினதும் பாரிய பங்களிப்புடனும், இப் பாடசாலை தனது கடமையை செவ்வனே நிறைவேற்றியுள்ளது. இப் பாடசாலையின் முதல்வன் என்ற வகையில் நான் வேண்டுவதெல்லாம் இப்பாடசாலை பற்றிய அக்கறை,பழைய மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும், நலன்விரும்பிகளிடமும், அதிகரிக்கப்பட வேண்டும் உங்களது ஊக்கமும், ஒத்துழைப்பும், இப்பாடசாலை முழுநிறைவடைய ஊன்று கோலாக அமையும்.

எனது தோளோடு தோள்சேர்ந்து நிற்கும் ஆசிரியர் குழாம், கல்வி சாரா ஊழியர்கள், மாணவச் செல்வங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை, மற்றும் நலன் விரும்பிகள், கல்வி நிருவாகத்தினர், அனைவருக்கும் இப் பாடசாலையின் 94 ஆவது ஆண்டு நிறைவை பெருமையுடன் கொண்டாடும் இத்தினத்தில் மகிழ்ச்சியுடன் கைகோர்த்து நிற்க வாழ்த்துகின்றேன்.

**திரு.பொன்.வன்னியசிங்கம்,**
அதிபர்,
மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சிப் பாதையில் ....



பாடசாலை அபிவிருத்திச்சங்க
செயலாளராக இருக்கும் போதே 2012ம் ஆண்டு
இறைபதமடைந்த, களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த

# அமரர் க. தில்லேஸ்வரன்

**அவர்களுக்கு இப்பக்கம்**
**சமர்ப்பணம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் உள்ளே .......


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | எமது பாடசாலையின் அதிபர்களும் | 1 |
| 02. | எமது வாழ்வின் வழிகாட்டி | 10 |
| 03. | அந்த நாள் ஞாபகம். | 12 |
| 04. | மண்ணுலகு உள்ளவரை | 14 |
| 05. | மட் / பட்டிருப்பு தேசிய பாடசாலையின் ...... | 15 |
| 06. | ஆறுமுகம் என்னும் .. | 17 |
| 07. | மாணவர்களின் ஒழுக்கமும் ........ | 20 |
| 08. | சிறந்த முகாமைத்துவத்திற்கு ......... | 22 |
| 09. | கலைச்சுடர் கோவிலூர் தணிகாவுடன் ....... | 24 |
| 10. | ஆசிரியரும் விளைதிறனும் ........ | 32 |
| 11. | விசேட கல்வியின் இன்றைய ........... | 40 |
| 12. | நுண்ணறிவு விருத்தியின் ..... | 43 |
| 13. | உயிரோட்டமான பாடசாலையின் ....... | 45 |
| 14. | திருக்குறளின் மகிமை ............ | 49 |
| 15. | வடுதாங்கும் வரைதற்கலை .......... | 52 |
| 16. | அந்நியச் செலாவணியின் வீதமும் ...... | 55 |
| 17. | வீட்டில் சுயகற்றல் எவ்வாறு .......... | 59 |
| 18. | எமது பிள்ளையின் கற்றல்பாணிகள். | 61 |
| 19. | இன்றைய காலகட்டத்திற்கு ............. | 64 |
| 20. | இனிய வாழ்விற்கு சில ...... | 67 |
| 21. | அதிபர்களின் முகாமைத்துவத்தில் ........ | 68 |
| 22. | முகம் பார்க்க மறுக்கும் ....... | 70 |
| 23. | வளமான வாழ்விற்கு ........ | 73 |
| 24. | மனைப் பொருளியல் பாடம் ....... | 74 |
| 25. | Education for the future ...... | 76 |
| 26. | Psycology and the Teacher ........ | 77 |
| 27. | சிறுவர்களும் தகவல் ........... | 79 |
| 28. | பரவும் உயிர்க்கொல்லி ....... | 85 |
| 29. | School library ......... | 87 |
| 30. | ஐவகை நிலங்களும் ............ | 88 |
| 31. | மகாகவி சுப்பிரமணிய .......... | 89 |
| 32. | கணனி பற்றிய தகவல்கள் ........ | 91 |
| 33. | வெற்றிப் பாதைக்கு ........ | 93 |
| 34. | சித்த மருத்துவ ............. | 94 |
| 35. | விடியாமல் போன விடியல் .............. | 95 |
| 36. | அறிவியலாளர்களும் ......... | 96 |
| 37. | மாணவர் கடமைகளும் ........ | 97 |
| 38. | கல்வியின் உயர்வு ......... | 98 |
| 39. | சோமசுந்தரப் புலவர் ........ | 99 |
| 40. | விழாக்கள் ........ | 100 |
| 41. | சில நாட்டுப் பழமொழி ........ | 101 |
| 42. | வினோத உயிரினம் ........ | 102 |
| 43. | அம்மா என்றொரு தெய்வம் | 103 |
| 44. | விந்தை உலகம் ........ | 104 |
| 45. | பொது அறிவு ........ | 105 |
| 46. | அறிந்துகொள்ளுங்கள் ......... | 106 |
| 47. | கல்லூரி வரலாற்றில் ............ | 107 |
| 48. | பள்ளித்தாயே ......... | 109 |
| 49. | மட் /பட்டிருப்பு ம.வி ......... | 110 |
| 50. | பட்டிருப்பு மகா வித்தியாலயத்தின் ......... | 113 |
| 51. | சைவசமயம் தொடர்பான போட்டி ...... | 117 |
| 52. | தாயன்பு ......... | 118 |
| 53. | பாடசாலையின் வளர்ச்சித் தரவுகள் ........ | 119 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



திரு. பொன். வன்னியசிங்கம் (அதிபர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



திருமதி. அ. சற்குணராஜா
(பிரதி அதிபர்- ஆரம்பப் பிரிவு)



திரு. க. தம்பிராஜா
(பிரதி அதிபர்- நிருவாகம்)



செல்வி. சிவகுரு கோமதி
(உப அதிபர்- இணைப்பாடவிதானம்)



திரு. த. ஜனேந்திரராஜா
(பிரதி அதிபர்- கல்வி அவிபிருத்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



ஆசிரியர் குழாம் - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



"உள்ளம்" மலர் வெளியீட்டுக் குழு - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



அதிபருடன் பகுதித்தலைவர்கள் - 2013



அதிபருடன் ஒழுக்கக்குழு ஆசிரியர் குழாம் - 2013



அதிபருடன் கல்விசாரா ஊழியர் குழாம் - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



அதிபர், ஒழுக்கக்குழு பொறுப்பாசிரியர்களுடன் மாணவ தலைவர்கள் - 2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



அதிபர், பொறுப்பாசிரியருடன் "பான்டு" வாத்தியக் குழுவினர்



அதிபர், பொறுப்பாசிரியர்களுடன்
கனிஸ்ட "பான்டு" வாத்தியக் குழுவினர்



அதிபர், பொறுப்பாசிரியர்களுடன் சாரணிய அணியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)



பழைய மாணவர் சங்கத்தினர் - 2013



பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் - 2013



பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின்

# அதிபர்களும் அதன் வளர்ச்சிப்படிகளும்....

எமது நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் கல்வி நிலையங்களையும் பாடசாலைகளையும் பெரும்பாலும் மிசனரிமார்களே கற்பித்து நடாத்தி வந்தனர். மட்டக்களப்பு மாவட்டம் உட்பட நாடளாவிய ரீதியில் இவ்வாறான பாடசாலைகளே அப்போது அமைந்திருந்தன. ஆனால் களுவாஞ்சிகுடி கிராம மக்கள் பல்வேறு காரணங்களுக்காக தங்கள் கிராமத்தில் ஒரு மிசனரி பாடசாலை அமைவதை ஒரு போதும் விரும்பவில்லை. இதனால் இங்கு பண்டைய முறையைத் தழுவியதாக குரு, சிஷ்ய பரம்பரையைக் கொண்ட திண்ணைப் பாடசாலையொன்றே இயங்கி வந்தது. இத் திண்ணைப் பாடசாலை இப்போதுள்ள விக்கினேஸ்வரர் ஆலயத்தின் அருகாமையில், பிரதான வீதியில் விநாயகர் வித்தியாலயம் அமைந்துள்ள இடத்திலேயே அமைந்திருந்தது. இதில் ஆசிரியர்களாக திரு.கணபதிப்பிள்ளை, திரு.சபாபதி ஆகியோர் கடமை புரிந்து, ஏட்டுக் கல்வி முறை மூலம் மாணவர்களுக்கு கல்வி புகட்டி வந்தனர். சித்திரை வருடப்பிறப்பு போன்ற விசேட நாட்களில் ஊரிலுள்ள வீடுகள் தோறும் "எண்ணெய்ச் சிந்து" பாடுவதால் கிடைக்கும் வருமானமே அப்போது ஆசிரியர்களுக்கு வேதனமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இவ்வாறு இயங்கி வந்த பாடசாலையை இப்பகுதியில் பிரபல்யம் பெற்ற "இந்து சபை" பொறுப்பேற்று சைவப் பாடசாலையாக மாற்றி 1919 ஆம் ஆண்டு திறந்து வைத்தது. இந் நடவடிக்கைகளுக்கு மூலகர்த்தாவாக இருந்தவர் அப்போதைய களுவாஞ்சிகுடி கிராமத் தலைவரான திரு.த.சபாபதிப்பிள்ளை அவர்களாவர். இப் பாடசாலையின் முதலாவது ஆசிரியராக போரதீவைச் சேர்ந்த திரு.சிவஞானம் கடமையாற்றினார். இவர் பொறுப்பேற்றதும் ஏட்டுக் கல்வி முறைக்கு முற்றுப் புள்ளி வைத்து கரும்பலகையை உபயோகித்து கற்பிக்கத் தொடங்கினார். சிறிது காலம் கடமையாற்றிய இவரைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்தரின் மைத்துனரான திரு. பூபாலப்பிள்ளை ஆசிரியர் பாடசாலையை பொறுப்பேற்றார்.

சைவப் பாடசாலையாக இயங்கி வந்த இப் பாடசாலை, 1924 மார்ச் 24ம் திகதி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக மாறியது. இதன் முதலாவது தலைமை ஆசிரியராக ஆரையம்பதியைச் சேர்ந்த திரு.த.சீனித்தம்பி என்பவர் நியமிக்கப்பட்டார் தலைமை ஆசிரியருக்கு உதவியாக திரு.வி. வினாசித்தம்பி என்பவரும், தையல் பாட ஆசிரியராக திருமதி த.சீனித்தம்பியும் நியமனம் பெற்றதால் மூன்று ஆசிரியர்களை கொண்டதாக பாடசாலை வளர்ச்சி பெற்றது. அரசாங்கப் பாடசாலையாக மாற்றம் பெற்ற இப் பாடசாலை படிப்படியாக 9ஆம் தரம் வரை வகுப்புக்கள் வைக்கக் கூடிய அளவிற்கு வளர்ச்சியடைந்தது. மாணவர்கள் தொகையும் அண்ணளவாக 175 ஆக உயர்ந்தது. இக் காலத்தில் மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு பாட்டுக்கள், பேச்சுக்கள், நாடகங்கள் என்பன மாணவரிடையே நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சீனித்தம்பி தலைமையாசிரியர் இடமாற்றம் பெற்றுச் செல்ல அவரது இடத்திற்கு 1929- மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி கல்லாற்றைச் சேர்ந்த திரு.கே.பூபாலப்பிள்ளை என்பவர் நியமனம் பெற்றார். இவரது காலத்தில் முதன் முறையாக மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.N.கனகசபை என்பவர் ஆங்கில ஆசிரியராக பொறுப்பேற்றார். இக்காலத்தில்தான் எட்டாம் வகுப்பு கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு (J.s.c) எனவும், ஒன்பதாம் வகுப்பு சிரேஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு (s.s.c) எனவும் தரம் பிரிக்கப்பட்டன. இம்மாற்றம் 1933 ஆம் ஆண்டு நடைபெற்றதுடன் இவ்வகுப்புகளுக்கான இரண்டு பரீட்சைகளும் அரசாங்கத்தினால் நேரடியாக நடாத்தப்பட்டன.

திரு.பூபாலப்பிள்ளை அவர்கள் நான்கு வருடங்கள் கடமையாற்றிச் செல்ல திரு. சீனித்தம்பி அவர்கள் மீண்டும் பாடசாலையைப் பொறுப்பேற்றார். 1933 ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி பாடசாலையை பொறுப்பேற்ற திரு. சீனித்தம்பி அவர்கள் இம் முறை குறுகிய காலம் மட்டுமே கடமையாற்றினார். ஆனால் இக் காலத்தில் பாடசாலை மிகுந்த வளர்ச்சியடைந்ததைக் குறிப்பிட முடியும். அயல் கிராமங்களான களுதாவளை, குருக்கள்மடம், ஆரயம்பதி, துறைநீலாவணை, குறுமண்வெளி போன்ற இடங்களிலிருந்து பெருமளவு மாணவர்கள் வருகை தரத்தொடங்கினர். இதனால் பாடசாலையில் மாணவர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்புக் காணப்பட்டதுடன் பாடசாலையும் பிரபல்யம் அடையத் தொடங்கியது.

திரு.சீனித்தம்பி அவர்களிடமிருந்து 1935 ஜனவரி எட்டாம் திகதி காரைதீவைச் சேர்ந்த திரு.V மார்க்கண்டு அவர்கள் பாடசாயையைப் பொறுப்பேற்றார். இரண்டு மாதங்கள் மட்டுமே கடமையாற்றிய இவரது இடத்திற்கு 1935 பெப்ரவரி மாதம் 5ம் திகதி மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. செல்லப்பா அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார்.

திரு. செல்லப்பா அவர்கள் இரண்டரை வருடங்கள் மட்டுமே கடமையாற்றிய போதும் இவரது பதவிக் காலம் பாடசாலை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றதாக காணப்படுகின்றது. குறிப்பிடத்தக்க பல முக்கிய நிகழ்வுகள் இக் காலத்தில் நடைபெற்றன. அவற்றுட் சில :

1. 1935-12-2 இல் வறிய மாணவர்களுக்கென மதிய போசனம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

2. 1936-6-1 இல் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதன் ஒரு பகுதி இப்போதுள்ள இடத்தில் புதிய பாடசாலையாக நிருமாணிக்கப்பட்டு மட்/பட்டிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்னும் பெயருடன் இயங்க ஆரம்பித்தது.

3. 1937-1-25 தொடக்கம் இப்பாடசாலை நாட்டுக்கல்வி முறைப் பாடசாலை (Rural Scheme Practical School) என்ற புதிய திட்டப்படி இயங்கும் பாடசாலையாக மாற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 1937-2-1 இலிருந்து வறிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிய போசனம் நிறுத்தப்பட்டது.

5. 1937-2-26 தொடக்கம் பெற்றார் தின விழா கொண்டாடும் பழக்கம் ஏற்பட்டது.

6. 1937.06.01 தொடக்கம் இப்பாடசாலையில் கல்விகற்றுவந்த மாணவிகள் பழைய பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன் இப்பாடசாலை ஆண்கள் பாடசாலையாக மாற்றம் செய்யப்பட்டு மட்/பட்டிருப்பு அரசினர் ஆண்கள் பாடசாலை என அழைக்கப்படலாயிற்று.

திரு. செல்லப்பா அவர்களைத் தொடர்ந்து 1937 இன் இறுதிப் பகுதியில் மூன்றாவது தடவையாகவும் திரு.சீனித்தம்பி அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இக்காலத்தில் சுகாதாரம் தொழில்கல்வி, சுற்றுப்புறச்சூழல் என்னும் மூன்றுபாடங்கள் புதிதாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இப் பாடங்கள் மூலம் எதிர்பார்த்த பலன்கள் ஒருவருக்கும் கிடைக்காமையினால் இத்திட்டம் தோல்வியிலேயே அப்போது முடிவடைந்தது.

ஊர்மக்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்து தனது முதல் இரண்டு பதவிக்காலங்களிலும் சிறப்பாகச் செயல்பட்ட திரு.சீனித்தம்பி அவர்களுக்கு மூன்றாவது பதவிக்காலம் சோதனைமிக்கதாகவே அமைந்திருந்தது. இக்காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. 1939ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது உலக மகாயுத்தமும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது. அக்காலத்தில் நாட்டில் பஞ்சமும், பட்டினியும், பொருளாதாரக் கஷ்டங்களும் மக்களைவாட்டி வதைத்துக் கொண்டிருந்தன.

1941 ஜூன்மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.V.சின்னத்தம்பி என்பவர் பாடசாலையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரது காலத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் பாடசாலையில் ஏற்படவில்லை. யுத்தத்தின் காரணமாக பஞ்சம் நிலவியமையால் அரசாங்கத்தினால் அதிக உணவு பயிரிடுக (Crow More Food) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கென விசேட ஆசிரியர்களும் பாடசாலைக்கு நியமனம் பெற்றனர். இவரது காலத்தில் "பெற்றார் ஆசிரியர் சங்கங்கள்" (Parents Teachers Association) உருவாக்கப்பட்டன. அத்துடன் சுகாதார வாரம் (Health Week) அனுட்டிக்கும் வழக்கமும் ஏற்படுத்தப் பட்டது.

திரு. சின்னத்தம்பி அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல, 1943 மே மாதம் 3ஆம் திகதி திரு.E.K.எதிர்மனசிங்கம் அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பயிர்ச் செய்கைப் போட்டிகளிலும், சுகாதாரவாரப் போட்டிகளிலும் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்று பாடசாலை முன்னணியில் திகழ்ந்தது. அத்துடன் இது வரை காலமும் மட்/பட்டிருப்பு அரசினர் ஆண்கள் பாடசாலை என அழைக்கப்பட்டு வந்த பாடசாலையின் பெயர் அரசாங்கத்தினால் "மட்/பட்டிருப்பு அரசினர் கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை, களுவாஞ்சிகுடி" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் பின்னர் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் பாடசாலையில் சேர்ந்து கல்விகற்கத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.E.K.எதிர்மனசிங்கம் அவர்கள் தலைமை ஆசிரியராக இருக்கும் போதே களுவாஞ்சிகுடியைச்சேர்ந்த திரு.V.முருகுப்பிள்ளை என்பவரும் 1946 செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி இப்பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இதன் பின்னர் 1947 மார்ச் மாதம் 20ஆம் திகதி திரு எதிர்மனசிங்கம் அவர்கள் பாடசாலையை விட்டுச் செல்ல திரு.V.முருகுப்பிள்ளை கடமையைத் தொடர்ந்துசெய்தார். இவரது பதவிக்காலத்திலேயே இலங்கை சுதந்திர மடைந்த நிகழ்வு இடம் பெற்றது. இதனால் வருடந்தோறும் கொண்டாடப்படும் மன்னர் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடாத்தப்பட்டன. இவரது காலத்தில் திரு.லீனா அவர்கள் ஆங்கில உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார்.

திரு.V.முருகுப்பிள்ளைதை் தொடர்ந்து திரு.T.S.வேதநாயகம் அவர்கள் 1951 மேமாதம் 18ஆம் திகதி பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பாடசாலையில் கூட்டுறவுப் பண்டகசாலை (Co-Operatie Supply and Therift Society) ஆரம்பித்து வைக்கப்பட்டது. விளையாட்டு சாரணர் இயக்கம் என்பன வளர்ச்சிகண்டன. 1954 மே 5 ஆம் திகதி மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

திரு.வேதநாயகம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்ல இவரது இடத்திற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.K.கந்தையா அவர்கள் நியமனம் பெற்றார். இவர் 1956 மே, 3இல் கடமையைப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் தமிழரசுக் கட்சியினால் அரசாங்கத்திற்கெதிராக நடாத்தப்பட்ட ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், அம்பாறையில் நடைபெற்ற தமிழ், சிங்கள இனக்கலவரம் என்பன இப் பிரதேசத்தில் அமைதியின்மையை தோற்றுவித்தன. அத்துடன் இயற்கையும் இவருடன் ஒத்துழைக்கவில்லை. 1956 இல் ஏற்பட்ட பெருவெள்ளம் இப்பகுதியில் பெருத்த அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. இக் காரணங்கள் மட்டுமன்றி, இவரது நிர்வாக அணுகு முறைகளும் ஊர்மக்களுடன் ஒத்துப் போனதாக இருக்கவில்லை. இக்காரணங்களால் இவரால் பாடசாலையில் ஒன்றையும் சாதிக்க முடியவில்லை. இதனால் அதிருப்தியுற்ற மக்கள் இவரது நிர்வாகத்திற்கெதிராக பாடசாலைப் பகிஷ்கரிப்பையும் மேற்கொண்டனர்.

1957 ஜனவரி மாதம் 3இல் திரு. வேதநாயகம் அவர்கள் மீண்டும் பாடசாலையைப் பொறுப்பேற்றார். பாடசாலை மீண்டும் பழைய நிலைக்கு முன்னேறத் தொடங்கியது. 1958 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் பாடசாலை தரமுயர்த்தப்பட்டு அரசினர் சிரேஷ்ட உயர்தர பாடசாலை (Government Senior Secondary School) என அழைக்கப்பட்டது. பாடசாலையின் தலைமை ஆசிரியர் "அதிபர்" தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டார். இவரது காலத்தில் விஞ்ஞான ஆய்வுகூடமொன்றும், தொழிற்கூடமொன்றும் கட்டிமுடிக்கப்பட்டன. 1959 ஜனவரி 2ஆம் திகதி பாடசாலைக்கு முதன்முதலாக இரவுக்காவலாளியாக (Watcher) களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் என்பவர் நியமனம் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வேதநாயகம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்ல அதிபர் பதவிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.A.G.இராசரெத்தினம் என்பவர் 1961 ஜனவரி 3ஆம் திகதி நியமிக்கப்பட்டார். குறுகிய காலம் மட்டுமே பதவி வகித்த இவர் அதிபர் பதவியிலும் பார்க்க, கற்பித்தலிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார்.

1962 மே மாதம் 1ஆம் திகதி திரு. J.M.சாமுவேல் அவர்கள் பாடசாலையின் அதிபராக நியமனம் பெற்றார். இவர் மிகவும் திறமை சாலியாவார். சிறந்த நிருவாகியான இவரது காலத்திலேயே இப்பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இவரது காலத்தில் பாடசாலை நிருவாகம் சிறப்புற்றதோடு புறக்கிருத்திய வேலைத்திட்டங்களும் முன்னேற்றமடைந்து காணப்பட்டன. விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள், சாரணர் பாசறை என்பன நடாத்தப்பட்டன. மாணவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விஞ்ஞானக்கழகம், வரலாற்றுக் கழகம் என்பன உருவாக்கம் பெற்றன. ஆசிரியர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்புக்காணப்பட்டது. 2 விஞ்ஞானப் பட்டதாரிகள், 3 கலைப்பட்டதாரிகள் உட்பட 23 ஆசிரியர்களையும், அண்ணளவாக 700 மாணவர்களையும் கொண்டு பாடசாலை வளர்ச்சிப் பாதையில் பயணித்தது. இவற்றுடன் கலைப் பிரிவு மாணவர்களின் நன்மை கருதி முதன் முதலாக உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு திரு.எம்.விருத்தாசலம், திருமதி.சின்னத்துரை ஆகியோர் சிறப்பாகக் கற்பித்தனர்.

இவர் இடமாற்றம் பெற்றுச் சென்ற வேளையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.க.அருணாசலம் அவர்கள் 1964 பெப்ரவரிமாதம் 2 ஆம் திகதி பாடசாலையின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார். இவர் அதிபராக இருந்த காலப்பகுதியே இப்பாடசாலையின் பொற்காலமென்று வர்ணிக்கப்படுகின்றது. அவ்வேளையில் பாராளுமன்ற உறுப்பினராக விருந்த அமரர் S.M.இராசமாணிக்கம் அவர்களுடனும், களுவாஞ்சிகுடி மக்களுடனும் நல்லுறவைக் கொண்டிருந்த இவ்வதிபர் பாடசாலையில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டதுடன் மாணர்களின் கல்வி உயர்ச்சியிலும் அதிக ஊக்கமெடுத்தார். இதனால் இவரது காலத்தில் கிழக்கு மாகாணத்திலேயே கூடுதலான மாணவர்களைச் சர்வகலாசாலைக்கு அனுப்பிய பாடசாலையாக எமது பாடசாலை விளங்கிற்று. இது மட்டுமின்றி, மாணவர்களுக்கென இரண்டு விடுதிகள் நிருமாணிக்கப்பட்டன. பாடசாலையின் நீண்டகாலத் தேவையாக விருந்த விளையாட்டுமைதானம் அமைக்கப்பட்டது.

மின்விநியோகம், குழாய் நீர்வசதி என்பன ஏற்படுத்தப்பட்டன. உலோகவேலை, மரவேலை, நெசவு வேலை போன்ற கைப்பணிப்பாடங்களைப் போதிப்பதற்கான உபகரணங்கள் பெறப்பட்டன. இவற்றுடன் மனையியல் தையல் உபகரணங்களும் பெறப்பட்டன. பாடசாலைக்கு அத்தியாவசியத் தேவைகளாகவிருந்த தட்டச்சு இயந்திரம், றோணியோ மெசின் என்பனவும் பெறப்பட்டன. பாடசாலையில் புதிதாக விஞ்ஞான உயர்தரப் பிரிவு வர்த்தகப் பிரிவு என்பன ஆரம்பிக்கப்பட்டன இவ்வாறான அபிவிருத்திகளால் மாணவர்களின் தொகை 1000 இற்கும் கூடுதலாகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்கள் தொடர்பான விடயங்கள் மாத்திரமின்றி சாரணர் இயக்கம், விளையாட்டுப் போட்டிகள், தமிழ் -ஆங்கிலதின விழாக்கள், பெற்றார் தினவிழா, பரிசளிப்பு விழா, மாணவர் சுற்றுலா, திருவள்ளுவர் விழா, சரஸ்வதிப் பூசை, என்பவையும் இவரது காலத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். இவைதவிர, இவரது காலத்தில் நடாத்தப்பட்ட விஞ்ஞான கலைப்பொருட்காட்சியை மட்டக்களப்பு அம்பாரை மாவட்ட பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பெருமளவில் வந்துபார்வையிட்டுச்சென்றமை குறிப்பிடத்தக்கதாகும். மூன்று நாட்கள் நடைபெற்ற இப் பொருட்காட்சி கல்வித்திணைக்கள அதிகாரிகள் மட்டத்திலும் பொதுமக்கள் மத்தியிலும் பாடசாலைக்கு நற்பெயரைத் தேடித் தந்தது. மட்டக்களப்பில் அரசினர் கல்லூாயில் (இந்துக்கல்லூரி) 1970இல் நடைபெற்ற மாவட்ட மட்டப் பொருட்காட்சியில் எமது பாடசாலையும் கலந்து கொண்டு மாவட்டத்திலேயே கூடுதலான பரிசில்களைப் பெற்று முதலிடத்தைத் தட்டிக்கொண்டது. நீராவிஇயந்திரம், தொலைபேசி, வானொலிக் கட்டுப்பாட்டு மோட்டர், கம்பியில்லாத் தந்தி, இரத்தச் சுற்றோட்டம் எனப்பார்வைக்கு வைக்கப்பட்ட பல்வேறு காட்சிப் பொருட்களும் பலரையும் வியப்புக்குள்ளாக்கின. 1964இல் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையே வைக்கப்பட்ட நாட்டுக்கூத்துப் போட்டியில் எமது மாணவர்களும் கொழும்புக்குச் சென்று "கயிலை வேடன்" என்னும் நாட்டுக் கூத்தை ஆடி முதல் பரிசு பெற்றனர்.

அதிபர் திரு.அருணாசலம் அவர்களது காலத்துச் சாதனைகளைப் பட்டியலிட்டுக் கூறமுடியாது. இக்கட்டுரை எழுதும் நானும் இவரது காலத்து மாணவன் என்பதில் பெருமை கொள்கின்றேன். கண்டிப்பான தொரு அதிபராக விருந்த அவர் தனது மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். பாடசாலை வளாகத்திலுள் அமைக்கப்பட்டிருந்த விடுதியில் தனது குடும்பத்தினருடன் தங்கயிருந்த அவர் இப்பகுதி மக்கள் பலரினதும் அபிமானத்தைப் பெற்றவராக இருந்தார்.

இவரைத் தொடர்ந்து 1972 ஜனரி 1ஆம் திகதி மண்டூரைச் சேர்ந்த திரு. வி.சீ.கந்தையா அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார். ஒரேபாடசாலையில் மேற்பிரிவு கீழ்ப்பிரிவு என இரண்டு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. எதிர்காலத்தில் கீழ்ப்பிரிவு படிப்படியாக அகற்றப்பட்டு அயலிலுள்ள சிறிய பாடசாலைகளுடன் சேர்க்கப்படவேண்டுமென அரசாங்கம் அறிவுறுத்தியது புதிய அறிவுறுத்தலின்படி ஆறுவயதுடையோரே பாடசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இக்காலத்தில் தொழில் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதனால் NCGE, HNCE பரீட்சை முறைகள் உட்புகுத்தப்பட்டு கல்வித் திட்டத்தில் முக்கிய மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. இவரது காலத்தில் அமைக்கப்பட்ட "கலைக்கூடம்" 1977ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7இல் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வீ.சீ.கந்தையா அவர்களைத் தொடர்ந்து 1977 டிசம்பர் மாதம் 09ஆம் திகதி பழுகாமத்தைச் சேர்ந்த திரு.க.செபரெத்தினம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றார். இவரது காலத்தில் இரண்டு நேரப் பாடசாலைகளாக இருந்த பாடசாலைகள் அரசாங்கத்தால் ஒரு நேரப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. இவரது காலத்தில்தான் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பயங்கர அழிவுக் குள்ளாக்கிய சூறாவளி வீசியது. எமது பாடசாலையின் பல கட்டிடங்கள் தரைமட்டமாகின மிகுதியானவையும் பகுதிச் சேதத்திற்குள்ளாகின இவற்றினால் சோர்வடைந்து போகாத அதிபர் ஊர்மக்களின் உதவியுடன் குறுகிய காலத்தினுள் பல தற்காலிகக் கொட்டில்களை அமைத்து மீண்டும் பாடசாலை இயங்க வழி ஏற்படுத்தினார். பழைய அதிபர்களின் திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. விபுலானந்த விழா, புத்தகக்கண்காட்சி என்பன சிறப்பாக நடாத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களால் 'உள்ளம்' சஞ்சிகை வெளியிடப்பட்டது. இவரது காலத்தில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் மேன்மையுற்றுக் காணப்பட்டன. இதனால் 1979 ம் ஆண்டு பல்துறைகளையும் சேர்ந்த 23 மாணவர்கள் சர்வகலாசாலைக்குத் தெரிவாகினர் இது அவ்வேளையில் ஒரு சாதனையாகக் கருதப்பட்டது.

பாடசாலையின் வளர்ச்சியில் உறுதுணையாகச் செயல்பட்ட தலைவர் S.M.இராசமாணிக்கம் அவர்களின் மறைவுக்குப்பின்னர், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவிருந்த திரு.M.கனகரெத்தினம் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் கூடுதல் அக்கறை காண்பித்தார். இவரது காலத்தில் ஒரு கற்றல்வள நிலையமும் இரண்டுமாடிக் கட்டிடமொன்றும், ஒரு மாணவர்விடுதியும் கட்டப்பட்டன. அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களின் முயற்சியினால் பாடசாலை மத்தியமாகா வித்தியாலய மாகத்தரமுயர்த்தப்பட்டது.

1985 ஒக்டோபர் 16இல் காரதீவைச் சேர்ந்த திரு.த.சண்முகரெத்தினம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார் இவர் காலத்தில் பாடசாலையின் முன்புற மதில் அமைக்கப்பட்டது. 1988 இல் "பாண்ட் வாத்தியக்குழு" அமைக்கப்பட்டது. இவைதவிர, இக்காலத்தில் மருத்துவ பீடத்திற்கு ஒருவரும், விஞ்ஞான பீடத்திற்கு இருவரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டமை குறப்பிடத்தக்கது. 1990இல் இடைநிறுத்தப்பட்ட ஆரம்பப்பிரிவு மீண்டும் தொடங்கப்பட்டது. "கொம்பியூட்டர்" கல்விக்கென ஒரு பயிற்சி அலகும் ஆரம்பிக்கப்பட்டது.

திரு.த.சண்முகரெத்தினம் பதவியேற்ற 1985 இற்குப்பின்னர் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுயுத்தம் தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழித்தது. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் வடகிழக்கு தமிழ் மாணவர்களின் முன்னேற்றத்தில் தேக்கநிலை ஏற்பட்டது. இந்த யுத்தத்தால் பல பாடசாலைகள் அபிவிருத்தியில் பின் தள்ளப்பட்டன. அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைநலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரும் பல்வேறு காரணங்களுக்காகவும் ஒதுங்கியிருக்கத் தலைப்பட்டனர். இதனால் திரு.த.சண்முகரெத்தினம் அவர்களைத் தொடர்ந்து வந்த பல அதிபர்கள் தங்கள் கடமைகளை ஒரு வரையறைக்குள்ளேயே வைத்துக் கொண்டதை அவதானிக்க முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.த.சண்முகரெத்தினம் பதவி உயர்வு பெற்றுச் செல்ல 1993 ஜீலைமாதம் 3ஆம் திகதி கல்லாற்றைச் சேர்ந்த திரு.எஸ் தம்பிராஜா அவர்கள் பாடசாலையைப் பொறுப்பெடுத்தார். வழமையான கல்வி நடவடிக்கையில் பின்னடைவுகள் ஏற்படாதவாறு இவர் பாடசாலையை நடாத்திச் சென்ற போதும் பாரிய வேலைத்திட்டங்கள் எதுவும் இவரது காலத்தில் நடைபெற வில்லை. இவரைத்தொடர்ந்து உதவி அதிபராக இருந்த திரு பொன். வன்னிய சிங்கம் அவர்கள் 1995 மார்ச் 13இல் பாடசாலையைப் பெறுப்பெடுத்த போதும் நான்கு மாதங்கள் கடந்த நிலையில் பாடசாலைப் பொறுப்பை களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு.N.நடராசா அவர்களிடம் கையளித்தார். 1995 ஜுலை 4ஆம் திகதி இவர் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டார். கிட்டத்தட்ட ஒருவருடகாலத்தில் திரு.நடராசா அவர்களின் மறைவையடுத்து 1996 ஒக்டோபர் 11 ஆம் திகதி பழுகாமத்தைச் சேர்ந்த திரு.T.சுப்பிரமணியம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். மீண்டும் ஒருவருடம் கடந்த நிலையில் 1997 ஓகஸ்ட் 26 இல் குருக்கள்மடத்தைச் சேர்ந்த திரு.K. சாந்தலிங்கம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இக் காலத்தில் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தும் முயற்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து மேற்கொண்டார். இந் நடவடிக்கைகளுக்கு அப்போதைய பிரதியமைச்சர் திரு.சோ.கணேசமூர்த்தி உறுதுணையாக இருந்தார். கிட்டத்தட்ட 5 வருடங்கள் கடந்த நிலையில் திரு.சாந்தலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றார். இவருடைய பதவிக்காலத்திலும் கற்றல் நடவடிக்கைகளைத் தவிர, பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் எதுவும் நடைபெவில்லை. இவ்வாறு பாடசாலையின் அபிவிருத்தியில் ஏற்பட்ட மந்த நிலைக்கு மேற்குறிப்பிட்ட அதிபர்கள் மீது நாம் குறை கூற முடியாது. நான் மேலே குறிப்பிட்டது போல் நாட்டில் நிலவியயுத்த சூழ்நிலையே இதற்குக் காரணமாகும்.

திரு சாந்தலிங்கம் அவர்களுக்குப்பின்னர் செட்டிபாளையத்தைச் சேர்ந்த இப்போதைய அதிபர் திரு.பொன். வன்னியசிங்கம் அவர்கள் 2002 ஏப்ரல் 24 இல் அதிபர் பதவியினை ஏற்றுக் கொண்டார். பாடசாலை வரலாற்றில் அதிபர் க. அருணாசலம் அவர்களது காலத்தின் பின்னர் இவரது பதவிக்காலத்திலேயே இன்னுமொரு பாரியவளர்ச்சி காணப்பட்டது. மத்திய மகாவித்தியாலயமாக இருந்த எமது பாடசாலை 2002 இல் தேசிய பாடசாலை அந்தஸ்துக்கு தரம் உயர்த்தப்பட்டது. முன்னைய அதிபர்.திரு.K.சாந்தலிங்கம் அவர்களது முயற்சியை இடைநிறுத்தாமல் திரு.பொன்.வன்னியசிங்கம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டதால் இது சாத்தியமாயிற்று. பலபாடங்களுக்கும் நிலவிய ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்து தேவையான ஆசிரியர்களைப் பெறுவதில் அதிபர் வெற்றிகண்டார். கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள், ஆங்கில பாட ஆசிரியர்கள் அழகியல் கல்வி ஆசிரியர்கள் என்போர் இவற்றில் அடங்குவர் இவர்களுடன் சிற்றூழியர்களும் போதுமான அளவிற்கு நியமனம் பெற்றனர். கணித விஞ்ஞான உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு தேவையான ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். இதனால் உயர்தர வகுப்பு மாணவர்களின் பல குறைபாடுகள் நீக்கப் பட்டன. இது மட்டுமின்றி இரு மொழிக்கல்வித்திட்டத்தின் கீழ் ஆறாம் வகுப்பில் ஆங்கில மொழி மூலம் சில பாடங்கள் கற்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விசார் வளங்கள் மட்டுமின்றி ஏனைய பௌதிக வளங்களையும் அதிகரிப்பதில் அதிபர் கவனம் செலுத்தினார். இவரது காலத்தில் மூன்று மாடிக்கட்டிடமொன்றும், இருமாடிக் கட்டிடமொன்றும், அமைக்கப்பட்டன. "கொம்பியூட்டர் யூனிட்" அமைக்கப்பட்டு மாணவர்களின் தேவைக்காக மேலதிக கணனிகள் பெறப்பட்டுள்ளன. பாடசாலை உள்வீதி, சிறுவர் விளையாட்டுத்திடல் என்பன அழகுற அமைக்கப்பட்டுள்ளன. கல்விக்கடவுள் சரஸ்வதியின் சிலை நிறுவப்பட்டு மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வழிபாட்டிற்கு வழிசெய்யப்பட்டுள்ளது.

அதிபர்.திரு.பொன்.வன்னியசிங்கம் அவர்கள் தனது தனிப்பட்ட விடயம் காரணமாக 20.01.2011 இல் இருந்து 22.11.2012 வரை விடுமுறையில் இருந்தார். அவ் வேளையில் நிரந்தர அதிபருக்குப் பதிலாக கடமை புரிந்தவர் திரு.க.தம்பிராசா அவர்களாவர். இவ் வேளையில் பாடசாலை நடவடிக்கைகள் சீர்குலையாமல் அதனை தற்காலிக அதிபர் திறமையாக வழிநடாத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் பாடசாலையை வழி நடாத்திச் செல்லும் அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்களின் எதிர்காலத்திட்டங்களும் சிறப்புற்று நிறைவேற இறைவனை வேண்டு கின்றோம். அவரது முயற்சிக்குப் பக்க பலமாக இருக்கும் ஆசிரியர் குழாம், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் நாம் மனமார வாழ்த்துகின்றோம். இவற்றிற்கு மேலாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழையமாணவர்கள் ஆகியோரையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூருவது பொருத்தமாகும். இவர்களுடன் எமது பிரதேச புலம்பெயர் மக்களும் பாடசாலையில் அக்கறை கொண்டிருப்பதை நாம் அவதானிக்கமுடிகின்றது. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

கடந்த காலத்தை போன்று எதிர்காலத்திலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொண்டு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டும் மெனக் குறிப்பிட்டு இதனை நிறைவு செய்கின்றேன்.

**எஸ்.அரசரெத்தினம்,**
பழைய மாணவன்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வு நிலை.இலங்கை வங்கி உயரதிகாரி.

ராஜ்பதி,
இல.32.V.V.றோட்,
கல்முனை - 02,

**[ இக்கட்டுரைக்குரிய தகவல்கள் ஓய்வுபெற்ற அதிபர் திரு.எஸ்.தம்பிராசா அவர்களின் கட்டுரையிலிருந்தும், பாடசாலையிலிருந்தும் பெறப்பட்டவை.]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது வாழ்வின் வழிகாட்டி.....

பாடசாலையின் விழாச்சிறப்பு நூல் வெளியீட்டில் ஆக்கம் ஒன்றை அளிக்குமாறு என்னிடம் வேண்டப்பட்டபோது நானடைந்த மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் அளவிடமுடியாது. ஏனெனில் என்னை வளர்த்து ஆளாக்கிய பாடசாலையின் விழாச்சிறப்பு நூலில் எனதாக்கம் இடம்பெறுவது நான் பெற்ற பாக்கியமன்றி வேறேது?

வாழ்க்கை, கல்வி, ஒழுக்கம், பழக்க வழக்கங்கள், பண்புகள், சாதனைகள், வாழ்வின் படி முன்னேற்றங்கள் என அத்தனையும் எனக்கு கற்றுத்தந்த வாஞ்சியூர் பட்டிருப்பு ம.ம.வி எனக்கு இன்னொரு அம்மா. எனது பாடசாலையை நான் அன்னை என்றுரைக்கவே விரும்புகின்றேன்.

1996ம் ஆண்டு தரம் 6 இனை கற்பதற்காக நான் எனது கல்வி அன்னையிலே கால்பதித்தேன். ஏனோ அன்று முதல் ஓர் இனம் புரியாத பூரிப்பும் கல்வியை கற்றவேண்டும் என்ற ஆசையும் என்னை கௌவிக் கொண்டன.

தரம் 6,7,8,9,10 என ஒவ்வொரு தடைகளையும் என் அன்னையின் மடியில் தவழ்ந்தவாறே தாண்டினேன்.

2001ம் ஆண்டில் க.பொ.த(சா/த) கல்வி கற்று சிறப்பு பெறுபேற்றை பெறுவதற்கு எனக்கு வழிகாட்டினாள் என் அன்னை.

சிறு வயது முதல் வைத்தியராக வரவேண்டும் என்ற எனது இலட்சிய மான வாழ்க்கைப் பாதையில் மிக மிக முக்கியமான தருணமது. ஆம் க.பொ.த (உ.த) எங்கு கற்பது என்பது மிக முக்கியமான விடயமானது.

அந்தக் காலத்தில் உயிரியல் அல்லது கணிதத் துறை கற்பவர்கள் நகர்ப்புற பாடசாலைகளுக்கு செல்வதே வழக்கமாயிருந்தது. காரணம் அம் மாணவர்களும், பெற்றோரும் எம் பாடசாலையின் தரத்தை குறைத்து மதிப்பிட்டமையே ஆகும்.

எனது பாடசாலையுடன் மிக மிக நெருக்கமாக உணர்வு பூர்வமாக தாய்-மகன் உறவைப் பேணுகின்ற எனது ஆழ்மனம் எனது பாடசாலையை தரம் குறைத்து மதிப்பிட என்னை அனுமதிக்கவில்லை.

எனது தந்தை திரு.மு. பவளேந்திரன் அவர்களும் எனது தாய் பரிதிமலர் அவர்களும் தொடர்ந்து க.பொ.த உயிரியல் பிரிவையும் இப்பாடசாலையிலே கற்குமாறு எனக்கு ஊக்கமளித்தனர்.

திரு. பொன். வன்னியசிங்கம் ஐயா அவர்களின் நேர்த்தியான சீரிய வழிகாட்டலும் எனக்கு உயர்தரம் கற்பித்த திருமதி.வே.பத்மகைலைநாதன், செல்வி.க.வினிதா, திருமதி.கி. ரவீந்திரன், திரு. க.கமலநாதன், திரு.K.யோகந்திரன், திரு.S.திருநேசராசா ஆகிய ஆசிரியர்களின் கற்பித்தலும் என்னை, என் கல்வியை, என் வாழ்க்கையை சிறப்பமாய் செதுக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாடசாலையில் இருந்து மிக நீண்ட காலமாக (15 வருடங்களுக்கு மேல்) யாரும் மருத்துவ பொறியியல் துறைகளுக்கு தெரிவானதில்லை என எனது அன்னை மீது கரியூசும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.


ஒரு நாள் எனது அதிபர் திரு. பொன். வன்னியசிங்கம் ஐயா என்னை தனியாக அழைத்து மகன் உங்களை நாங்கள் மிகவும் நம்பியிருக்கின்றோம். நாம் கணித விஞ்ஞான துறையை எமது பாடசாலையில் தொடர்ந்து நடாத்துவதற்கு சிறந்த பெறுபேறு வேண்டும் என்றார்.

அவரது இந்த நம்பிக்கையுடனான வேண்டுகோளும், எனது அன்னையின் மீது சுமத்தப்பட்ட பாரமும் எனது வேகத்தையும் விடா முயற்சியையும் கடின உழைப்பையும் கண் விழிப்பையும் பல மடங்கு அதிகரித்தன என் பாடசாலையே எனக்கு வாழ்வின் விளக்காய் இருந்த உனக்கு பெருமை சேர்க்க நான் எத்தியாகமும் செய்வேன் என விரதம் பூண்டேன்.

அந்த ஆண்டவன் அருளும் அப்பா அம்மாவின் அரவணைப்பும் இவை எல்லாவற்றுடன் எனது பாடசாலையின் முழுமையான ஆசியும் எதிர்பார்ப்பும் முதலாவது அமர்விலே என்னை மருத்துவ கல்லூரிக்குள் அனுப்பிவிட்டன.

அதிபரும் ஆசிரியர்களும் ஊராரும் ஏதோ நான் பாடசாலைக்கு பெருமை சேர்த்ததாய் பேசினார்கள் ஆனால் என் பள்ளியே உண்மை அதுவல்ல.

நீ கற்று தந்தாய் நான் கற்றேன்
நீ வழிகாட்டினாய் நான் நடந்தேன்
நீ ஏற்றினாய் நான் ஏறினேன்
நீ தேற்றினாய் நான் தேறினேன்
நீ அறிவை ஊற்றினாய் நான் போற்றப்பட்டேன்
நீ எனக்கு தாய்
என் அம்மா அப்பாவுக்கும் தாய்
என் பிள்ளைக்கும் நீ தாயானால்
நான் செய்த தவப்பயன் தாயே அது



ஓர் உண்மையை நான் சொல்லட்டுமா!

பாடசாலை விடுகை பத்திரமெடுத்து
வீடு திரும்புகையில் ஒரு
கால் வீதியிலே ஒரு
கால் பள்ளியிலே
கண்ணீர் கண்ணுக்குள்ளே
இடி என் நெஞ்சுக்குள்ளே

Dr. பவளேந்திரன் சதீஸ்குமார்
பழைய மாணவர் (1996-2004),
மலரில்லம்,
செக்கடி வீதி, களுவாஞ்சிகுடி.

எனது தாயே வாழ்வுறு சீர் களுவாஞ்சிகுடி
மாண்பு வீங்கு கலை நிதியமே
நீ வாழ்க நின் பணிகளும் வாழ்க

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்நாள் ஞாபகம்

1951ம் ஆண்டு எருவில் அ.த.க. பாடசாலையில் 5ம் வகுப்பில் சித்தி அடைந்த மாணவர்களில் பெரும் பாலானவர்கள் படிப்பைத் தொடர முடியாதவர்களாகவிருக்க ஒரு சில மாணவர்கள் மட்டும் 1952ம் ஆண்டில் பட்டிருப்பு பெரிய பாடசாலைக்குச் சென்றோம். பட்டிருப்பு பாடசாலை எப்போது ஆரம்பிக்கப்பட்து என்பது மட்/ பட்டிருப்பில் கனிஸ்ட பாடசாலை ( ஆங்கிலத்தில் ***BT/paddiruppu jumiod school)*** என்ற நாமத்திலேயே இருந்தது. எருவிலில் செத்தைப்பள்ளியாகவிருந்த அ.த.க பாடசாலையை விட்டுச் சென்ற எமக்கு அப்பாடசாலை அன்று ஒரு பெரியதொரு தோற்றத்தையே கொடுத்தது. நாங்கள் அன்று வெளியுலகு அறியாத கிணற்று தவளையாய் இருந்ததுதான் காரணம். அன்றைய பாடசாலைக் கட்டிடம் கிழக்கு மேற்காக அமைந்து நடுவனாக வடக்குத் தெற்கான வடிவில் அமைந்திருந்தது. தென்புறமாகக் கட்டிடத்தில் அதிபருக்கான ஒரு அறையும் அடுத்த அறையில் சங்கீத பாடத்திற்கான அறையும் அதனையடுத்து பாடசாலைப் பிள்ளைகளுக்கு பால் தயாரித்துக் கொடுக்கும் குசினி தனியாக அமைந்திருந்தது. கட்டிடம் முழுவதும் நீற்றினால் கட்டப்பட்டதாகும். விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. விளையாடடுப் போட்டிகள் குளத்துள்ளேதான் நடைபெறும்.

நாங்கள் பாடசாலையில் சேரும் போது திரு.T.S.வேதநாயகம் (கல்முனை) அவர்கள் அதிபராக இருந்தார். அவர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் உதவி ஆசிரியர்களாக வ. சற்குணானந்தம் எஸ். செல்லத்துரை இளையதம்பி பே. இரத்னராசா என்பவர்கள் இருந்தார்கள். சங்கீத ஆசிரியராக K.K.கிருஸ்ணபிள்ளை இருந்தார். ஓவ்வொருவரும் தங்கள் பாடங்களைப் படிப்பிப்பதில் தனித்துவமானவர்கள் அதில் திரு.சற்குணானந்தம் எஸ். செல்லத்துரை என்பவர்கள் மிக மிக கண்டிப்பானவர்கள்.

படிப்பை விட மாணவர்களின் ஒழுக்கமே பெரியதெனக் கருதியவர்கள் அதிபரைத்தவிர மற்றய ஆசிரியர்கள் அனைவரும் வெள்ளை வேட்டி, சால்வை, வாலாமணி அணிந்தே பாடசாலைக்கு வருவர். அது ஒரு தனி அழகும் சிறப்புமாக இருக்கும்.

அன்று 5ம் வகுப்பிற்கு பின்னர் From 1.2.3. என்ற வகுப்புக்கள் இருந்தன 3ம் வகுப்பு சித்தியடைந்த பின் J.S.C அதன்பின்னர் S.S.C(Prep) S.S.C (final) என்ற வகுப்புக்கள் Finalபரீட்சை சித்தியடைவோருக்கே சிரேஷ்ட பாடசாலைத் தராதாரப்பத்திரம் வழங்கப்படும். கடைசியாக 1958ல் S.S.C தராதரப்பத்திரம் பெற்றவர்களில் நானும் ஒருவன்.

1956ம் ஆண்டில் பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் பண்டிதர் க. கந்தையா, O.விருத்தாச்சலம், இராசசிங்கம் என்பவர்கள் முக்கியமானவர்கள். அவ்வாண்டின் பின் பாடசாலைகளில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டதெனலாம். பண்டிதர் கந்தையா ஆசிரியர் அவர்கள் வள்ளுவர் விழா விபுலானந்தர் விழா பாரதி விழா போன்ற விழாக்களை ஆரம்பித்தார். இதில் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் இடம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இது அன்றைய மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. கந்தையா ஆசிரியர் தமிழ் இலக்கண இலக்கியம், ஆங்கிலம், சமய பாடங்கள் கற்பிப்பதில் திறமையாளர். வித்துவான் திரு. விருதாசலம் வித்துவான் விருதாச்சலம் அவர்கள் இலக்கண, இலக்கியங்களை இனிதே கற்பித்தார். அவர்கள் நல்ல தமிழ் அறிவு உள்ளவராயினும் கரும்பலகையில் எழுதும் போது ல,ள,ழ,ன,ண என்பவற்றில் பிழை விடுவார். அதனை சுட்டிக்காட்டும் மாணவருக்குப் பாராட்டுத் தெரிவிப்பார் சங்கீத ஆசிரியர் அவர்களிடத்தில் அன்று சங்கீதம் கற்றவர்களில் அன்றைய செல்விகள் சரஸ்வதி, கு.தருமநாயகி, க.மகேஸ்வரி, வ.மகேஸ்வரி, சீதாலெட்சுமி என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

வித்துவான் விருதாசலம் அவர்களுக்கு பின்னர் அந்த சங்கீத ஆசிரியர் நடராஜாவிற்கும் சில கலந்துரையாடல்களின் போது கருத்து வேறுபாடுகள் ஏற்படும். அப்போது நீர் ஒரு வித்துவான். நானொரு கத்துவான் என்று கூறும் போது மாணவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பதை இன்றும் என்னால் மறக்க முடியாது.

1956ம் ஆண்டில் திரு K.K.கந்தையா என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு ஆங்கிலப்பட்டதாரி ஆசிரியர் அவரும் மாணவர்களின் ஒழுக்கத்தில் மிகுந்த அக்கறையுள்ளவர். அவர் ஆட்களோடும் மாணவர்களோடும் அளவளாவும் போது அதிகமாக ஓமோ? இல்லையோ? என்ற வசனத்தை அதிகம் பாவிப்பார். அதனால் மாணவர்கள் அவருக்கு ஓமோ இல்லையோ என்ற பட்டத்தை சூட்டி அழைத்தனர்.

1956 - 1957ல் ஒரு வகுப்பேற்றப் பரீட்சை நடந்து கொண்டிருந்த வேளை உடன் மாணவர் ஒருவர் கணக்குப்பாடத்தில் மட்ட மாணவர் சரக்கும் முதலும் கணக்கில் எனது உதவியை நாடினார். கணக்கைச் செய்து மடித்து பேப்பரை மாறும் போது அதிபர் கண்காணித்து விட்டார். கணெக்கெழுதிய பேப்பரை கைப்பற்றியும் பின்புறமாக பிரம்படி போட்ட அவமானம் மாற பல காலஞ்சென்றது.

1958ல் இறுதிப்பரீட்சை முடிந்து நண்பர் நண்பிகளை பிரிந்து பாடசாலையை விட்டு வெளியேறிய போது மனம் அடைந்த வேதனையின் அளவு அளவிட்டுக் கூற முடியாது. மனித வாழ்வில் பாடசாலை வாழ்க்கை ஒரே தடவைதானே கிடைக்கும். நான் இன்று இக்கட்டுரையை எழுதுவதன் நோக்கம் அன்றைய பாடசாலையையும் இன்று பௌதீக வளங்கள் பல பெற்ற பல மாடிக்கட்டிடங்களையும் வானுயர்ந்து புகழ் பரப்பும் பாடசாலையின் வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கே.




**திரு.ஐ. சுப்பிரமணியம்**


அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வு பெற்ற நிருவாக உத்தியோகத்தர்
பானஷசன்மொழிப்பெயர்ப்பாளர்,
தலைவர், ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம்,
மத்தியஸ்தர், மத்தியஸ்தர் சபை ம.தெ.எ.ப.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கல்வியின் மகுடக் கட்டழகி மட்டு பட்டிருப்புத் தேசி பாடசாலையே !

# மண்ணுலகு உள்ளவரை நின் மணம் வீசட்டும்"



பொன் எழுத்துக்களால் நின் புகழ்
- பொறிக்கப்பட்டதம்மா
பூமியிலே நீ தோற்றம் பெற்றுத்
- தொண்ணூற்றி நான்காண்டுகளம்மா
என்னே! நின் சிறப்பெழுந்து
- சிறகடித்துப் பறக்குதம்மா!
அன்னையே ! கல்விக்களமே
- அன்பொழுக வாழ்த்துகின்றேன்.

கல்வியின் மகுடக் கட்டழகி
- கண்களில் நிறையும் பேரழகி
நல்லிதயம் படைத்த தேவநாயகி
- நான் வணங்கும் கலையரசி
பல்லாண்டு பல்லாண்டு நின்பணிகள்
- பாருலகில் மிளிருதம்மா!
சொல்லாழும் சுந்தரத் தமிழ் வடிவே
- சுகமெல்லாம் நின் திருவடியிலம்மா!

முத்தமிழைத் தருவாய் முகம் மலர்ந்து
- தித்திக்கும் எம் நாவில்
கணிதம் விஞ்ஞானம் சங்கீதம் நடனம்
- இனிய மாதா அள்ளித் தருவாய் நீ!
குடியியல், புவியியல் வரலாறு உளவியல்
- ஆங்கிலமொழியும் அன்னையே நீ தருவாய்
இடிவிழுந்து போகாமல் எங்கள் வாழ்வு
- கல்வியின்பம் தரும் தாயே வாழ்த்துகின்றேன்

பொன் வன்னியசிங்கம் அதிபர் நின்
- பாசமுள்ள மூத்த பிள்ளை
கண்ணிறையும் ஆசிரியரெல்லாம் நின்
- கனிஷ்ட பிள்ளைகளம்மா
என்னையாண்ட அன்னையே!
- இனிய மாணவரெல்லாம்
உன்னினிய பேரக் குழவியரம்மா
- உலகமாதா உனக்கு என் வணக்கமம்மா!

எத்தனை எத்தனை பேரறிஞர்
- நின் மடியில் தவழ்ந்தெழுந்துயர்ந்தார்
அத்தனை மனித வடிவங்களும்
- அம்மா நின் கொடைகளம்மா
பெற்றது மட்டும் பெற்றோர் எம்மைக்
- கல்வியூட்டி வளர்த்தவள் நீயம்மா
வெற்றி நாயகி "பட்டிருப்புத்
- தேசிய பாடசாலையே வாழியவே"

கவிஞர், கலைச்சுடர்
**கோயிலூர் தனிகா,**
திருப்பழுகாமம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலையின்

# 94வது பாடசாலை தினம்

### பாடசாலை வரலாற்றில் இதுவரை நடைபெறாத மங்களகரமான நாள்



### இப்பாடசாலை வாழ்க, வளர்க.....

இன்நாள் இனிய நாள், இன்ப நாள், பொன் நாள், இப்பாடசாலை வரலாற்றில் இதுவரை நடைபெறாத சிறப்பு நாள், 94வது பாடசாலை தினம் பொருட்காட்சி கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும் பெருமை மிகுநாள். இந்நாள் பொன்நாள். நன்நாள். அன்நாளில் மேதகு சபாபதிப்பிள்ளை இக்கிராமத் தலைவரால் 1919.04.01ல் உருவாக்கப்பட்டது இக்கல்விக்கூடம். 1வது அதிபராக ஆசிரியத் தீபம் T. சீனித்தம்பி பணிபரிந்தார். இன்று 23வது அதிபராக செயல் வீரர், ஆற்றல் மிகு அதிபர் பொன். வன்னியசிங்கம் அரும் பணிகள் ஆற்றி வருவதை அனைவரும் அறிவர்.

அழியாதது. அழிக்க முடியாதது, காலத்தைக் கடந்து வாழ்வது, உலகை வாழவைப்பது, உலக அச்சாணியாக அமைந்தது. உடலுக்கு உயிர் போல உலகிற்கு ஒளி போல வாழ்வதற்கு வழியானது கல்வி என்பது. அதை அள்ளி வழங்குவது பாடசாலைகள், குருகுலங்கள் பல்வேறு பல பெயரால் உலகெங்கும் அமைக்கப்படுவது. குறைவற்ற குருமார்கள். நிறைவு அறிவு ஊற்றாக எங்கும் அமைந்தது அதில் ஒன்றாக புகழோடு சிறப்போடு மதிப்போடு உயர்வோடு மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலையாக 94வது பாடசாலை தினம் காண்பது அதிபர் ஆற்றல் மிகு பொன் வன்னியசிங்கம் வழிகாட்டலில் வளர்வது.

ஈழமணித் திருநாட்டில் பாடுமீன் தேனகத்தில் இன்று மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை எனும் பெயரில் களுவாஞ்சிகுடி மாநகரில் நீடித்து நிலையாக புகழோடு பாராட்ட நற்கல்வி சேவை செய்வது அன்று முதல் இன்று வரை ஆற்றல் தகமை அறிவுசால் அதிபர்களால் வழிநடத்தப்படுவது திறமைமிகு ஆசிரியத் தீபங்கள் நற்சேவையினைப் பெற்று இமயமாய் உயர்ந்தது நற்கல்வி, நல் ஒழுக்கம், அடக்கம். நற்பண்புதனை மாணவர்க்கு ஊட்டி வளர்ப்பது வரலாற்றுக் காவியமாய் கலங்கரை விளக்காய் கல்வி உயர்வுக்கு வழிகாட்டுவது மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலை தனக்கென்று தனித்துவம் கொண்டது நாடும் ஏடும், ஊரும் போற்ற வெற்றி நடை போட்டு வளர்வது.

கலை, விஞ்ஞானம், வர்த்தகம், நிர்வாகம் பற்பல பிரிவுகளைக் கொண்டதுவைத்தியக் கலாநிதிகளை, பொறியியலாளர்களை, கணக்காளர்களை, வழக்கறிஞர்களை நிர்வாக அதிகாரிகளை. கலைஞர்களை அறிஞர்களை, உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் சாதனை படைப்பவரை ஆயிரக்கணக்கில் உருவாக்கி வருவது. பாவலரை, நாவலரை வர்த்தக தொழில் அதிபர்களை அரசியல் தலைவர்களை சமூகம் உயர்வடைய சகல துறைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சாதனையாளர்களைத் தருவது. நற்பெயர் பெற்று புகழோடு சிறப்போடு வரலாறு படைத்து வருவது. கிழக்கு மண்ணில் கல்விக் கதிரவனாய் எழில்ச் சுடராய் ஒளிதருவது மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலையாக 94வது பாடசாலை தினம் காண்பது.

துடிப்பும் சுறுசுறுப்பும் ஆற்றல், திறமை, அறிவு, நிருவாகச் சிறப்பு, நற்பண்பு, தகைமை, கடமை உணர்வு, கனிவு, சேவை, மனம் அஞ்சாமை கொண்ட ஆற்றல்மிகு அதிபர் திருவாளர் பொன். வன்னியசிங்கம் அவர்களோடு சிறப்பான ஆசிரியத் தீபங்கள் ஏனைய பணியாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஊர் பொது மக்கள், மற்றும் பழைய மாணவர்கள், பிரமுகர்கள், நலன் விரும்பிகள் இவர்களின் ஆதரவுடன் அதிபரின் கட்டுப்பாடான கண்டிப்பான சீரிய நடவடிக்கைகளால் இன்று எழில் கொஞ்சி விளையாடும் பழம் பெருமை மிகு களுவாஞ்சி மாநகர் மண்ணில் கலைக்கோயிலாக, கல்வித் திருக்கோயிலாக அறிவு தரும் ஆலயமாக இன்று 94வது பாடசாலை தினம் காணும் மட்/ பட்டிருப்பு தேசிய பாடசாலை வளர்க. வாழியவே!

**கவிஞர் பூபா. மதுரநாயகம், J.P,**
"பூபாளம்".
களுவாஞ்சிகுடி,
கடற்கரை வீதி - தொ.இல. 065 2250217.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகம் என்னும் அதிசயமான கணிதச் சாதனையாளர் பற்றி


## கலாநிதி கோணமலை கோணேசபிள்ளை

*B.ED Mathematics (First class Hons), M.A, M.Sc, ED. D, PH.D.*


விரைவாகவே கணிதச் செயல்களின் சாதனை படைத்தவர்களைப் பற்றியும் தற்போதுள்ள சாதனையாளர்களைப்பற்றியும் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழக பேராசியர் ஸ்ரீபன் ஸமித நூலென்றை எழுதி வெளியிட்டார். இந்த நூல் சர்வதேச மட்டத்தில் பெரும் செல்வாக்கைப் பெற்றது. இந்த நூலில் பல ஐரோப்பியர்கள் இடம்பெற்றாலும் இந்தியாவைச் சேர்ந்த ராமானுஜரும், சகுந்தலா தேவியும் இலங்கையரான ஆறுமுகமும் இடம்பெறுகிறார்கள் ஆறுமுகத்தைப் பற்றிய விபரங்கள் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை என்று பேராசிரியர் கூறுகிறார்.

ஒரு நாள் முக்கிய கோயில் திருவிழாவொன்றுக்கு ஆறுமுகம் வழிபடுவதற்காகவும் பிறரிடம் தருமம் வாங்குவதற்காகவும் சென்றிருந்தாராம். திருவிழா முடிந்தவுடன் கோயில் வீதியில் படுத்து நித்திரையில் ஆழ்ந்து விட்டாராம் அப்போது கனவில் காவி உடையுடன் ஒரு துறவி தோன்றி ஆறுமுகம் நாக்கை நீட்டு என்றாராம். நாக்கை நீட்டியவுடன் நாக்கில் ஏதோ எழுதிவிட்டு ஆறுமுகம் உனக்கு எல்லாம் தெரியும் எழும்பி போ என்று துறவி சொன்னாராம். எழும்பிப் பார்த்தபோது பல விடயம் தெரியும் என்ற உணர்வு ஏற்பட்டதாம். கோயிலில் இருந்து (இது மண்டூர் முருகன் என்று ஊகம் ஆனால் இன்னும் ஆதாரம் கிடைக்கவில்லை) அதன்பின் கடைகளுக்குச் சென்று கணக்குகளைக் கூட்டும் பணியில் ஈடுபட்டாராம். பின் இவரது செல்வாக்கு பரவியதாம்.

இவருடைய அபூர்வ திறமையை கேள்வியுற்ற றோயல் எஸியாற்றிக் சொசையிற்றி (Royal Asiatic Socity) 1912 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற இச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்துக்கு இவரை அழைத்து இவரது திறமையை உறுதி செய்ய முயன்றது.

இந்தச் சங்கம் ஆங்கிலத்திலே தனது செயல்களை நடத்தியது. அப்போது இலங்கையில் கொலோனியல் காரியதரிசியாகிய உயர் பதவியை (Colonial Secretary) வகித்த சேர் கியு கிளிபர்ட் (Sir Hugh Cliford) என்னும் ஆங்கிலேலேயர் இதன் தலைவராக இருந்தார். ஆறுமுகத்துக்கு கொடுக்கவேண்டிய வினாக்களைக் கல்வித்திணைக்களம் ஆங்கிலத்தில் தயாரித்தது. ஆறுமுகத்துக்கு தமிழ் மாத்திரமே தெரியும். எனவே ஆங்கிலத்தில் தயாரிக்கப்பெற்ற வினாக்களை ஆறுமுகத்துக்கு தமிழில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டன.

அவருக்குக் கொடுக்கப்பெற்ற வினாக்கள் சில பின்வருமாறு:

1. கூட்டுக 8,596,713,826 உம் 96,268,593
2 பெருக்குக : 46,989 உம் 864,726 உம்
3 காரணி காண்க: 28,414
89,712



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒரு தங்கப்பவுணின் விட்டம் எட்டில் ஏழு அங்குலமாக இருந்தால் லண்டனில் இருந்து லிவப்பூளுக்க இடையில் உள்ள தூரத்தை நாணங்களை ஒன்றின் பின் ஒன்றாக வைத்து நிரப்ப எத்தனை நாணயங்கள் தேவையாகும்? (இடைத் தூரம் 196 மைல்கள்)

5. ஒரு அங்குல உயரத்துக்கு ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்க 17 நாணயங்கள் தேவை எனின் 3451 அடி உயரத்துக்கு அடுக்க எத்தனை நாணயங்கள் தேவை?

6. ஒருவர் 22 பொருள்களை தான் 36 பொருள்களை வாங்கிய விலைக்கு விற்றால் அவர் அடையும் ஆதாயம் எத்தனை நூற்றுவீதம்?

7. 63,409,369 இன் வர்க்க மூலத்தைக் காண்க?

8. ஒரு சக்கரத்தின் விட்டம் 3 1/4 யார் எனின் 26 மைல் தூரத்தை செல்வதற்கு சக்கரம் எத்தனை முறை சுற்றல் வேண்டும்?

9. ஒரு தொகைப் பணம் வட்டிக்குக் கொடுக்கப்பெற்றால் 30 வருடங்களில் வட்டியும் முதலும் இரட்டிப்பாகுவதற்கு வட்டி வீதம் என்ன?

10. 20,570,824 இன் கன மூலத்தைக் காண்க

11. ஒரு நீர்த் தொட்டியின் நீளம் 18 அடி 9 அங் அகலம் 13 அடி 4 அங். அதில் 2 அங். நீர் இருந்தால் அந்த நீரின் நிறை என்ன? (ஒரு கன அடி நீரின் நிறை 62.5 இறாத்தலாகும்)

12. 69,343,957 இனது 5ஆவது மூலத்தைக் காண்க.

இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ஆறுமுகம் சில செக்கன்களில் விடைகூறி சபையில் இருந்தவர்களை ஆச்சரியத்தில் பிரமிக்கச்செய்தாராம்.

இப்படியான நிகழ்வைக் கண்டு ஆச்சரியமுற்ற சபையில் இருந்த ஒருவர் தானாகவே பின்வரும் கேள்வியைக் கேட்டாராம்.

ஒரு செட்டியார் 173 பேருக்கு ஆளுக்கொரு புசல் அசிரியை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஒவ்வொரு புசலிலிலும் 3, 431, 272 அரிசிகள் இருந்தன. அன்பளிப்பாக அரிசி பெற்ற அத்தனை பேரும் அவர்கள் பெற்ற அரிசில் 17% கோயிலுக்குக் கொடுத்தல் வேண்டும் கோயிலுக்குக் கொடுக்கப்பெற்ற அரிசிகள் எத்தனை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கணக்கைக் கேட்ட ஆறுமுகம் அதிர்ச்சி அடையாது மொழி பெயர்ப்பை மீண்டும் கேட்டு விளங்கிக் கொண்டு மூன்று செக்கனில் விடையைக் கூறி அவையோரை மீண்டும் ஆச்சரியத்தில் மூழ்கவைத்தாராம்.

இந்தச் செய்தி 1912 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி வெளிவந்த சிலோன் மோணிங் லீடர் என்ற பத்திரிகையில் வெளிவந்ததாம்.

இந்த நிகழ்ச்சி நடந்த 1912ஆம் ஆண்டிலேதான் மண்டூரில் சைவப் பாடசாலை தாபிப்பதற்காக இராமக்கிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரான சுவாமி அபேனந்தாவின் சீடரான அமெரிக்காவை சேர்ந்த சகோதரி அவவாமா அவர்கள் மண்டூர் சைவ பாடசாலைக்கு அடிக்கல் நாட்டி வைத்தார் ஆனால் இவர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கு பற்றியதாக தெரியவில்லை

இந்த நிகழ்வு நடந்தபோது அதாவது 1912ல் பேராசிரியர் சுந்தரலிங்கத்திற்கு வயது 17 வயது அப்போது அவர் யோசேப் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். சுவாமி விபுலானந்தருக்கு 20 வயது அப்போது கொழும்பில் ஆசிரியர் கலாசாலையில் கற்றுக்கொண்டு இருக்கிறார். இவர்கள் இந்த நிகழ்வைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. எனினும் ஆங்கிலேயரான கணிதப் பேராசியர் பிறட் பார்லோ (Fred Barlow) இந்த அதிசய நிகழ்வைப்பற்றி 1952இல் அவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆறுமுகத்தின் சந்ததியினரைப் பற்றி எந்தச் செய்தியும் பெறமுடியவில்லை என்றும் கூறியுள்ளார்.


ஆறுமுகத்துக்கு ஒவ்வொரு கையிலும் ஆறு விரல்களும் பாதத்தில் ஆறுவிரல்களும் இருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் இவரைப் பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கு சற்று முன் விபுலாநந்தர் பிறந்த காலப்பகுதியிலேதான் இவர் பிறந்திருத்தல் வேண்டும். என்று 1912 இல் நடைபெற்ற நிகழ்வைக் கொண்டு ஊகிக்கலாம்.

இவ்வாறு விரைவாக சில நொடிகளில் கணிதச் செயற்பாடுகளைச் செய்தவர்கள் இலங்கையரான ஆறுமுகமும் இந்தியரான சகுந்தலா தேவியும்தான் என்று கணித வரலாறு கூறுகின்றது. சகுந்தலா தேவி 1929 ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி பிறந்தவர். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயில் நீர்த்தார். இவரைப் பற்றிய விபரங்கள் ஆவணப்படுத்தப் பெற்றுள்ளன.

**கலாநிதி கோணமலை கோணேசபிள்ளை**

*B.ED Mathematics (First class Hons),*

*M.A, M.Sc, ED. D, PH.D.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்ளின் ஒழுக்கமும்
## பெற்றோரின் பங்களிப்பும்



*" ஒழுக்கம் விழுப்பம் தரலால்*
*ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"*

*"உயிரை துச்சமென மதிப்பவர்கள் மாவீரர்கள்*
*ஒழுக்கமே உயிரெனக் கணிப்பவர்கள் மனிதர்கள்"*

*"ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள் பலர்*
*ஒழுக்கமின்றி தாழ்ந்தவர்கள் சிலர்"*

இவ் ஒழுக்கமானது எங்கே பிறக்கின்றது என்று பார்த்தால் முதலிடம் பெறுவது வீடு, அடுத்து வருவது பாடசாலை. ஆகவே வீட்டுச் சூழல் ஒரு பிள்ளைக்கு எவ்வாறு அமைகின்றதோ அதுவே அதன் அடுத்த படியான பாடசாலை வாழ்க்கைக்கு நெறிப்படுத்துகின்றது. *"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"* என்பது போல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே சீலம் மிக் கவர்களாக வளர்வதற்கு வழிசமைக்க வேண்டும். *"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அவர் நல்ல வராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"* என்று பத்து மாதம் சுமந்து பெறுவது மட்டுமல்ல பிள்ளைகளைப் பேணி வளர்க்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் தாய்க்கே உரியது. என்பதனை உணரவேண்டியுள்ளது. இங்கே தாய் மட்டும் தான் பொறுப்பு என்று தந்தை விலகிவிட முடியாது. பெற்றோர் என்பது தாயும், தந்தையும், இணைந்த அர்த்தநாரீஸ்வரர் வடிவம். எனவே பிள்ளையின் ஒவ்வொரு செயற்பாடு, அதன் நடத்தை தொடர்பாக மிக உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரிலேயே தங்கியுள்ளது. "குரங்கானது தனது குட்டியை வயிற்றில் காவிக் கொண்டு செல்லும் போது ஒரு முறை தவறி கீழே விழுந்து விட்டால் அக்குட்டியை தாய்க்குரங்கு மீண்டும் தன்னுடன் ஏற்றுக் கொள்ளாது. கவரிமான் தனது உடலில் இருந்து ஒரு முடி உதிருமாயின் அது மீண்டும் உயிர் வாழாது. இப்படிப்பட்ட ஒழுக்கப் பண்புகள் பிராணிகளுக்கே கௌரவமாய் அமையும் போது ஏன்? எமது பிள்ளைகளை நாம் ஒழுக்க சீலர்களாக வளர்க்க முடியாது? பிள்ளைகள் தவறு விடுவார்கள் அவர்கள் விடும் தவறுகளைக் கண்டறிந்து அவர்களைக் கண்டிக்க வேண்டியதும் பெற்றோரின் கடப்பாடாகும். அதை விடுத்து சில பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்டிப்பதற்கு பயப்படுன்றனர். சிலர் தமது பிள்ளைகளின் பிடிவாதத்திற்கு இணங்கி நவீன கையடக்கத் தொலைபேசிகள், பொருளாதார வசதிகள், மோட்டார் சைக்கிள் பாவனை என்று பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை கேள்விக்குறி ஆக்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் வாழ்வில் பருவம் பார்த்து பயிர் செய்ய வேண்டியது பெற்றோர்களின் கடப்பாடு ஆகும். *"காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு"* என்று பாரதியார் கூறியது மாணவப் பருவத்தினருக்கே! பெற்றோர்கள் தினமும் பிள்ளைகள் யாருடன் பேசுகின்றார்கள், எங்கே செல்கின்றார்கள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதுடன், பாடசாலையிலும் கல்வி நிறுவனங்களிலும் கற்று வரும் பாடவிடயம் தொடர்பாக அப்பியாசக் கொப்பிகளை அவதானித்து ஆலோசனை வழங்குவதுடன் பெற்றோர், ஆசிரியர், மாணவர் நல்லுறவைப் பேணவும் வழிசமைக்க வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலைகளில் கற்கும் காலங்களிலேயே அதிகம் தவறிழைக்கின்றனர். இவ்விடயத்தில் அதிபர் ஆசிரியர்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் பெற்றோருக்கு அவசியம் தேவையாகும்.ஆசிரியர் மாணவர்களை சகபாடிகளாகக் கருதாது தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட களிமண் உருண்டைகள் என்பதை மனம் கனிந்து ஏற்று அவர்களை வளமாகப் பயன்படுத்தி சிற்பங்களாக மாற்றும் சிற்பிகளாக மிளிர வைக்க வேண்டும். பிள்ளைகள் தொடர்பான விடயத்தில் பெற்றோர் தான் பொறுப்பு என்று ஆசிரியர்கள் நழுவிவிட முடியாது. பாடசாலையில் ஆசிரியர்களும் பிள்ளைகளக்கு பெற்றோர்களாக வகிபாகமேற்று வழிநடாத்தி நல்லது கெட்டதை புரிய வைக்கும் பண்பு கொண்டவர்களாக விளங்க வேண்டும்.

*"ஒற்றுமையே உயர்வு தரும்"* *"அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள்"* வண்டி பாதையில் சீராக செல்ல வேண்டுமானால் சக்கரங்கள் ஒழுங்காக அமைய வேண்டும். எனவே ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளை முறையாக வழிப்படுத்தி அவர்களின் வாழ்க்கைச் சக்கரம் உரிய பாதையில் செல்வதற்கு உறு துணையாக அமைய வேண்டும்.

*"பிள்ளையைப் பெற்று விட்டால் போதுமா? பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?"*

இதுவே நலம் வாழ்வே சுகம் மிகவும் குறுகிய காலத்திற்குள் எமது பிரதேசங்களிலும் அயற் பிரதேசங்களிலும் ஏற்பட்ட சமூகச் சீர்கேடுகள் அதிலும் பாடசாலை ரீதியாக இடம் பெற்றவை கண்கூடாகும். எனவே அனைத்து சமூகத்தினரும் பிள்ளைகள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும்.

**S. யோகநாதன்,**
பாடசாலை அபிவிருத்தி சபை - உறுப்பினர்,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த முகாமைத்துவத்திற்கு திட்டமிடலின் அவசியம்



முகாமைத்துவச் செயற்பாடுகளில் திட்டமிடல் மிகவும் முக்கியமானதொரு செயற்பாடு ஆகும். உயர்மட்ட முகாமையாளர்கள் தமது கடமை நேரத்தில் கணிசமான அளவு நேரத்தினைத் திட்டமிடலில் செலவு செய்கின்றனர். நிறுவனங்கள் மட்டுமன்றி தனிப்பட்டவர்கள் கூட எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிடுகின்றனர். திட்டமிடல் என்பது ஒரு நிறுவனத்தின் நோக்கத்தினை வரையறுத்து அதனை அடையும் பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்து அவற்றினை செயற்படுத்துவதாகும். திட்டமிடலானது எதிர்காலத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்ற விடயங்களில் கவனத்தைச் செலுத்துகின்றது. திட்டமிடலானது எதிர்கால நிகழ்வுகள் தொடர்பாக நிகழ்காலத் தீர்மானத்தை மேற்கொள்கிறது.

திட்டமிடலினை மேற்கொள்ளும் போது நான்கு விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

(1) நோக்கத்தினை வரையறுத்தல்

(2) நோக்கத்தினை அடையும் பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்தல்

(3) செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தல்

(4) செயற்பாடுகளை அமுல்படுத்தல்

செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து அவற்றினை அமுல்படுத்தும் பொருட்டு வளங்கள் தேவைப்படும். மனித வளங்கள் மட்டுமன்றி பௌதீக வளங்களும் வேண்டப்படும். செயற்பாடுகளை அமுல்ப்படுத்தும் பொருட்டு வேண்டப்படும் வளங்களை மதிப்பீடு செய்வதுடன் அவை போதியளவானதாக காணப்படுகின்றதா என்பதையும் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். வளங்கள் போதியளவானதாக காணப்படாத போது திட்டமிடல் நடைமுறையில் சாத்தியமற்றதாகிவிடும். உச்சவிளைத்திறனை அடைவதற்காக மனிதவளங்களையும் பௌதீக வளங்களையும் வினைத்திறன் மிக்கதாக பிரயோகிப்பதும் நிறுவனத் திட்டமிடலின் முக்கிய அம்சமாகும்.

**திட்டமிடல் ஒன்றை நிறுவனம் ஒன்றிற்காக முகாமையாளர்கள் மேற்கொள்ளும் போது..**

(1) நிறுவனத்தின் செயற்பாடுகளை ஒன்றிணைத்துக் கொள்ள உதவுகின்றது

(2) நிறுவனத்திலுள்ள ஒவ்வொரு நோக்கத்தினையும் அடையும் பொருட்டு தத்தமது செயற்பாடுகள் எவையெனக் கண்டறிந்து அதனை மேற்கொள்ள உதவுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஒரு நிறுவனத்திலுள்ள சகலரையும் வழிநடத்துகின்றது
(4) திட்டமிடலின் போது வீண் விரயங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்
(5) திட்டமிடல் மேற்கொள்வதால் நேர விரயத்தை தவிர்த்துக் கொள்ள முடியும்
(6) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மையை முன்கூட்டியே எதிர்வு கொள்ள உதவுகின்றது
(7) கடுமையான செயற்பாடுகளை இலகுவாக்குகின்றது
(8) சிறந்த திட்டமிடல் மூலம் நிறுவனமொன்றின் இலக்கினை இலகுவாக அடைய முடியும்.

**ஒரு சிறப்பான திட்டமிடலின் பண்புகளாக ......**
(1) சிறந்த திட்டமிடல் சுலபமாக அமுல்படுத்தக் கூடியதாக காணப்பட வேண்டும்
(2) சிறந்த திட்டமிடலானது உயர்மட்ட முகாமையின் ஆதரவினைக் கொண்டிருப்பதுடன் அத்திட்டத்தை அமுல்படுத்துவதில் ஈடுபடும் சகல ஊழியர்களின் ஆதரவினையும் பெற்றிருப்பது அவசியமாகும்
(3) சிறந்த திட்டமிடல் கட்டுப்படுத்தும் வசதியைக் கொண்டிருப்பது அவசியம்
(4) சிறந்த திட்டமிடல் சூழல் மாற்றங்களுடன் இயைந்து செல்லக்கூடியதாக காணப்படல் வேண்டும்
(5) சிறந்த திட்டமிடலானது தீர்மானிக்கப்பட்ட நோக்கத்தினை அடையக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

நிறுவனங்கள் பல்வேறு வகையான திட்டங்களை மேற்கொள்கின்றன. சில திட்டங்கள் நீண்ட காலத்தினைக் கொண்டவை சில குறுங்காலத்தினைக் கொண்டவை. சில திட்டங்கள் விரிவானவை. பல செயற்பாடுகளை மட்டும் உள்ளடக்கியவை இந்த அடிப்படையில் தந்திரோபாயத் திட்டங்கள், செயற்பாட்டுத்திட்டங்கள், குறுங்காலத் திட்டங்கள், நீண்ட காலத்திட்டங்கள் என எமது நிறுவனத்தேவை இலக்கு என்பவற்றை மையமாகக் கொண்டு திட்டங்களை வரையறுத்தல் சிறப்பான விளைவுகளை எமக்கு பெற்றுத்தரும்.

இவ்வாறு நாம் எந்த இலக்கிற்காக நிறுவனத்தை செயற்படுத்து கின்றோமோ அதற்காக சிறந்த முகாமைத்துவத்திற்கு திட்டமிடலானது மிக அவசியமானதொன்றாகும்.




**Dr.குணசிங்கம் சுகுணன்,**
MBBS MSc (Med. Admin),
வைத்திய அத்தியட்சகர்,
ஆதார வைத்தியசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சுடர் கோயிலூர் தணிகாவுடன் அன்புடன் குமாரசிங்கம் ஆசிரியர் அவர்களின் நேர்காணல்



**எமது மட்டக்களப்பு பாரம்பரியக் கலைகளில் ஒன்றான நாட்டுக் கூத்துக் கலையான அருகிவருகின்ற வேளையிலே எமது கூத்துக் கலை தொடர்பான விடயங்களை எம் இளம் சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு எமது பகுதியின் கிராமியக் கலைக் காவலானான அண்ணன் தனிகாவுடனான நேர்காணல்**

---

வணக்கம்! கலைச்சுடர் கோயிலூர் தணிகா அவர்களே!
அன்புடன் குமாரசிங்கம் ஆசிரியர் அவர்களுக்கும் எனது இனிய வணக்கம்

கேள்வி :- கலைச்சுடர், கவிஞர், இலக்கியகர்த்தா, முத்தமிழ்முதல்வன், கலைக்குரிசில், இலக்கியமணி, மட்டு மரபுக்கலைக்காவலன் என்றெல்லாம் மகுடம் தாங்கி அறியப்படும் தாங்கள் பட்டிருப்புத் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் என்ற வகையில் தங்களை நேர்காணலில் அப்பாடசாலையின் ஆசிரியர்கள் பாடசாலை வளங்கள் பற்றி கூறுவீர்களா?

பதில் :- ஆம் ஆரம்பக் கேள்வியே நான் கல்வி பயின்ற பாடசாலையின் அன்றையப் பெருமையினை எடுத்துக் கூறும் வாய்ப்பினைத்தந்ததையிட்டு நான் பூரிப்படைகின்றேன். 1960 - 1967 காலப்பகுதி நான் பட்டிருப்பு மகா வித்தியாலயத்தின் மாணவனாக நின்ற காலம். ஆறாம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த உயர்தர வகுப்பு வரை நான் அப்பாடசாலையின் பக்குவமான மாணவர்களைப் பௌர்ணமித்தேன். திரு சாமுவேல், திரு அருணாசலம் இருவரும் அக்கால அதிபர்களாவர் எந்த நேரமும் பிரம்புடன் உலாவருவார்கள். பயமும் பக்தியும் இவர்களிடம் எங்களுக்கு நிறைந்திருக்கும். ஆசிரியர்கள் பெரும்பாலானோர் பண்டிதர்களாகவும் வித்துவான்களாகவுமே காட்சிதந்தார்கள். பண்டிதர் விஸ்வலிங்கம், பண்டிதர் கந்தையா, பண்டிதர் சரவணமுத்து, வித்துவான் விருத்தாசலம் போன்றோருடன் சகல பாடத்துறைக்கும் தகுதிவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களே பொலிவாகக் காணப்பட்டார்கள். இன்று பட்டிருப்புச் சந்தையாகத்திகழும் இடமெல்லாம் பிரப்பன்காடாகும். நாங்கள் ஒவ்வொரு மாதமும் அந்த பிரப்பம் பற்றைகளில் புகுந்து கட்டுக்கட்டாகக் பிரம்புகளை வெட்டி வந்து அதிபரின் அறையில் வைத்துவிடுவோம். அவை ஆசிரியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் அந்தப் பிரம்புகளே சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது எங்களைப்பதம் பார்க்கும்.

கேள்வி :- நல்லது. அண்ணன் தணிகா அவரகளே! அன்றய காலசசூழலில் இவ்வித்தியாலயத்தின் பௌதீக வளங்களுக்கும் இன்றைய நிலையில் உள்ள விருத்திக்கும் என்ன வித்தியாசம் காண்கின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :- ஆம் அன்றையப் பாடசாலை இன்று இல்லை என்று கூறலாம். அந்த நேரம் பௌதீக வளங்கள் மிகக் குறைவு. பெரும் பாலும் எங்களுடைய கற்றல் கற்பித்தல் எல்லாம் பாடசாலை வளவைச் சுற்றியிருந்த ஆலவிருட்ச நிழல்களிலேதான் எங்களுக்கு அனேக வகுப்புக்கள் இடம்பெறும். இன்று இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சி அன்றைய நிலையை விட தொண்ணூறு வீதமான அளவுக்கு உயர்ந்து காணப்படுகிறது.

கேள்வி :- நீங்கள் படித்தகாலவேளையில் கல்வி கற்பதற்காக எங்கிருந்தெல்லாம் மாணவர்கள் வருவார்கள்.

பதில் :- ஆம் நல்லதொரு கேள்வி. மகா வித்தியாலயம் என்று அறியப்பட்ட ஒரேயொரு பாடசாலை பட்டிருப்பு மகாவித்தியாலயந்தான். வித்தியாலயத்தின் மேற்குப்புறமான துறைநீலாவணை, பெரியநீலாவணை, கல்லாறு, ஓந்தாச்சிமடம் வடக்குப்புறமாகக் களுவாஞ்சிகுடி, களுதாவளை, தேற்றாத்தீவு, செட்டிபாளையம், குருக்கள்மடம், மேற்குப்புறமாகப் பட்டிருப்பு எருவில் குறுமண்வெளி, மகிழூர், மண்டூர், கோயில்போரதீவு, முனைத்தீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, பழுகாமம் போன்ற கிராமங்களில் இருந்து எல்லாம் மாணவர்கள் வருவார்கள். ஓரளவு வசதிபடைத்த மாணவர்கள் மாத்திரம் துவிச்சக்கர வண்டிகளில் வருவார்கள். ஏனையோர் பெரும்பாலும் நடையிலேயே வந்துசேருவார்கள். பேரூந்துகள் நேரத்துக்குக் கிடைக்காது. அவ்வளவு கஸ்டத்தின் மத்தியில் மாணவர்கள் இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்றமையானது அக்காலத்தின் கல்வி எழுச்சியைக் காட்டுவதோடு பெரும்பெரும் பதவிகளுக்கு இவ் வித்தியாலயம் மாணவர்களை வளர்த்து உயர்த்தி விட்டமை பெருமைக்குரியது.

கேள்வி :- உங்களது காலப்பகுதியில் எமது பாடசாலை கலை, வர்த்தக, விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் பெரும் வளர்ச்சி காணப்பட்டது. இடைக்காலத்தில் சற்று தளர்வு ஏற்பட்டது. 2002க்குப் பிற்பாடு சகல துறைகளிலும் வளர்ச்சி காணப்பட்டு வருகிறது. அது தொடர்பாக உங்களது கருத்து என்ன?

பதில் :- ஆம்! சிறப்பான ஒரு கேள்வி. எங்களுடைய காலத்தில் எல்லாத்துறையிலும் கற்பிக்கக்கூடிய ஆசிரிய வளங்கள் காணப்பட்டது. அதனால் கெட்டித்தனமான மாணவசமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டது. கண்டிப்பான அதிபர்களின் நிர்வாகத்திறனே அதற்கு மூலவித்து என்று கூறலாம். அது போன்று இன்று தேசிய பாடசாலையாக மிளிரும் அவ் வித்தியாலயத்தின் கற்றல் கற்பித்தல் வளர்ச்சி பெரிதும் உயர்ந்து காணப்படுகிறது. என்பதற்கு சான்றாக - நிரூபணமாக பல மாணவர்கள் பல்துறைக்கும் பல்கலைக்கழக அனுமதியைப்பெற்று கொள்வது ஏற்புடையதாக அமைகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலே பட்டிருப்பு தேசிய பாடசாலையும் வருடா வருடம் கணிதம் - விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை - நாடக அரங்கியல் என்றவாறு பல மாணவர்களை அனுப்பிப் பெருமையடைவதைக் காணக்கூடியாதாக உள்ளது. இதற்கு ஒட்டுமொத்தமான அடிப்படைக் காரணம் அப்பாடசாலைக்கு கிடைத்திருக்கின்ற நல்லதொரு அதிபர் என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பொன். வன்னியசிங்கம் ஐயா அவர்களின் கட்டுப்பாடான நிர்வாகத்திறனும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பாகக் காணப்படுவது பெருமைக்குரியதாகும்.

**கேள்வி** - நல்லது கலைச்சுடர் அவர்களே நீங்கள் எமது பாடசாலை தொடர்பான விடயங்களை ஓரளவு தெளிவுபடுத்தியுள்ளீர்கள். நீங்கள் ஒரு கூத்துக் கலைஞர் என்ற வகையிலே கூத்துக் கலை தொடர்பான விடயங்களை எடுத்துக் கூற வேண்டும். என்ற வகையிலே இந்த நேர் காணல் நிகழ்வினை மேற்கொள்ளவுள்ளேன். நீங்கள் இக் கூத்துக் கலைக்குள் எவ்வாறு நுழைந்தீர்கள்.

**பதில்** - நான் பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் க.பொ.த (சா.த) படிக்கும் போதே இக் கிராமியக் கலைக்குள் உள்வாங்கப்பட்டேன். சிறப்பாக கூத்துக் கலையை எடுத்துக் கொண்டால் எனது தந்தை சிவஸ்ரீ.வீ.கு.கணபதிப்பிள்ளை குருக்கள் அவர்கள் நல்லதொரு படைப்பாளி. தமிழ், சைவத் துறைகளில் மிகத் திறமையானவர். தந்தை அவர்கள் படைத்த இரு காவியக் கூத்துக்களோடு நான் நெருக்கமாய் இருந்தேன். மனோன்மணி நாடகம், பவளேந்திரி நாடகம் இரண்டு காவியங்களையும் முழுக் காவியக் கூத்துக்களாகப் படைத்தார். இதனை நான் இதய உணர்வோடு பார்த்து சுவைத்ததன் விளைவாக இந்தக் கூத்துக் கலைக்குள் நான் உள்வாங்கப்பட்டேன் என்று கூறலாம்.

**கேள்வி** :- சரி இலக்கிய மணி அவர்களே! உங்களுடைய கிராமியக்கலைகள் தொடர்பான விடயங்களை ஒரு நூல் வடிவமாக கொண்டு வந்தாலும் அது பெருமைக்குரியது. சரி கவிஞர் அவர்களே! இந்தக்கூத்துக் கலை அரங்கத்தின் கலாசார மாண்புகள் தாங்கிய அழைப்பினை ஏற்று வந்திருக்கும் உறவுகள் எவ்வாறு கலைஞர்களைக் களரியிலே கௌரவிப்பார்கள்.

**பதில்** :- ஆமாம்! தங்கள் உறவுகள் பாத்திரமேற்று களரியிலே வரவுக்காகத் தோன்றும் போது களரியிலே வெள்ளை பிடிக்கப்படும். அந்தத் திரை மறைவிலே தான் அந்தப்பாத்திரம் அலங்காரமாகக் கம்பீரமாகக் காட்சியளிப்பார். களரியைச் சுற்றி வெடிகள் முழங்கும். வான வெடிகள் வான் நோக்கிப் புறப்படும். பாத்திரங்களுக்கு அருகே நின்று உறவுக்காரர் பகல் வெற்றி என்று சொல்லப்படுகின்ற ஒருவகை சுருள்களை கொளுத்தி உருட்டுவார்கள். அவ்வெளிச்சம் பாத்திரங்களின் முக அலங்காரங்களைத் துல்லியமாக காட்டும். பின்னர் சால்வை கட்டுவார்கள். பூமாலைகள் காவுமாலைகள் எல்லாம் நிறைவாக சூட்டுவார்கள். காகித உறைகளில் காசு மடித்து கொடுப்பார்கள். அன்பளிப்பு முடித்தபிற்பாடே அண்ணாவியார் அவையடக்க விருத்தம் இழுப்பார். மத்தளமும் சல்லரியும் சேர்த்து கிடுகிடென ஒலிக்கும். சபைவிருத்தம் நிறைவுற்றதும் பாத்திரம் வரவு விருத்தம் பாடுவர். பின்னர் பாத்திரத்திற்கு ஏற்றவாறு தாளக்கட்டு இடம் பெறும். தாளத்தீர்வு நிறைவுற்றதும். களரியை வளைத்து ஆடிவருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி :-** கூத்துக்களரி அலங்காரத்தைப் கூறுவீர்களா?

**பதில் :-** முதலில் பொருத்தமான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு - அந்த இடத்துக்கு உயரமாக மண் நிரப்பி கொலு வரவுகள் ஆடக்கூடிய கட்டமைப்பில் அமைக்கப்படும். மண் சரியா வண்ணம் வளைத்து உல்லிகள் அடித்து - தென்னை ஓலைக்கிடுகுகள் மடக்கி இறுக்கமாக மேடை அமைக்கப்படும். பின்னர் வளைத்து மாங்குக் கம்புகள் இறுக்கமாக நடப்பட்டு அந்தக் கம்புகளில் தேடாக் கயிறுகளைப் பின்னல் வடிவத்தில் அதாவது வட்டக்குடை போன்று அமைத்து - சலவைத் தொழிலாளர்களினால் குடைபோன்று கட்டப்பட்டுள்ள கயிற்றுப்பின்னலில் வெள்ளை கட்டப்படும். பின்னர் கூத்து நிர்வாகிகளும் கலைஞர்களும் இணைந்து மேடையை வண்ணக்கடதாசிகளில் வெட்டப்பட்ட பூக்கள் சரங்களால் அலங்கரிப்பர். அந்தக்குடையின் உச்சி முடிச்சில் திருக்குக்கயிறு போட்டு நாற்புறமும் உயரமான தென்னங்குற்றிகளை நிறுத்தி குடையை உயர்த்தி தென்னங் குற்றிகளிலே இறுக்கக்கடடி விடுவார்கள். குடை உயர்ந்ததும் அந்தக்களரியின் அழகுக்கண்களைக் கவர்ந்து நிற்கும்.

**கேள்வி :-** கூத்துக்களரிகளின் வெளிச்சம் மின் ஒளி வருவதற்கு முன்பு களரியை வளைத்து வாளை மரக்குற்றிகளை நாட்டி மண் சட்டிகளில் தேங்காய் எண்ணை தோய்த்த சீலைகளை அதிகளவு வைத்து அவற்றை எரித்து - அந்த வெளிச்சச் சட்டிகளை வாழைக்குற்றிகளில் வைத்து அந்த ஒளியில்தான் அந்தக்காலங்களில் கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டதாக நமது மூதாதயர் மூலமாக அறியக்கிடக்கிறது. கலைச்சுடர் அவர்களே நீங்கள் கண்ட களரிக்கூத்துக்களின் மேடை வெளிச்சம் எவ்வாறு அமைந்திருந்தது.

**பதில் :-** ஓம்! நான் கூத்துக்கலையோடு பின்னிப் பிணைந்து பல அரங்கேற்றக் களரிகளில் கொப்பி பார்ப்பவராகவும், ரசிகனாகவும், விடிய விடிய சுவைத்திருக்கிறேன். இன்றும் அக்கலையைச் சுவைக்கத் துடிக்கிறேன். ஆனால் மேல் நாட்டுக் கலைகளின் தாக்கத்தால் நான் ஏக்கத்தால் கொட்டாவி விடுகிறேன். நானறிந்த வகையில் கூத்துக்களரி வெளிச்சம் மோட்டார் மின் வெளிச்சமாகவே காணப்பட்டது. நல்ல நிற மின் குமிளால் களரியை அலங்கரித்து இருப்பார்கள். மோட்டார் ஒதுக்குப்புறமாக கிடந்து கிடுகிடுக்கும் கூத்துப்பாட்டுகளுக்கு இடையூறு இல்லாமல் காலப்போக்கில் ராஜ கூத்துப் பாத்திரங்களின் கிரீடங்களை மிக்க அலங்காரமாகச் செய்து ஆடியதைக்கண்டு நான் பிரமித்துள்ளேன். வாளைக்குற்றி வெளிச்சம் எனக்கு தெரியாது.

**கேள்வி :-** கூத்து அரங்கேற்றம் முடித்த கையோடு ஒருவித ஓய்வும் எடுக்காமல் அடுத்த நாள் காலையில் கலைஞர்களின் வீடுகளில் கண்ணூறு கழிப்பதும் அவ்வீடுகளில் அந்தந்த கலைஞர் பாத்திரம் ஆடுவதும் தொடர்ந்து கிராமத்து வீடுகளில் கலைஞர்களுக்கும் அண்ணாவிமார் மனேச்சர்மார்களுக்குச் சன்மானங்கள் கிடைப்பதும் ஒரு மரபாகக்காணப்பட்டது. இது பற்றி உங்களது கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில் :-** ஆம் நான் பிறந்த மண் கோயில் போரதீவு புகுந்த மண் திருருப்பழுகாமம் இந்த இரண்டு கிராமமங்களிலும் நிறையக் களரிக் கூத்துக்கள் ஆடப்பட்டு சலங்கை கட்டு அடுக்குப் பார்த்தல் அரங்கேற்றல் என்ற மூன்று கட்ட நிகழ்வுகளுலும் மாத்திரமல்ல வாரக் கூத்துக்களாக அவை பயிற்று விக்கப்படும் போதும் களரியில் கூத்து முடியும் வரை நான் பார்த்து ரசிப்பேன் இவ்வாறு ஆடப்பட்ட கூத்துக்களில் கோயில் போரதீவு கிராமத்தில் ஆடிய கூத்துக்கள் வரிசையில்

தரும புத்திர சாடகம், வாளபிமன்னன் சண்டை,மனேதன்மணி நாடகம் பவளக்கொடி நாடகம், சித்திரசேனன் சண்டை, வள்ளியம்மன் நாடகம் போன்ற கூத்துக்கள் - வடமோடி

இவைபோல் திருப்பழுகாமம் கிராமத்தில் நான் கண்டு களித்த கூத்துக்கள் அல்லிநாடகம் தென்மோடி, கிராம நாடகம் வடமோடி
பதினேழும் பதினெட்டும், சந்துனுமகாராஜன் ஆகிய கூத்துக்கள்

இந்தக் கூத்துக்களிளெல்லாம் அரங்கேற்றம் முடித்து வீடுவீடாகவும் கண்ணூறு கழிக்க ஆடும்போதும் நான் கலைஞர்களுக்குப் பின்னாலே செல்வேன் காரணம் அவர்களின் உடையலங்கார ரசனை சதங்கை, நாதம் அவர்களிடம் வியர்வையோடு ஒப்பனை மாத்துப் பவுடரும் சேர்ந்து மணக்கும் ஒருவகையான நறுமணம் வீடுவீடாகப் பகலில் அவர்கள் ஈடும் பாத்திரப்பாங்கு மேலும் அவர்களின் களைப்புப் போக்க வீடுகளில் கொடுக்கும் மது உணர்வோடு அவர்கள் ஆடும் துடிப்பும் கட்டைக்கணக்கில் கூத்துப்பாடல்களை அவர்கள் தங்கள் இனிமையான குரல் வளத்தால் பாடும் அசைவும் அண்ணாவியாரின் மத்தளஒலி சல்லாரிஒலி இவையெல்லாம் என்னை உள்ளூரக் கவரும் உணர்வு

**கேள்வி:-** நீங்கள் களரிக்கூத்து ஆடியிருக்கிறீர்களா?

**பதில்:-** இல்லை எனக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை நிறைய ஆசையிருந்தும் - எனது கல்வி அதற்கு தடை விதித்தது. களரிக்கூத்து நான் ஆடாவிட்டாலும். இன்றும் நான் களரிக்கூத்து கிளம்பி அடித்து ஆடுவேன். அந்த அளவிற்கு என்னிடம் ஆற்றல் இருக்கிறது. நான் எப்போதும் வில்லன் பாத்திரங்களே ஆடுவேன். இந்த நேர்காணலைத் தரும் போதும் எழுந்து ஆட வேண்டும் போலிருக்கிறது.

**கேள்வி -** உங்கள் கூத்துக்கலை உணர்வைப்பார்க்கும் போது எங்களையும் உசுப்புகிறது. காரணம் எங்களை நீங்கள் ஆட்டுவித்தீர்கள். அமோக பாராட்டைப் பெற்றவர்கள். பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தில் பொன் விழா மேடைக்காக கீசகன்வதம் என்ற மேடை இதிகாச கூத்தை எங்களுக்கு பயிற்று வித்து அலங்கரிக்கசெய்தீர்கள். அக்கூத்திலே அவ்வித்தியாலய ஆசிரியர்களான நான் திரௌபதியாகவும் ஜெயரெட்ணம் கீசகனாகவும் ஜெகதீஸ்வரன் வீமனாகவும் கௌரிகாந்தன் விராடனாகவும் ஆடினோம். அது ஒரு இன்ப நகர்வு மேலும் மரபுக்கலை காவலன் அவர்களே இந்தக்கூத்துகலையின் தோற்றம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்** - கூத்துக்கலையினுடைய தோற்றம் பற்றி எந்த அளவிற்கு நான் எடுத்துக்கூறுவது என்று எனக்கு புரியவில்லை வட இந்தியாவிலே தோற்றம் பெற்றது. வடமோடிக்கூத்து என்றும் - தென்னிந்தியாவிலே தோற்றம் பெற்றது தென்மோடி என்றும் கேள்வியுற்றிருக்கிறேன். ஆனால் இதற்கு என்ன சான்றுள்ளது. என்று பார்த்தால் - வட தென்னிந்தியாவிலே இக்கூத்துக்கலை தோற்றம் பெற்றிருந்தால் அங்கிருந்து இன்றைய நிலையில் அக்கலை எமக்கு வெளிப்பாடாக தோன்றவில்லையே திரைகளில் சினிமாவின் ஆதிக்கத்தையே காணக்கூடியதாக உள்ளது. இருந்தும் நானறிந்த மட்டில் இந்த இடத்தில் நான் பிழை விடுகிறேனோ தெரியவில்லை மட்டக்களப்பு பிரதேச மட்டத்தில் தான் இந்த இரண்டு மோடிக்கூத்துக்கலையும் ஆதிக்கம் பெற்றுள்ளது. என்பது நேரடித்தரிசனமாகக் கிடைத்திருக்கிறது.

**கேள்வி** - ஆமாம் கலைஞர் அவர்களே தென்மோடிக்கூத்து வடமோடிக்கூத்துக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். இது பற்றிக் கொஞ்சம் கூறலாமா?

**பதில்** - ஆமாம் அருமையான கேள்வி! இரண்டு கூத்துக்கலைகளுக்கும் இடையே நிறையவே வித்தியாசம் இருக்கிறது. இரண்டும் கூத்துக்கலைதான். நமது பாரம்பரியக் கலைகளான இவ்விரண்டு கூத்துக்களுக்குமிடையே ஈட்டம், தானாக்கட்டு, விருத்தம், தருக்கன, மத்தள இசை, ஒப்பனை எல்லாமே வித்தியாசமாகவே காணப்படுகிறது. இவை எழுத்து மூலம் சொல்லி விளங்காது. இரண்டு கூத்துக்கலைகளையும் .ரசனையுடன் இருந்து பார்க்க வேண்டும். அல்லது கட்டாயம் ஆடிப்பழக வேண்டும. அப்போதுதான் நமது கூத்துக்கலையின் இன்பம் புரியும்.

**கேள்வி** - நீங்கள் மேடைக்கூத்துக்களை நிறையவே பயிற்று வித்தும் ஆடியும் அரங்கேற்றியும் இருக்கிறீர்கள் இன்றும் அதை நழுவ விடாது பாதுகாத்து வருகிறீர்கள். களரிக்கூத்துக்கும், மேடைக் கூத்துக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளதென அறிய முடிகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்** :- ஆம்! கூத்து என்றால் அதன் முழுவடிவமும் களரியில் ஆடும் போதுதான் கிடைக்கிறது அங்கேதான் அதன் ரசனையைப் பெறமுடிகிறது நான் சொல்ல வருகின்ற காரணங்களை சிலர் அதாவது கூத்து என்றால் களரியில் ஆடுவதுதான். மேடையில் ஆடுவதல்ல என்ற உறுதியான போக்குடைய கலைஞர்களும் இலக்கிய் படைப்பாளிகளும் நம்மத்தியில் இருக்கின்றார்கள் நான் கூறுவது நொண்டிச்சாட்டு என்றும் கூறுவார்கள் ஆனால் களரிக்கூத்தக்கள் ஆடப்பட்ட காலச்சூழலும் மனிதச் சான்றோர்களும் இன்று இல்லை எல்லாம் றிமோட் நசிபாட்டுக்குள் மனித சமூகம் சிக்கிக் கொண்டுவிட்டது. என்னைப் போன்ற கிழவர்கள் கூத்தை ஆட்டுவிக்கலாமே தவிர கிழவர்களை எல்லாம் ஒன்றிணைத்து முழுநீளக்களரிக் கூத்தை இன்றய நிலையில் ஆடமுடியாதுள்ளது. இளைஞர்கள் முன் வரவேண்டும். ஒரு களரிக்கூத்தை விடிய விடிய ஆட்டுவித்து நெறிப்படுத்தும் அளவிற்கு காலத்தின் வழி திறக்கப்படாமல் உள்ளது. மேடைக்கூத்துக்கே இளம் கலைஞர்களை ஒன்றிணைப்பது மிகவும் சிரமமாகவுள்ளது. மேடையிலும் கூத்துக்கள் ஆடப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கூட நான் களரியின் மரபு தவறாமல் பயிற்று வித்துதான் ஆட்டுவிக்கிறேன். அதுவும் பல சிரமத்தின் மத்தியில் ஆனால் கன்னங்குடா பிரதேசத்தில் தென்மொடியே பெரும்பாலும் ஆடுகிறார்கள். அங்கு இளைஞர்கள் கூத்துகலைக்கு உயிரோட்டம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பாரட்டுக்குரியது போடியார் என்றொரு அண்ணாவியார் மிகவும் பெறுமதி வாய்ந்த அண்ணாவியார் அவரது அல்லி நாடகத்தை (தென்மோடி) ஒரு தடவை திருப்பழுகாமம் பள்ளயச்சடங்கு வேளையில் அரங்கேற்றினோம். எல்லோரும் இளைஞர்களே ஆடிக்கலக்கினார்கள் நான் முடியும் வரை ரசித்தேன். கண்படும் அந்தக் கலைஞர்களுக்கு மேடையில் கூத்து ஆடும் போது கூத்தின் மரபு தவறாமல் ஆடவேண்டும். மனிதர்களின் பயணம் மிகவேகமாக நடைபோடும் இக்காலத்தில் இக்கணணியுலகத்தில் கூத்துக் கலையை விரும்புவோர் எல்லாம் இணைந்து வந்து ஆடும்போது களரிக்கூத்தைப் புத்துயிர் பெறச் செய்யலாம்.

**கேள்வி :-** கலைச்சுடர் அவர்களே! நான் இந்தக் கேள்வியை ஆரம்பத்தில் கேட்டிருக்க வேண்டும் பரவாயில்லை நமது கூத்துக் கலையைப் பயிற்றுவிக்கும் போது கையாளப்படும் நடவடிக்கைகள் எவ்வாறு அமையும்

**பதில்:-** எல்லாம் வாயால் சொல்வதற்கு வடிவாக இருக்கும் நமது கூத்துக்கலை வாழவேண்டுமென்றால் நமது இளைஞர்களிடம் புத்துணர்வு ஏற்படவேண்டும் பற்றுள்ளோர் இணங்கிவந்தால் பணம் செலவிடத் தனவான்கள் முன்வந்தால் நமது பாரம்பரியக்கலை உறங்கிவிடாமல் உயிர்த்தெழச் செய்யலாம். சரி உங்கள் கேள்விக்கு வருவோம் கிராமத்துப் பெரியோர்கள் அம்மன் சஞ்சலத்தைக் கண்டால் அல்லது சாமத்துப் பேய்களின் நடமாட்டத்தையும் கண்டால் ஊரிலே மத்தளமும் சல்லரியும் சதங்கை ஒலியும் கிளம்ப கூத்தாடவேண்டும் கூத்து ஆடும் போது அம்மன் சஞ்சலம் விடும் பேய்களின் நடமாட்டம் அடங்கிவிடும் வயல்களெல்லாம் விதைபட்டு அறுவடை ஆகும் வரை எல்லோரும் தொழில் வாய்ப்பின்றி ஓய்வாக இருக்கின்ற காலம் பார்த்து இதிகாச புராணக் கூத்துக்கொப்பிகளைத் தேடி வந்து ஒருசில பெரியார்கள் அண்ணாவியாரையும் அழைத்து அடித்து அக்கூத்துக் கொப்பியை அசை போட்டுப் பார்த்து மெட்டுக்களையும் கண்டறிந்து கொள்வார்கள் பின்னர் அவ்வூர் இளைஞர்களையெல்லாம் கோயில் மண்டபத்துக்கோ அல்லது பொதுவான ஓர் இடத்துக்கோ அல்லது வசதியான வளவொன்றுக்கோ அழைத்து கூத்து ஆடுவதற்கு விருப்பம் கேட்பார்கள் பொரும்பாலும் அங்கு வந்திருப்பவர்கள் எல்லோரும் விருப்பம் தெரிவிப்பார்கள் இருந்தபோதும் அண்ணாவியார் ஒவ்வொறுத்தராகப் பாத்திரப் பொருத்தப்பாட்டை அவர்களின் உடல் கட்டமைப்பை அவதானித்து விருத்தங்களைத் தருக்களைப் பாடச் சொல்லிப் பாத்திரங்களைத் தேர்ந்தெடுப்பார்கள் தகுதியில்லாதவர்கள் சென்றுவிடுவார்கள். இவர்கள் பாத்திரம் கிடைக்காமல் வீடு வருவதைக் கண்டால் பிள்ளையைக் கூட்டி வந்து ஊர் பெரியார்கள் எல்லோரையும் சமாளித்து பாத்திரத்தேர்வை நிறை வேற்றிவைப்பார்கள் பின்னர் ஒரு புரண்வளவைத் தேர்ந்தெடுத்து அதற்குள்ளே களரிகட்டிக் கூடாரம் அடித்து தொடர்ந்து இரவு நேரங்களில் கூத்துப் பயிற்றுவிக்கப்படும் ஆட்டம் பாட்டு எல்லோருக்கும் பொருந்தியவுடன் சட்டம் கொடுத்தல் என்றொரு மரபுக்கான நாள் குறிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றையதினமே ஒரு கொப்பியில் சட்டங்களை எழுதி எல்லாக் கலைஞர்களையும் அதில் கையெழுத்திட வைத்து அண்ணாவியாரும் நிருவாகிகளும் கையொப்பமிட்டு உறுதிப்படுத்திக் கொள்வார்கள் இந்தச் சட்டவிதிகளை எந்தக் கலைஞர்களும் மீறி நடக்கமுடியாது மீறினால் நிருவாகிகளின் தண்டனைக்கு ஆளாவார்கள்.

**கேள்வி:-** அண்ணாவியார் என்று அழைக்கப்படுவது யாரை?

**பதில்:-** அண்ணாவியார் கூத்துப்பழக்குபவரைக் குறிப்பிடுவார்கள் அவர் பெரும்பாலும் சல்லாரி வாத்தியம் இசைத்துக் கொண்டே ஆடிக்காட்டித் தாளம் தீர்ப்பார் மத்தளக் கலைஞர் தாளத்தை அண்ணாவியாரின் சல்லாரி வாத்தியத்துக்கும் மெட்டுக்களுக்கும் ஏற்றவாறு இசைப்பார் சிலகளரிகளில் அண்ணாவியாரே மத்தளம் அடித்துக் கொண்டே கூத்தைப் பயிற்றுவிப்பார் சல்லாரி வேறு ஒருவர் இசைப்பார் கொப்பி மனேச்சர் என்று ஒருவர் நியமிக்கப்படுவார் அவரே விருத்தங்களையும் தருக்களையும் மெட்டுடன் பாடிக் காட்டிப் பயிற்றுவிப்பார்.

**கேள்வி:-** நல்லது கலைச்சுடர் அவர்களே கூத்துப் பற்றிய தரவுகளை ஓரளவு திருப்திகரமாகத் தந்துள்ளீர்கள் இந்தக் கூத்துக்களுக்கான உடுப்புக்கள், ஆயுதங்கள், வாகனங்கள் தேர்கள் எல்லாம் எங்கிருந்து பெறுவார்கள்.

**பதில்:-** தென்மோடிக்கு கரப்பு உடுப்பு என்றொரு வகையும் கீரீடங்களும் வாள்களும், வில், அம்புகளும் அம்புறாத்தூணிகளும் அதுபோன்று வடமோடிக் கூத்துக்கு மணிச்சட்டைகள் முடிகள் இடுப்புப்பட்டிகள் தேர் குதிரை மாடு போன்றவையும் முகமாத்துக்களும் மீசை, தாடி வைப்பதற்கு கறுப்புமையும் முனிவர்களுக்கான சடாமுடிகளும் வேறு ஒரு கலைஞர் செய்து வைப்பார். அவரை மேஸ்திரியார் என்று அழைப்பார்கள். இவர்களிடம் இருந்தே உடுப்புக்களை வாடகைக்குப் பெறுவார்கள் திருப்பழுகாமம் கிராமத்தில் கந்தையா மேஸ்திரியார் பல்லாண்டு காலங்களாக இப்பணியைச் செய்து வந்தார். அவர்காலமானதும் ஞானமுத்து மேஸ்திரியார் செய்து கொண்டு வருகின்றார்.

**கேள்வி:-** சரி அண்ணன் தணிகா அவர்களே நீங்கள் மேடைக் கூத்து மட்டுமல்லாமல் நாடகம், கும்மி கோலாட்டம், வில்லிசை, கவிதை பாடலாக்கம் அடங்கலாக நமது பாரம்பரிய கலைகளை நெறிப்படுத்தி வருகின்றீர்கள் கிராமியப் பாடல்கள் என்னும் நமது மண்வாசம் தாங்கிவரும் ஒரு இசைப் பாடல் நூலையும் வெளியீடு செய்துள்ளீர்கள். உங்களுடைய ஏனைய ஆக்கங்கள் விரைவில் வெளிவருமா?

**பதில்:-** வெளிவரவேண்டும் அதற்குக் கடவுள் துணை செய்ய வேண்டும் ஏராளமான ஆக்கங்கள் தேங்கிக் கிடக்கின்றன. எல்லாம் நமது தமிழ் பாரம்பரிய உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற படைப்புக்களாகவே அமைத்திருக்கின்றேன். தங்களைப் போன்ற இலக்கிய ஆர்வலர்கள் நல்லதொரு வழியைத் திறந்து தரவேண்டும்.


நிச்சயமாக உங்களின் படைப்புக்கள் மேடைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாம் அறிவோம். அவை விரைவில் நூல் வடிவில் வெளிவர இலக்கிய உலகு வழிவகுக்கும் சிரமத்தைப்பாராது தங்களின் நல்ல கருத்துக்களை எங்களுடன் பரிமாறிக் கொண்டமைக்கு நன்றி கூறிதங்களின் கிராமியக் கலைகள் இன்னும் வளர்ச்சி பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் விளைதிறனும்



## ஒரு பன்முகப் பார்வை

அறிமுகம் : நிகழ் காலத்திற்கும் எதிர் காலத்திற்குமான தேவைகளை நிறைவு செய்யத் தக்கதாக உலகளாவிய ரீதியில் கல்விப் புலத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். "சனி நீராடு" என்கின்றது எமது முது மொழி. ஓடுகின்ற நீரில் ஸ்நானம் செய் என்பது சீனப் பழமொழி. தொடர்ந்து கற்பவர் மூலமே கற்பித்தல் செயல்முறை மேன்மையுறலாம் என்பது இங்கு பொதிந்திருப்பதை அவதானித்துக் கொள்ள வேண்டும்.

**"ஆசிரியர் விளைதிறன்"** பற்றிய எண்ணக்கருவானது மிக நீண்ட வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டதாகும். வேத இலக்கியங்களில் மாணவர்கள் ஆசிரியர்களை நாடிச் சென்று அவருடன் தங்கியிருந்து பணி விடைகள் செய்து கட்டிளமைப்பருவம் வரை கல்வி பயின்றதாகக் கூறப்படுகின்றது. இங்கு வழிகாட்டல் துறையும் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது.

இதே போல் பௌத்த மதம் இலங்கைக்கு வருகை தந்த கி.மு 247 இற்குப்பின்னர் படிப்படியாக பௌத்த மடாலயலங்களில் பௌத்த பிக்குகள் கல்வி பயிற்று வித்து வந்துள்ளனர் என்னும் செய்தியும் குறிப்பிடத்தக்கது. மேலைத்தேயத்தவர்களின் வருகையுடன் ஆசிரியர் கல்வியில் அக்கறை அதிரித்தது. அதற்காக நிறுவனங்கள் அமைக்கும் முயற்சியும் மேற் கொள்ளப்பட்டது. ஆனால் அவை நடைமுறைக்கு வந்ததாக அறிய முடியவில்லை எனினும் கன்னங்கரா குழுவினர் "கல்விச் சீர் திருத்தங்களின் திறவு கோல் ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்குவதே" என விதந்துரைத்தது. ஆசிரியர் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தினர் இது ஆசிரியர் கல்வி என்ற உயர் பெறுமானதைப் பெற்றுக் கொண்டது. இத்தகைய உயர் பெறுமானம் எமது நாட்டிற்கு எவ்வகையான ஆசிரியர்கள் தேவை? எவ்வகையான ஆசிரியர்களை எதிர்பார்க்கின்றது? பயிற்சி மூலம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய திறன்கள், ஆற்றல்கள், தகுதிகள் யாவை? என்ற வினாவுக்கு இன்னும் தெளிவான விடை எம்மிடத்தில் இல்லை. இக் கட்டுரையானது ஆசிரியர் விளைதிறன் பற்றியும் அதனை எவ்வாறு அதிகரித்துக் கொள்ளலாம் என்பது பற்றியுமே தொடர்ந்து செல்கின்றது.

புதிய கலைத்திட்ட ஆக்கம், நவீன கற்றற் துணைப் பொருட்களை வழங்குதல் போன்ற எத்தனை மாற்றங்களை ஏற்படுத்தினாலும் மாணவர் பெறும் கல்வியின் தரமானது ஆசிரியர்களின் போதனையின் தரத்திலேயே தங்கியுள்ளது. இதன் உட்பொருள் கல்வியின் விளைதிறனானது ஆசிரியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறனிலேயே முதன்மையாகவும் பெருமளவும் தங்கியுள்ளது என்பது தெளிவாகும். எனவே ஒவ்வொரு ஆசிரியரும், அவர்கள் பணியாற்றும் பாடசாலையும் எவ்வாறு விளைதிறனை அதிகரித்துக் கொள்ளலாம் என்பது பற்றி உரத்துச் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

கல்வியின் விளைதிறன் கூடியளவிற்கு ஆசிரியர் வினைதிறனிலேயே தங்கியுள்ளது என்பதற்கு இரு (02) காரணங்களை முன்வைக்கலாம் அவையாவன.

**01.** வரவு செலவு திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியில் **75% - 95%** இற்கு இடைப்பட்ட தொகை ஆசிரியர்களின் சம்பளத்திற்காக செலவிடுப்படுகின்றது.

**02.** கல்வி முறைகளில் புதுமைகளைப்புகுத்துவதற்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குமான இரத்து அதிகாரம் **(VETO)** ஆசிரியர்களின் கைகளிலேயே உள்ளது. ஆசிரியர்களின் அங்கீகாரம் இல்லாவிடின் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட உபகரணங்கள் கூட வகுப்பறை மூலைகளிலும் இறாக்கைகளிலும் அலுமாரிகளிலும் தூங்கிவிடுவது யதார்த்த நிலையாகும்.

கல்வியின் தரத்தை கணிசமான அளவு முன்னேற்றுவதற்கு வகுப்பறைகளில் நடைபெறுவனவற்றை நாம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். கலைத்திட்டத்தின் எப்பகுதிகள் வகுப்பறையைச் சென்றடைகின்றன. என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் வகுப்பறைகளில் நடைபெறும் செயற்பாடுகளை பட்டியல் இடுவோமாயின்

1. மாணவர்களோடு உரையாடல் இடம் பெறும்.
2. வகுப்பறை மேசைகளில் அல்லது ஆய்வு கூட மேசைகளில் ஒப்படைகளைச் செய்வர்.
3. வரவு எடுத்தல் விநியோகம் அல்லது சேகரிப்பு என்பன போன்ற ஒரு தொகுதி வகுப்பறை முகாமைத்துவச் செயற்பாடுகளில் இடம் பெறும்.

ஆசிரியர்களைப் பற்றியன்றி ஆசிரியர்கள் செய்பவற்றையே நாம் ஆய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும் என புளும் (Bloom) அவர்கள் குறிப்பிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. விளைதிறனுடைய ஆசிரியர்கள் என்பவர்கள் தாம் தமக்கென வகுத்த அல்லது அவர்களுக்கென மற்றையவர்களான பாடசாலை நிருவாகிகள் மாகாண மத்திய கல்வி அமைச்சுக்களால் வகுக்கப்பட்ட இலக்குகளை அடைபவர்கள் ஆவர். விளைதிறனுடைய ஆசிரியர்கள் இலக்குகளை அடைவதற்கான அறிவையும் ஆற்றலையும் கொண்டிருப்பதுடன் அறிவையும் ஆற்றலையும் பொருத்தமான முறையில் பயன்படுத்தக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

அறிவையும் ஆற்றலையும் கொண்டிருத்தல் என்பது ஆசிரியர் தேர்ச்சி (Competency) ஆகும். அறிவையும் ஆற்றலையும் வகுப்பறையில் பயன்படுத்தல் வினையாற்றுகை (Performance) எனப்படும் என Meclley 1982இல் குறிப்பிடுவதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கொள்ளத்தக்கது. எனவே விளைதிறனுள்ள ஆசிரியர்கள் நோக்குடையவர்களாகவும், இலக்கு மையமானவர்களாகவும் இருக்க முற்படுவது என்பது தெளிவாகின்றது. மேலும் பகுத்தாராயும் போது தமது அறிவையும் ஆற்றலையும் பல விதமான சந்தர்ப்பங்களில் தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் ஆசிரியர்கள் விளைதிறன் மிக்க ஆசிரியர்கள் என்பதும் பொருத்தப்பாடுடையதாக அமையும்.

வகுப்பறை ஒன்றிலுள்ள மாணவர்களைப் போல் பாடசாலை ஒன்றிலுள்ள ஆசிரியர்களும் தனியாள் வேறுபாடுடையவர்கள் என்பது யதார்த்தமான உண்மையாகும். ஆசிரியர்களும் வகுப்பறைக்குள் கொண்டு செல்லும் அறிவு, ஆற்றல்கள், உளச்சார்ப்புகள், மனப்பாங்குகள், விழுமியங்கள் இதன் காரணமாக கற்றல் கற்பித்தல் அனுபவத்திலும் வேறுபாடுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான விடயங்கள் தரமான கல்வியில் அபாரமான தாக்கத்தை ஏற்படுத்திவிடுவதும் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

மாணவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியில் சில ஆசிரியர்கள் ஆழமான தாக்கத்தைச் செலுத்துகின்றனர் என்பதற்கு வரலாற்றுப் பதிவுகள் தாராளமான சான்றுகளாக உள்ளன. எடுத்துக்காட்டு

1. பாடசாலை நாட்களில் ஒன்று அல்லது பல ஆசிரியர்கள் தமது வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை உருவாக்கினர் எனச் சிலர் நினைவு கூருகின்றனர்.
2. இந்த ஆசிரியரால் சிக்கலான விடயம் விளங்கிக் கொள்ளப்பட்டது என்கின்றனர்.
3. குறிப்பிட்ட இந்த ஆசிரியரால் இந்தப் பாட விடயத்தில் அதிக ஆர்வம் ஏற்பட்டது என்கின்றனர்.
4. இந்த ஆசிரியர் எமது இந்தத் தொழிலுக்கு வழிகாட்டினார் எனப்பெருமையுடன் பேசுகின்றனர்.

(பட்டியல் விரிவஞ்சி தவிர்த்துக் கொள்ளப்படுகின்றது)

மேற் காட்டப்பட்ட எடுத்துக் காட்டுக்களிலிருந்து ஆசிரியர்கள் விளைதிறனுள்ளவர்களாக உள்ளனர் என்பதில் ஐயவினாக்கள் எழமுடியாது.

ஆசிரியர்கள் தங்களது விளைதிறனை அதிகரித்துக் கொள்வதற்காக

1. கலைத்திட்டம்
2. கற்றல்
3. கற்பித்தல்
4. வகுப்பறைகள்
5. மாணவர் குணப்பண்புகள்
6. ஆசிரியர் குணப்பண்புகளாக பொறுப்புணர்ச்சி, அறிவுத்தளம், ஆராயும் திறன், ஆகியவற்றில் ஆழ்ந்த புலமையுள்ளவர்களாகவும் தேடியறிந்து இவற்றைப் படித்திக் கொள்ளும் அவா உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்டம் பற்றி அகலமானதும் ஆழமானதுமான பார்வையைச் செலுத்துவோமாயின் இரு விடங்களைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

1. கற்பதற்கான சந்தர்ப்பம்
2. கல்வி சார் பணி என்பனவாகும்.

கலைத்திட்டம் என்னும் பதத்திற்கு பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் கூற முடியும் என Zumwalt 1989 இல் குறிப்பிடுகின்றார். அனேகமாக எல்லா வரைவிலக்கணங்களும் பொதுவான பல மூலகங்களை உள்ளடக்கியுள்ளன. இலக்குகள், குறிக்கோள்கள், பாட விடயம், உள்ளடக்கம், உபகரணங்கள் (பாடப்புத்தகம், ஒலி, ஒளி நிழற்பட நாடாக்கள், கணனி மென் வகை) போன்றனவாகும். கிடைக்கக் கூடிய உபகரணங்களைக் கொண்டு பாடவிடயங்களிலும் பாட விடயங்களுக்கூடாகவும் மாணவர்கள் குறிக்கோள்களை அடைவதனையும் திட்டமிட்ட கற்றல் அனுபவங்களைக் கொண்டு இலக்குகளை அடைவதனையும் கலைத்திட்டம் உட் பொருளாகக் கொண்டுள்ளதனையும் ஆசிரியர்கள் ஐயமின்றி அறிந்து கற்றல் கற்பித்தல் திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்.

பேர்லினர் (Berliner 1989) விளைதிறனுள்ள ஆசிரியர். நன்றாகத் திட்டமிடுபவர் மாத்திரமல்ல தர்க்க ரீதியாக அல்லது அனுபவ ரீதியாக பெறுமதி மிக்க விளைவுகளுடன் தொடர்புள்ள கலைத்திட்டத்தைப் பிள்ளைகளுக்கு வழங்குபவருமாவார் எனப் பரிந்துரைத்திருப்பதும் மனங்கொள்ளத்தக்கது.

விளைதிறனுள்ள ஆசிரியர் உத்தேசித்த அல்லது திட்டமிடப்பட்ட (Intended or planned) கலைத்திட்டத்திற்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது நிஜக் (ImplementedorActual) கலைத்திட்டத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை மிகத்துல்லியமாக அறிந்தவராயிருப்பார். பாடசாலைகளில் நிஜமாகக் கற்பிக்கப்படும் கலைத்திட்டமே நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்டமாகும் என (Westbary 1989) இல் குறிப்பிட்டுள்ளார். உத்தேசிக்கப்பட்ட கலைத்திடட்த்தின் மதிப்பீட்டை விட நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்டத்தின் மதிப்பீடே மாணவர்களின் அடைவுடன் மிகவும் பலமான தொடர்புடையதாக இருக்கும் என்பதை ஆசிரியர் மிக ஆழமாக அறிந்து கொள்ளல் வேண்டும். எனவே நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்டத்துடன் தொடர்புடைய காரணிகளைத் தேடுவதில் விளைதிறனுள்ள ஆசிரியர் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவார்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் பின்னர் மாணவர்கள் அறிவையோ ஆற்றல்களையோ பெறுவார்கள். அல்லது பெற்றுக் கொண்ட அறிவையோ ஆற்றலையோ பயன்படுத்தி ஏதாவது உவப்பான செயலில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவது இயல்பாகும். எதிர்பார்க்கப்படும் இவ்வியல்பையே கல்வி சார் பணி என டோயில் (Doyle) 1983 இல் குறிப்பிட்டுள்ளார். கல்வினர் பணி பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ முடிக்கப்படலாம். வீட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்கப்படும் வேலை வீட்டு வேலை (Home work) என அழைக்கப்படுகின்றது. வீட்டு வேலை வழங்குவதை ஒரு சடங்காக மேற்கொள்ளாமல் அதை மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் ஆசிரியரோ விளைதிறனுள்ள ஆசிரியராக இருப்பார் என்பதில் இரு விதமான கருத்துக்கு இடமிருக்க முடியாது.

கற்றலுக்கான சந்தர்ப்பம் மதிப்பீடுகள் அடிக்கடி நடைபெற வேண்டும். பாடசாலையில் முழுமையாகவோ அல்லது கணிசமான அளவிற்கோ கற்பிக்கப்படும் விடயங்களில் மதிப்பீடுகள் நடைபெற்று பாடசாலைச் சமூகத்திற்கு அறிக்கை இடப்பட்டால் பாடசாலையும் விளைதிறனுள்ள பாடசாலையாக மிளிரும். அங்கு பணியாற்றும் ஆசிரியர்களும் விளைதிறனுள்ள ஆசிரியர்களாக மிளிர்வார்கள். மாணவர்கள் கற்க வேண்டும் என எதிர்பார்த்தவற்றையும் அத்தியாவசியமானவற்றையும் கற்பதற்கு குறைந்த சந்தர்ப்பம் வழங்கப்படுமெனில் கற்பதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுமெனில் ஆரோக்கியமான பாடசாலையாக அப்பாடசாலை மிளிரும். அங்கு பணியாற்றும் ஆசிரியர்களும் ஆரோக்கியமானவர்களாகவும் பலமானவர்களாகவும் சமூகத்தால் கணிக்கப் பெறுவர்.

மாணவர்களுக்கு ஒப்படைக்கப்படும் கல்வி சார் பணியானது இலக்குடனும் குறிக்கோளுடனும் மாத்திரமன்றி மாணவர்களுக்கு பொருத்தமானதாகவும் விளைதிறனுள்ள ஆசிரியர்கள் தெரிவு செய்வார்கள் என்பது வெள்ளிடமலை. விளைதிறனுள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழக்கப்படும் வீட்டு வேலை உட்பட எல்லாப் பணிகளும் ஓர் ஒழுங்கான முறையிலும் அடிக்கடி வழங்கப்படுவதிலும் விளைதிறனுள்ள ஆசிரியர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

விளைதிறனுள்ள ஆசிரியர்களின் கவனம் வகுப்பறைச் சூழலிலும் வகுப்பறைக் கவின் நிலையிலும் குவிக்கப்படும். உலகெங்கிலும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு வகுப்பறைகளிலேயே நடைபெறுகின்றது. விசேட சந்தர்ப்பங்களில் வகுப்பறைக்கு வெளியிலும் கற்றல் கற்பித்தல் நிகழ்வதுமுண்டு. கற்றலுக்கும் கற்பித்தலுக்குமிடையுள்ள சமனிலி நிலையைக் குறைக்க விளைதிறனான கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் உகந்த வகுப்பறைச் சூழலை உருவாக்க வேண்டும். பௌதீகச் சூழல், உளவியல் சூழல் ஆகிய இரண்டையுமே கையாளல் வேண்டும். பௌதீகச் சூழலில் தளபாடங்களை ஒழுங்கமைத்தல் வெளிச்சத்தையும் வெப்ப நிலையையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், வகுப்பறைச் சுவர்களை அலங்கரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல், கலை வேலைச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஆகியன உள்ளடங்கும்.

வகுப்பறையின் உளவியல் சூழலினையும் ஆசிரியர்கள் தமது செல்வாக்கிற்கு உட்படுத்த முடிவது கடினமாயினும் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் வேலையை நியமமாகக் கொண்ட வகுப்பறையை உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை விளையாட்டை நியமாகக் கொண்ட வகுப்பறையையும் உருவாக்க முடியும். வகுப்பறையில் அதிகார தோரணை உள்ளவர்களாகவும் இருக்க முடியும். அதேவேளை ஜனநாயகவாதியாகவும் இருக்க முடியும். மாணவர்களிடையே பயன்தரு தொடர்புகளை ஏற்படுத்தவும் முடியும். அதே வேளை பாராமுகமாகவும் இருக்க முடியும். மாணவர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தமுடியும். அதேவேளை மழுக்கடிக்கச் செய்யவும் முடியும். விளைதிறனுள்ள ஆசிரியர் நேர் மனப்பாங்கை குவியப்படுத்துபவராக இருப்பார்.

உளவியல் சூழலானது மாணவரின் நுழைவு ஆற்றல், அடைவு ஆற்றல், ஆகியவற்றில் உண்டாக்கும் விளைவுகளுக்கு மேலாக அறிதல் சார், எழுச்சிசார், நடத்தைசார் விளைவுகளில் ஏற்படுத்தும் மாற்றத்தில் சராசரியாக 30 வீதத்திற்கு மேல் தாக்கத்தைச் செலுத்தக் காரணமாக உள்ளது என பிரபல கல்வியியலாளர் வால்பேக் அவர்கள் குறிப்பிடுவதும் குறிப்பிடத்தக்கது.

வகுப்பறைச் சூழலையும் கவின் நிலையையும் மதிப்பிடுவதற்கு EMMER 1982ல் 08 தரங்களைக் கொண்ட தொகுதி ஒன்றை முன்வைத்துள்ளார். அவை

1. காட்சி தெளிவின் படிநிலை
2. பொருத்தமான நடமாட்டக் கோலங்கள்
3. உபகரணங்களின் தயார்நிலை
4. கலைத்திட்டத்தின் பெறுமதியை வழங்குதல்
5. மாணவர்கள் பணிமயமாக்கப்ட்டவர்களாக இருத்தல்
6. வேலையின் நியமத்தரத்தை வழுவாது அமுலாக்கல்
7. அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும் சூழல்
8. ஆசிரியர் மாணவர்கள் சொல்வதைச் செவிமடுத்தல்

இவை பற்றி ஆசிரியர்கள் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் இத்னூடாக மாணவர்களுக்கிடையே கூடியளவு ஐக்கியமும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் பரஸ்பர மரியாதையும் நிலவுகின்ற வகுப்பறைகளை உருவாக்கிக் கொள்ள முடியும் மேலும் பணி மயமாக்கப்பட்ட வகுப்பறைகள் உருவாவதனூடாக விளைதிறனையும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

வகுப்பறைச் சூழல், வகுப்பறைக் கவின் நிலை பற்றி கரிசனை கொள்ள வேண்டிய அதேவேளை வகுப்பறை முகாமைத்துவத்திலும் அதிகூடிய கரிசனை கொண்டவர்களாக விளைதிறன் மிக்க ஆசிரியர்கள் விளங்குவார்கள் வகுப்பறை முகாமைத்துவத்தில் இரு பிரதான விடயங்கள் இனம் காணப்பட்டுள்ளது.

01. நடத்தைப் பிரச்சினைகள் ஏற்படுத்தலை தடைசெய்தல்
02. நிகழ்ந்த நடத்தைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து சவாலாக ஏற்று நடவடிக்கை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம காலத்தில் பாடசாலைச் சமூகத்தில் குவியமாக்கப்பட்டுள்ள விடயம் இதுவே ஆகும். விளைதிறன் மிக்க ஆசிரியர் முகாமைத்துவ உத்திகளைக் கையாண்டு இவற்றை வெற்றிகரமாகத் தீர்த்து வைப்பார். எனவே விளைதிறன் மிக்க ஆசிரியர் வகுப்பறையில் எல்லா நேரத்திலும் என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி அவதானமாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது.

பாடவேளையின் கட்டமைப்பைப் பொறுத்த வரையில் விளைதிறன் மிக்க ஆசிரியர் ஒருவர் தமது பாடங்களுக்கு மாணவர்களை மிகக்கவனமாகவும் அதேவேளை மிக அவதானமாகவும் திசைமுகப்படுத்துவார். மாணவர்களுக்கான முன்வைத்தல்கள் தெளிவானதாகவும், பாடத்தின் நோக்கத்தின் பால் குவிக்கப்பட்டதாகவும் (Focus) இருக்கவேண்டும் என்பதை அறிந்திருப்பார். மேலும் மாணவர்களுக்கு முன்வைக்கப்படும் விடயத்தை அவர்கள் எந்தளவிற்கு விளங்கிக் கொள்கின்றார்கள் என்பதையும் அல்லது முன்வைக்கப்படும் விடயத்தை எந்தளவிற்குச் சரியாகவும் பொருத்தமாகவும் அவர்களால் பிரயோகிக்க முடியும் என்பதையும் காலத்திற்குக் காலம் கண் காணிப்பவராகவும் இருப்பார்.

விளைதிறனுள்ள ஆசிரியர் மாணவர்களின் முன்னேற்றம் அவர்களில் அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் என்பனவற்றை சுட்டிக் காட்டுபவராக இருப்பதுடன் பிழையாக விளங்கிக் கொள்ளும் விடயங்கள் குவிந்து அல்லது திரண்டு எதிர்காலக்கற்றலுக்கு பாதகமாவதற்கு முன் அவை திருத்தப்படல் வேண்டும் என்பதில் குறியாக இருப்பார். விளைதிறன் மிக்க ஆசிரியரின் தொடர்பாடல் முறையானது வினைத்திறனுடன் அமைந்து இருக்கும். வகுப்பறைச் செயற்பாடுகளை மொழியின் பயன் இல்லாமல் நடைமுறைப்படுத்த முடியாது. வகுப்பறைச் செயற்பாடுகள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையேயுள்ள வாய்மொழி இடைத்தாக்கங்களினால் நடைபெறுகின்றது என்ற யதார்த்தமான கருத்தியலை கவனமாகக் கையாள்பவராக இருப்பவர் விளைதிறன் மிக்க ஆசிரியராவார்.

விளைதிறன் மிக்க ஆசிரியர் மாணவர்களுக்கு வழங்கும் தகவல்களும் விளக்கங்களும் தெளிவானதாகவும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என்பதில் தெளிவுடன் இருத்தல் வேண்டும். எப்போதும் தலைப்புடன் இணைந்து செல்பவராகவே விளைதிறன் மிக்க ஆசிரியர் இருப்பார். மாறாக தலைப்பில் இருந்து விலகிச் செல்பவராக இருக்கவே மாட்டார். தன்னால் எடுத்தாளப்பட்ட விடயத்தை மாணவர்கள் விளங்கிக் கொண்டு இருக்கின்றார்களா? அல்லது கிரகித்துக் கொண்டு இருக்கின்றார்களா? என்பது தொடர்பாக சந்தேகம் ஏற்படும் போது அதனை சரிபார்க்கவும், விளக்கத்தன்மையின் அளவை அறிந்து கொள்ளவும், வகுப்பறை வினாக்களும், சிறு ஒப்படைகளும் உபயோகமாக அமைந்து இருக்கும் என்பதை அறிந்திருப்பார்.

இன்று கல்விச்சமூகத்தில் உதாரணங்கள் பல எடுத்துக்காட்டி கற்பிக்கும் ஆசிரியர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே உள்ளார்கள் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக ஒப்புவிக்கும் ஆசிரியர்கள் எம் மத்தியில் நிறையவே இருக்கின்றார்கள். விளைதிறன்மிக்க ஆசிரியர்கள் உதாரணங்கள் காட்டி கற்பிப்பதன் மூலம் கருத்துநிலை எண்ணக்கருக்களையும், கருத்தியல்களையும் விளங்கிக்கொள்வார்கள். என்பதில் உறுதியுடன் இருந்து தனது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பர்.

எது பிரதானமானது, எது பிரதானமற்றது என்பவற்றை மாணவர்கள் பகுத்துணரவும், விளங்கப்படுத்தவும் உதவும் வகையில் சொற் குறியீடுகளை பயன்படுத்துவதுடன் விளக்கமளிக்கும் போது தவறானதும், மிகவும் ஐயப்பாடு உடையதுமான சொற்களையும், வர்ணங்களையும் பயன்படுத்தாமல் மிகவும் பொருத்தமான, தெளிவான எளிமையுடன் விளங்கக்கூடிய சொற்களைப் பயன்படுத்துவதில் வல்லவராக இருப்பார். சுருங்கக் கூறின் சொற்பஞ்சம் இல்லாமல் இருப்பார்.

மாணவர்கள் புதிய விடயங்களைக் கற்கும் போது மாதிரிகள், உண்மைப் பொருட்கள், ஒப்புவமைகள், பல்வேறு வகைத்தொடர்புகள் என்பவற்றுடன் ஏற்கனவே தெரிந்தவற்றுடன் புதிய விடயங்களை தொடர்பு படுத்தி தொடர்ந்து செல்வதுடன் காட்சிப்படுத்தலையும், உரையாடலையும் தனித்தனியாக பயன்படுத்துவதிலும் பார்க்க இருவகை தளங்களையும் சேர்த்து பயன்படுத்துவதே பொருத்தமாக அமையும். என்பதை ஏற்றுக் கொள்பவராக இருப்பர்.

முடிவுரை: - ஆசிரியரின் விளைதிறன் பற்றி எவ் வகையான கருத்தியல்களை முன் வைத்தாலும் ஆசிரியர்கள் கற்பிக்கும் முறைகளையும், கற்பித்தல் பற்றி அவர்கள் சிந்திக்கும் முறைகளையும் மாற்ற வேண்டுமாயின் மாற்றத்திற்கு காட்டும் தயக்கத்தை வெற்றிகொள்ள வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆசிரியர்கள் மாற்றம் தேவை என்ற விழிப்புணர்வு இல்லாமை அறிவு, திறன், மனப்பாங்கில் பற்றாக்குறையாக இருத்தல். நமக்கோ மாணவர்களுக்கோ மாற்றங்கள் எந்தவிதமான முன்னேற்றத்தையும் அல்லது வேறுபாட்டையும் உண்டாக்க மாட்டாது என்ற மாயை இவற்றில் இருந்து விடுபட்டால் மாத்திரம் விளைத்திறன் மிக்க ஆசிரியராக இருந்தாலும் இறந்தாலும் இவர் போல் யாரென்று மாணவர் சமூகம் மற்றும் கல்விச்சமூகத்தால் பேசப்படுகின்ற ஆசிரியராக மிளிர்வார். எனவே மாற்றங்களை உள்வாங்கி இன்று அனைவராலும் பேசுகின்ற தரமான கல்விக்கு உரமூட்டுகின்ற விளைதிறன் மிக்க ஆசிரியராக எம்மை மாற்றிக் கொள்வதற்கு முயற்சிப்போமாக.



**திரு.பூ.பாலச்சந்திரன்**
கோட்டக்கல்வி அதிகாரி,
மண்முனை தென் எருவில் பற்று, போரதீவுப்பற்று,
கல்விக்கோட்டம்,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷேட கல்வியின் இன்றைய சமூக முக்கியத்துவம்

# ஒரு கல்வியியல் நோக்கு





## அறிமுகம்

இன்று உலகமயமாதல் தொடர்பாகப் பரவலாகப் பேசப்படுகிறது. உலகமயமாகி வரும் சமூகக் கோலங்கள் பண்பாட்டியல் அம்சங்கள், அரசியல் பொருளாதாரப் பூட்கைகளுக்கு நிகராகக் கல்வித்துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருவதனை நாம் அவதானிக்கலாம். சமூக மாற்றத்திற்கான உந்து விசையாகத் திகழும் கல்வியானது சமூக ஒப்புரவு, சமூக நீதி, நிலைபேறான அபிவிருத்தி ஒருமைப்பாடு என்பவற்றுக்கும் வழிசமைக்க வேண்டியது இன்றியமையாததாகும். ஏனெனில் சனநாயகப் பண்புகளுக்கு முதன்மை வழங்கப்பட்டு வரும் சமகால உலகில் கூட தனிநபர் வேறுபாடு, சாதியம், வர்க்கம், பால்நிலை, வயதுத்தொகுதி ஆகியவற்றின் பெயரால் உலகில் எங்காவது ஒரு மூலையில் பாரபட்சம் இழைக்கப்படுவதனைக் காண்கிறோம். இந்நிலையில் இயற்கையாகவே பிறக்கின்ற இவர்களுக்கான ஒரு வரப்பிரசாதமாக அமையும் விசேட கல்வியின் (Special Education) வரலாறு அதன் சமூக முக்கியத்துவம் உபாயங்கள் என்பவற்றை சுருக்கமாக இக்கட்டுரையில் பரிசீலிப்போம்.

## விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்காணல்

ஐம்புலன்களாலும் புற உலகோடு தொடர்பாடலை மேற்கொள்ளும் மனிதர்களுக்கு இயற்கைக்கும் அப்பாற்பட்ட நிலைமையில் சில குறைபாடுகள் ஏற்படவே செய்கின்றன. பார்வைக்குறைபாடு, செவிப்புலன் இழப்பு, உடல் அங்கங்களின் இழப்பு அல்லது குறைநிலை என்பன மனித ஜீவிகளின் வாழ்வியலுக்கே பெரும் சவாலாக அமைந்து சில குறிப்பிட்ட குழந்தைகளின் மருத்துவ வரலாற்றின் மூலம் அவர்களின் விசேட தேவை தொடர்பாக இனங்காண முடியும். தமது சமவயதுக் குழுக்கள் சார்ந்த சிறார்களுடன் ஒப்பிடும் பொழுது பாடசாலை வேலை, தொடர்பாடல், நடத்தைக்கோலங்கள், உணர்திறன், கிரகித்தல், வெளிப்பாட்டுத்திறன் சார்ந்து அதிகளவிலான சிரமப்பாடுகளை எதிர்கொள்ளும் சிறார்களே விஷேட தேவையுடையவர்கள் என்பதாக வரையறுக்கப்படுகிறது.

இந்த வகையில் விஷேட தேவை உடைய ஒரு பிள்ளை பின்வரும் விடயங்களில் அசாதாரணமான அல்லது தனித்துவமான வகையில் பிறரின் உதவிகளை நாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை சார் தொழிற்பாடுகள்:**

1) வாசித்தல், எழுதுதல் எண்களுடன் தொடர்பான தொழிற்பாடு மற்றும் தகவல்களை விளங்கிக் கொள்ளுதல்.
2) தம்மைத்தாமே வெளிப்படுத்தல் அல்லது பிறர் கூறுவதைப் புரிந்து கொள்ளுதல்.
3) நண்பர்களுடன் நட்புக்கொள்ளுதல் அல்லது வளர்ந்தோருடன் உறவு கொள்ளுதல்.
4) நாம் வாழும் உலகையும், சுற்றாடலையும் விளங்கிக் கொண்டு எதிர்வினை புரிதல்.
5) பாடசாலைச் சூழலில் சீரான நடத்தையை வெளிப்படுத்துதல்.
6) தம்மைத்தாமே ஒழுங்கமைத்துக் கொள்ளுதல்.
7) அழகியல்சார் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல்.

**விஷேட தேவைகளின் வகைப்பாடுகள் :**

வளர்ந்து வரும் நவீன உலகில் பிள்ளைகள் தொடர்பான குறைபாடுகள் புதிய பரிமாணங்களை எடுத்துவருவதனை அவதானிக்கலாம் அந்தவகையில் கல்வியியலாளர்களினால் பின்வரும் குறைபாடுகள் இனங்காட்டப்படுகின்றன.

1. ஓட்டிஸம்.
2. குருட்டுதன்மை மற்றும் கட்புலக்குறைபாடுகள்.
3. செவிப்புலக் குறைபாடு.
4. Down Syndrome - குறைந்த மனப்பாங்கு.
5. Fpliepsy - இழுப்பு, காக்காய் வலிப்பு நோய்.
6. Feeding Issues - பின்னூட்டல்.
7. மூளைவளர்ச்சிக் குறைபாடு.
8. Mitochondrial Disirders உயிர் அணுக்களின் கூறுபாடுகள்.
9. உணர்வு சார் குறைபாடுகள்.
10. பேச்சு சார் குறைபாடுகள்.

பொதுக்கல்வியின் இயல்பு, கட்டமைப்பு, கற்பித்தல், நுட்பங்கள், பாடவிதான முறைமை என்பவற்றிலிருந்து விசேட கல்விக்குரிய முறைகளும் நுட்பங்களும் பெருமளவில் வேறானவை என்பதனையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

## தனியார் தேவைகள் *(Individual Needs):*

பொதுக்கல்வியின் பால் முன்னெடுக்கப்படும் நடைமுறைகள் ஆனவை வள ஒதுக்கீடு மதிப்பீட்டு முறைகள், நடத்தை விழுமிய விருத்திச் செயற்பாடுகள் கணிசமான எண்ணிக்கையை உள்ளடக்கியுள்ள ஒரு மாணவர்திரளுக்காக கூட்டமாக முன்கொடுக்கப்படலாம். மாறாக விஷேட கல்வியானது ஒவ்வொரு தனியாள் மாணவனையும் விஷேடமாகக் குவிமையப்படுத்த வேண்டிய கட்டாயத்தை கொண்டுள்ளது. எனவே விஷேட தேவையுடன் காணப்படும் ஒவ்வொரு மாணவரது சுட்டிப்பான பலங்கள் மற்றும் பலவீனங்களையும் அவர்களின் கற்றல், கிரகித்தல், துலங்கலிலான ஸ்தானம், வளங்கள் மற்றும் இலக்குகள் என்பவை துல்லியமாக மதிப்பிடப்படுவதும் அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் விஷேட கல்வி ஒரு பார்வை :

மாற்றுத் திறனாளிகள் மீதான கரிசனை தொடர்பில் இலங்கை மிகநீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. கி.மு மூன்றாம் நூற்றாண்டளவிலேயே உடல் ஊனத்துடன் இடறும் மக்களின் நலனின் பொருட்டாக கலிங்க மன்னனான அசோகச் சக்கரவர்த்தி ஒரு மகாநாட்டைக் கூட்டியதாக வரலாற்றுக் குறிப்பு உண்டு.

கட்புலனற்றவர்க்கும் கால் நடக்கவியலாதோர்க்கும் இதர உடற்குறைபாடு மிக்கோர்க்கும் அம்மன்னன் பல்வேறு இடங்களில் புகலிடங்களை ஸ்தாபித்திருந்ததாகவும் வராற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

நவீன காலகட்டத்தில் இந்நிலைமையில் மாற்றம் ஏற்படுவதனை நாம் அவதானிக்கலாம். மாற்றுத்திறன் மிக்க மாணவர்களுக்கு எவ்வகையில் கல்வி வழங்குவதென்பது தொடர்பில் இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட தெளிவான சிந்தனைகள் நிலவி இருக்கவில்லை. பின்னர் படிப்படியாக கட்புலன், செவிப்புலன் இழந்தவர்களுக்கான விஷேட பாடசாலைகள் இரத்மலானை, கைதடி (யாழ்ப்பாணம்) முதலான இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

இவ்வகையில் தேசிய கல்வி நிறுவகத்தினால் குறிப்பிடத்தக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. விஷேட கல்வியை முழுமையான அளவில் சாத்தியப்படும் படியான ஆசிரிய ஆளணி 1986ல் அமைக்கப்பட்டது. கொத்தணி முறையின் கீழ் பாடசாலை விடுமுறைக்காலங்களின் போது பொதுநிலை ஆசிரியர் குழாத்தினருக்கு விஷேட கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஊட்டப்பட்டது. தற்போது இந்த விஷேட புலமைத்துவ ஆசிரிய ஆளணியானது ஒவ்வொரு மாகாணக்கல்வித் திணைக்களத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன.

இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் இலங்கையில் 10.6% மாணவர்கள் அங்க வீனராக உள்ளனர். இலங்கையில் விஷேட கல்வி தொடர்பாக புத்தெழுச்சியுடன் கூடிய விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதனை அவதானிக்கலாம்.


அரச கல்விச் சேவைக்கும் புறம்பாக சமய சமூக நிறுவனங்களின் பிரத்தியேக நிர்வாகத்தின் கீழும் பல விசேட பாடசாலைகள் இயங்கி வருகின்றன. மட்டக்களப்பு கல்லடி தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை, மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. வாழ்வோசை, திஹாரிய அங்கவீனர்பாடசாலை, மட்டக்களப்பு வண்ணாத்துப்பூச்சி பாசறை, சத்துருக்கொண்டான் ஓசானம், யாழ்ப்பாணம் வாழ்வகம் முதலானவை குறிப்பிடற்பாலன.

---

ஊனம் உள்ளத்தில் எழுவதில்லை
ஊனத்தினால் வாழ்வின் வசீகரமும் வசந்தமும் வற்றிவிடுவதில்லை

---

**திருமதி வசந்தாதேவி சின்னராசா,**
ஆசிரியை,
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுண்ணறிவு விருத்தியின் முக்கிய பருவம் கட்டிளமைப் பருவம்

யௌவனப் பருவத்தில் இடதுசாரிச் சிந்தனையற்றவன் ஒரு பூரண மனிதனாக முடியாது என்று கருத்துப்பட ஒரு ஐரோப்பிய அறிஞர் கூறுகின்றார். இடதுசாரி சிந்தனை என்று அவர் குறிப்பிடுவது அன்றைய நிலையில் புரட்சிகரமான புதுமையான இலட்சியவாத சிந்தனையைக் குறிப்பதற்காகும். கட்டிளமைப் பருவத்தினரின் உள்ளம் ஒரு புதுவுலகை ஆக்குவதற்குரிய அறை கூவல்களைச் சந்திக்க விரும்பும் நுண்ணறிவு ஆர்வத்தைக் கொண்டது. தனது உள்ளத்தை அதன்பாட்டில் சிந்தனை செய்யவிட்டு கனவுலகில் சஞ்சரிப்பது அதிகமாக நிகழ்வது இருப்பருவத்தில்தான். தான் கனவு காணும் இலட்சிய உலகில் தீமைகள் இருக்காது, அநியாயங்கள் நடைபெறாது, எல்லோருக்கும் சமநீதி கிடைக்கும், பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு அங்கு இடமிருக்காது, உரியவருக்குஉரிய இடம் கிடைக்கும், திறமைக்கு மதிப்பளிக்கப்படும், ஊழல் மோசடிக்கு அங்கு இடமிருக்காது, எல்லோரும் மகிழ்ச்சிகரமாக அங்கு இருப்பர் ஆனால் இத்தகைய ஒரு இலட்சிய உலகை யதார்த்தத்தில் காணமுடியாத போது விசனப்பட்டு வேதனைப்பட்டு விரக்தியுறுவதை நாம் காணலாம்.

தம் நண்பர்கள் சகபாடிகளிடத்தில் தம் கனவுகளை பகிர்ந்து கொள்ள இடம் கிடைப்பதை அவர்கள் பெரிதாக மதிப்பர். தாம் பழகும் நண்பர்கள் குறித்து பெற்றோர் எதிர்ப்புக் காட்டுமிடத்து எல்லாவற்றிலும் பிழை காண்பது இவர்களது வழக்கமாகிவிட்டது என்பது அவர்களின் தீர்ப்பாக இருக்கும். தலைமுறை இடைவெளி என்பது தெளிவாகத் தெரியும் பருவமாக இது இருக்கும். கட்டிளமைப்பருவத்தினர் தமக்குத் தாமாக விரும்புவதை பெற்றோர் விரும்பாதிருப்பர். அதில் முரண்படுவர். அதனை எதிர்க்கவும் முற்படுவர். இங்கு தான் இடைவெளி ஆரம்பிக்கும். தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்ற எண்ணக்கருவை பெற்றோர் கையாள வேண்டிய பருவம் இதுதான். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கென உருகி வடிந்தாலும் கட்டிளமைப் பருவத்தினருக்கு சில வேளை பெற்றோரை விடவும் தமது சகபாடிகளே உயர்வாக இருப்பர். இது குறித்து பெற்றோர் கவலைப்படவோ அலட்டிக் கொள்ளவோ அவசியமில்லை. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று விரக்தியடையவும் தேவை இல்லை. இது பணிகளைப் பொறுப்பாக்கி சவால்களை எதிர் கொள்ளும் சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுப்பதும் இதனை ஒரு நட்புரீதியில் கண்காணிப்பதும் தான் இதற்கான பரிகாரம். பத்து வயது வரை பழக்கப்படுத்துங்கள் பத்திலிருந்து இருபது வரை அவதானியுங்கள். என்று ஓர் இஸ்லாமிய அறிஞர் கூறியுள்ளார். பத்து முதல் இருபது வயது வரை உள்ள பிள்ளைகள் விடயத்தில் சிறு பிள்ளைகளாக அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மதிக்கப்படுவதை அவர்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். தோழமையுடன் தொடர்பு கொள்ளும் அதே வேளை கணணியமான எல்லைகளையும் வைத்திருப்பது பயன்தரும்.

கட்டிளமைப்பருவத்தினரது பலம் குறித்த பலபிரச்சினைகள் அவர்கள் மத்தியில் தோன்றுகின்றன. தான் உண்மையிலேயே புத்திசாலியா? நுண்ணிறிவு உடையவரா? என்ற வினாவுக்கு விடைதேடமுறப்படும் கட்டிளமைப் பருவத்தினர் தமது சமவயதுச் சக பாடியுடன் தம்மை ஒப்பிட்டு ஒரு கணிப்பீட்டை மேற்கொள்ள முயல்வர். இது உண்மையில் நேர்மையான நிலை ஆனால் இதற்கு மாறான எதிர் நிலைகளும் உண்டு. தாம் புத்திசாலியல்ல தமது நுண்ணறிவு சமவயதினருள் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கமட்டத்தில் இல்லை என்று தாமாகவே முடிவெடுக்கும் பலர் தமக்குக்கிடைக்கும் கல்வி தொழில்மற்றும் சவால்களில் இருந்து தப்பி விரண்டோடும் நிலைகாணப்படுகின்றது. இது தவிர்ந்த ஒரு மூன்றாவது நிலையும் காணப்படலாம். தமது நுண்ணறிவு ஆற்றல்கள் குறித்து அளவுக்கதிகமாக கணிப்பீட்டை மேற்கொள்வதும் தாழ்வான மதிப்பீட்டை மேற்கொள்வதுமே இந்நிலையாகும்.

நுண்ணறிவுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள வரைவிலக் கணங்களின் படி அது பெரும்பாலும் செய்முறைசார்ந்த தொன்றாகவே காணப்படுகின்றது. ஒரு நோக்கத்துடன் செயற்படுவதற்கும் தர்க்கரீதியாக சிந்திப்பதற்கும் வினைத்திறனாகச் சூழலை கையாள்வதற்கும் ஒருவரிடமுள்ள மொத்த ஆற்றலே நுண்ணறிவு எனப்படுகின்றது. அனுபவங்களில் இருந்து பயன்பெறும் ஆற்றல் புதிய கருத்துக்கள் புதிய நடத்தைக் கோலங்களை இலகுவில் கற்றுக்கொள்ளும் ஆற்றல். எனவே நுண்ணறிவு என்பது அனைவரிடமும் காணப்படும் ஒரு உள்ளார்ந்த திறனாகும். நுண்ணறிவுப் பன்முகத்தன்மை ஏற்படுவது எதனால் என்ற பிரச்சினையும் இங்கு எழுகின்றது. அதாவது எல்லோருக்கும் ஒரே அளவான நுண்ணறிவு காணப்படுவதில்லை என்பதுதான் அது. எமது உயிரியல் பாரம்பரியம் அதாவது எமது பரம்பரை இயல்பும் சுற்றாடல் பன்முகத் தன்மையும் இதில் செல்வாக்கு செலுத்துவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஒருவர் இன்னொருவரை விட உயரத்தில் பருமனில் சரீர பலத்தில் பெரிதாக இருப்பதில் பெற்றோரிடம் இருந்து கொண்டு வரும் உயிரியல் பரம்பரை காரணிகளுடன் போசாக்கு உடலாரோக்கியத்தைக் கொடுக்கும் நோய்கள் என்பனவும் செல்வாக்கு செலுத்துகின்றன. நுண்ணறிவு என்பதும் இது போலத்தான் அமைகிறது. மேற்கூறிய இரு காரணிகளும் நுண்ணறிவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

எல்லா மனிதர்களும் பயனுள்ள பணிகளைச் செய்யும் மகத்தான நோக்கிலேயே படைக்கப்பட்டுள்ளன. அந்தப் பணிக்கான ஆற்றலும் திறமையும் ஆர்வமும் அவரிடம் குடிகொண்டிருப்பது இயல்பாகும். கட்டிளமைப் பருவத்தின் போது துளிர் விட்டுத் தெரியும் இவ்வாற்றலை துல்லியமாக இனங்கண்டு நேரான திசையில் விருத்தி செய்து வழிவகை செய்யும் பொறுப்பும் கடமையும் மட்டுமன்றி அதற்கான வகை கூறலும் ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமுமே உண்டு.



**திரு. வி. ரவீந்திரமூர்த்தி**
வர்த்தக ஆசிரியர்,
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை),
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோட்டமான பாடசாலையில் ஆசிரியரின் வகிபங்கு



மனித சமுதாயம் தோற்றம் பெற்ற காலம் முதல் 21ம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தின் முன் ஆரம்பக் காலப்பகுதியான இற்றைவரைக்கும் கல்வி, கற்றல், கற்பித்தல் போன்ற சொற்பதங்கள், பேசப்பட்டு வருகின்றன. கல்வி கற்ற சமுதாயம், கல்வி கற்காத சமுதாயம், என மனித சமுதாயத்தை பிரித்தறிவதற்கான ஒரு அளவு கோலாகவும், குறிகாட்டியாகவும் கல்வி எனும் பதம் விளங்குகின்றது. மேற்படி மூன்று சொற்பிரயோகங்களும் இன்று வரைக்கும் பல்வேறுபட்ட மாற்றங்களையும், மாறுபாடுகளையும் உள்வாங்கிக் கொண்டு ஆக்கபூர்வமான ஒரு வளர்ச்சியை நோக்கி பயணப்பட்டு வந்திருக்கின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும், பண்பாட்டு விழுமியங்களின் விருத்திக்கும் கல்வியே மூலாதாரமாக விளங்குகின்றது. இத்தகைய வலிமை மிக்க கல்வியினை மாணவர்களுக்கு செம்மையுற வழங்குவதில் பாடசாலைகள் முன்னிலை வகிக்கின்றன. இன்று இலங்கையைப் பொறுத்தவரையில் 9815 பாடசாலைகள் உள்ளதாக அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. இப் பாடசாலைகள் சில அளவு கோல்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டாலும் அவற்றின் நோக்கும், இலக்கும் ஒன்றாகவே இருக்கின்றது. சிறந்த சமுதாய உருவாக்கத்திற்காக ஒவ்வொரு பாடசாலையும் போராடுகின்றது. அப் போராட்டப் பயணத்தில் பல்வேறு பட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. எதிர்ப்படும் சவால்களை முறியடித்து வெற்றிகொள்ளும் பாடசாலைகள் உயிர்ப்புள்ள பாடசாலை களாகவும், முகம் கொடுக்க முடியாத பாடசாலைகள் உயிர்ப்பற்ற அல்லது இறந்த பாடசாலைகளாகவும் இனங்காணப்படுகின்றன.

உயிர்ப்புள்ள பாடசாலை என்றால் என்ன? உயிர்ப்பற்ற பாடசாலை என்றால் என்ன? இவ்வினாக்களுக்கான விடைகளை கல்விப்புலத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆழ்ந்து அறிந்திருத்தல் வேண்டும். இலங்கையின் பாடசாலைக் கல்விப் புலத்தில் பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை ஆகியவற்றில் உயர்ச்சியான பரீட்சைப் பெறுபேற்றினைப் பெற்றுக் காட்டுகின்ற ஒரு பாடசாலை உயிர்ப்புள்ள பாடசாலை என பலர் அடையாளப்படுத்துகின்றனர். ஆனால் அவற்றுடன் செயற்றிறன் மிக்க, நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு நல்கக்கூடிய, பண்பாட்டு விழுமியங்களை கைக்கொள்ளுகின்ற, ஆளுமை மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கி: சமூகத்திற்கு கையளிக்கின்ற பாடசாலைகளே உயிர்ப்புள்ள அல்லது உயிரோட்டமுள்ள அல்லது இயங்கும் நிலையிலுள்ள பாடசாலைகளாகும். மேற்படி விருத்தி நிலையிலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் பாடசாலைகள் தூங்கு நிலையில் உள்ள இறந்த பாடசாலைகளாக அடையாளப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்புள்ள பாடசாலைகளும், உயிர்ப்பற்ற பாடசாலைகளும் உருவாவதற்கு யார் காரணம் என்பதனை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். இந்நிலை தோற்றம் பெற குறிப்பாக ஐந்து வகையான மனித ஆளுமைகள் காரணமாகின்றன. அந்தவகையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள், சமூகம் ஆகிய இத்தரப்பினர்களுக் கிடையிலான தொடர்புகள் ஆரோக்கியமானதாகவும், பயன்மிக்கதாகவும் அமைதல் வேண்டும். குறிப்பாக பாடசாலையினுள் அதிபரின் முகாமைத்துவத்தின் மேம்பாட்டு தன்மையின் வழியில் ஆசிரியர்கள் பயணித்தல் வேண்டும். அதாவது அதிபரினால் இடப்படுகின்ற கட்டளைகளை ஆராய்ந்து பார்த்து நிறைவான அம்சங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். குறைவானது என இனங்காண்பவற்றை அதிபரிடத்தில் பக்குவமாக சுட்டிக்காட்டி, அதற்குரிய நிறைவான அம்சங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் இவ்விரு தரப்பினரும் தமது கடமைக்கூறுகளை நழுவவிடுதல் கூடாது. பாடசாலைக்கு முந்தி வருதல், பிந்திப் போதல் இந்நடைமுறை கற்றல். கற்பித்தல் செயற்பாட்டினையும், மாணவர் நல்லொழுக்க விருத்தியினையும், முன்னிலைப் படுத்த உதவும். பாடசாலையில் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடு 7.50 மணிக்கு தொடங்குவதானால் அதிபர், ஆசிரியர்களின் வருகை 7.00 மணிக்கு முந்தியதாக அமைதல் வேண்டும். அப்போதுதான் மாணவர் வருகை குறித்த நேரத்திற்கு உரியதாக அமையும். பாடசாலையின் வகுப்பறைச் சுத்தம், வெளிச்சுத்தம். பூந்தோட்டம், பயிர்களுக்கு நீர் ஊற்றுதல், ஒன்றுகூடல், நற்சிந்தனை, உடற்பயிற்சி எனும் ஒழுங்கு முறைகளை குறித்த நேரத்தினுள் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும். இது போன்றே பாடசாலை விடுகின்ற பொழுதும் நடைமுறை ஒழுங்கு பின்பற்றப்படுதல் வேண்டும். இத்தகைய நடைமுறைகளை ஒட்டிய நிகழ்ச்சி நிரலை கைக்கொள்கின்ற பாடசாலையே உயிர்ப்புள்ள பாடசாலைக்கான முதல் வெற்றியைப் பெறுகின்றது. இவ் வெற்றியினைப் பெறுவதில் 70 வீத பங்களிப்பை நல்குகின்றவர்களாக ஆசிரியர்களே உள்ளனர் என்பதை மறுத்தல் இயலாது.

அதிபரின் மேற்பார்வை: ஆசிரியர்கள், மாணவர்கள் மீது, தொடர்ந்தேர்ச்சியாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரிடத்திலும் வேலைத்திட்டம், செயற்பாட்டுத்திட்டம், கற்பித்தல் உபகரணம், மாணவர்களின் தேடலுக்கான வழிமுறை நுட்பங்கள் என்பன இருப்பதுடன் அவை நேர முகாமைத்துவத்துடன் வகுப்பறையில் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். பொருத்தமான கற்பித்தல் உத்திகளினூடாக பாடவிடயங்கள், மாணவர் மனங்களில் விளக்கமுறப் போய்ச் சேரும் விதத்தில் கற்பித்தல் வேண்டும். குறிப்பாக நவீன கற்பித்தல் உத்தியில் மாணவர்களே மாணவர்களிடத்தில் அவர்களுக்கு உரித்தான விடயத்தானத்தை அறிமுகம் செய்வதுடன் அவ்விடயத்தினுள் பயிற்சிகள், செயற்பாடுகள் ஊடாக, அவர்களாகவே தேடி வாசித்து அறிந்து வெளிப்படுத்தக்கூடிய தேர்ச்சியை ஆசிரியர்கள் அடையவைத்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் மாணவனது கவனம் வேறு திசையில் திரும்புவதை தவிர்ப்பதுடன் ஆசிரியரும் தமது பணியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவாக்கிக் கொள்ளவும் இலக்கினை இலகுவாக அடையவும் வழி வகுக்கும். இத்தகைய நடைமுறையில் இடைவெளி ஏற்படாத வகையில் முன்னெடுக்கும் பட்சத்தில் உயிர்ப்புள்ள பாடசாலைக்கான அடுத்தகட்ட வெற்றியை இலகுவாகப் பெறலாம்.

மாணவர்களை பரீட்சையை மட்டும் மையப்படுத்தியதாக நகர்த்தப்படுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். இன்றைய சூழலில் பாடசாலைகள் ஆசிரியர் மையக்கல்வி. மாணவர் மையக்கல்வி, தேர்ச்சி மையக்கல்வி எனும் உயர்ச்சி நிலையில் இருந்து வழுவி, பரீட்சை மையக்கல்வி என்ற ஆரோக்கியமற்ற ஒரு களத்தினுள் புகுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய போட்டிக்கு சமூகமும் இன்றைய பல்கலைக்கழக தெரிவு முறைகளும் ஒரு காரணம் எனக் கூறலாம். பரீட்சை எழுதிய மறுகணமே பரீட்சைக்காக படித்தவற்றைக் கூட மறந்தாலும் கவலையில்லை என்று மாணவர்கள் சொல்லி ஆறுதல் படத்தக்க நிலைக்கு இன்றைய கல்விநிலை தள்ளப்பட்டுள்ளது. ஒரு மாணவன் 13 ஆண்டுகள் பாடசாலையில் கற்றுக் கொள்கின்ற விடயங்கள் அனைத்தையும் மனதில் படிய வைத்துக் கொள்வது மட்டுமன்றி பரீட்சையிலும் நடைமுறை வாழ்விலும் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தத்தக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்க முனையும் ஆசிரியர்கள் இந்த வருடம் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்கரிய விடயப்பரப்புகளை மட்டுமே நோக்கி மாணவர்களை இழுத்துச் செல்வதை தவிர்த்தல் வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள் சாத்திரம் கூறுவதைத் தவிர்த்தல் வேண்டும். அவ்வாறு தவிர்க்கும் போது பரீட்சையில் உயரிய பெறுபேற்றையும், சமூகத்தில் உயரிய குடிமகன் என்ற பெறுமானத்தையும் மாணவனால் பெறமுடியும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமன்றி அதற்கு இணையான இணைப்பாடவிதான கலைத்திட்டத்திலும் மாணவனை பொருத்தமான முறையில் ஈடுபடுத்துதல் வேண்டும். விளையாட்டுக்கள், மொழி சார்ந்த ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வு. மற்றும் ஏனைய பாடத்துறை சார்ந்த ஒவ்வொரு நிகழ்வுகளிலும் சங்கங்களிலும் அனைத்து மாணவர்களினதும் ஆளுமை வெளிப்படும் விதமாக களம் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக மட்/பட்டிருப்பு ம.ம.வி. தேசிய பாடசாலையின் அகவை 94 இனைக் கொண்டாடும் நிகழ்வொழுங்கின் நிகழ்ச்சிநிரல் கட்டமைப்பும் அது நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தினையும், இந்நிகழ்வொழுங்கில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள், சமூகத்தினர், ஆகிய ஐந்து தரப்பினரின் ஒழுங்கமைக்கப்பட்ட ஒத்துழைப்பின் வெற்றியினையும் குறிப்பிடலாம். இவ்வாறே கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிலும் ஒருமித்த ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும் பட்சத்தில் உயிர்ப்புள்ள பாடசாலையின் அடுத்தகட்ட வெற்றியைப் பெற முடியும். இவ் வெற்றியில் எமது பாடசாலை தடம்பதித்திருப்பதையும் மறுத்தல் இயலாது. இத்தகைய ஒருமித்த போக்கில் இருந்து கைநழுவும் பாடசாலைகள் உயிர்ப்பற்ற பாடசாலைகளாகி விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலைக் கல்விப் புலத்தினுள் ஆசிரியர் மாணவர் தொடர்பு, அதிபர் ஆசிரியர் தொடர்பு மற்றும் சமூகத்தினதும் கல்வி அதிகாரிகளினதும் தொடர்பின் போதும் மென்மையான அணுகுமுறைகளின் ஊடாக காரியத்தைச் சாதிக்கக்கூடிய நுட்பங்களைப் பயன்படுத்தல் வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள் மாணவர்களை அணுகும் போது அவர்களது வயது. பால் நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஒழுகுதல் வேண்டும். காயப்படுத்தாத, தேவையற்ற உணர்வுகளைத் தூண்டாத, மழுங்கடிக்கத்தக்க வார்த்தைகளையோ செயற்பாடுகளையோ மேற்கொள்ளுதல் கூடாது. இத்தகைய அணுகுமுறைகள் இன்றைய காலகட்டத்தில் அதிகரித்திருப்பதாக கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலை தவிர்க்கப்பட்டு மாணவர்களை நெறிப்படுத்தக்கூடிய அணுகுமுறைகளைக் கைக்கொள்ளும் போது அப்பாடசாலை அனைத்து விடயங்களிலும் வெற்றி பெறும். பாடசாலைகளில் குறைந்த வளம் இருந்தாலும் அவ் வளங்களைப் பயன்படுத்தி உச்சப் பலனைப் பெறக்கூடிய நுட்பங்களை அதிபர், ஆசிரியர்கள், கைக்கொள்ள வேண்டும். அப்பொழுது உயிர்ப்புள்ள பாடசாலைக்கான அடுத்தகட்ட வெற்றியைப் பெறமுடியும்.

மாணர்களின் விருத்தியிலும், வெற்றியிலும் ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. ஒரு மாணவனின் தலையெழுத்தைத் தீர்மானிப்பதில் முக்கியமானவனாக ஆசிரியன் திகழ்கின்றான். கரடு முரடான கற்பாறையை யாவரும் கையெடுத்துக் கும்பிடுகின்ற தெய்வச் சிலையாக மாற்றுகின்ற சிற்பிக்கு நிகராக கொள்ளப்படுகின்ற ஆசிரியர்களிடத்தில் அர்ப்பணிப்பும் தியாகமும் நிறைந்திருத்தல் வேண்டும். அப்பண்புகள் அவர்களிடத்தில் நிலை பெறுவதற்கும் வெற்றிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை அவர்கள் முன்னெடுப்பதற்கும் அதிபர், கல்வி அதிகாரிகள், சமூகத்தினர் யாவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். ஆசிரியர்களை தேவையற்ற மன அழுத்தத்தினுள் ஆழ்த்தி விடுதல் கூடாது. கற்பிக்கின்ற விடயங்களை உள்வாங்குகின்ற மாணவனது மனநிலை எவ்வாறு மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றதோ அவ்வாறே கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் சுமைகளைச் சுமத்தாது தெளிவான மன நிலைக்குரிய சூழலும் பாடசாலையில் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். அப்பொழுது ஒரு பாடசாலை உயிர்ப்புள்ளதாக மாறுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும்.

தொகுத்து நோக்கும் போது ஓர் பாடசாலையின் உயிர்ப்பில் அதிபர் ஆசிரியரின் பங்களிப்பு மிகவும் கூடுதலான வகிபாகத்தைக் கொண்டுள்ள மையினை உணரமுடியும்.

---



**திருமதி.மதிவதனி பிரபாகரன்** *B.A (Hons),*
ஆசிரியை,
மட்/பட்டிருப்பு ம.ம.வி தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே தூய மொழியான செந்தமிழ் அன்னையின் அணிகலன்களாகப் பூட்டப்பட்ட நூல்களுள் சிறப்பு மிக்க உலகப் புகழ் வாய்ந்த நூலாம் நம் முதற் பாவலர் இயற்றிய திருக்குறள் இதனையே ஔவைப்பிராட்டி




*" அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தறித்த குறள்"*

என இதன் பெருமையைப் பாராட்டியுள்ளார். நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர் போன்ற பெயர்களைப் பெற்று இன்றும் நம் மத்தியில் புகழைக்காட்டி தீர்க்க தரிசனக் கொடியை பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் நம் திருவள்ளுவர் பெருமான் இந்நூலை இயற்றினார்.

சங்கமருவிய காலமாகிய கி.பி மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி ஆறாம் நூற்றாண்டு காலப்பகுதியில் இந்நூலை இயற்றியுள்ளதாக கூறப்படுகின்றது. இக் காலகட்டத்திலே அறம் குன்றி பல அதர்மங்கள் தோற்றம் பெறலாயிற்று. ஆகவே அறத்தினை நிலைநிறுத்த அறப்போதனைகளை நல்வழிப்படுத்த எழுந்த நூலே இத்திருக்குறள்.

மானிடப்பிறவி என்றொரு பிறவி எடுத்துவிட்டால் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு எங்ஙனம் வாழவேண்டும் என்ற வழிவகைகளைக் கூறும் நூலாகும். மனித வாழ்க்கையை முப்பெரும் பிரிவுகளாகவும், அப்பிரிவுகளை பதின்மூன்று இயல்களாகவும் அந்த பதின்மூன்று இயல்களையும் நூற்றி முப்பத்துமூன்று அதிகாரங்களாகவும் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துப்பத்து பாக்களாக ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறட்பாக்களைக் கொண்டும் திகழும் நூல் இத்திருக்குறள்.

திருக்குறளை மூன்று பெரும் பிரிவுகளாக அதாவது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனப்பிரிக்கலாம். இந்நூலைப் போற்றிப் புகழாத ஒரு பழந் தமிழ்ப் புலவரோ இந் நூலின் கருத்துக்களை தம் நூலில் கையாளாத ஒரு தற்கால படைப்பாளியோ இல்லை அது போன்றே திருக்குறளைப் புகழ்ந்து போற்றாத மேனாட்டறிஞரோ அந்நூலை மொழி பெயர்க்காத உன்னத மொழிகளோ இல்லை.

இந்நூலை சமஸ்கிருதம், இந்தி, உருது, மராத்தி, குஜராத்தி, வங்காளம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, செராவுபுரம், ஒரிசா, பஞ்சாபி, ராஜஸ்தானி, அஸ்ஸாமி ஆகிய பதினான்கு இந்திய மொழிகளிலும் சீனம், ஜப்பானியம், மலாய், பர்மியம், சிங்களம், பிஜி, அரபு ஆகிய ஏழு ஆசிய மொழிகளிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலத்தீன், பிரேந்த, ருஷ்யன், போஸ்ஷ், ஸ்வீடன், இத்தாலியம், டச்சு, செக், ஜெர்மனியம், ஆர்மீனியம், பினிஷ், ஆகிய பன்னிரண்டு ஐரோப்பிய மொழிகளிலும் அறிஞர்கள் மொழி பெயர்த்துள்ளனர்.

இந்திய மண்ணில் மலர்ந்த வேறு எந்த ஒரு இலக்கிய நூலுக்கும் திருக்குறளுக்கு அமைந்தது போன்று இத்தகைய சிறப்பு இல்லை என்றே கூற வேண்டும். இதனால்தான் உலகப் பொதுமறை எனப் பெயர் பெறலாயிற்று இந் நூலுக்கு பல பெயர்கள் வழங்கப்படுகின்றன, முப்பால், வானுறைவாழ்த்து, உத்தரவேதம், தெய்வநூல், தமிழ்மறை, பொய்யாமொழி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. இதனால்தான் சுப்பிரமணிய பாரதியார் "*வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு*" என்று பாடினார் உலக வாழ்வுக்கான நல்வழிகாட்டியாக அவர் குறித்துக் கொடுத்த வழித்தொகுப்பே இந்தத் திருக்குறள் வள்ளுவர் நமக்கு காட்டிய வழிக்குள்ளே முதன்மையானது இதுவாகும்.

"*அகர முதல எழுத்தெல்லாம்*
*ஆதி பகவன் முதற்றே உலகு*"

அதாவது நாம் வாழும் இந் ஞாலம் இறைவனால் ஆக்கப்பட்டது. அவனின்றி ஓர் அணுவும் அசையாது இவ்வுலகில் வாழும் மக்கள் இறை நம்பிக்கை உடையோராய் இருக்கவேண்டுமென்ற கருத்தை உணர்த்துகின்றது.

சாதி, மத வெறியினால் மனிதர்கள் ஒருவரை ஒருவர் வேட்டையாடுகின்றனர். இதனால் திருக்குறளில் கூறப்படும் கருத்து '*ஒன்றேகுலம்*' என்பதாகும் இதனை

"*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா*
*செய் தொழில் வேற்றுமையான்*"

என்ற குறளின் ஊடாக எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது பிறப்பினால் உயர்வு, தாழ்வு கற்பித்தல் பேதமையாகும். என்ற கருத்தை முன்வைக்கின்றார். ஆகவே மக்கள் அனைவரும் *உயர்வு, தாழ்வு கருதாமல் வாழ வேண்டும்* என்பதைக் கூறியுள்ளார். இக்கருத்து மெருகூட்டுவனவாக அமைந்துள்ளது.

கல்வியின் அவசியத்தை கூறியுள்ளது. "*கல்வி, அறிவு, ஒழுக்கம், என்பனவற்றை உடையவரே மனிதர்* " என்று கூறுகின்றது. அதாவது மூன்று பண்புகள் இருந்தால் தான் மக்களையும், மாக்களையும் வேறுபடுத்திக் காணலாம்.

"*கற்க கசடு அறக் கற்பவை, கற்றபின்*
*நிற்க அதற்கு தக*"

அதாவது கல்வி பயிலும் போது ஐயம் இன்றிக் கற்க வேண்டும். எனவும் அவ்வாறு கற்ற பின் அதற்கு ஏற்றவாறு வாழ வேண்டும் என்றும் கூறுகின்றது. இதே போன்று அன்பு செலுத்துதல், ஒழக்கமுடைமை, இன்சொல் கூறுதல், பிறரை இகழ்ந்து பேசாதிருத்தல், மானத்தோடு வாழ்தல், பொருள் சேமித்தல், தருமம் செய்தல், பெரியோரை எவ்வாறு போற்ற வேண்டுமென்று பல்வேறுபட்ட நல்லறங்களைப் போதிப்பது திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மயிர்நீப்பின் வாழா கவரிமா அன்னார்*
*உயிர் நீப்பர் மானம் வரின்"*

இக்குறள் மான உணர்வின் பெருமைகளை எடுத்துக் காட்டுகின்றது.

மனிதனின் நான்கு உறுதிப் பொருட்களான அறம், பொருள். இன்பம், வீடு ஆகியவற்றை விளக்கியுள்ளார். அறவழியில் சென்று பொருளை ஈட்டி வாழ்ந்தால் இன்பம் தானாக வரும் அதன் மூலம் இயல்பாகவே வீடுபேறு கிடைக்கும் என்கிறார். பஞ்சமா பாதங்களான களவு, பொய், கள்ளுண்ணல், கொலை, விபச்சாரம் செய்தல், ஆகியவற்றில் இருந்து தங்களைப் பாதுகாக்கவும், அத்தீய பழக்கத்திலிருந்து விடுபடுமாறு கூறியுள்ளார்.

அடுத்ததாக வள்ளவர் பெருமான் கூறியுள்ளமை உலகத்தோடு சேர்ந்து வாழும்படி இதனை

*" உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும்*
*கல்லார் அறிவில்லாதார்"*


என்று கூறியுள்ளார். நாம் பிறந்தோம் என்றில்லாமல் பிறந்தோம் நல் ஒழுக்கத்துடன் வாழ்ந்தோம் மங்காத புகழை அதாவது கல்வெட்டில் செதுக்கியதைப் போல் அழியாத கீர்த்தியை நிலைநாட்ட சாதித்துவிட்டு இறந்தோம். என்று இருக்க வேண்டும். ஒழுக்கம் காரணமாக பெரியோராகக் காணப்படும் அதே வேளையில் ஒழுக்கம் தவறியவர்களை உயர் குடியினவர் ஆயினும் அவர்கள் தாழ்ந்த குடியினராகவே கருதப்படுவர். நாம் மறை ஓதும் பிராமணர்களைக் கண்டிருக்கின்றோம் அவர்கள் தாம் கற்ற வேதங்களை மறந்தால் கூட அவற்றை மீண்டும் கண்டு நினைவில் வைத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் தம் ஒழுக்கத்தில் சிறிதளவு தவறினாற் கூட அவர்களின் உயர் குடிப்பிறப்பு இழிந்த பிறப்பாகிவிடும். இதனையே

*" ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாகிவிடும்"*

என்று கூறியுள்ளார். ஆகவே திருக்குறளின் பெருமையை இடைக்காடர் இவ்வாறு கூறியுள்ளனர்.

"கடுகைத் துளைத்தேழ் கடலை புகட்டிக்
குறுகத்தறித்த குறள்"

திருக்குறள் இல்லாத வீடு சுடலை என்றே கூற வேண்டும். ஆகையால் திருக்குறளின் பெருமையை இப்பூமியில் உள்ள அனைவரும் போற்றித் துதிக்கின்றார்கள்.



**திருமதி.மாலினிதேவி இன்பராஜா,**
ஆசிரியை,
மட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை),
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் போலவே வாழ்க்கை என்கிறோம் இங்கு மனம் என்பது ரசனையோடு தொடர் புபட்டதாக காணப்படுகிறது. எமது ரசனைக்கு ஏற்பவே எம்மைச்சுற்றியுள்ள சூழலும் அமைகிறது. எம்மிடம் உள்ளவற்றைக் கொண்டு திருப்திப் படுவதும் எமது உறவுகளை மகிழ்ச்சிகரமானதாக மாற்றிக் கொள்வதும் எமது ரசனை உணர்வில்தான் தங்கியுள்ளது.

ஒரு சிறந்த ரசிகன் தனது பாரங்கள் அனைத்தையும்ஒரு கலைப்படைப்பினைப் பார்க்கும்போது மறந்து விடுகின்றான். நாம் மனிதனாக இருப்பதற்கு முதலில் நல்ல ரசனையாளனாக இருக்கவேண்டும்.




ரசனை என்ற பதம் இங்கு ஒரு கலைப்படைப்பினையோ, அல்லது நிகழ்த்து கையையோ பார்க்கும் போது ஏற்படும் உணர் வினைக் குறிக்கின்றது. இரசனை பல வழிகளில் தோற்றம் பெற்றாலும் ஒருவரது மனநிலையை மாற்றக் கூடியதாக அல்லது சமநிலையடைய வைக்கக் கூடியதாக அழகியற் கலைகள் தம்முள் ஒரு சிறப்பானதும் தனித்துவமானதுமான பண்பினைக் கொண்டு காணப்படுகின்றன.

பிறர் மனதை எவராலும் அறிந்து கொள்ளமுடியாது ஆனால் அவர் விரும்பும் வர்ணத்தினை வைத்துக்கொண்டு அவரது குணம், மனநிலை என்பவற்றை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக குழந்தைகளை நோக்குவோம் அவர்கள் தங்களது எண்ண அலைகளை இரேகைகள் மூலமும் வர்ணங்கள் மூலமும் சுவர்களில், கடதாசிகளில் கிறுக்கு வதனூடாக வெளிப்படுத்துவதோடு, மனதின் சம நிலைத் தன்மை, மூளை விருத்தி, சிந்தனை யாற்றல் என்பனவற்றைப் பெற்றுக் கொள்கி றார்கள். இவ்வாறு குழந்தைகள் தமது கருத்தினை வெளிப்படுத்துவதற்கு கோடுகளையும், வர்ணங் களையும் ஊடகமாகப் பயன்படுத்துகின்றார்கள்.

இவர்களைப் போன்றே பாமர மக்களின் அறிவு விருத்திக்கு ஏற்ப தகவல்களை தெளிவு படுத்த வர்ணங்கள் கோடுகள் என்பன பயன்படுகின்றன. இவ்வகையான வர்ணங்கள் கோடுகள் இணைந்து பிரசவிப்பதே சித்திரமாகும். சித்திரம் என்னும் போது கற்காலம் தொடங்கி தற்காலம் வரை எமது மனித வாழ்வில் ஒரு அங்கமாகவே எம்மோடு இணைந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

இச் சித்திரக் கலையானது தனிமனித வாழ்விலும் சமூகத்திலும் வரலாற்றுத் தடயங்களாகஇழையோடிக் காணப் படுகிறது. இது வாழ்வியலோடு இணைந்ததாக காணப்படுவதோடு தொழிற்துறைகளிலும் பாரிய வளர்ச்சி யினைப் பெற்றுள்ளது.

இவ்வாறாக சித்திரக்கலை சமூகத்தோடு இணைந்ததாகக் காணப் பட்டாலும். அது முறைமையான கற்றல் செயற்பாடாக நடைபெறுவதில் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளது. அவற்றுள் பொருளாதாரப் பிரச்சினை உளவியல்சார் பிரச்சினை, துறைசார் விளக்கமின்மை என இன்னோரன்ன சவால்களுக்கு முகம்கொடுக்கின்ற நிலைமை சித்திரப்பாடத் துறைக்கு இருக்கின்றது.

முதலில் பாடத்தெரிவுகளை தெரிவு செய்வதில் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். அவற்றில் அரசியல் துறையில் ஆர்வம் காட்டும் மாணவர்கள் இன்றைய காலகட்டத்திலே குறைந்த அளவிலேயே காணப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப் பிரச்சனையை நோக்கும் போது மாணவர்களுக்கு சித்திரப் பாடத்திற்கு தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் காணப்படுகின்றது. விலை அதிகம், எமது பிரதேசங்களில் சில பொருட்களை பெற்றுக் கௌ்ள முடியாமை எனப் பொருாதாரப் பிரச்சனைகள் காணப்படுகின்றன. இவற்றினை நிவர்த்தி செய்யும் முகமாக பெற்றோர்களின் பொருளாதார நிலமை அமையாதவிடத்து அம்மாணவர்களுக்கு சித்திரப்பாடத்தினைத் தெரிவு செய்வதற்கு பல அழுத்தங்கள் பிரியோகிக்கப்படுகின்றன ***"மரத்தால் விழுந்தவனை மாடு முட்டுவது போல"*** பொருளாதாரப் பிரச்சனையும் அழுத்தங்களும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இதனாலும் சித்திரப் பாடம் எடுக்கும் மாணவர்கள் இப்பாடத்தில் ஆர்வம் காட்டுவது குறைவாகக் காணப்படுகிறது.

இதுவே மாணவர்கள் மத்தியில் உளவியற் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது இதனைத்தவிரவும் மாணவர்கள் வெளிச் சூழலில் இருந்து சவால்களை எதிர்நோக்கு கின்றனர் ஒரு நிகழ்வின் தொடக்கம் முதல் இறுதிவரை சித்திரக்கலை தனது ஆதிக் கத்தினை செலுத்துகின்றது. இவற்றுள் கோலம் போடுதல் என்பது மங்களகரமானதாக அமைவதுடன் கவர்ச்சிகரமானதுமாக காணப்படுகிறது. ஆனால் அதனை ஆக்கும் மாணவன் ஏனையோரினால் பாராட்டப்படுவது என்பது குறைவாகவே காணப்படுகிறது. இதனைவிட மனதை கசக்க வைக்கும் விடயம் என்னவென்றால் ரசனை என்ற உணர்வு இல்லாதவர்களின் விமர்சனங்கள் மேலோ ங்கி நிற்பது ஆகும். அடுத்து சித்திரத்தினூடாக மலையினைப் படைப்பதற்கு கொடுக்கப்படும் காலவரையறை குறைவானதாக காணப் படுதலாகும். இன்று செய்து முடிக்கவேண்டிய வேலையினை இன்றே தந்து முடித்துத்தருமாறு கூறும் சிலர் பொது விடயங்களைக் கூட அறிய முடியாதவர்களாக இருப்பதுடன் அதற்கான விமர்சனங்களையும் உடனடியாக தெரிவிக்கும் அறிவிலிகளாகவும் காணப்படு கின்றனர். இங்கே நான் விமர்சனம் என்று குறிப்பிடுவது குறை, நிறைகளை அல்ல குறையினை மட்டுமே.


சமுகத்தின் பார்வையில் சித்திரக்கலை என்பது ஏனைய பாடத்துறைகளோடு சமமாக பேணப் படுவதில்லை அதாவது பொறியியல் துறை விஞ்ஞானம், கணிதம், தமிழ், வணிகம், போன்று காணப்படாமல் மூன்றாம் நிலைக் கல்வியாகவே புறந் தள்ளப்பட்டு கணிக்கப்படுகின்றது. என்பது வேதனைக் குரிய விடயமாகும். புறம் தள்ளப்பட்ட பாடமாக சில பாடசாலைகளில் சித்திரம் காணப்படுவ தோடு மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியிலும் தெளிவின்மை காரணமாகவும், தகுந்த வழிகாட்டல் இன்மையாலும், தவறான கருத்துப் பரிமாறல் காரணமாகவும் சித்திரம் சித்திரவதைப்படுகிறது.


அனைத்தும் தற்காலிகமானதாகிப் போன காலகட்டத்தில் அழகியலுக்கு மட்டும் என்றும் மாறாத ஒரு அமரத்துவத்தை எதிர்பார்க்க முடியுமா? என்ற கேள்வியினை தமிழ் அழகியல் என்ற நூலின் ஆசிரியர் இந்திரன் அவர்கள் எழுப்பியுள்ளார்.

இதேவேளை சித்திரப்பாடத் துறையில் ஆர்வம் உள்ள மாணவர்கள் முயற்சியற்றவர்களாகக் காணப்படுகின்றனர் இவர்கள் முயற்சி திருவினையாக்கும் என்ற பழமொழி அறியாதவர்களாக காணப்படுவ தோடு அவரைப் போல என்னால் வரைய முடியாது. அந்த நுட்ப முறை எனக்கு வரவில்லை என தன்நம்பிக்கை இழந்தவர் களாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கு தன்நம்பிக்கை ஊட்டும் வகையிலே கார்ல் மார்க்ஸ் ***You Never fail until stop trying*** என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களைவிட சித்திரத்தில் தற்போது தமிழ் மொழியில் புத்தகங்கள் வெளிவந்தாலும் பாடத்திட்டத்தில் உள்ளடக் கப்பட்ட அனேக விடயங்கள் சிங்கள மொழிசார்ந்ததாகவே காணப் படுகின் றமையும் ஒரு தடைக்கல்லாகக் காணப் பட்டாலும் இன்றய நவீனயுகத்தில் கணினி ஊடாக பெற்றுக்கொள்ள முடியாத விடயங்களே இல்லை எனவே மனஉறுதி காணப்படுமானால் கற்றலை மேற்கொள்ள ஆயிரம் வழிகள் உண்டு என்பதில் எந்த ஐயமும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சித்திரக் கல்வியை முறைசார்ந்த கல்வியாகவும் முறையில் கல்வியாகவும் கற்க முடியும் மாணவர்களுக்கு அவர்களது எதிர்காலத்தைத் தீர்மானித்துக்கொள்ள முறைசார்ந்த கல்வியே துணைபுரிகின்றது. இதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பது பாடசாலை ஆகும் பாடசாலையில் தரம் ஆறு தொடக்கம் கா.பொ.த உயர்தரம் வரை சித்திரப் பாடம் காணப்பட்டாலும் கா.பொ.த சாதாரண தரத்தோடு சித்திரப்பாடத்தினை தெரிவு செய்யும் வீதம் குறைவாகவே காணப்டுகிறது.

சித்திரப்பாடத்தை கா.பொ.த உயர் தரத்தில் தெரிவு செய்வதனூடாக தேசிய கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழக அழகியற் கற்கைகள் நிறுவனம், நுண்கலைக் கல்லூரிகள் என தெரிவாகி முன்னேறும் வாய்ப்புக் காணப்படுகின்றது. ஆனால் இது தொடர்பான முயற்சி அனேகமான பெற்றோர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் காணப்படுவதில்லை. இதற்கான தெளிவான வழிகாட்டல் பாடசாலை தவிர்ந்த இடங்களில் வழி காட்டப்படாமையே ஆகும்.

இவ்வாறான தெளிவினையும் ஊக்கக் கல்வியினையும் மாணவர் பெற்றோர் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊக்கல் தொடர்பாக *'மக்ருேக்கல்'* பதினான்கு ஊக்கல்களை முன்வைத்துள்ளனர் இவற்றினை வகுப்பறை செயற்பாடுகளிலும் சிறப்பாக பயன்படுத்தலாம்.



எது எவ்வாறாக இருந்தாலும் இன்றய காலகட்டத்தில் மாணவர்கள் மத்தியில் சித்திரப் பாடம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட்டுவருகின்றது. இதனை கா.பொ.த உயர்தரத்தில் சித்திரப்பாடத்தினை தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றின் அதிகரிப்பினூடாக அறிய முடிகின்றது. இவ்வாறான அதிகரிப்பிற்கு உதவிக்கல்விப் பணிப்பாளர், அழகியல் ஆசிரிய ஆலோசகர்கள், சித்திரப்பாட ஆசிரியர்கள், அதிபர்களின் முயற்சியே ஆகும்.

மாணவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்த்து ஊக்கப்படுத்தி சித்திரப் பாடத்தினை தெரிவு செய்வதனூடாக உயர் கல்வி, தொழிற்துறையில் ஏற்படும் முன்னேற்றங்களை உணர்த்த வேண்டும். முக்கனி போல திகழும் அழகியலில் பலாப்பழத்தை போன்ற சித்திரம் வெளியில் பார்ப்பதற்கு முட்கள் நிறைந்ததாக காணப்பட்டாலும் உள்ளே தேன் போன்ற இனிய சுளைகள் பல காணப்படுகின்றன. சுளைகளின் சுவையை உணர்த்துவதா? முட்களைக் காட்டிப் பயமுறுத்துவதா? என்பது சமுகத்திற்கும், பெற்றோருக்கும் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான தீர்மானம் எடுப்பதில் தங்கியுள்ளது.


**திரு S. நிஷாந்தன்**
(ஆசிரியர்)
மட்/பட்டிருப்பு ம.ம.வி (தேசிய பாடசாலை)
களுவாஞ்சிகுடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு நாட்டின் நாணய அலகை வேறு ஒரு நாட்டின் நாணய அலகுடன் பரிமாற்றக்கூடிய பெறுமதியை வெளிநாட்டுச் செலாவணி வீதம் எனக் குறிப்பிடலாம். சுதந்திரமான முறையினுள் ஒரு நாட்டின் நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதி வெளிநாட்டு செலாவணிக்கான உள்நாட்டு சந்தையின் கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகள் மீது தீர்மானிக்கப்படும் நாணயக் கூடை ஒன்றுடன் பிணைந்துள்ள வீதத்தில் பெறுமதியைப் பேணி வருவதன் மூலமும் நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதி கட்டுப்படுத்தப்படும். எனினும் தற்காலத்தில் உலகின் பெரும்பாலான நாடுகள் மிதக்கவிடப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கும் செலாவணி வீத முறையை கடைப்பிடிக்கின்றன.

வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை நடவடிக்கை, மற்றும் -புவியியல் அரசியல் இடர்தேர்வின் மீது தங்கியுள்ள சந்தை சக்திகளினால் நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. வெளிநாட்டு, உள்நாட்டு நாணயங்களுக்கிடையே பரிமாற்றத்தை மேற்கொள்ளும் பொருட்டு வசதிகளை ஏற்பாடு செய்கின்ற சந்தை ஒன்றையும், பேணிவர வேண்டி நேரிடும். இவ்வாறு பல்வேறு வகையான நாடுகளின் நாணயப் பரிமாற்றம் ஆனது வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலே நடைபெறும்.

### *வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை:*

ஒவ்வவொரு நாணயத்திற்குமுரிய நாணய மாற்றத்திற்காக உலகளாவிய ரீதியில் பன்முகப்படுத்தப்பட்டு பரவியுள்ள நிறுவனக் கட்டமைப்பை வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை எனலாம். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நாணயங்களை விற்பனை செய்வோரும், கொள்வனவு செய்வோரும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து நாட்களிலும் இருபத்தினான்கு (24) மணித்தியாலமும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். வெளிநாட்டுச் சந்தையின் மூலம் பன்னாட்டு வர்த்தகமும் முதலீடும் இலகுபடுத்தப்படுகின்றது.

### *வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சிறப்பியல்புகள்:*

* மிகவும் உயர்ந்த திரவத்தன்மையுடன் கூடிய உலகின் மிகப் பெரும் சொத்துக்கள் கையிருப்பு இச்சந்தையின் ஊடாக கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றது.
* உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளிலும் செயற்படுகின்றது.
* வார இறுதி நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் 24 மணித்தியாலமும் இயங்குகின்றது.
* பல்வேறான காரணிகளின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி வீதம் தளம்பலுக்கு உள்ளாகின்றது.
* நிலையான வருமானத்தைப் பெற்றுத் தருகின்ற ஏனைய சந்தைகளுடன் ஒப்பிடுகின்ற போது மிகக் குறைந்ததொரு இலாபத்தையே பெற்றுத் தருகின்றது.
* வர்த்தகக்கையிருப்பின் அளவைப் பொறுத்து மிகக் குறைந்ததொரு இலாபத்தின் அல்லது நட்டத்தின் அளவு தீர்மானிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *செலாவணி வீத நடப்பாட்சி* :

ஏனைய நாணயங்களுடன் ஒரு நாட்டின் நாணயத்தைப் பரிமாற்றிக் கொள்ளுகின்ற முறை மற்றும் வெளிநாட்டுச் சந்தையை முகாமைத்துவம் செய்கின்ற வீதம் செலாவணி வீத நடப்பாட்சியாகும். இது பெரும்பாலும் நாட்டின் நாணயக் கொள்கையுடன் தீவிரமாகப் பிணைந்து காணப்படும். இதற்கு உதாரணமாக சந்தைச் சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்ற மிதக்கும் செலாவணி முறை சந்தைச் சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்ற மிதக்கும் செலாவணி வீதமுறை, வேறு ஒரு நாட்டின் நாணயத்துடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ள செலவாணி வீத முறை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## *செலாவணி வீதத்தை நிர்ணயித்தல்:*

பொதுவாக வெளிநாட்டுச் சந்தையில் செலாவணி வீதமானது ஒரு வெளிநாட்டு அலகிற்கு எத்தனை உள்நாட்டு நாணய அலகுகள் என்றவாறே காட்டப்படும்.

உதாரணம் :- ஒரு USA டொலர் - 126 இலங்கை ரூபாய்

ஒரு குவைத் தினார் - 455 இலங்கை ரூபாய்

செலாவணி வீதம் தினமும் மாறுபடும் என்பதோடு பல்வேறான நாணயக் கொள்கைகளின் கீழ் அது பல்வேறு விதத்தில் நிர்ணயிக்கப்படும். இவற்றில் தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைய வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி மற்றும் நிரம்பலின் மீது சுதந்திரமான முறையில் செலாவணி வீதம் தீர்மானிக்கப்படுதலே மிகவும் பொருத்தமான முறையாகக் காணப்படுகிறது.

## *செலாவணி வீதத்தளம்பல்:*

பல்வேறான காரணிகளின் தேறிய தாக்கத்தின் காரணமாக வெளிநாட்டு செலாவணிக்கான கேள்வியும் அதன் நிரம்பலும் மாற்றமடையும் அதன் போது செலாவணி வீதமும் குறுகியதொரு காலத்தினுள் மாற்றத்திற்கு உள்ளாகி முன்னர் காணப்பட்ட சமநிலைக்கு புறம்பானதொரு சமநிலையை நோக்கிச் செல்லும்.

## *செலாவணி வீதத்தளம்பலை ஏற்படுத்தும் காரணிகள்*

(1) *பன்னாட்டு வர்த்தகம் :-*

சர்வதேச வர்த்தகம் செலாவணி வீதத்தில் தளம்பலை ஏற்படுத்துகின்ற காரணிகளில் மிகவும் பங்கு வகிக்கின்றது. ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதி பலம், பலவீனமானது குறித்த நாடு ஏனைய நாடுகளுடன் செய்கின்ற வர்த்தகத்தின் மீது தீர்மானிக்கப்படும். ஒரு நாட்டின் இறக்குமதி உயர்மட்டத்தில் காணப்படும் போது குறிப்பிட்ட அந்த நாட்டில் வெளிநாட்டுநாணயங்களுக்கான கேள்வி அதிகரிப்பதோடு உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடையும். ஒரு நாட்டின் நாணயத்தின் பலம் அல்லது பலவீனம் அந்நாட்டின் நடைமுறைக் கணக்கு நிலுவையின் மூலம் பிரதிபலிக்கும்.

(2) *மூலதன அசைவு :-*

வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாக பெருமளவு மூலதனத்தைக் கவர்கின்ற நாடுகளில் உள்நாட்டு நாணயங்களுக்கான கேள்வி அதிகரித்து குறிப்பிட்ட நாட்டின் நாணயத்தின் பெறுமதி அதிகரிக்கும். அதற்கு எதிர்மறையாக மூலதனம் வெளிப்பாய்ச்சப்படுமாயின் குறிப்பிட்ட நாணயத்தின் பெறுமதி குறைவடையும்.

(3) *விலைமாற்றம் :-*

குறிப்பிட்ட ஒரு நாட்டில் விலைகள் அதிகரிக்கின்ற போது அதன் காரணமாக குறிப்பிட்ட நாட்டின் உற்பத்திகள் விலை உயர்வானதாகக் காணப்படும். அந்த உற்பத்திகளின் விலைக்கேள்வி நெகிழ்வுத்தன்மை உயர்வானதாக இருப்பின் அவற்றிற்கான கேள்வி வீழ்ச்சியடையும். ஏற்றுமதி வீழ்ச்சி அடைகின்ற போது வெளிநாட்டுச் செலாவணிகளின் பெறுகை குறைவடைந்து குறிப்பிட்ட நாட்டின் பரிமாற்றப் பெறுமதி வீழ்ச்சிக்குள்ளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஊக வணிகம் :-

ஊக வணிகர்கள் செவாணிச் சந்தையின் தாக்கத்தை ஏற்படுத்துவோராகவே காணப்படுகின்றனர். எதிர் காலத்தில் குறிப்பிட்ட நாட்டின் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி அடையும் என எதிர்பார்ப்பார்களாயின் குறிப்பிட்ட நாட்டின் நாணயத்தை விற்பனை செய்து விட்டு பெறுமதி கூடும் என எதிர்பார்க்கும் நாணயத்தை கொள்வனவு செய்ய முற்படுவர். இதன் காரணமாக விற்பனை செய்கின்ற நாணயத்தின் நிரம்பல் அதிகரித்துக் குறிப்பிட்ட நாட்டின் நாணயப் பெறுமதி விழ்ச்சியடைவதைக் காணலாம்.

(5) பொருளாதாரத்தின் பலம் :-

ஒரு நாட்டின் அடிப்படைப் பொருளாதார அளவீடுகளான அரச - வரவு செலவுத்திட்ட நிலுவை பன்னாட்டுப் பொறுப்புகள் வெளிநாட்டு ஒதுக்குகள் பலம் பொருந்தியதாகக் காணப்பட்டால் குறிப்பிட்ட நாட்டின் நாணயம் உறுதியானதாகக் காணப்படும்.

(6) பங்குச் சந்தைத் தொழிற்பாடுகள் :-

வெளிநாட்டுப் பிணையங்கள், தொகுதிக்கடன்கள், பங்குத் தொகுதிகள், கொடுக்கல் வாங்கல்களின்போது அதனோடு தொடர்புடைய நாணயத்தின் கேள்வி நிரம்பலில் மாற்றம் ஏற்பட்டு செலாவணி வீதம் மாற்றமடையும்.

7) செலாவணி வீதம் பெறுமதியிறக்கம் அடைதல் அல்லது பெறுமதி ஏற்றமடைதல் :-

வெளிநாட்டு நாணய அலகொன்றிற்கு செலுத்த வேண்டிய உள்நாட்டு நாணய அலகொன்றின் தொகை அதிகரித்தலை செலாவணி வீத பெறுமதியிறக்கம் எனவும், வெளிநாட்டு நாணய அலகொன்றுக்கு செலுத்த வேண்டிய உள்நாட்டு நாணய அலகின் தொகை குறைவடைவதை செலாவணி வீத பெறுமதியேற்றம் எனவும் அழைப்பர். இவ்வாறு அரச கொள்கைகள், அரசியல் விடயங்கள், ஒப்பீட்டு உற்பத்தி விலை, நாணயக்கொள்கை, பணவீக்க வீதத்திலான மாற்றங்கள், வருமான மட்டத்திலான மாற்றங்கள், போன்ற பல்வேறு காரணிகளும் செலாவணி வீதத்தில் தளம்பலை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றன.

## வெளிநாட்டு ஒதுக்குகள் :

ஒரு நாட்டின் வெளிநாட்டு செலாவணி வீதத்தின் பெறுமதியை பாதுகாப்பதற்கு, வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மற்றும் வேறு விடயங்களின் பொருட்டு தேவைப்படுகின்ற வெளிநாட்டு செலாவணியை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகின்ற ஓர் ஊடகமாக வெளிநாட்டு வங்கிகளில் வைப்புகளாக வெளிநாட்டு அரச முறிகளாக வெளிநாட்டு அரசுகளால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணையங்களாக நிதியியல் தங்கமாக மற்றும் வெளிநாட்டு சிறப்பு எடுப்பனவு உரிமைகளாக பேணி வரப்படுகின்ற சொத்துக்கள் குறிப்பிட்ட அந்நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளாக குறிப்பிடப்படுகின்றன.

### வெளிநாட்டு ஒதுக்குகளுக்கு உரித்துடைய தரப்பினர்:

01. அரசாங்கம்
02. மத்திய வங்கி
03. வர்த்தக வங்கிகள்

### வெளிநாட்டு ஒதுக்குகளின் வகைகள் :

01. அலுவல்கள் வெளிநாட்டு ஒதுக்குகள் ***(Gron official peresure)***
02. மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ***(Gron total pererue)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளிநாட்டு ஒதுக்குகளைப்பேணி வருவதன் தேவைப்பாடு

01. கொடுக்கல் வாங்கல் செய்யும் நோக்கம்

02. ஊக வணிக நோக்கம்

03. பாதுகாப்பு நோக்கம்

### ஒதுக்குகளின் போதுமான தன்மை

குறிப்பிட்ட ஒரு நாடானது ஒதுக்குகளை மேற்கொள்ளும் போது அதன் போதுமான தன்மைகளையும், நாட்டின் பொருளாதார உறுதியையும், நாணயத்தின் உறுதித்தன்மையையும், உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பல்வேறு வகையான சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான நான்கு சுட்டெண் தொகுதிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

1. பண ரீதியான சுட்டெண்கள்
2. வர்த்தக ரீதியிலான சுட்டெண்கள்
3. கடன் அடிப்படையிலான சுட்டெண்கள்
4. நடைமுறை மூலதனக் கணக்குச் சுட்டெண்கள்

### ஒதுக்குகளின் முகாமைத்துவம்

அண்மைக் காலத்தில் ஒதுக்குகள் பற்றிய கவனம் அதிகரித்தமை தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகள்

1. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு மாற்றாக யூரோ நாணயம் நடைமுறைக்கு வந்தமை
2. அனேகமான மத்திய வங்கிகள் தங்க ஒதுக்குகளை பேணி வருவதில் இருந்து நீங்கியமை
3. செலாவணி வீத ஆளுகைகளின் மாற்றங்கள்
4. ஒதுக்குகளின் போதுமான தன்மை மற்றும் நெருக்கடிகளை தவிர்ப்பதை முன்னிட்டான அதன் கடமைப் பொறுப்பு தொடர்பிலான கருத்துக்கள்.
5. பன்னாட்டு நாணய நிதியத்தினால் நிதியிடல் இடைவெளிகள் கணிப்பிடப்படுகின்ற போது பயன்படுத்தப்படுகின்ற ஒதுக்கு இலக்குகள் பேணி வரப்படுதலில் உள்ள முக்கியத்துவம்

மேற்படி அனைத்து விடயங்களையும், கவனத்தில் கொள்கின்ற போது தற்கால உலக பொருளாதார முறையினுள் வெளிநாட்டு செலாவணிச் சந்தையினதும் வெளிநாட்டு ஒதுக்குகளின் முக்கியத்துவமும் தெளிவாகின்றது.

### உசாத்துணைகள்


01. மத்திய வங்கி ஆண்டறிக்கை

02. இலங்கை மத்திய வங்கி தொடர்பூட்டல் திணைக்கள வெளியீடுகள்

03. ***Readdy, Y.G Indias foreign exchange reserves policy ststus and issues***




**திரு. க. விஜயநாதன் *(B.com),***

ஆசிரியர்,

மட் /பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

(தேசிய பாடசாலை),

களுவாஞ்சிகுடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நவீன தொழில்நுட்ப உலகின் சவால்களை எதிர்கொண்டு வாழ்கின்ற என்னிடமும் ஏனையோரிடமும் படித்த மாணவர்களிடமும் பெற்றுக்கொண்ட தகவல்களைக் கொண்டு மாணவர்கள் தங்களது வீடுகளில் கற்றல் செயற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சிலவிடயங்களை முன்வைக்கின்றேன்.

திட்டமிட்டு நடைமுறைப்படுத்தாத எவ்விடயமும் முழுமையாக முற்றுப் பெறுவதில்லை. ஒரு நாளைக்கு குறைந்தது ஏழு மணித்தியாலம் வீட்டில் சுயகற்றல் மேற்கொள்ளத் தக்கவாறு நேரசூசியை அமைத்து அவ் ஏழு மணித்தியாலங்களில் புதிய விடயங்களையும் Home work இனை பூரணப்படுத்துவதற்கு ஒரு மணித்தியாலமும் மீதி ஆறு மணித்தியாலங்களை ஒவ்வொரு பாடத்திற்கும் பங்கிட்டு நேரசூசியை அமைத்து அந் நேரசூசிக்கு அமைவாக அன்றன்று எவ்விடயங்களை படிக்க வேண்டுமென்று திட்டமிட்டு அதற்கு அமைவாக படிக்கவேண்டும். இந்த ஏழு மணித்தியாலத்தை எவ்வாறு பெறலாமென்று உங்களுக்கு சற்று குழப்பம் இருக்கும் பி.ப 6.00 மணியில் இருந்து 11.00 மணிவரை ஐந்து மணித்தியாலங்களும் விடியற்காலை 4.00 - 6.00 வரை 2 மணித்தியாலங்களும் தெரிவு செய்ய வேண்டும்.



# வீட்டில் சுயகற்றல் எவ்வாறு

எவ்வளவு நேரம் படிக்கின்றோம் என்பதைவிட எப்படிப் படிக்கின்றோம் என்பதே முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு சிறிய விடயத்தை வாசித்து படித்த பின்னர் அவ் விடயத்தை வெற்றுத் தாளில் முழுமையாக குறிப்புப் புத்தகத்தை பார்க்காது எழுதிப் பார்க்கவேண்டும். எழுதிக்கொண்டு செல்லும் போது இடையில் முடியாமல் போனால் எழுதிய விடயத்தை வேறு இடத்தில் ஒதுக்கிவிட்டு மீண்டும் வெற்றுத்தாளில் குறிப்புப் புத்தகத்தை பார்க்காது எழுதிப்பார்க்க வேண்டும். தற்போதும் முடியாமல் போகுமிடத்து மீண்டும் மீண்டும் முயற்சி செய்து முழுமையாக எழுதிய பின்னரே மற்றய விடயத்திற்குச் செல்ல வேண்டும்.

நான் "***First year final exam***" எழுதிக்கொண்டிருக்கும் போது நாளை ***Applied maths exam.*** அன்று இரவு ஒரு ***Tute*** கிடைத்தது அதிலுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதிப்பார்க்காமல் படித்துவிட்டு இந்த ***Tute*** இல் உள்ள வினாக்கள் வந்தால் செய்யலாம் என எண்ணிவிட்டு நாளை ***Exam Paper*** ஐ எடுக்க முதலாம் வினா ***Tute*** இல் இருந்த இரண்டாம் வினாவாக இருந்தது. உடனே மகிழ்வுடன் அவ்வினாவைத் தெரிவு செய்து விடை எழுதிய போது முழுமையாக சரியான விடையை பெற முடியாமல் போய்விட்டது. மூன்று தடவை எத்தனித்தும் பலன் கிடைக்கவில்லை. ஆனால் எழுதிப் படித்த வினாக்களுக்கு இலகுவாக முழுமையாக விடை கிடைத்தது. புதிய விடயங்களைப் படிக்கும் போது ***Home work*** இனை நிறைவு செய்ய எத்தனிக்கும் போதும் சில சமயங்களில் முதல் எத்தனிக்கும்போதே விடை கிடைக்கும். சில சமயங்களில் முதல் எத்தனிப்பின் போது விடை கிடைக்காத சந்தர்ப்பங்களில் குறைந்தது ஐந்து தடவை முயற்சி செய்து பார்க்க வேண்டும். அப்போதும் விடை பெற முடியாது ஆயின் மாத்திரமே உங்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியரிடம் நாடி முழுமை பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் போது குறித்த பாடத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் திட்டமிட்ட விடயங்களை நிறைவு செய்யமுடியாமல் போகும் சந்தர்ப்பங்களில் மற்றய பாடத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை இதற்குச் செலவு செய்யாமல் மறு நாள் தொடர வேண்டும்

உங்களது அனைத்துக் குறிப்புக் கொப்பிகளையும் 5 அல்லது 6 நாட்களில் படித்து முடித்து விட்டீர்கள் எனின் நாங்கள் படித்து முடித்து விட்டோம் என நினைக்காது அவற்றை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும். என்னிடம் படித்து மருத்துவத் துறைக்குத் தெரிவாகிய மாணவர்கள் அனேகமாக கூறிய விடயம் ஒரு குறிப்புப் புத்தகத்தை 100 தடவைக்கு மேல் படித்தோம் என்பது. இன்னுமொரு விடயம் காலம் செல்லச் செல்ல புதிய விடயங்களை படிப்பதற்கு கூடிய நேரம் கிடைத்ததா?.....எவ்வாறு?.... என்று கேட்ட போது குறித்த பாடத்தை, புத்தகத்தை முன்னர் நிறைவு செய்த நேரத்திலும் பார்க்க அடுத்த தடவை நிறைவு செய்வதற்கு குறைந்த நேரம் தேவைப்பட்டது என்பதை முக்கியமாகக் குறிப்பிட்டாக வேண்டும். பரீட்சைக்கு 2 அல்லது 3 வாரங்கள் இருக்கும் போது புதிய விடயங்களை கற்காது முன்னர் கற்ற விடயங்களை மாத்திரம் முழுமையாக மனனம் செய்தல் வேண்டும்.


**திரு.மு.கோவண்ணன்**

ஆசிரியர்,

மட் / பட்டிருப்பு ம.ம.வி,

(தேசிய பாடசாலை),

களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லாப் பிள்ளைகளும் ஒரே பாணியில் (style ) கற்பதில்லை. அவர்களுடைய கற்கும் பாணியில் வேறுபாடுகள் உண்டு. அவற்றைக் கருத்திற் கொண்டு ஆசிரியர்களும், பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு உதவ வேண்டும் என்பது உளவியலாளர்களின் கருத்து. கற்றல் தொடர்பான வேறுபட்ட அணுகுமுறைகள் அல்லது வழிகள் கற்றல் பாணி எனப்படுகின்றது. சூழலிலிருந்து தூண்டல்கள் பெற்றுக் கொள்ளுதல், மற்றும் செயன்முறைகளுக்கு உட்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றில் தனி நபரிடையே காணப்படும் வேறுபட்ட தன்மைகளே கற்றல் பாணிகள் எனப்படுகிறது.

ஒரு பாடத்தைக் கற்க எத்தனை வழிமுறைகள் உண்டு? தலை சிறந்த பல உளவியலாளர்களின் அண்மைக்கால ஆய்வு முடிவுகளின் படி பிள்ளைகளிடத்து ஏழு வகையான கற்றல் பாணிகள் உண்டு. ஆசிரியர்கள் இப்பாணிகளைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கு ஏற்றவாறு தமது பாடத்தை அமைத்துக் கொள்ளல் வேண்டும். இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை உச்சப்படுத்த முடியும். என்பது அவ்வுளவியலாளர்களின் கருத்து ஆகும். அத்துடன் பெற்றோர்களும் இக் கற்றல் பாணிகளை அறிந்து கொண்டால் தமது பிள்ளைகளை நன்கு புரிந்து கொண்டு கற்றலில் நல்வழி காட்ட முடியும். எனவே உளவியலாளர்கள் கண்டறிந்த ஏழு வகைக் கற்றல் பாணிகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

**01. மொழி சார்ந்த கற்றல் பாணி.**

**02. தர்க்க ரீதியாக சிந்திக்கும் மாணவர்.**

**03. மற்றொரு வகையான பிள்ளைகள் யதார்த்த உலகை எதிர் கொள்ளாது திரைப்படங்களிலும் பகற்கனவுகளிலும் ஆழ்ந்திருப்பார்கள்.**

**04. இசையை விரும்பும் பிள்ளைகள்.**

**05. எப்போதும் இயங்கிக் கொண்டே இருப்பவர்கள்.**

**06. சில பிள்ளைகள் சிறந்த சமூக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்பவர்கள் சுமுகமாக யாவருடனும் பழகுவார்கள்.**

**07. வேறு சில பிள்ளைகள் எவருடனும் சேராது தம்மைத் தனிமைப்படுத்தி வாழ்வர்.**

உளவியலாளர் கண்டறிந்த ஏழு வகைக் கற்றல் பாணிகளில் முதலாவதாகக் காணப்படும் மொழி சார்ந்த கற்றல் பாணியினை நோக்குவோமானால் இவ்வகையைச் சார்ந்த பிள்ளைகள் வாசிப்பு. எழுத்து என்பவற்றிலும், கதை கேட்பதிலும் ஆர்வமுடையவர்கள். இடங்கள், பெயர்கள், திகதிகள், மற்றும் சாதாரண விடயங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவாக மனனம் செய்து கொள்வர். பல கதைகளைக் கூறி ஆச்சரியப்படுத்துவர். நாம் கூறுவதை அப்படியே திரும்பக் கூறக் கூடியவர்கள் அவர்களுடைய ஆக்கத் திறனை ஊக்கப்படுத்தல் வேண்டும். உண்மை எது? மிகைப்படுத்தப்பட்டவிடயம் எது? என்பதை அவர்களுக்கு இனங்காட்ட வேண்டும். இப்பிள்ளை சொற்களைப் பார்த்தல், கேட்டல், சொல்லல், என்பவற்றால் நன்கு கற்பர். அவர்கள் எழுதும் சொற்கள், சொற்றொடர்கள், என்பவற்றை நன்கு நினைவில் இருத்திக் கொள்வர். எழுத்துக்களை படைக்கும் பணிகளையும், அவை தொடர்பான கற்கை நெறிகளையும், அவர்களுக்கு நன்கு அறிமுகம் செய்யுங்கள். கணிதப் பிரச்சினையைக் கதையாக எழுதுதல், விஞ்ஞான உண்மைகளை விளக்கும் கதைகளைப் படித்தல் என்பன இவர்களுக்குப் பெரிதும் உதவும் வழிமுறைகளாகும்.

அடுத்து தர்க்க ரீதியாக சிந்திக்கும் மாணவர்கள் பற்றி நோக்குவோமானால், சில பிள்ளைகள் கணித பாங்கானவர்கள், கணிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வமுடையவர்கள், ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும், பல கேள்விகளைக் கேட்டு துளைத்து எடுப்பர். இது ஏன் இப்படி இருக்கிறது? இது எவ்வாறு இயங்குகிறது? இந்த இரண்டுக்கும் தொடர்பு என்ன? இவ்வாறு அவர்கள் துருவி ஆராய முற்படுவர். building, கட்டைகள். pattern puzzle என்பவற்றை வைத்து விளையாடுவர். இவர்களுக்கு பொறுமையாக பதில் சொல்லல் வேண்டும். வகைப்படுத்தல், பாகுபடுத்தல், தொடர்புகளை உற்று நோக்குதல் என்பவற்றில் இவர்கள் ஈடுபாடு காட்டுவர். தொடர்புகளை வரைபடத்தில் காட்ட இவர்களால் முடியும். போர்ச் சூழ்நிலையும், நிகழ்வுகளும் எவ்வாறு பங்குச் சந்தையைப் பாதிக்கும் என்பதனை வரைபடத்தில் காட்ட அவர்களால் முடியும். பொறியியலாளராகும் சந்தர்ப்பமும் உண்டு. எனவே இவ்வாறான இயல்புடைய மாணவர்களும் காணப்படுவார்கள்.

மேலும். கற்றல் பாணிகளில் ஒன்றாக விளங்கும் மற்றொரு வகையான பிள்ளைகள் யதார்த்த உலகை எதிர்கொள்ளாது திரைப்படங்களில் வரும் பகற்கனவுகளிலும் ஆழ்ந்திருப்பார்கள். அதாவது ஒன்றைப் பற்றிச் சொல்லுங்கள் என்று கேட்காது அதனைப் படமாக வரையுமாறு கேட்கலாம். அவர்களுடைய கலைத்துவ ஆற்றல்களையும் புலன் உணர்வுகளையும் வளர்த்துக் கொள்ள இடமளிக்க வேண்டும் அவர்கள் வர்ணங்களையும் படங்களையும் விரும்புவார்கள். இவ்வாறான பண்புகளை இவ்வகைப் பிள்ளைகள் கொண்டிருப்பார்கள்.

இதே போல் நான்காவது பாணியாக இசையை விரும்பும் பிள்ளைகள் காணப்படுகின்றார்கள். இப் பிள்ளைகள் வீட்டைச் சுற்றி ஏதேனும் இராகங்களை முணுமுணுத்துக் கொண்டு வலம் வருபவர்கள், இசையைக் கேட்டுக் கொண்டே படிப்பவர்கள், இசையைக்கேட்கும் போது மற்றவர்களைப் போலன்றி அதன் ஒத்திசை இராகம், ஏற்ற இறக்கம் என்பன போன்றவற்றை நுணுக்கமாக கிரகிப்பர். இசையினூடாகவே கற்க விரும்புவர். பாடங்களோடு இசை தொடர்புபடுத்தப்படும் போது கற்றலில் ஊக்கஞ் செலுத்துவர்.

கற்றல் பாணிகளில் அடுத்ததாக விளங்கும் எப்போதும் இயங்கிக் கொண்டே இருப்பவர்கள், (Bodily) தொடர்ந்து நடந்து கொண்டே இருப்பர். எல்லாவற்றையும் தொட்டுப் பார்க்க முயலுவர். சரீர மொழியில் தொடர்பாடலைச் செய்ய முயலுபவர். இவர்கள் அமர்ந்து வாசிப்பதை விட விளையாட்டிலும், கைவினைப் பொருட்களைச் செய்தல், செயல் முறைக்கல்வி, வெளிக்கள செயற்பாடு என்பன இவர்களுக்கு அதிகம் பொருத்தமானது. இவர்கள் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யக்கூடியவர்கள், இவர்களுடைய மேலதிக சக்தியைக் கற்றலுக்குப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். வயதுக்கேற்றவாறு 10 - 20 நிமிடங்களுக்கு மட்டும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்தைக் கற்பித்தல், அடிக்கடி பாடங்களை மாற்றி மாற்றிக் கற்பித்தல் என்பன உளவியலாளர் கூறும் ஆலோசனைகள் ஆகும்.

அடுத்து சில பிள்ளைகள் சிறந்த சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்பவர்கள். சுமுகமாக யாவருடனும் பழகுவார்கள் (Interpersonal). எராளமான நண்பர்களையும், சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் கொண்டவர்கள். பொறுமையும், புரிந்துணர்வும் பிறரில் பரிவும் கொண்டவர்கள் என்பதனால் மற்றப் பிள்ளைகள் மத்தியில் பிரசித்தி பெறுபவர்கள். பிணக்குகளைத் தீர்க்கும் வல்லமையும், கொண்டவர்கள். இவ்வாறான பழக்கங்களை ஆசிரியர்களும், பெற்றோர்களும், குறை கூறாது ஊக்குவிக்க வேண்டும். இப்பிள்ளைகளை நாடி பல பிள்ளைகள் வீட்டிற்குள் வருவார்கள். பெற்றோர்கள் சிரமம் பாராது இவர்களை ஏற்றுக் கொள்வது தமது பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவும். குழு நிலைகளிலேயே இவர்கள் நன்றாக செயற்படுவார்கள்.

கற்றல் பாணிகளில் இறுதியாக காணப்படும் வேறு சில பிள்ளைகள் எவருடனும் சேராது தம்மைத் தனிமைப்படுத்தி வாழ்வர் ளளள(Intrapersonal). மன உறுதியுடன் தனியாக வேலை செய்வர். தம்மைப் பற்றி புரிந்துணர்வுடன் தமது நலன்களைப் பார்த்துக் கொள்வர். தனியாளுக்குரிய செயற்றிட்டங்களிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவர். இதனை அனுமதிக்கும் அதே வேளையில் அவர்கள் பிறருடன் சேர்ந்து பழகுவதையும், ஊக்குவிக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்களையும், வழங்குதல் வேண்டும். இது அவர்களுடைய விருப்பப்படியும், அவர்களுடைய வேகத்திலும் நடைபெற வேண்டும்.


சில பிள்ளைகள் இந்த ஏழு பாணிகளில் ஒன்றுக்கு மேலான பாணிகளையும் கொண்டிருப்பர் கடைசி இரு பாணிகளும் அதாவது 6வது, 7வது ஆகும். இது ஆளுமைப் பாணிகள் என்று உளவியலாளரால் அழைக்கப்படுகின்றது.

எனவே சகல கற்றல் பாணியினரையும் கவரக் கூடியதாக கற்றல் நடவடிக்கையை ஒழுங்குபடுத்துவதிலேயே ஆசிரியர் வெற்றி தங்கியுள்ளது. அதாவது கற்றல் பாணிகளைப் பின்பற்றி செல்கின்ற மாணவர்களுக்குப் பின்வரும் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக அதனை வெற்றியடைய முடியும்.

01. முழு மூளைக் கற்பித்தல் (whole brain teaching)
02. விரிவுரை
03. பரிசோதனை
04. வினாவுதல்
05. செயற்றிட்ட முறை
06. பிரச்சனை தீர்த்தல்
07. ஒப்படை
08. சிந்தனைக் கிளர்பு
09. விளையாட்டு முறை
10. கூட்டிணைந்து கற்பித்தல்
11. களப் பயணம்

போன்ற கற்பித்தல் முறைகளினூடாக சகல கற்றல் பாணியினரையும், தேர்ச்சியடையச் செய்யலாம். என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்:-** சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள் (பேராசிரியர் சோ.சந்திரசேகரன்), இன்ரனெற்



**திருமதி. இந்துமதி வரதராஜன்,**
மட்/பட்டிருப்பு ம.ம.வி,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வ**ளர்ந்து வரும் தொழிநுட்ப உலகிற்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர்கள் தொழில் சார்ந்த கல்வியைக் கற்பதற்கு ஆர்வம் காட்ட வேண்டியவர்களாக உள்ளனர்.

தனி ஒரு மனிதனாக நின்று சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை தொழிற் கல்வி மூலமே பெறவேண்டிய தேவைகள் எங்களைச் சார்ந்துள்ளது. தமது குடும்பச் சூழ்நிலை, பொருளாதாரப் பிரச்சனை போன்ற காரணங்களால் கல்வி கற்பதனை இடை நடுவில் விடும் மாணவர்கள் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெறத் தவறும் மாணவர்கள் உயர் கல்வியைக் கற்று பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், போன்ற இடங்களுக்குச் செல்ல முடியாத மாணவர்கள் சிறந்த வழிகாட்டல் இல்லாமையாலும் பெற்றோரின் அக்கறையற்ற மனப்பாங்கு காரணமாகவும். பாடசாலைக் கல்வியை முடித்தும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றார்கள்.

இவ்வாறான மாணவர்களுக்கு சிறந்த வாழ்க்கைக்குரிய வழிகளைக் காட்ட வேண்டிய தேவை அனைவரிடமுமே உள்ளது. பாடசாலையில் கல்வி கற்கும் காலங்களில் மாணவர்களாகிய ஆண், பெண் இரு பாலாரையும் தொழில் சார்ந்த கல்வியை கற்பதில் ஊக்கப்படுத்த வேண்டும்.

தற்போது பாடசாலைகளில் 6 -9 வரை செயல் முறைத் தொழில்நுட்பப் பாடமும், தரம் 10 - 11 வரை வர்த்தகம், மனைப் பொருளியல், விசவாயமும் தொழிநுட்பவியலும், தகவல் தொழிநுட்பமும், வடிவமைப்புத் தொழிநுட்பவியலும், மீன்பிடித் தொழிநுட்பமும், ஊடகத்துறைக் கற்கைநெறியும், உயர்தரத்தில் மென் தொழிநுட்பம், வன் தொழிநுட்பம் எனும் இரு பிரிவுகளிலும் மனைப் பொருளியல். தகவல் தொழிநுட்பம், விவசாய தொழிநுட்பம், குடிசார் தொழில்நுட்பம், மின் இலத்திரனியல் தொழிநுட்பம், பொறிமுறைத் தொழிநுட்பம் என பல பாடநெறிகளை பாடசாலைச் சூழலில் கற்றுக் கொள்ளக் கூடிய அதிக சந்தர்ப்பம் உள்ளது.

இவை மாணவர்களின் தொழில் சார்ந்த கல்வி தொடர்பான ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைவதுடன் இவ்வாறு ஆர்வமுடைய மாணவர்கள் தொடர்ந்து கல்வியைக் கற்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது கல்வியைத் தொடர முடியவில்லையே என கவலை கொள்ளாது தொடர்ந்து அவர்கள் விரும்பும் துறையில் கற்றலை மேற்கொண்டு ஒரு தொழில் சார்ந்த வல்லுனராகவும், சுய தொழிலாளியாகவும் திகழ்வதற்கு பல வழிகள் எம்மைச் சுற்றியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தொழில் சார் கல்வியினை அரச, அரச சார்பற்ற பல நிறுவனங்கள் கற்றுக் கொடுப்பதில் ஆர்வமாக உள்ளன. (உதாரணம்)

தொழிநுட்பக் கல்லூரிகள்

பல்கலைக்கழகங்கள்

திறந்த பல்கலைக்கழகங்கள்

கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

வாழ்க்கைத்தொழில் சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகங்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

என பல நிறுவனங்கள் பல கற்றை நெறிகளை மாணவர்களுக்க கற்றக் கொடக்கின்றது. இவற்றின் ஊடாக

* தொழிற்த்துறைக் கல்வியில் இளமானி (BIS) (B.tech)
* தொழிற்த்துறைக் கல்வியின் டிப்ளோமா
* தொழிற்த்துறைக் கல்வியின் முதுமானி (M.Tech)
* மென்பொருள் இயந்திரவியல் இளமானிப் பட்டம்
* தேசிய தொழினுட்பவியல் டிப்ளோமா (NDT) (HND)
* தேசிய தொழினுட்பவியல் சான்றிதழ் (NCT)
* தொழினுட்பக் கல்வியில் இளமானி (B.Ed.Tech)

போன்ற பல கற்கை நெறிகளைப் பின்பற்றக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இதனைத் தவிர புதிய முறையான வாழ்க்கைத் தொழில், தொழினுட்ப பயிற்சி அமைச்சினால் தகைமைச் சான்றிதழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (National Vocatioonal qualification System) NVQ எனும் சான்றிதழ் மட்டங்களுக்கு தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படும் வாழ்க்கைத் தொழிற் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இது இரு வழிகளில் பெறப்படுகின்றன.

* திறமையை அடிப்படையாகக் கொண்டு முறையான பயிற்சியின் பின்னர்
* மற்றையது தனது துறையில் திறன்பட நிறைவேற்ற முடியும் என்பதை நிரூபிக்க முனைதல் (Recognition of prior learning -RPL) இச் சான்றிதழ் 07 மட்டங்களைக் கொண்டது. அவை வருமாறு

01 ஆம் மட்டம் - அடிப்படை. ஆரம்ப ஆற்றல்கள் கொண்ட கைப்பணியாளர்கள்

02 ஆம் மட்டம் - அடிக்கடி மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர்கள

03 ஆம் மட்டம் - சிறிய மட்டத்திலான மேற்பார்வையின் கீழ் செயலாற்றக்கூடிய கைப்பணியாளர்கள்

04ஆம் மட்டம் - சுயாதீனமாக செயலாற்றக் கூடிய கைப்பணியாளர்கள்

05 ஆம் மட்டம் - மேற்பார்வையாளர்கள்

06 ஆம் மட்டம் - முகாமையாளர்கள்

07 ஆம் மட்டம் - திட்டமிடுபவர்கள்

மேலும் நிறுவனங்களினால் 60க்கு மேற்பட்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் சில




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பொறியியக்க வல்லுனர்கள்
* கைத்தொழில் தையல் இயந்திர இயக்குனர்
* காய்ச்சி ஒட்டுனர்
* கணனி வன் பகுதி தொழிநுட்பவியலாளர்
* வீட்டு மின்சார மின் உபகரண பழுது பார்ப்பவர்
* தச்சன், மேசன்
* வாயுத் தொழிநுட்பவியலாளர்
* கணனி நிகழ்ச்சி இயக்குனர்
* உயிர் மருத்துவ தொழிநுட்பவியலாளர்
* மோட்டார் சைக்கிள் பொறிவலர்
* வானொலி. தொலைக்காட்சி இணைந்த உபகரண திருத்துனர்
* கணனி வரைபட வடிவமைப்பாளர் என்பனவாகும்.

இது போன்ற பல தேசிய திறன்களுக்கான சான்றிதழ்களை பெறக்கூடியதாக உள்ளது. இச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்பவர்கள் மிகவும் இலகுவாக தொழில்களைத் தேடிக் கொள்ளவும் முடியும்.

எனவே மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறான பயிற்சிகளை மேற்கொண்டு இந் நாட்டின் சிறந்த பிரஜைகளாக மாற வேண்டும் என்பதே எங்களது ஆசையும் உங்களது எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலின் அடித்தளமுமாகும்.



**T.ருத்திராகரன்,**
ஆசிரியர்,
மட்/பட்டிருப்பு ம.ம.வி,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மனித வாழ்வின் மேம்பாட்டிற்கு அத்தியாவசிய அறநெறிகளாக வகுத்துக் கூறப்பட்டிருப்பவை பலவாகும். இவற்றில் குறைந்த பட்சமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அறநெறிகள் சில உள்ளன. அவையாவன இன்சொற்கள் பேசுதல், பரிவுணர்வு, நன்நடத்தை என்பன ஆகும்.

இவற்றில் மிகவும், சுலபமாகக் கடைப்பிடிக்கக்கூடிய அறநெறி ஒன்று உண்டு என்றால் அது நிச்சயமாக இன் சொல் பேசுவதாகத்தானிருக்கும். ஒரு மனிதனின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளே அவர் எத்தன்மை உடையவர் என்பதனை மிகுந்த தெளிவாக உணர்த்துகின்றன. பேசும் வல்லமை கொண்ட மனிதப் பிறவியின் மகத்துவத்தை உளப்பூர்வமாக அறிந்து கொண்டாலே மனிதர் யாரும் கடுஞ்சொல் கூற அஞ்சுவார்கள். நாம் பேசும் பேச்சுக்கள் இனிமையாகவும், பிறர் மனம் நோகா வண்ணமும், பிறருக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் அளிக்க வல்லதாகவும் அடக்கமும் பணிவும் உடையதாகவும் எல்லாவற்றுக்கும் மேலாகப் பயனுள்ள தாகவும் அமைய வேண்டும். இனிமையாகப் பேசுவதில் ஸ்ரீராமரைப் போலவும், பிறர் மனம் புண்படாமல் பேசுவதில் ஸ்ரீராம கிருஸ்ணபரம ஹம்சரைப் போலவும் பேசக் கற்றுக் கொண்டால் மனித வாழ்வு மகிழ்ச்சி ததும்புவதாக இருக்கும்.

அடுத்ததாக பரிவுணர்வு என்பது நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய நல்ல பண்புகளில் ஒன்று ஆகும். பரிவு என்பது ஒரு மனிதனின் நல்லியல்பு, நல்ல பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை எடுத்தியம்பும் கண்ணாடியாய் மனித குலத்திற்கே உரியதான சிறப்பியல்பும் ஆகும். ஐந்தறிவு படைத்த விலங்குகள் கூட ஒன்றுக் கொன்று பரிவினைப் பகிர்ந்து கொள்கின்றன. மனிதனும் பிறரின் தேவையறிந்து துயரத் திலும் முகாந்திரத்திலும் பரிவினைக் காட்டலாம். முல்லைக்கு தேர் கொடுத்தான் வள்ளல் பாரி, வாடிய பயிரைக் கண்டு வாடினார் வடலூர் வள்ளலார். இவர்களெல்லாம் பரிவுணர்வின் மனித உருவாய் மண்ணில் வாழ்ந்தவர்கள். இதற்கு வேண்டப்படுகின்ற நற்குணம் இரக்க சிந்தை மட்டுமே மனித வாழ்விற்கு மூலாதாரமாக விளங்குவது நன்னடத்தை ஆகும். இது மனிதனுக்கு கண்களைப் போன்றது ஆகும். மனிதப் பிறவியில் பயனுள்ள காரியங்களைச் செய்து வெற்றி காண வேண்டு மென்றால் அதற்கு நன்னடத்தை மூலாதாரமாக விளங்குகிறது. செல்வம், பலம், பக்தி என்பன எவ்வளவு அமையப் பெற்றாலும் அடிப்படைத் தேவையான நன்னடத்தை இருக்கப் பெறவில்லையென்றால் மனித வாழ்வு புகழற்றதாகவும், பயனற்றதாகவும், அமைந்து விடும். எனவே மனித வாழ்விலே கடைப் பிடிக்கக் கூடிய அற நெறிகளைக் கடைப்பிடித்து இனிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**திருமதி. உ. ஆதவன்,**
ஆசிரியை,
மட்/பட்டிருப்பு ம.ம.வி,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர்களின் முகாமைத்துவத்தில் வேலைப் பகிர்வு

திருவள்ளுவர் 2000ம் ஆண்டுகளுக்கு முன்பே வேலைப்பகிர்வு பற்றி தன் குறளில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

*"இதனை இதனால் இவன் முடிக்கும் - என்றாய்ந்து*
*அதனை அவன் கண் விடல்"*

திருக்குறள் - 517

இதன் கருத்து என்னவெனில் வேலையைச் செய்யும் தகுதியும், ஆற்றலும் யாரிடத்தில் இருக்கின்றதோ அவரிடமே பொறுப்புக்களை ஒப்படைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் தன் வேலையைச் சிறப்பாகச் செய்து முடிப்பான்.

ஒரு பாடசாலையைப் பொறுத்து அங்கு பல்வேறு கடமைகள், பணிகள் காணப்படும் இதனையெல்லாம் ஒரு அதிபரால் மட்டும் பொறுப்பேற்றுச் செய்ய முடியாது. இதன் காரணமாக பாடசாலையிலுள்ள ஆசிரியர்களிடையே பல பொருத்தமான குழுக்களைத் தெரிவு செய்து அவர்களிடையே துறைசார் (எந்தெந்தத் துறைக்குப் பொருத்தம்) ஆற்றலுள்ளோரை இனங்கண்டு அவர்களுக்குரிய பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் பாடசாலை நிர்வாகத்தினைச் செம்மையாகச் செயற்படுத்தும் ஆளுமையுள்ளவராக ஓர் அதிபரானவர் இருக்க வேண்டும். பாடசாலைகளைப் பொறுத்து பல வகையான பாடசாலைகள் உண்டு. இங்கு ஒரு ஆசிரியர் மட்டுமுள்ள பாடசாலையை எடுத்துக் கொண்டால் அங்கு அவ்வாசிரியரினால் மட்டும் பாடசாலை வேலைகள் அனைத்தம் செய்யப்படவேண்டியுள்ளது. இங்கு வேலைப்பகிர்வு என்பதற்கு இடமில்லை ஆனால் பல ஆசிரியர்கள் கொண்ட பெரிய பாடசாலைகளில் வேலைப் பகிர்வு செய்ய வேண்டியதும். நிர்வகிப்பதும், அவசியஅவசியமானதொன்றாகவே இன்று காணப்படுகின்றது. இங்கு அதிபர், பிரதிஅதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், தர இணைப்பு ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள், ஆகியோரும் சில விசேட தேவைகளுக்கான ஆசிரியர்களும், உள்ளடங்குகின்றார்கள். விசேட வேலைகளுக்குப் பொறுப்பானவர்களாக விளையாட்டு, சாரணியம், ஆலோசனையும் - வழிகாட்டலும், போன்றோரகள் உள்ளடக்கப்படுகின்றார்கள். அதுமட்டுமன்றி பாடசாலையில் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவும் இருக்கும். இக் குழுவிடத்தில் பல்வேறு பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படலாம். இவ்வாறு வேலைகளைப் பகிர்ந்தளிக்கும் போது அதிபரானவர் முகாமைத்துவக் குழு மீது பூரணமான நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டும். அக்குழுவிற்கும் அதிபர் மீது நம்பிக்கையும், விசுவாசமும் இருத்தல் வேண்டும். மேலும் தலைமைத்துவப் பண்புகளில் தலைவருக்கும் ஏனையோருக்கும் இடையில் நல்லெண்ணம். நம்பிக்கை, நல்லுறவு போன்றவை காணப்படுதல் வேண்டும். இதற்கு பாடசாலை அதிபரானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயமுடையவராகவும், தம் ஆசிரியர்களின் நலனின் அக்கறையும், ஈடுபாடுமுடையவராகவும், இருக்க வேண்டும். அதிபர் அடக்குமுறை, அதிகாரம் என்பவற்றை விடுத்து அன்பினால் மற்றோரை ஆட்கொள்ளும் பண்புடையவராகவும் இருப்பதே சிறப்பானது.


வினைத்திறனுள்ள முகாமையாளர் அதிகாரத்தையும், பலத்தினையும், தன்கீழ் பணிபுரிவோருக்கு மிகவும் சாதகமான முறையிலும், அறிவுபூர்வமாகவும், பகிர்ந்தளித்தல் வேண்டும். மேலும் வேலையைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் அதன் பரப்பு, எல்லையைச் சரியாக வரையறை செய்து கொடுப்பதன் மூலமும் சிறப்படைய முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் அதிபரானவர் தன் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது.

ஒரு (நிறுவனத்தின்) பாடசாலையின் கல்வித் தரத்தைக் கூட்டுதல், சமத்துவமான வளப்பங்கீடு, கலைத்திட்ட அபிவிருத்தி, கல்வியில் சமவாய்ப்பு, பயன்தரு நிர்வாகத்தினை ஏற்படுத்துதல், என்பனவற்றிற்காக அதிகாரத்தினை பரவலாக்குவது அவசியமானதாகும். இதன் மூலம் தன் நிறுவனத்திற்குத் தேவையான ஆசிரியர்களைப் பெற்றுக் கொண்ட அதிபரானவர் அவர்களது தகுதிக்கும், ஆற்றலுக்கும், திறமைக்கும், தேர்ச்சிக்கும் ஏற்றவாறு வேலைகளைப் பகிர்ந்து கொடுப்பதே வேலைப்பகிர்வாகும். இவ்வாறு வேலைகளைப் பகிர்ந்தளிக்கும் வேளைகளில் அதிபரினுடைய வேலைச் சுமை குறைவடைகின்றது.

ஆனால் பாடசாலை எனும் நிறுவனத்தின் செயற்பாடானது மிகவும் சிறப்பான முறையில் நடைபெறும். ஆயஒ றநடிநச எனும் அறிஞர் பணிக்குழு ஆட்சியில் தொழிற்பிரிவு பற்றி பின்வருமாறு கூறுகின்றார். *"பணிக்குழு ஆட்சியின் அடிப்படையில் செயற்படும் நிறுவனத்தின் நாளாந்த பணிகள், உத்தியோகபூர்வ கடமைகள், எனும் முறையில் ஊழியர், மத்தியில் பிரித்து வழங்குவதே வேலைப்பகிர்வு"* எனப்படும். பெரும்பாலான நிறவனங்களில் காணப்படும் பல்வேறு வகையான பணிகள் சிக்கலானவை, இதனை தனியாள் மேற்கொள்ள முடியாது. எனவே நிறுவனத்தின் வினைத்திறனை மேம்படுத்த வேண்டுமாயின் அங்கு தொழிற்பிரிப்பு அவசியமானதாகும். இதனடிப்படையில் பாடசாலையை எடுத்து நோக்குவோமாயின் அங்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், இடைநிலைக்கல்வி ஆசிரியர்கள் எனும் அடிப்படையிலும், பாடரீதியாக மொழி, கணிதம், விஞ்ஞானம், சமயம்... எனும் அடிப்படையிலும் தொழிற்பிரிப்பு வழங்கும் முறையும் உண்டு.

அதிபரானவர் தன் வேலைச் சுமையைக் குறைக்கவும், மன அழுத்தத்திலிருந்து விடுபடவும், தன் பொறுப்புக்களின் ஒரு பகுதியை ஏனையவர்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்பவே அதிபரானவர் உதவி அதிபர், பிரதியதிபர்களை நியமித்துக் கொள்கின்றார். இவர்களிடத்தில் தன் பொறுப்புக்களில் ஒரு பகுதியை பிரித்து ஒப்படைத்து விட்டு இவ் வேலைகள் அனைத்தும் சரியாகவும், சிறப்பானதாகவும், நிறைவேற்றப்படுகிறதா? என்பதை மேற்பார்வை செய்வதும் அதிபரின் கடமையேயாகும்.


எனவே ஒரு ஆளுமைமிக்க விவேகமான அதிபரின் கடமையானது பொருத்தமான வேலைக்குப் பொருத்தமான ஊழியர்களை ***(Right man for the Right Job)*** அமர்த்துவதேயாகும்.



**திருமதி. மதிவதனி ஸ்ரீநேசன்**
ஆசிரியை,
மட்/பட்டிருப்பு ம.ம.வி,
தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகம் பார்க்க மறுக்கும் முரண்பாடுகள்

இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் தமக்கென பழக்க வழக்கங்களையும் படைப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் தேவைகள் அதிகரித்தது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக உறவுகளை தம்மிடையே ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வகை உறவுகள் தனிமனிதரிடையேயும் சமூகத்திற்கிடையேயும் காணப்பட்டது.

இத் தொடர்புகளிடையே நிலைத்திருக்க தொடர்பாடல் சிறப்பான முறையில் காணப்படவேண்டும். அவ் உறவுகள் மேம்பட சிறந்த பேச்சாற்றல், மொழியாற்றல், கருத்து வெளிப்படும் விதம், உடலசைவு என்பன அவசியம் இவற்றையெல்லாம் ஒவ்வொரு தனிமனிதனது ஆளுமையே தீர்மானிக்கின்றது. இவ் ஆளுமையினை சிக்மன் புரைட் ED,EGO, SUPER EGO என மூன்று வகையாகப் பிரித்துள்ளார். அவற்றின் வெளிப்படுகையின் காரணமாக மனிதர்களிடையே முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.

முரண்பாடுகள் என்பது ஒருவரிடத்தோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடத்தோ ஏற்படும் கருத்து வேறுபாடு எனக் கொள்ளப்படுகிறது. இதை வேலுப்பிள்ளை குணரெத்தினம் என்பவர் தனது நூலிலே "மனிதன் என்று தோற்றம் பெற்றானோ அப்போதே முரண்பாடுகளும் தோற்றம் பெற்றது" எனக் கூறுகின்றார். இவரது கருத்திலிருந்து முரண்பாடு தொடர்பாக நோக்கும் போது இன்றைய காலகட்டத்தில் மனிதர்கள் அடிப்படையாக இயற்கையுடனும் செயற்கையுடனும் இடைத்தாக்கம் புரிய வேண்டியவர்களாக காணப்படுகின்றனர். இதனால் தனது கருத்துக்கள் தொடர்பாகவும் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஏனைய மனிதர்களோடு முரண்பட வேண்டிய சூழல் ஏற்படுகின்றது எனும் முடிவுக்கு வரமுடியும். இதனை வேலை செய்யும் இடத்தில் தனது கடமைக்கும் மனச்சாட்சிக்குமான எதிர்ப்பு நிலை எனவும் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கும் தனது யதார்த்த நிலைக்கும் இடையிலான எதிர்ப்பு நிலை எனவும் குறிப்பிடலாம்.

இவ்வாறாக ஏற்படும் முரண்பாடுகளை எமது நாளாந்த வாழ்க்கையில்நாம் விரும்பியோ விரும்பாமலோ எதிர் கொண்டுதான் ஆகவேண்டும். சில முரண்பாடுகள் சூழ்நிலை காரணமாகவும், சில முரண்பாடுகள் எமது விருப்பமின்மையால் எம்மை உள்ளீர்ப்பதாகவும் அமையலாம்.

இதனடிப்படையில் எம்முள் ஏற்படும் முரண்பாடுகளை முதலில் நாம் இனங் காணத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த வகையில் முரண்பாடு ஒன்று ஏற்படும் போது வெளிப்படும் பண்புகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கண்களை நேருக்கு நேர் பார்க்காமை
* பேச்சுவார்த்தைகளைக் குறைத்துக்கொள்ளல்
* தேவையான அளவிற்கு மாத்திரம் பேசுதல்
* உடல் ரீதியாக தொலைவில் ஒதுங்கி இருத்தல்
* குறைகூறல் அல்லது குறை காணல்
* தனது கருத்துக்களை வெளிப்படுத்தாமை.

போன்ற வெளிப்பாடுகள் ஊடாக முரண்பாடு ஏற்பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடியும்.

முரண்பாடு ஏற்பட்டுள்ளதை அறிந்து விட்டோம் என்றால் அடுத்தபடியாக நாம் செய்யவேண்டியது எம்மோடு முரண்படுபவரோடு நாமும் முரண்படுவதா? ஆம் அவருக்கே அவ்வளவு இருக்கும் போது எனக்கு எவ்வளவு இருக்கும் என்ற கேள்வி மனதிற்குள் ஏட்படாவிட்டால் அனேகருக்கு தூக்கமே வராது ஆனால் இவ்வாறாக நாம் சிந்திக்கும் போது முரண்பாடு அதிகமாகுமே தவிர ஒரு போதும் குறையப்போவதில்லை. முரண்பாடுகள் தோன்றும் இடமாக குடும்பங்கள், வேலைத்தளங்கள், கல்வி நிறுவனங்கள், பொது இடங்கள் என்பன முக்கிய இடம் வகிக்கிறது. மிக முக்கியமான முரண்பாட்டினை தீர்க்கும் வழிமுறையினை ஆராயும் போது முதலில் ஒரு முரண்பாடு தோற்றம் பெற எத்தனிக்கும் போதே அதற்கான தீர்வினை ஏற்படுத்த வேண்டும். அடுத்த கட்டமாக முரண்பாடு ஒன்று தோன்றி இடைநிலையை அடையும் போது முரண்பாடோடு சம்பந்தப்பட்ட ஒருவர் விட்டுக்கொடுத்தல் அவசியமாகும். அடுத்ததாக முரண்பாடு ஒன்று இறுதிநிலை அடையும் வரை விட்டு அதாவது எல்லை மீறிய முரண்பாடு ஒன்று இருவரிடத்தே அல்லது இருசமூகத்தினிடையே ஏற்படும் போது அதனை தீர்ப்பதற்கு இருவருக்கும் பொதுவான ஒருவர் அதே நேரம் இருவருக்கும் நம்பிக்கையான ஒருவராகவும் காணப்படுவாராயின் அவரால் முரண்பாடு தொடர்பாக ஆராய்வது சிறப்புடையது. இவ்வாறான நடுநிலையாளர்

* இரு தரப்பினரதும் நம்பிக்கையைப் பெற்றவராக காணப்படல்.
* இரு தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ளும் திறன்
* முரண்பாடு மேலும் வராமல் பார்த்துக் கொள்ளுதல்
* முரண்பாடு ஏற்பட்ட நிலை அல்லது தோற்றத்தினை அறிந்து கொள்ளுதல்
* முரண்பாடு ஏற்பட்ட விடயம் தொடர்பான அறிவு பெற்றிருத்தல்

போன்ற பண்புகள் உள்ளடக்கிய ஒருவராக காணப்படல் வேண்டும். இதில் இரு தரப்பினரில் ஒருவருக்கேனும் இவரில் நம்பிக்கை போய்விட்டால் இவரினால் சரியான தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியாது. இவ்வாறான பண்புகளை உள்ளடக்கியவர் மத்தியஸ்தர் எனப்படுவர்.

முரண்பாட்டினைத் தீர்க்கும் வழி முறைகளை மத்தியஸ்தர் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அவை பேச்சுவார்த்தை, இணக்கப்பாடு, மத்தியஸ்தம் எனப்படும். எனினும் இலகுவான வழிகளில் முரண்பாட்டினைத் தீர்க்கலாம். இதற்கு ஒரு மத்தியஸ்தம் காணப்படுவது அவசியமாகும். இம்மத்தியஸ்தர் இரு தரப்பினரையும் சாராத மூன்றாம் தரப்பினராக காணப்படுவார். எனவே தான் இவரை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்கின்றோம்.

குடும்பத்தில் பெரியோர்களும், வேலைத்தளங்களில் மேலதிகாரிகளும், கல்வி நிறுவனங்களில் அதிபர்களும், உள்நாட்டு போரின் போது வெளி நாட்டவரும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடு என்னும் போது அது பிரச்சனையானதாக மட்டும் அமையாது சில முரண்பாடுகள் நன்மை விளைவிக்கக்கூடியதாகவும் அமையலாம் (உதாரணமாக தொழிற் சங்கப் புரட்சி, விலைவாசிக் கெதிரான புரட்சி, போன்றவை) எது எவ்வாறாக இருந்தாலும் முரண்பாடு ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் அதனை நாம் தீர்க்க வேண்டும். இதனை விளக்கும் வகையில் நர்மதா வெளியீடுகளில் சிறப்பான வசனங்களைக் காணமுடியும். உதாரணமாக:-

* ஒருவருக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ எல்லாவற்றையும் எல்லோரிடமும் கதைத்துக் கொண்டிருக்க வேண்டாம்.
* நானே பெரியவர் என்ற என்ற எண்ணம் கூடாது
* எதையும் விட்டுக் கொடுங்கள் போன்ற வாக்கியங்கள் படிப்போரின் மனதைக் கவருகின்றது.

முரண்பாடு ஒன்று ஏற்படுவதன் பின்னர் எதாவது நன்மை உண்டா என சிந்தித்து பார்த்தால் எதுவித நன்மையும் இல்லை ஆனால், மன கசப்புக்களே எஞ்சியிருக்கும்.

முரண்பாடு ஏற்பட்ட பின்னர் சம்பந்தப்பட்டவர்களிடையில் கடந்தகாலங்களில் ஏற்பட்ட இனிய நிகழ்வுகள் அனைத்தும் ஒரு கணப் பொழுதில் மறைந்து போகின்றன. இந்த ஒரு நிமிடத்திற்காகவா நாம் உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றோம் பல காலம் கட்டிக்காத்த பாச உணர்வுகள் பரிதாபமாக ஒரு சில நொடிகளில் நொடிந்து போவதா? ***"வாழ்க்கை வாழ்வதற்கே"*** வாழும் ஒவ்வொரு நொடிகளையும் மன நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ முயற்சிப்பவனே மனிதன். நாம் மனிதனாக வாழ்வோம்.



**செல்வி. நாகலிங்கம் தாட்சாயினி,**
ஆசிரியை,
மட்/பட்டிருப்பு ம.ம.வி,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப் பற்றி நாம் என்ன எண்ணம் கொண்டிருக்கின்றோம் என்பதைப் பொறுத்துத்தான் நமது சந்தோசமும் சாதனையும் அமைகின்றது. இதனையே தன்னம்பிக்கை என்போம். தன்னால் முடியும் என்று எண்ணுபவனின் எதிர்காலம் ஒளிமிக்கதாய் அமையும். நான் நல்லவன், கெட்டிக்காரன், சோம்பேறி அற்றவன், என்னால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று கூறுபவனிடத்தில் தன்னம்பிக்கை இருக்கும்.

இது வாழ்வின் ஜீவத்துடிப்பு. அதன் ஆணிவேர் தன்னம்பிக்கைதான். தன்னம்பிக்கை உள்ளவன் மனித வாழ்க்கையின் கடைசி நிமிடம்வரை போராடுகின்றான். ஒரு மனிதன் தனது வாழ்வில் பல்வேறு வழிகளில் வெற்றியீட்டுகின்றான். என்றால் அதற்குக் காரணம் அவன் தன்மேல் கொண்டுள்ள தன்னம்பிக்கைதான். தன்னம்பிக்கை உள்ளிருந்து புறப்படும் ஒரு சக்தி. அது உள்ளவர்களை அவர்களின் பேச்சின் மூலமும் செயலின் மூலமும் நடையுடை பாவனைகள் மூலமும் உடனே அறிந்து கொள்ளலாம்.

# வளமான வாழ்விற்கு தன்னம்பிக்கை ஓர் வழிகாட்டி.....



தன்னம்பிக்கை உடையவனிடத்தில் சிறந்த எண்ணத்திறனும், துணிவும் ஏற்படுகின்றன. அவன் எந்தச் செயலையும் சூழ்நிலையையும் கண்டு அஞ்சாமல் துணிவுடன் செயல் புரிவதன் மூலம் வெற்றியடைந்து மேன்மை பெறுகின்றான். வாழ்வில் உயர்நிலையை அடைய வேண்டும் என்பதே அவனது திடமான குறிக்கோளாகும். தன்னம்பிக்கை உடையவனுக்கு அவை கனவுகள் அல்ல. ஏனெனில் அவனது துணிவும், எண்ணத்திறமையும் அவற்றை நினைவாக்கி நிகழவைக்கின்றன. இவனது தொடர்ந்த சிந்தனை அவனது குறிக்கோளை அவனது ஆழ்மனதில் உணர்வலைகளாகப் பதிந்து விடுகின்றது. அவனது நினைவற்ற மனதில் பதிந்துள்ள அலைகள் அவனது எண்ணத்திறமையை வளர்த்து தன் குறிக்கோளை அடையத் தேவையான வழிமுறைகளை உணர்த்துகின்றன.

தன்னம்பிக்கை உருவாவதற்கான காரணிகளைக் குறிப்பிடும் போது ஒரு குழந்தை தாயின் கருவில் உருவாகும் போது தாயானவள் போதியளவு பாதுகாப்பு, அரவணைப்பு வழங்கும் போது அது வெளியுலகில் வந்து பல இடர்பாடுகளையும் சூழ்நிலைகளையும் சந்திக்கும் போது தந்தையும், தாயும் தைரியமூட்ட அல்லது ஊக்கமூட்ட குழந்தை நிஜமான தன்னம்பிக்கையில் வளரும். அவை எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் தட்டிக் கொடுங்கள். தைரியம் கொடுங்கள் குழந்தை தானாகவே தன்னம்பிக்கையில் வளர்ச்சி பெறும்.

ஒரு மனிதன் முழுமையாக தன்னம்பிக்கையில் வளர்ச்சிபெற அவனின் கல்வியமைப்பு, மதச்சார்புள்ள வளர்ப்பு முறை, பால் உணர்வு, அறிவும் செயலும் போன்றவையே ஏராளமான காரணங்களாகும். சிறு குழந்தையாயிருக்கும் போது குழந்தை செய்யக்கூடிய பல எளிதான காரியங்களை அவனைச் செய்ய பயிற்சி கொடுத்தால் குழந்தைக்கு நம்மால் முடியும் என்ற பெருமிதமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். சிறிது வளர்ந்தவுடன் 14 - 16 வயதில் சற்று சிரமமான பயிற்சிகளை, சோதனைகளை கொடுத்தால், மாணவன் இவ்வுலகில் பல தோல்விகளும் வெற்றிக்குப் படிகளே என்ற உணர்வை இ உலக இயல்பை, தோல்விகளை சமாளிக்கும் மனோபாவத்தைப் பெறுவான்



P .லோசிதரன்,
ஆசிரியர்,
மட் /பட்டிருப்பு ம.ம.வி, தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் கூடைப்பாடத்தொகுதியில் தொழிநுட்பகூடையில் இருந்து மனைப் பொருளியல் பாடத்தை தெரிவு செய்து கற்கின்றனர். முன்னர் 6ம் வகுப்புமுதல் 10 வகுப்புவரை கற்பிக்கப்பட்ட இப்பாடம் தற்போத தரம் 10, 11ல் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது. இப்பாடத்தை கற்கும் மாணவர்கள் 99% ஆனோர் மாணவிகளே. அதே போன்று இப்பாடத்தை கற்பிப்பவர்களும் பெண் ஆசிரியர்களே.

விலையில் கூடிய போசணைச்சத்துள்ள உணவுகளை வாங்கி சுவையான உணவைத் தயாரித்து திருபதியான முறையில் பரிமாறி குடும்பத்தை மகிழ்ச்சிகரமாக நடாத்தலாம்.

ஆள்பாதி, ஆடைபாதி என்பர். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துடன் வாழ்வதற்கும் மானத்தைக் காப்பதற்கும் உடைகள் அவசியம்.

# மனைப்பொருளியல் பாடம் வாழ்க்கைக்கான கருவியே

மனிதனின் அடிப்படைத்தேவைகள் மூன்று இவையாவன உணவு, உடை, உறையுள் இந்த அடிப்படைத் தேவைகளை மையமாகக் கொண்டே இப்பாடம் அமைந்துள்ளது. மனைப் பொருளியல் பாடம் நான்கு பெரும் பாடப்பரப்புக்களை உள்ளடக்கியுள்ளது. அதாவது உணவும்போசணையும், புடைவையும் உடையமைத்தலும், மனை நிருவாகம், குழந்தை விருத்தி எனும் நான்கு பாடப்பரப்புக்கள் அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒன்றன் பின் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. ஓர் இல்லத்தரசிக்கு நான்கு விடையங்களும் மிக இன்றிய மையாததாகும்.

மனிதன் உணவின்றி உயிர் வாழ முடியாது. உணவும் போசணையும் எனும் பாடப்பரப்பில் உணவு என்றால் என்ன? உணவில் காணப்படும் போசணைச் சத்துக் களின் தொழிற்பாடுகள் போசணைச் சத்துக்கள் அழிவடையாமல் சமைக்கும் முறைகள், உணவு பரிமாறல், சமிபாடு, அகத்துறிஞ்சல், போன்ற பல விடையங்கள் மிக ஆழமாக கற்பிக்கப்டுகின்றது. இவற்றைக் கற்பதனால் ஓர் இல்லத்தரசி தான் பெற்ற அறிவினால் குறைந்த

இரண்டாவது பாடப்பரப்பாகிய புடவையும் உடை அமைத்தலும் எனும் பாடப்பரப்பில் புடவைகளின் தன்மைகள், நெசவு, நேர்த்தி, காலநிலைக்கும் வைபவங் களுக்கும் பொருத்தமான உடைகள், தையல் முறைகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஓர் இல்லத்தரசி இவ்விடயங்களைக் கற்று அறிந்திருந்தால் உடைத்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

குடும்பமானது தனது தேவைகளை பூர்த்திசெய்து கொண்டு மகிழ்ச்சிகரமாக வாழும் இடம் மனை. தமிழ் மொழியில் இல்லம் மனை என்பனவற்றிற்கு ஒரே கருத்து. ஆனால் மனைப்பொருளியல் பாடத்தில் இரண்டிற்குமே கருத்து வேறுபாடு உண்டு. இல்லாதது வெற்றுக் கட்டிடம். ஆனால் மனைகுடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக சந்தோசமாக வாழும் இடம். இவ்வாறான மனையை நேரம், சக்தி, பணம் என்பன மீதப்படுத்தப்படும் வகையில் திட்டமிட்டு அமைத்தல், இயற்கையான காற்றோட்டத்தினையும் வெளிச்சத்தையும் பெற்றுக் கொள்ளல், ஒரு மனையில் ஆற்றப்படும் கருமங்களுக்கேற்ப ஒழுங் கமைத்தல், அதனை பராமரித்தல், சுத்தம் செய்தல், அழகுபடுத்தல் போன்ற விடயங்கள் மனை நிர்வாகம் எனும் பாடப்பரப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






விளக்கப்பட்டுள்ளது. இவ்வறிவைப் பெற்ற இல்லத்தரசி மனையை மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பாள்.

மனிதனுக்கு மிக மிக அவசியமான ஒன்று சந்ததிவிருத்தி. நான்காவது பாடப் பரப்பில் குழந்தை விருத்தி இறுதியாக இணைக்கப் பட்டுள்ளது. ஆரோக்கியமான ஒரு பெண்ணால் தான் ஓர் ஆரோக்கியமுள்ள குழந்தையை பிரசவிக்க முடியும். இக்கூற்றுக் கிணங்க பெண்ணானவள் ஆரோக்கியமாக வாழவேண்டும். பெண் பூப்படைதல் முதல் கருவுற்று ஒரு குழந்தையைப் பிரசவித்து அதனை முறையாக வளர்த்தெடுப்பது வரை மிக விளக்கமாக கற்பிக்கப்படுகின்றது. குழந்தை வளர்ப்பு என்பது பெண்களுக்கே உரித்தான விடயம். இனப்பெருக்கத் தொகுதி, பூப்படைதல், கருக்கட்டல், கர்ப்பிணியைப் பராமரித்தல், பிரசவம், குழந்தை வளர்ப்பு போன்ற விடயங்கள் பெண்களுக்கு மிக அவசியமானவை. நாட்டிற்கும் வீட்டிற்கும் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்று வளர்த்துக் கொடுப்பவள் அன்னையே.

தொழில்நுட்ப பாடமாகிய இம்மனைப் பொருளியல் பாடத்தினூடாக தொழில்நுட்ப அறிவைப் பெற்று குடும்பத்துக்குத் தேவையான பொருளாதாரத்தையும் ஈட்டிக்கொள்ளலாம். பெண்கள் தங்கள் ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் அதாவது சிற்றுண்டிகள் செய்து விற்றல், ஆடைகள் தைத்து விற்றல் இல்லத்துணையணிகள் தைத்து விற்றல் போன்ற சிறு தொழில்கள் மூலம் வருமான த்தையும் பெறலாம்.

கல்வியின் நோக்கம் வாழ்க்கைக்கு உதவுதல். நாங்கள் பெற்ற கல்வியானது வாழ்க்கைக்கு உதவக்கூடிய, இவ்வாறான பல வழிகளிலும் உதவக்கூடிய அறிவைக் மனைப்பொருளியல் பாடம் தருகின்றது. இத்தகைய பெண்களுக்கே உரித்தான வாழ்க்கைக்கான அத்தியாவசியமான பாடத்தை தற்போது மாணவிகள் விரும்பிக் கற்க முன்வருவதில்லை. என்பது வேதனையான விடயம்.


**திருமதி.அ.சற்குணராஜா,**
பிரதி அதிபர்,
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Education for the Future



Education plays an important role in the modern society and it must keep up with trends of globalization. Learn ing from " ***Womb to tomb"*** plays a very significant role in modern times due to changes of socio political eco nomic conditions at present than ever before.

We as global citizens must prepare ourselves to meet challenges of concepts of a knowledge economic. Most people would realize that in today's world of work one has to learn new things to meet increasing demands. There fore all our citizens must be well prepared through the field of education to meet future demands and step into the field of lifelong education " Education for all" and child friendly schools pave the path for a modern educational revolution all over the world

This concept is not new to Sri Lanka, as late Dr. C.W.W Kannagara fore foresaw the future and introduced ***"Education for all"*** by establishing fifty Madhuya Maha vidyalayam (Central college) in fifty electorates at that time, This timely step changed the country's education paving the way for the less previleged to reach new dimensions of a learned society. Most of those educated masses contributed to our economy while enjoying the previlege of social mobility

World history tells is that educational opportunities were offered to only a previleged few in many countries often the girl child and poor were the under previleged. Their contributions to society were limited and were often not recog- nized. There was no difference in our country, but in these modern times anyone can step into the world of education and enjoy previleges offered and contribute with knowledge to the betterment of human kind without any draw backs. The knowledge economy demands that learners and workers contribute to work force not only with hands but with knoweledge as well

Computer literaacy is needed for most to carry out their day to day work and positive thinking plays an important role at any work place. One's education must be an all round and a complete experience to meet such demands. There fore the fa- mous "***jug and mug"*** method of teacher pouring knowledge that is stored and student absorbing such limited knowledge will not be sufficcent for the future. Teacher play the role of facilitators who guide children to ***" Learn to learn"*** to suit modern times.

There fore it is very clear that as global citizens we have a duty to meet demands of the modern world by contributing to the knowledge economy reaping the benefits of educational opportunities




**P. Selladurai,**
*English Teacher and subject - co - ordinator,*
*Bt / Paddiruppu M.M. V, National school,*
*Kaluwanchikudy.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Psychology and the Teacher



The field of phychology has been growing rapidly with serveral new divisions emerging including para psychology, medical psychology, crime Psychology , child psychology and educational psychology . I point out that more than any other branches of psychology, the field of educational psychology has had a main impact in helping and guiding to prepare the children to face the challenges in the international society. Further psychology plays a major role in any sort of teacher Education programme. I hope it manages to enlarge your understanding of the world. Also, psychology is a means of promoting welfare.

The knowledge of psychology helps the teacher in conducting the teaching learning process effective and interesting . It will help the teacher to understand the students and it will also enable him to understand the students for whom he is working and for whom the whole school system is aimd, the school children, Sir John Adams indicated the following accusative in his book. "New Teaching" the master taught John Latin. The earlist teacher laid most of the slres on Latin language, but the modern teacher lays it on john. Now the teacher has to understand both the subject and student, if he wants to make the teaching effective. The essential principle of new education is to teach the child rather than the subject.

Every child is a unique individual. This is his/ her individuality. No two persons are exactly alike, because there is individual difference. Children differ in their level of intelligence, thoughts, sentiments, effitudes, beliefs abilities, potentialities and propensites. There are gifted, backward and handicapped childern in the classroom. Teacher should not treat all the children in the same manner. He should observe the children and understand them in a more objective manner. That is to say the teacher should be able to study the children scientifically. As a result of this psychologyical knowledge, the teacher will feel in himself greater power over the children to mould and shape the students. Further it will help the teacher to understand himself and accordingly adjust to the particular situation.

Futher, the teacher should know how children learn, grow and develop. It is the main duty of the teacher to know and understand the process of learning, growth and development and to assist children under his care to grow develop and learn better. So, psychological knowledge helps the teacher to adjust and conduct his teaching according to the children's level of intelligence, potentialites and maturity. learning and teaching must go side by side or hand in hand Whenever it is necessary, the teacher may adapt and change his teaching strategy.

Teacher should be ready to use various methods of teaching in the course of his teaching. Psychology can measure the effectiveness of different methods of teaching



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


on his children and decide what is useful what is not important. The knowledge of educational psychology will provide the teacher power over learners and control over his menthods of teaching their learning activities and their growth and development. New approaches and techniqnes of teaching should be used in the modern classrooms in order to make the teaching more effective and more efficient.

Also, the knowledge of psychology provides scientific attitude to the teachers. This knowledge helps the teacher to make more scientific in his educational practices. The teacher is not only a giver of knowledge, but also he should develop proper attitudes, values and skills in children. Furthermore, the knowledge of educational psychology helps the teacher to understand the different stages of development namely infancy, childhood and adolescence. Teacher should know their each stage has its own characteristics According to the characteristics of each stage teachers should mould and shape the behaviours of the children Further, the knowledge of psychology helps the teacher in his own mental development This knowledge helps him to understand himself and to realize his stren gth and weaknesses. The teacher can understand who he is and what is his strength and what is his weakness. That is to say, psychology describes how the mind learns. It is for the teacher to help minds to learn. Also the teacher can deal with childern's psychological problems in a proper way and he can maintain very good relationship with them. Futher, generally the nervous system controls human behaviour. so it is very important for a teacher to study the nervous systemand hinges upon the function of the brain and nervous system.

Moreover, dow a days the teacher has to take so many roles and responsibilities. Teacher must be a researcher in the modern world. He must involve in research work. so the knowledge of educational psychology helps the teacher tounderstand the significance of research and to develop tools for the measurement of variables.

The use of teaching aids such as audio visual aids holds the interests and attention of the student learning becomes more lasting by using teaching aids in teaching and also it makes the difficult concepts more clear. So the tercher who used teaching aids his moreover the knowledge of psychology helps the teacher to provide good counselling and to guide the children to go on the correct path. Children should be provided various types of guidance and counselling. The knowledge of psychology helps the teacher to render a very good service to the children who are backward in studies. So the knowledge of psychology helps the teacher in many ways. without the knowledge of educational psychology he teacher can't enter into the classroom. so the modern teacher must have the knowledge of educational psychology to be a young and dynamic teacher to face the challenges in the international society. If you want to be a smart and efficient teacher you must prepare youself to face the challenges in the place where you work.

**_E. Manoharan,_**
_M.Ed, M.sc in education (U.K),_
_Lecturer,_
_College of education,_
_Batticaloa._





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இன்று வளர்ச்சிப் பாதையிலே வீறு நடைபோடுகின்றது. காலமும் இடமும் மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருக்கின்றன. விண்ணிலும் மண்ணிலும் பேராழியிலும் அவ்வவற்றுக்குரிய வாகனங்களிலும் மனிதன் விரைகின்றான். உரிய இடத்தில் உரிய காலத்தில் உடல் நலுங்காது சென்றடைகிறான். விண்ணையும் கடந்து வேற்றுக்கிரகங்களிலும் கால்பதித்து அங்கெல்லாம் வாழ முடியுமோ என்று அவனது ஆராய்ச்சி நீண்டுகொண்டிருக்கிறது. இத்தகைய முன்னேற்றங்களால் உலகம் சிறுக்க மக்கள் ஒன்றுபடுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணியாக அமைவது விஞ்ஞான வளர்ச்சியாகும்.




இவ்விஞ்ஞான வளர்ச்சியினால் தகவல்புரட்சி ஏற்பட்டு இன்று உலகம் ஒரு பூகோள கிராமமாக உருமாற்றம் அடைந்துள்ளது. ஆரம்ப காலத்தில்தகவல்களை மனிதன் கடிதம், பத்திரிகைகள் , வானொலி தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற சாதனங்களி னூடாக பெற்றுக் கொண்டான் இன்று அதனுடன் இணைந்ததாக கணனி எனும் சாதனத்தினூடாக இன்ரனெற் (இணையம்) மூலம் தகவல்களை மிக விரைவாக பெற்று அறிவு வளர்கின்றது. மேலும் பரந்த மனப்பான்மை சுடர்விடுகின்றது யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று மனிதன் சகோதரமனப் பான்மையுடன் எல்லோ ரையும் அரவணைத்து அன்போடு வாழப்பழகிக் கொண்டான். இந்த நூற்றாண்டின் பயன்பாட்டுக்கு வந்த கணனியும் இணையமும் மனித சமுதாயத்தின் சிந்தனைப் போக்கினை மாற்றி அமைத்தன என்றால் மிகையாகாது கம்பியூட்டருக்குப் பின்னர், காலம் மனிதன் நினைத்தபடி ஓடத் தொடங்கியது உலக உருண்டை அவன் கரங்களுக்குள் இருந்து உருளத்தொடங்கியது.உலகின் எந்த முலையையும் அவனால் பார்க்க முடிந்தது எந்த முகவரிக்கும் அடையாளம் காட்ட முடிந்தது.

இன்று பாடசாலைகளில் பெரும் கனவுடன் கணனிக்கல்வியை வழங்குவதற்காக அரசாங்கம் கணனி ஆய்வுகூடங்களை நிறுவி மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றது. எமது நாட்டினுள்ள 1C பாடசாலைகள் முழுவதும் கணணி ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் கணனி பயிற்சி மையங்கள் தனியார் துறையுடன் இணைந்து வயதுவந்தவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றன. அத்துடன் ஓரளவு வசதி படைத்தவர்கள் தங்கள் வீட்டுகளில் கணணியினை கொள்வனவு செய்து பயன்படுத்ததி வருகின்றனர். இதன்காரணமாக 2006ம் ஆண்டில் கணணிக் கல்வி அறிவு வீதம் 6% ஆகும். ஆனால் இன்று 30% வளர்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் எமது நாட்டில் தொலைத் தொடர்புத் துறையும் வளர்ச்சியடைந்ததன் காரணமாக தகவல் தொழிநுட்பம் சிறந்து விளங்குகிறது தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி சிறுவர்களையும் ஆட்கொண்டுள்ளதை அவதானிக்கலாம் கணனி ஊடாக இணையப்பாவனை வயது வநதவர்களை விட பாடசாலை செல்லும் சிறுவர்களிடையே அதிகரித்துள்ளதை ஆய்வுகள் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது. இணையத்தின் மூலம் உலக நடப்புகள் வர்த்தகம், விளம்பரம், கல்வி, கலாசாரம் சுகாதாரம், விளையாட்டு, சமையல், சிகையலங்காரம், உடையலங்காரம் திருமணச்சேவை என மனித வாழ்கையோடு ஒன்றி இருக்கின்ற விடங்களை அறிந்து கொள்ளலாம். அத்தோடு செய்தி, தகவல் மற்றும் கடிதப்பரிமாற்றங்களுக்காக மின்னஞ்சல் பாவனையும் இடம்பெறுகின்றது. மேலும் மாணவர்களுக்குத் தேவையான விடயங்களை தேடுபொறிகள் மூலம் ***(Searchengihe) google, yahoo, Msn அத்தோடு Wikipeda*** போன்ற இணையத்தளங்களுக்குள் இருந்து ஏராளமாக கல்வி, அறிவு சம்பந்தமான விடயங்களைத் தேடிப்பெற்றுக் கொள்ளலாம் மேலும் முன்னொரு காலத்தில் நூலகம் நோக்கி படையெடுத்த மாணவர்கள் இளைஞர்கள், துறைசார்ந்தோர் இன்று இணையத்தை நாடுகின்றனர். மாணவர்கள் வளர்ந்தோர் மத்தியில் பத்திரிகை மற்றும் சஞ்சிகை வாசிக்கும் பழக்கமும் கடிதத் தொடர்பு மேற்கொள்ளும் பழக்கமும் பெரிதும் குறைந்து வருவதற்கான காரணங்களில் இணைய உபயோக வளர்ச்சியும் ஒரு காரணம் என அறியப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இணையப் பாவனை என்பது இன்று தவிர்க்க முடியாத ஒன்றாக்கி விட்டது. கால ஓட்டத்திற்கேற்ப மனிதனின் நடத்தைகளும் மாறியாக வேண்டும். எவ்வளவு விரைவாக கருமங்களை செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக செய்து முடிக்க ஒவ்வொரு மனிதனும் முயல்கின்றான். அதற்கான வழியைத் தேடுகின்றான். இதனைத் தவறு என்று கூற முடியாது தான் ஆனால் அத் தேடல்கள் தவறானவற்றின் பால் செல்லும் போதுதான் வாழ்கைப் பாதையில் தவறுகள் ஏற்படுகின்றன.

தம்மை வாழ வைக்கக்கூடிய விடங்களை இணையத்தின் மூலம் தேடிப்பெற்றுக் பெற்றுக்கொள்ளும் சமூகத்தின் மத்தியில் வாழ்க்கையின் நேரான பாதையிருந்து விலகிச் சீரற்ற பாதைக்குச் செல்லக்கூடிய விடங்களை இணையத்தளங்கள் மூலம் தேடிப்பெற்றுக்கொள்ளும் ஒரு இளைய சமுதாயம் (சிறுவர்கள்) உருவாகிவருவதை அவதானிக்கலாம். நகரப்புறங்களில் பல மாணவர்களும் இளைஞர்களும் இத்தகைய அசிங்கமான இணையத் தளங்களை பார்வையிடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று எமது நாட்டில் இவ்வாறான இணையத்தளங்களை பார்வையிடுவதற்காக மூடிய அறைகளைக் கொண்ட இன்ரநெற்கபே என அழைக்கப்படும் நிலையங்கள் காணப்படுகின்றன.

மேலும் இணையத்தளங்கள் மூலம் அறிவைத்தேடிப் பெற்றுக் கொள்வதற்காக வீடுகளில் பெற்றோர்களால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் இவ் வாய்ப்புக்களை பிரயோசனமற்ற இணையத்தளங்களை பூட்டிய அறைக்குள் புத்தகங்களை படிப்பது போன்று பாசங்குசெய்து அவற்றில் மூழ்கி நேரத்திதையும், பணத்தையும் வீணாக்குவது இன்றைய சமுதாயத்தில் பாரிய பிரச்சினையாக உருப்பெற்று வருகின்றது. வழி தவறச் செய்யும் இணையத்தளங்களை பார்த்து ரசித்து அவற்றை வாழ்கையில் நடைமுறைப்படுத்த முற்படும் ஒரு சிலரினால் சமூக கலாசாரச் சீரழிவுகள் ஏற்படும் அபாயம் அன்றாடம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இணையத்தில் எத்தனையோ நல்ல விடையங்கள் வலம் வருகின்றது அதாவது மின்னஞ்சல் மூலம் தகவல்களை அனுப்புதல் ***Wicki pedia*** எனும் இணையத்தளத்தின் மூலம் எமக்குத் தேவையான சகல விடயங்களையும் பெறுதல் இத்தளம் ***Encylo peadia*** (கலைக்களஞ்சியம்) என அழைக்கப்படுகின்றது. ***wepapers.com*** எனும் இணையத்தளத்தில் எமக்குத் தேவையான விடங்களைப் பெற்றுக் கொள்ளல், ***Google*** இணையத்தளத்திலும் ***gmail, Google earth, google Album, Google Apps*** போன்ற அம்சங்களும் ***Skype*** என்னும் இணையத்தளத்தின் மூலம் தொலைபேசி அழைப்புக்களையும், முகம்பார்த்துக் கதைக்கும் அம்சங்களையும் வழங்கியுள்ளது அத்துடன் ***Face Book.cm*** எனும் இணையத்திளத்தில் நண்பர்களை உருவாக்கும் அம்சங்களும் காணப்படுகின்றது.

அதுமாத்திரமல்ல பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்? எங்கே போகிறார்கள் என்பதில் அக்கறை எடுப்பது என்பது இன்றைய காலத்தின் தேவைமட்டுமல்ல பிள்ளைகள் தவறான வழியில் செல்வதை தடுப்பதற்கும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விலகிக் கொள்வதற்கும் உதவியாக அமையும் இலங்கையில் நகர்ப்புறங்களில் பல பிள்ளைகள் சனி, ஞாயிறு தினங்களில் டியூசன் வகுப்புக்கள் முடிந்ததுமே இன்ரநெற் கபேகளுக்குச் சென்று அங்கே தமது பொழுதைக் கழிக்கின்றார்கள் அதிலும் விசேடமாக பெண்பிள்ளைகள் இதில் வேகமாக இருக்கிறார்கள் உரிய நேரத்திற்குத் தங்களது வீடுகளுக்குச் செல்லாது நேரம் தாழ்த்தி வீடுகளுக்குச் செல்லும் போது பாதைகளில் வேண்டப்படாத பிரச்சினைகளுக்குள் இவர்களில் பலர் அகப்பட்டுக்கொள்கிறார்கள். ஏனெனில் நகர்ப்புறங்களில் தற்போது காமத்தோடு பகலென்றும் இரவென்றும் பாரமல் ஒரு கூட்டம் அலைந்து திரிகின்றது. இத்தகையவர்களால் பலபெண்பிள்ளைகள் சீரழிக்கப்படுவதை நாம் அவதானித்துள்ளோம்.

இது மாத்திரமன்றி பணம் படைத்த மற்றும் நடுத்தரவர்க்கப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியின் உயர்ச்சிக்காக வீட்டில் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் கணனி மற்றும் இணையத்தள வசதிகளும் இன்றைய சில பிள்ளைகளை மாற்று வழியில் செல்ல வைத்துள்ளது. பாடசாலைப் புத்தகங்களைப் படிப்பதிலிருந்தும், பரீட்சைகளுக்குத் தயார்படுத்துவதிலிருந்தும் பலரை இந்த இணையப்பாவனை தடுத்து வருவதாக அறியக்கிடைக்கிறது. வீடுகளில் இத்தகைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பிழையென்று கூறமுடியாது. ஆனால் அவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் விதமே சிறுவர்களை பிழையானவற்றின் பக்கம் செல்லச் செய்கிறது அவர்களின் வாழ்கையைப் பாழடைச் செய்கிறது. ஒரு சில மாணவர்கள் பொய்க் காரணங்களைக் கூறிப் பாடசாலைக்குச் செல்லாமல் வீடுகளிலிருந்து இன்ரநெற்ரைப் பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இன்ரநெற் ***Clhf Chat line*** மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் ஆபத்துக்கள் ஏற்படலாம் அதாவது முகம் தெரியாத புதிய நண்பர்கள் உங்கள் குழந்தைகளுக்கு அறிமுகமாகலாம். இவ்வாறான பெரும்பாலான நண்பர்கள் நல்லவர்களாகவும் உண்மையான நட்பைப் பேணுபவராகவும் இருப்பார்கள். ஆனால் இந்த நட்பை தீய நோக்கங்களுக்காக பயன்படுத்தும் இன்ரநெற் இரைகொல்லிகள் நிறையப்பேர் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் இந்த நட்பானது முகம் தெரியாமல் வார்த்தைகளின் நம்பிக்கைகளிலேயே ஆரம்பிக்கின்றது. நாளடைவில் நட்பு மேலும் இறுகி இவர்கள் நேரில் சந்திக்க முயற்சிக்கக் கூடும் இவ்வாறு இரைகொல்லிகளின் ***(Cyberbare predation)*** பிடியில் அகப்படும் குழந்தைகள் பெரும்பாலும் பாலியல் வதைகளுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் குழந்தைகளை நிர்வாணப் படங்கள் எடுத்தல், குழந்தைகளுடன் பாலியல் தொடர்பு வைக்கும் காட்சிகளைப் படமாக்கியும் பணம் சம்பாதிக்கும் குழுக்களும் நிறையவே உள்ளன. பெரும்பாரும் 12-16 வயது வரையிலான பெண்பிள்ளைகள் இவ்வாறான வதைகளுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான குற்றங்கள் இப்போது எல்லா நாடுகளிலும் அதிகமாகி வருகின்றது.

அத்துடன் குழந்தைகள் ***Chat line e-mail*** மூலமாக பாலியல் அல்லது வேறு பொதுவான மனரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகலாம். மேலும் சிறுவர்கள் சட்டவிரோதமாக ஏதாவது ஒன்றைச் செய்யத் துண்டப்படலாம் அதாவது குழந்தைகள் மூலமாக குடும்ப அங்கத்தவர்களுடைய ***Credit card*** மற்றும் ***Bank A/C*** பற்றிய தகவல்களை வேறுநபர்கள் பெற முயலலாம். இதன் மூலம் பிரச்சினைகள் ஏற்பட வழிவகுக்கின்றது.

அத்துடன் சிறுவர்கள் நீண்ட நேரம் கணனிமுன் அமர்ந்திருப்பது, இணையத்தளங்களைப் பார்வையிடுவதனால் பணவிரயம் அத்துடன் கண்ணில் நோய் மூளையில் தாக்கங்கள் சரியான நித்திரையின்மையால் கல்வியில் கவனம் செலுத்த முடியாமை போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது.

இன்றைய தகவல் தொழில்நுட்ப புரட்சியில் இணையம் ***(Enternet)*** என்பது மிகமுக்கியமான சாதனமாக உலகநாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் பெரும் செலவில் இணைய வழிச் சேவைகளை வழங்கி வருகின்றது. இன்று எமது நாட்டில் ***Broad Band*** என்று அழைக்கப்படும் "அகன்றபட்டை" இணைய வழி அமைப்பினை எல்லாத் தொலைபேசி நிறுவனங்களும் தங்கள் வாடிக்கையாளருக்கு வழங்கிவருகின்றது இதில் நிரந்தர இணைப்பையுடைய தொலைபேசிகளுக்கும், கம்பியில்லாத் தொலை பேசிகளுக்கும் இச் சேவையினை வழங்குகின்றது அதுமாத்திரமல்ல ***Pendrive*** மூலமான டொங்கில் என அழைக்கப்படும் ***Brood Kand*** சேவையினை ***dialog GSM, Airtel, Mobitel Lanka Bel*** போன்ற நிறுவனங்கள் வாடிக்கையாளருக்கு மிக விரைவான இணைய வழிச்சேவையினை வழங்கி வருகிறதுது. இதன் மூலம் நாங்கள் செல்லும் இடமெங்கும் இதனை மேலும் உக நாடுகளிடையே இணையத்தனை அத்தியாவசிய சேவையாக பல நாடுகள் அங்கீகரித்துள்ளன. உதாரணமாக பின்லாந்து நாடு ***Brad Band*** இன்ரனெற் இணையப்பினை அடிப்படை உரிமையாக்கி பின்லாந்து மக்கள் அனைவரும் மிக வேகமான இணைய இணைப்பினை பெறுவதற்கு வழிவகுத்துள்ளது. எனவே இதிலிருந்து இணையத்தின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.


மேலும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் இணையத்தின் முக்கித்துவத்தைப் போல தொலைபேசிகளின் அதாவது செல்போன் என அழைக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகளின் வளர்ச்சி இன்று உலகம் வியக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கண்ணிமைக்கும் நேரத்தில் கடல்கடந்து பறக்கும் குரல் ஒலிகளின் ஒப்புயர்வற்ற செயற்பாடுகளுக்கு செல்பேசிகள் முக்கிய பங்காற்றுகின்றன. காடுகள், மேடுகள் எல்லாம் உழைத்துக் களைத்துப் போன ஏழைமக்கள் வாழும் குடிசைப்பகுதிகளின் சந்து பொந்துகளில் எல்லாம் சந்தடியில்லாமல் நுழைந்து சாகசம் படைத்து அவர்தம் வாழ்கைத் தொடர்பை வலுவாக்கி வருவது செல்போன்களாகும். செல்போன்களின் சேவைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு செல்கின்றது. 2005ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உலகில் இதனைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 126 கோடியாகும். இன்று எமது நாட்டின் சனத்தொகை இரண்டு கோடியாகும். இதில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஆகக்குறைந்தது இரண்டு கையடக்கக் தொலைபேசிகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி எமது நாட்டில் 20 இலட்சம் தொலைபேசிகள் சேவையில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசியை அதிகளவில் பயன்படுத்துவது சிறுவர்களாகும். அதாவது பாடசாலை செல்லும் 11 - 18 வயது வரையிலான ஆண், பெண் பிள்ளைகளாகும். இவ்வாறு அதிகநேரம் செல்போன் பாவிப்பதனால் உடல் ஆலோக்கியம் பாதிக்கின்றது என்பதனை சமீபத்திய அறிவியல் அய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. பெரியவர்களை விட குழந்தைகளை 3.3 மடங்கு செல்போனில் இருந்து வெளிவிடப்படும் கதிர்வீச்சுக்கள் அதிகமாகப்பாதிக்கின்றன. சிறுவர்களின் மண்டை ஒடுகள் மிகவும் மெல்லிய தன்மையுடையதாக இருப்பதால் அவை ஆபத்தான கதிர்வீச்சுக்களினால் எளிதாக பாதிக்கப்படுவதனால் 30 முதல் 40 வயதிற்கு மேற்பட்டோரில் பெரும்பாலானோருக்கு மூளைக் கட்டிகள் வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் செல்பேசிகளின் தீய விளைவுகள்பற்றி ஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ராப்பா போர்ட் மருந்துவ அறிஞர்கள் அமைப்பு செல்போன்களை அதிகநேரம் பாவிப்பதால் கண்ணில் கற்றக் எனப்படும் நோய் உருவாவதாகக் கண்டுபிடித்துள்ளனர். மேலும் நீண்ட காலமாக செல்போன் பாவிப்பவர்களுக்கு ஆண்மைக் குறைபாடு, காக்கை வலிப்பு, மூளைப் புற்றுநோய் போன்ற நோய்களின் தாக்கத்திற்கு உட்படுவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இன்று செல்போன்களிலும் இணையத்தினை பார்வையிடக்கூடிய வசதிகள் அளிக்கப்பட்டதன் காரணத்தினால் சிறுவர்கள் செல்போன் மூலம் ஆபாசப படங்களை பார்வையிடுவதாக கூறப்படுகின்றது இதனால் பல சமூகச் சீர்கேடுகள் உருவாகி வருவதை அவதானிக்கலாம்.. மேலும் செல்போனில் கமரா வசதிகளும் காணப்படுவதால் வயது வந்த பெண்பிள்ளைகளுக்கு ஆசைவார்த்ததை காட்டி அவர்களைக் கொண்டு ஆபாசப்படங்களைப் பிடித்து ***MMS*** ஊடாக அப்படங்களை வேறு நபர்களுக்கு அனுப்பி பெருந்தொகைப் பணத்தினை சம்பாதிப்பதாகக் கூறப்படுகின்றது.

எனவே இன்று தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் இணையத்தினதும் செலுலர் தொலைபேசி தொழில் நுட்பத்தின் வளர்ச்சியும் உலக நாடுகளிடையேயுள்ள தொடர்புகள் மிக இறுக்கமாக வலுவடைந்துவரும் இவ்வேளையில் சிறுவர்களின் கல்வி வளர்ச்சியிலும் வாழ்கையிலும் பெரும் பங்காற்றுகின்றன. என்பதை உணரக்கூடியதாக உள்ளது. சிறுவர்களைப் பொறுத்த வரையில் பெற்றாரின் அல்லது பாதுகாவர்களின் அரவணைப்பில் வாழ்பவர்கள் இவர்கள் நெறிபிறழ்வான நடவடிக்கையில் ஈடுபடுதல் என்பது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கண்காணிப்பு குறைந்து செல்கின்றது என்பதை குறிக்கின்றது எனவே தகவல் தொழில் நுட்பத்தின் நல்ல விடங்களை பெற்றுக்கொள்வதற்கும் தீயவிடயங்களைத் தவிர்ப்பதற்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் சிறுவர்களுக்கு உறுதுணையாக இருப்பதன் மூலம் சிறந்ததொரு கல்விச் சமூகத்தை நாம் கட்டியெழுப்பலாம்.



**செல்வன்.திவ்வியராஜ் சயந்தன்,**
தரம் 12 விஞ்ஞானம் (2014),
மட்/பட்டிருப்பு ம.ம. வி ,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.

**"கோட்டை கட்டியவனை விட குளம் வெட்டியவன் உயர்ந்தவன்**
**கோட்டை ஒருவனுக்குத்தான் சொந்தம்**
**குளம் அனைவருக்கும் சொந்தம்"**


- சத்யசாய்பாபா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோளத்தில் மக்களை உறிஞ்சிக் கொல்லும் காரணிகளில் உயிர்க்கொல்லி நோய்களும் இன்று முக்கிய இடம் வகிக்கின்றன. எயிட்ஸ், பிளேக், மலேரியா, புற்றுநோய் என்ற வரிசையில் இன்று இரத்தம் குடிக்கும் ஒரு பயங்கர நோய் இரத்தப் போக்குடன் கூடிய டெங்கு. இது 1956களில் பிலிப்பைன்ஸ்சில் முதன் முதலில் அடையாளப்படுத்தப்பட்டு விட்டாலும் எம் நாட்டில் 1967ல் முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

# பரவும் உயிர்க்கொல்லி



இது ஒரு வகை வைரசினால் உருவாகும் தொற்றுநோய் ஆகும். டெங்கு என்பது எலும்பு முறிதல் என அர்த்தம் ஏற்கும் ஒரு ஆபிரிக்கச் சொல் ஆகும். ஆனாலும் இந்நோய் எலும்புகளை முறிப்பதில்லை. மாறாக நோயுற்றோரின் உடலில் உணரப்படும் வலியின் கொடூரத்தையே இது பிரதிபலிக்கின்றது. இந்நோயினால் பாதிக்கப்படுவோர் 1 தொடக்கம் 12 வயதிற்குட்பட்டவரே அதிகமாகும். இந் நோயினை ***Flavi viruses*** வகையான வைரசுக்களே தோற்றுவிக்கின்றன. இந்த வைரஸ் வகையானது நான்கு வகைப்படும். இவை டெங்கு வைரஸ்,1,2,3,4 என வகைப்படும். இவற்றுள் ஒரு வகை வைரஸ் ஒருவரை தாக்கியபின் சில வாரங்களுக்குள் மீண்டும் அதே வைரஸ் தாக்காது. ஆனால் இவற்றுள் அது தவிர வேறு ஒரு வைரஸ் தாக்க இடமுண்டு. அதாவது முதலில் தாக்கிய வைரசுக்கு எதிராக உடலில் உற்பத்தியான பிறபொருள் எதிரியை வேறு ஒரு வைரஸ் சந்திக்க நேரிடும் போது நோயின் நிலை உக்கிரமடையும். இதுவே இந்நோயில் உள்ள மிகச் சிக்கலான சூழ்நிலை அத்தோடு நோய்க்காரணி ஒரு வைரஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதன் முறை ஒரு வித வைரசு தாக்கினால் சாதாரண டெங்குக் காய்ச்சல் நிலையே ஏற்படும். இதன் போது உயர்வெப்பநிலையுடன் கூடிய காய்ச்சல் கை, கால், மூட்டு பின்புறங்களில் வலி, தலைவலி, வயிற்றுவலி, தோலில் தழும்புகள் அல்லது பருக்கள் போன்ற நோயின் அறிகுறிகளை அவதானிக்கலாம். ஆனால் இரண்டாவது முறை அல்லது அதற்குமேல் ஒரு வைரசின் தாக்கத்திற்கு ஆளானால் நோய் உக்கிரத்தை எட்டும். இது இரத்தப்போக்குடனான டெங்கு ***(Dengue hemorrhagic fever (DHF)*** எனக் குறிப்பிடப்படும்.

* இந்நிலையில் வாந்தி, மலம், சலம் என்பவற்றுடன் குருதி வெளியேறும்.
* கண், மூக்கு, வாய், காது, முரசு என்பவற்றால் குருதிக் கசிவு ஏற்படும்
* தோலின் மேலும் கண்களிலும் சிவப்பு நிறத் தழும்புகள் ***(Red patches)*** தென்படும்.

இவ்வாறான அபாயகரமான அறிகுறிகள் தென்படின் நோயாளி மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்நிலை ஏற்படக் காரணமான வைரசுகள் எப்போதும் கலங்களின் உள்ளேயே வாழும் பழக்கம் உடையவை. இவை குருதியின் வெண் குருதிக் கலங்களை ஊடுருவுவதால் இவற்றின் உற்பத்தித்திறன் ***WBC*** ன் அளவு கூடும் போது ***Hemoglobin*** இன் அளவு கூடும்.

இது குருதி உறைதலில் ஏற்படும் வீரிய தாக்கத்தினாலும் குருதி பயணம் செய்யும் மயிர் குழாய்களினுள்ளும் ***Plesria*** வெளியேறுவதுமே இத்தகைய அறிகுறிகளுக்கு உடந்தையான காரணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கொடிய நோயின் காவி எம் பிரதேசங்களில் கூட வாழும் இரு வகை நுளம்புகளாகும்.

*1. Aedes albopictus*

*2. Aedes aegypti* என்பனவாகும்.

இவை ***Container breeders*** என அழைக்கப்படுகிறது.

காரணம் பாவித்து முடிந்த டின்கள், சிரட்டை, யோக்கட்கோப்பை, குரும்பைகள், மரப்பொந்துகள், பாவனைக்குதவாத டயர்கள் போன்ற கொள்கலன்களில் தங்கும் மழை நீரினுள்ளும், வீட்டிலுள்ள பூச்சாடியிலுள்ள நீரிலும் முட்டையிட்டு பெருகும் என்பதாலேயாகும். இந்நுளம்புகளின் தோற்றம் கறுப்பு நிறமாகக் காணப்படுவதோடு காலிலும் முதுகுப்புறத்திலும் வெண்நிறப் புள்ளி காணப்படும்.

இவ்விரண்டு வகைக்குள் ***DHF*** தோற்றுவிக்கவல்ல வைரசுக்கள் காணக்கூடியது ***Aedes agypti*** இனமே ஆகும். மேலும் ஒரு முக்கிய விடயம் இந் நுளம்பின் பெண்ணினமே மனிதக் குருதியில். இருந்து போசணையை பெற்றுக் கொள்கிறது என்பதும் குறிப்பிட வேண்டியதொன்று. தடுப்புச்சிகிச்சையை நோக்கினால் கீழ்வரும் சுற்றுவட்டம் பூர்த்தியாகாவிடின் இந்நோய் பரவுவதை தடுக்கலாம்




முதலில் காவிகள் பரவும் இடங்களை இல்லாதொழிப்பதே காவிக்கட்டுப்பாட்டின் முக்கிய செயற்பாடு. அடுத்து காவி மனிதனின் தொடுகையை கட்டுப்படுத்தல். இது சற்றுக் கடினமானது. ஏனெனில் இது பகல் வேளைகளில் குத்தும் நுளம்பு என்பதால் நுளம்புவலை, நுளம்புத்திரி எதையும் பயன்படுத்துவது கடினம். மிக முக்கிய சிகிச்சை முறை மனிதனில் வைரசின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தல்.

சாதாரண டெங்கு நிலையில் நோயாளியை பூரண ஓய்வுக்குட்படுத்தி கூடிய அளவு நீராகாரங்களுடன் பரசிற்றமோல் வகை வில்லைகளை வழங்குதன் மூலம் குணப்படுத்தலாம். பராமரிப்பும் ஓய்வுமே மிக முக்கியமாகும். அத்துடன் டிஸ்பிரின் வில்லைகளை வழங்குவதைத் தடை செய்ய வேண்டும்.

சில வேளைகளில் ***DHF*** இதற்குரிய குணாதிசயங்களுடன் திடீரென உடல் நீலநிறமாகி உடலில் இரத்த அழுத்தம் குறையலாம். இந்நிலை தென்படின் நோயாளி மயக்கநிலை அடைந்து கொண்டு இருக்கிறார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இந்நிலை ஏற்படின் 24 மணி நேரத்துள் நோயாளி மரணிக்கும் நிலை ஏற்படும். எனவே தாமதமற்ற உடனடி வைத்திய சிகிச்சைக்குட்படுத்தி சேலைன் ***Dextrose*** 70 அல்லது குருதி உடனடியாக பாய்ச்சப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் நோயாளி எம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிய நேரிடும்.

எனவே இதன் பாரதூரத்தை உணர்ந்தவர்களாய் செயற்பட வேண்டியது மட்டுமல்லாது நோய் அறிகுறிகள் தென்படின் உடன் வைத்திய சிகிச்சையை நாடல் நன்று. எனினும் கவலைக்குரிய ஒன்று இந்நோயை உறுதிப்படுத்தக் கூடிய மிக நுணுக்கமான ஆய்வுகூடச் சோதனையை இலங்கையில் கொழும்பு ***Medical Reseach Institute (MRI)*** இல் மட்டுமே மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ளன. அத்தோடு இதற்கு எவ்வித தடுப்பு மருந்தும் ***(Vaccine)*** இதுவரை கண்டறியப்படவில்லை.

எனவே தற்போது பாரதூரமாக பரவிவரும் இவ் உயிர்க்கொல்லி நோயை தடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.




**கணேசன் கிருதுஷா,**
***13 Bio,*** *2013 Batch,*
மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# School Library and
# Learning resourse Centre




The School Library is central to learning and teaching and plays a key role as a place for encouraging innovation curios ity, and prob lem solving. Our library is a catalyst for literacy and reading and for teaching and scafference to student's understanding and achievament and provide support for teaching and lerning throght the school. The school library plays a key role in the cultural and social life of the school. It reflects and welcoms the school community. This place is the central point for engagement with all kinds of reading, cultural activies, access to information knowledge building, deep thining and lively discussion.

The school library is pivotol to developing 21st century learners. There is a large and growing body of evidence showing the impact of the school library on student's achievement. It is a fudamental resourse for supporting student's learning. Generally school libraries reflect and encourage collaborative learning and sharing of ideas. These libraries play a key role in supporting and developing employment of reading and multiple literacies

*"a sanctury a mine of treasure a house of maps to secret lives in secret words - the library became my other home"* - joy cowley -





**A.M. Faroos,**
Teacher,
Bt/Paddiruppu M.M.V,
National School,
Kaluwanchikudy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவகை நிலங்களும் அவைசார்ந்த விடயங்களும்

**01. குறிஞ்சி:**

**- மலையும் மலைசார்ந்த இடமுமாகும் -**

| | |
|---|---|
| பிரதான தொழில் | - தினை விதைத்தல், வேட்டையாடல் |
| நிலத்தவர் | - குறவர்கள் |
| வாழ்விடம் | - சிறுகுடி அல்லது குடியிருப்பு |
| போர் ஒழுக்கம் | - வெட்சி |
| காதல் ஒழுக்கம் | - புணர்தல் |
| தெய்வம் | - முருகன் |

**02. முல்லை:**


**- காடும் காடு சார்ந்த இடமுமாகும் -**

| | |
|---|---|
| பிரதான தொழில் | - மந்தை மேய்த்தல் |
| நிலத்தவர் | - ஆயர்கள் |
| வாழ்விடம் | - சேரி |
| போர் ஒழுக்கம் | - வஞ்சி |
| காதல் ஒழுக்கம் | - இருத்தல் |
| தெய்வம் | - திருமால் |

**03. மருதம் :**

**- வயலும் வயல்சார்ந்த இடமுமாகும் -**

| | |
|---|---|
| பிரதான தொழில் | - விவசாயம் |
| நிலத்தவர் | - உழவர்கள் |
| வாழ்விடம் | - ஊர் |
| போர் ஒழுக்கம் | - உழிஞை |
| காதல் ஒழுக்கம் | - ஊடல் |
| தெய்வம் | - இந்திரன் |



**04. நெய்தல் :**

**- கடலும் கடல்சார்ந்த இடமுமாகும் -**


| | |
|---|---|
| பிரதான தொழில் | - மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக்குளித்தல், சங்கெடுத்தல் |
| நிலத்தவர் | - பரத்தவர்கள் |
| வாழ்விடம் | - பட்டினம், பாக்கம் |
| போர் ஒழுக்கம் | - தும்பை |
| காதல் ஒழுக்கம் | - இரங்கல் |
| தெய்வம் | - வருணன் |



**05. பாலை :**

**- மணலும் மணல்சார்ந்த நிலப்பிரதேசமுமாகும் -**

| | |
|---|---|
| பிரதான தொழில் | - ஆறலைத்தல், வழிப்பறி, சூறையாடுதல் |
| நிலத்தவர் | - மறவர் |
| வாழ்விடம் | - குறும்பு |
| போர் ஒழுக்கம் | - வாகை |
| காதல் ஒழுக்கம் | - பிரிதல் |
| தெய்வம் | - கொற்றவை (பெண் தெய்வம்) |



**மகேஸ்வரன் தர்ஷினி**
கலைப்பிரிவு – 12K, 2014
மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம், தேசிய பாடசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் இந்தியாவிலே நெல்லை மாவட்டத்தில் எட்டயபுரத்திலே் 1882ம் ஆண்டு மார்கழி மாதம் 11ம் திகதி பிறந்தார். தந்தை பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் லட்சுமி அம்பாள் இவரது இளமைப் பெயர் சுப்பிரமணியன். ஆனால் இவரை எல்லோரும் சுப்பையா என்று செல்லமாக அழைத்தனர். இவர் தனது 5வது வயதிலேயே தாயாரை இழந்து விட்டார். இளமைக் காலத்திலேயே பாடல்கள் எழுத ஆரம்பித்து சிறு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்ற பாரதியார் தன் புலமைச் சிறப்பால் 11வது வயதில் எட்டயபுர சமஸ்தானத்தாரால் " பாரதி " எனும் பட்டத்தைப் பெற்றார். எட்டயபுர சமஸ்தானத்திலுள்ள தமிழ் பண்டிதர்களுடன் விவாதித்தார்.




பாரதியார் தமது 14 வது வயதில் 1897ஆம் ஆண்டு ஆடி மாதம் 7 வயதுப் பெண்ணாகிய செல்லம்மாளை திருமணம் செய்து கொண்டார். மனைவி மீது அளவற்ற அன்பு இவருக்கு. 16 வயது நடந்து கொண்டிருக்கும் போது தந்தையார் இறந்து விட்டார். அதனால் பெரிதும் மனம் வருந்திய பாரதி காசியில் வசித்த அத்தை முறையானவரிடம் சென்றார். அங்கு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி, போன்ற மொழிகளைக் கற்றார்.

20ம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞன் என்ற சிறப்பை பெற்றார். மகாகவியின் பாடல்கள் எல்லாம் எளிமையானவை, கற்றோர் மாத்திரம் விளங்கிக் கொள்ளும் ஏனைய பாடல்களைப்போலல்லாது பாமர மக்களும் படித்து இன்புறக்கூடிய வகையில் இலகு தமிழில் பாடிய பெருமை பாரதிக்கே உரியது. இனிமை, ஓசை நயம், சொல்லழகு, யாப்பழகு நிறைந்து காணப்படும் அவரது செய்யுள்கள் இன மொழி சுதந்திர உணர்சியோடு மிகுந்த தாய் நாட்டுப் பற்றுக் கொண்டவையாக விளங்குகிறது.



மிகுந்த மனத்துணிவு கொண்ட பாரதியார் மகாத்மாகாந்தி, வ.உ. சிதம்பரனார், போன்றோருடன் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை கைதுசெய்யப்பட்டார். இவர் பாடிய சுதந்திரப் பாடல்கள் போராட்டத்திற்கு உரம் அளித்தன. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னே "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே" என சுதந்திரம் கிடைத்து விட்டதாக எண்ணி மகிழ்ந்து பாடுகிறார்.

21 வயதில் எட்டயபுர மன்னன் சமஸ்தானத்தில் கவிஞராக விளங்கிய பாரதி 22 வது வயதில் மதுரை சேதுபதி கலாசாலையில் தற்காலிக தமிழ் பண்டிதராக பணி புரிந்தார். பின்னர் " சுதேச மித்திரன் " நாழிதழில் துணை ஆசிரியராக விளங்கினார். 1905ம் ஆண்டு விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிகை அம்மையாரைச் சந்தித்து தனது குருவாக ஏற்றுக் கொண்டார். 1907ல் இந்தியா என்ற புரட்சி வார இதழ் ஆசிரியராக இருந்தார். தனது இந்திய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாட்டின் வளங்கள் அனைத்தையும் பிரித்தானிய அரசாங்கம் சூறையாடுவதைக் கண்டு மனம் கொதித்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் உயர்ந்த வேலை தமக்கு கிடைத்திருந்தும் மிகுந்த வேதனம் அளித்திருந்தும் தன்மான உணர்ச்சியும் வீர சுதந்திர உணர்வும், இருந்ததனால் தனது வேலையை இராஜினமா செய்து பத்திரிகையின் எழுத்தாளராக பணி புரிந்து பத்திரிகை வாயிலாக வீர சுதந்திர உணர்வினை பொங்கியெழச் செய்தார். இவர் பல வீரம் செறிந்த பாடல்கள் எழுதிய குற்றத்திற்காக பலமுறை பொலிசாரின் தொல்லைக்கு ஆளானார். பிறிட்டிஸ் ஆட்சியாளரின் வெறுப்பிற்கும் உள்ளானார். 1908ம் ஆண்டில் இருந்து 1921ம் ஆண்டு வரை இவரால் இயற்றப்பட்ட படைப்புக்கள் ஏராளம். இவ்வாறு பல தேசிய உணர்வு மிக்க உண்மைக் கவிஞன் கோயில் யானை ஒன்றிக்கு தேங்காய், பழம் கொடுத்த பொழுது அந்த யானையால் தாக்குண்டார். நோயின் கொடுமையினைத் தாங்கினார். மருத்துவமனை செல்ல மறுத்தார். இறுதியில் 1921ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ம் திகதி தமது 39வது வயதில் இம் மண்ணுலகை விட்டு மறைந்தார்.

சூரிய ஒளி எங்கும் பிரகாசிப்பதைப் போல் அவருடைய உன்னதமான கற்பனை, மக்கள் மனதை தொடும் சந்தம், மக்கள் மனதை உலுக்கும் உணர்ச்சி ததும்பும் பாடல்களின் ஒலி எங்கும் கேட்டுக் கொண்டே இருக்கும். அவர் பிறந்த ஊராகிய எட்டயபுரத்தில் அவர் ஞாபகார்த்தமாக மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல், என்ற கொள்கையுடைய பாரதியாரின் கவிதைகளும், பேச்சுக்களும், எழுத்துக்களும் இவ்வுலகம் உள்ள மட்டும் உயிர் வாழும் திறன் கொண்டவை. " பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்ற புதுமைக் கவிஞரை, சுதந்திரப் பிரியனை, தீர்க்க தரிசியை உலகம் உள்ளவரை போற்றிக் கொண்டே இருக்கும்.




**சி. ரேகா,**
தரம் : 12W,
மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



**"அறிவுள்ள செயல்களைச் செய்வோர் மட்டுமே இறைவன்மீது உண்மையில் பக்தியும் நம்பிக்கையும் கொண்டோராவர்."**

- பகவத்கீதை-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி பற்றிய தகவல்



முதல் கணக்கு இயந்திரம் - அபாக்கஸ்

முதலில் உருவான கணிப்பொறி மொழி Fortan

கணினியின் தந்தை எனப் போற்றப்படுபவர் - சாள்ஸ்பபேஜ்

கணிப்பான் Calculator கண்டறிந்தவர்கள் - பரோஸ் - 1988

கணினியுகத்திற்கு வித்திட்டவர்கள் - சீனர்கள்

கணினி மொழியை அறிமுகப்படுத்தியவர்கள் - தோமஸ்கனடி, ஜோன் கெமனி

முதல் முதலில் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட கணினியின் பெயர் - அப்பிள்

முதலாவது தானியங்கி கணினி - எனியான் - 1945 ல் கண்டறிப்பட்டது

கணினிக்களை உற்பத்தி செய்வதில் புகழ்பெற்ற நிறுவனங்கள் - IDM, Microsoft

முதலாவது மின்னனு கம்பியூட்டர் - மொலாசஸ் 1 - 1943ல்

Multimedia(பல்லூடகம்) என்பது - வீடியோ, தொலைபேசி போன்றவை நவீன தொழில்நுட்பங்கள் மூலம் தகவல் பரிமாற்றிக் கொள்ளும் முறை ஆகும்.

Super Computer என்பது அதிவேகமாக செயற்படும் கணினிகளை Super Computer என அழைப்பர். இது விண்வெளித் தரவுகள் வானிலை அறிவித்தல்கள், பாதுகாப்புத் தரவுகள் கேகரிப்பு போன்றவற்றிக்கு பயன்படும்.

இணையத்தளத்தின் தந்தை Sir Tim Berners Lee

இணையம் (Net Work) என்பது பல்லாயிரக்கணக்கான கணினிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் இன்ரநெட் ஆகும். சர்வதேச கணினிகளை கூட்டமைப்பு எனவும் இன்ரநெட்டை அழைக்காலாம்.

International Network என்பதன் சுருக்கமே Internet என அழைக்கப்படுகின்றது.

கணினி வைரஸ் - கணினியின் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை அழிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு Programme கணினி வைரஸ் ஆகும்.

குழந்தைகள் எடுத்துச் செல்லும் புத்தகங்களை குறைக்க உதவிய புதிய தொழிநுட்பம் - E - Book

கணினி துறையில்1KB எனப்படுவது 1024 பைற்

MP3 - கணினியில் பாதுகாத்து வைக்கப்படும் சத்தம் Moving Expert Grogps Audio Layer 3

Web sit இணையத்திற்கு தகவல்களை அனுப்பும் மையங்கள் ஆகும். அதாவது இன்ரநெட்டில் பரவிக்கிடக்கின்ற பல இலட்சக்கணக்கான கணினிக் கோவைகளின் வலையமைப்பாகும்.

1024 மெஹாபைட் = 1 ஜிகாபைட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

W.W.W - World Wide Web இது ரிம் போனர்ஸ் லீயால் (சுவிஸ்லாந்து) 1994ல் உருவாக்கப்பட்டது.

Windows - கணினியை இயக்க வைக்க பயன்படும் மென்பொருள் இதுவாகும்.

கணினியின் கொள்திறனை அளவிடப் பயன்படுத்தப்படும் அளவீடு Byte ஆகும்.

கணினி விஞ்ஞானத்தில் Binary Codes எனும் குறியீட்டில் பயன்படுத்தப்படும் இலக்கங்கள் - 0, 1

கணினி மௌசை கண்டறிந்வர் - டக்ளஸ் கால் என் கர்பார்ட்டன்

புரோகிராமை முதலில் தயாரித்தவர் அகஸ்டா அட இங்

E-Mail (Eletronic Mail) கணினியை உபயோகித்து இணையத்தின் ஊடாக கடிதத்தை வேறு இடத்திற்கு அனுப்புவதையே ஈமெயில் என அழைக்கின்றனர்.

தற்போது உலகளாவிய ரீதியில் இணையமாக மாறி வலைப்பின்னல்-அர்பா நெட்

கணினிக் கல்வி அல்லது ஆய்வு தொடர்பாக முக்கியமாகச் செயற்படும் பிரதான இந்திய நகரம் - பெங்களூர்

கணினியில் உட்படுத்தத்தக்க எண்கள் சொற்கள் ஒலிகள் படங்கள், ஆகியவற்றுக்கு வழங்கும் பொதுப் பெயர் Unicode

உலகில் முதலில் வெளிவந்த கணினி இதழ் - Computer and Automation

Micro Soft நிறுவனம் 2007 ஜனவரியில் Windows Vista 2007, Micro soft office Windwos, Exchange saver 2007 ஆகிய மூன்று புதிய மென்பொருட்களை அறிமுகம் செய்துள்ளது.

CD எனும் குறுக்கட்டை உருவாக்கிய நிறுவனங்கள் - றோயல் பிலிப்ஸ் எலக்ரோனிக்ஸ்(ஹொலன்ட்), ஜப்பான்(சோனி)

கணினி அலகுகளுக்கிடையிலான தொடர்பு

1 பைனரி : 1 பிட்

8 பிட் : 1 பைட்

1024 பைட் : 1 கிலோபைட்

1024 கிலோபைட் : 1 மெகாபைட்

1024 மெகாபைட் : 1 ஜீகாபைட்

**கி.மேனகா,**

தரம் : 13 Y(கலை),

மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம்,

தேசிய பாடசாலை,

களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இன்று பல விந்தைகள் பந்தயக் குதிரைகள் போன்று பவனி வந்துகொண்டிருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் மனிதன் தன் அயராத உழைப்பால் சாதனைகள் படைக்கும் நிகழ்ச்சிகள் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன.

உழைப்புதான் வளர்ச்சிக்கு ஊற்றுக்கண் வெற்றிக்கு அடிப்படை ஆர்வம் அகலாத முயற்சி, அதற்கு உழைப்பு அவசியம், சோம்பல், அதிக தூக்கம் ஆகியவை இரண்டும் வெற்றிக்கு எதிரிகள். இவை வெற்றிப் படிகளை தட்டிப் பறித்து விடும். இவற்றில் ஏதேனும் ஒரு குணம் நம்மிடம் இருந்தாலும் நாம் உயர்வு பெற முடியாது. ஆதலால் அவற்றை விரட்டுவது அவசியம்

ஒருவரை வாய்ப்பு எப்போதுமே தேடிவருவதில்லை. அப்படி வரும் போது முயற்சி உடையவர்கள் அதனை பயன்படுத்த தவறுவதில்லை.



# வெற்றிப் பாதை

ஆண்-பெண், பகல்-இரவு, இன்பம் - துன்பம், ஆகியவை சேர்ந்தே இருப்பது போல் வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துதான் இருக்கும். தோல்வி என்பது வெற்றிக்கு அடிப்படை அதைக்கண்டு நாம் துவண்டுவிடக் கூடாது. தோல்வியை நிலையானது என்று எண்ண வேண்டாம். அதையே நினைத்து வலம் வருவது உள்ளத்திற்கு நல்லதல்ல. தோல்விகளையும் துன்பங்களையும் எப்படி எதிர்கொள்கிறோமோ, அப்படியே வெற்றியும் இன்பமும் நம்மை வந்தடையும்.

வெற்றி பெறுவதற்காகவே நாம் ஒவ்வொருவரும் பிறந்திருக்கின்றோம். தன்னம்பிக்கை நேர்மை கடும் உழைப்பு ஆகியவை வெற்றியைத் தேடி வரும் வெற்றி பெற விரும்புபவர்கள் தங்கள் மனதைப் பணியில் ஒருமுகப்படுத்தத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மனதை ஒருமுகப்படுத்தி கடினமாக உழையுங்கள் உங்களுக்காக உலகம் தன் கைகளை விரித்துக் காத்துக்கொண்டிருக்கிறது. குறிக்கோளை அடையமுடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும் தோல்வியை சவாலாக ஏற்கும் மனதை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எப்படி வெற்றி கொள்வது? என்ற முறையில் சிந்தனையை அதிகப்படுத்தும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

எப்போதும் வெற்றியையே சிந்தியுங்கள் சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்துவிடலாம். ஒவ்வொரு நாள் இரவும் படுக்கைக்கு செல்லமுன் அடுத்த நாள் செய்யவேண்டிய பணிகளை திட்டமிடுங்கள். 24 மணி நேரத்தையும் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். வாழ விரும்பினால் நேரத்தை வீணடிக்காதீர்கள்.



**செல்வி. ரவிசங்கர் மதுவந்தி**

தரம் : 13 உயிரியல் பிரிவு

மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,

தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்த மருத்துவ குறிப்புக்கள்

**சளி, இருமல், ஆஸ்த்துமா குணமாக**

சளி தேக்கம் நீங்க : வல்லாரைப் பொடி, தூதுவளைப் பொடி பால் கலந்து குடித்தல்

காசநோய் : தினமும் அரிநெல்லிக்காய் சாப்பிடல்

நெஞ்சுச்சளி : தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து சுடவைத்து நெஞ்சில் பூசுதல்

காசநோய் குணமாக : பசுந்தயிர் உணவில் சேர்க்கவும்

ஆஸ்த்துமா தீர : சிறுகுறிஞ்சா வேர் பொடி, திரிகடுகு பொடி வெந்நீரில் சாப்பிடுதல்

மார்புவலி : இஞ்சிச்சாறு, எலுமிச்சைசாறு, தேன் கலந்து சாப்பிடல்

சளியில் காணும் இரத்தத்திற்கு : நொச்சிப்பூவை உலர்த்தி பொடி செய்து சாப்பிட்டு வர குணமாகும்.

---

**அடிபட்ட காயம் குணமாக**

எல்லாவித புண்புரைகளும் தீர : உதிரமா இலையை அரைத்து பூசுதல்

அடிபட்ட காயம் சீழ் பிடிக்காமல் ஆற : மிளகாய் வத்தல் அரைத்துக் கட்டவும்

நாள்பட்ட புண் ஆற : புளியமரத்தின் சொற சொறத்த பட்டையை பொடி செய்து பாலுடன் கலந்து தடவுதல்

புண்களைக் கழுவ : புன்னை மரப்பட்டை கயாசம் செய்து கழுவலாம்

---

**இருதயம் பலம் பெறுவதற்காக**

இதயப் படபடப்பு நீங்க : தினசரி பேரிக்காய் சாப்பிடுதல்

இதயத்தில் குத்தும் வலியும் குணமாக : கருந்துளசி இலை, செம்பருத்தி கஷாயம் 10 நாட்கள் சாப்பிடவும்

இதயம் பலம் பெற : தினமும் ஆரஞ்சுப்பழம் சாப்பிடுதல்

இதய நோய் உள்ளவர்கள் : ரீ குடிக்கலாம், காபி தவிர்த்தல் நலம்

---


**சில குறிப்புக்கள் ஞாபக சக்தி உண்டாக**

வல்லாரை இலையையும் அரிசித்திப்பிலி இலையையும் சேர்த்து ஊறவைத்து மைபோல அரைத்து காலை, மாலை சுண்டக்காயளவு சாப்பிட்டு வந்தால் நல்ல ஞாபகசக்தி உண்டாகும்

கெட்டுப்போய் இருக்கும் ஈரலை குணமாக்க : கருசலாங்கன்னி கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நோய் குணமாகும்

பாம்பு விசம் முறிய : மகிள மரத்து விதையை வெந்நீர் விட்டு மை போல் அரைத்து நெல்லிக்காயளவு கொடுத்தால் போதும் விசம் உடனே முறியும்

அல்சர் குணமாக : கற்பூர வாழைக்காயை வாங்கி தோல் உரிக்காமல் ஸிப்ஸ் கோட்டு வெட்டிக் காயவிட்ட வாழைக்காயை பவுடர் 500 கிராம், பனங்கற்கண்டு 25 கிராம், ஏலக்காய் பொடி 10 கிராம் இந்தப் பவுடரை ஒன்றாக கலந்து காலை, மாலை அரை தேக்கரண்டி சாப்பிட்டு வர அல்சர் குணமாகும்.



**செல்வி. ர. பிரேனுஜா,**
12W Arts
மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியாமல் போன விடியல்



நிரந்தரமில்லா தரணியில்
நித்தம் நித்தம் போன உயிர்கள்
ஆத்மாக்களாய் அவர்கள் உறவுகள் ..........

எம் கனவுகளெல்லாம் வெறும் நீரில்
எழுதிய எழுத்துக்களால் நீந்துகின்றன
கலங்கிய கனவுகள் ஆயிரம் .........


சப்தங்கள் ஓய்ந்து நிசப்தங்கள்
நிஜமாகியபோதும் - இரத்த வாடை போக வில்லையே
இப்படி விடியாமல் போன விடியல்கள் எத்தனை .......

சோகங்களும் சுமைகளும் தேங்கி நிற்கும்
எம்மவரின் வாழ்க்கையை தேடியெடுக்க தலைகுனிந்து நிற்கும்
நாளைய தலைவர்களின் அஸ்த்திவாரங்கள் ஆழமாய் போட ......

வெறும் கனவுகளாய் இருப்பதை விட
வெற்றி பெறும் நிஜக்கனவுகளைத் தீண்டு - ஏனென்றால்
இப்படியே எம்மில் விடியாமல் போன விடியல்கள் எத்தனையோ?



**செல்லத்துரை சிந்துஜன்**
தரம் 11Y
மட்/பட்டிருப்பு ம.மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலாளர்களும்




அல்பிரட் நோபல் - டைனமெட்
ஒபினிமா - அணுத்தத்துவம்
மைக்கல் பரடே - டைனமோ
கெல்வின் - கல்வனோ மானி
காக்ஸ்டன் - அச்சு இயந்திரம்
மெண்டலீவ் - ஆவர்த்தன அட்டவணை
நீல்போர் - அணுமாதிரியுரு
பாரன் ஹீட் - வெப்பமானி
பாணடிங் - இன்சுலின

# இவர்கள் கண்டுபிடித்தவைகளும்





ஜான் லோகி பெயர்டு - தொலைக்காட்சிப்பெட்டி
ஹோல்ஸ் - டைப்ரைட்டர்
ஐசாக் நியூற்றன் - சூரிய ஒளியில் ஏழு நிறங்கள்
சார்லஸ் டவுனில் - லேசர்
ஜோசப் பிரிஸ்ட்லி - ஒட்சிசன் வாயு
தொரி செல்வின் - இரசப்பாரமானி
ஹாப்கின்ஸ் - விற்றமின்
இல்பேட்டன் லூலிஸ் - பங்கீட்டுவலுப்பிணைப்பு



**செல்வி.*R*.சுருதி.**
தரம் : $10^D$
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை),
களுவாஞ்சிகுடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கடமைகளும் பொறுப்புக்களும்

**மா**ணவர் சமூகம் என்பது சாதாரண ஒரு சிட்டுக்குருவி வாழ்வு மட்டுமல்ல சில கடமைகளையும் பொறுப்புக்களையும் சுமந்த வாழ்வுக்கு வேண்டியவற்றை எல்லாம் சேமித்து வைக்கக்கூடிய ஒரு சுதந்திரமான தேனீப் பருவம்தான்.

ஆரம்பத்தில் எந்தவித பக்குவமும் இன்றி நாம் வாழ்ந்த குடும்பச் சூழலை மட்டுமே அறிந்திருந்த நாம் புதியதொரு சூழலான கல்விக்கூடத்தினுள் கற்பதற்காக காலடி எடுத்து வைக்கின்றோம். கல்வி என்பது திறன்களை அபிவிருத்தி செய்வதாகும். அபிவிருத்தி என்பது திறன் மனப்பாங்கு என்பவற்றிற்கு ஒருவரைத் தீட்டுவதாகும். இத்தகைய கைங்கரியம் வாய்க்கப் பெற்றவர்கள் மாணவர்கள்.





மாணவன் என்பவன் யார்? அவன் எப்படி இருக்க வேண்டும் என்றால் ஒரு ஆராய்ச்சியாளனாக, சிந்தனையாளனாக ஏன் ஏன் என்று கேள்வி கேட்கின்ற பக்குவமுள்ளவனாக இருக்க வேண்டும். அவன்தான் மாணவன். வகுப்பறையில் கற்கின்ற ஒவ்வொரு விடயத்தையும் சிந்தித்து ஆராய்ச்சி செய்து ஏன்? எப்படி?என்ற கேள்விகளை எழுப்பி கற்க வேண்டும். இதைத்தான் வள்ளுவரின் வான்மறை சொல்கிறது, **"கற்க கசடற"** என்று கற்கின்ற பாடத்தை விளக்கமின்மையோடு கற்பதும் விளக்கம் இன்மையோடு வீடு செல்வதும் நாம் ஒரு மாணவன் என்பதனை வலியுறுத்தாது இத்தகைய கல்வியும் செவிட்ட நேரமும் " **கல்லில் பெய்த மழை** " போலாகிவிடும்.

நாம் ஒரு மாணவன் என்கின்ற இடத்தில் இருந்து பாடங்களை ஐயமறக்கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு மாணவன் பாடசாலைச் சட்டதிட்டங்களை மதித்துக் கட்டுப்பட்டு வாழ வேண்டிய கடப்பாடு உள்ளவன். பாடசாலையிலுள்ள ஒவ்வொரு சட்டதிட்டமும் எம்மை உயர்ந்த வாழ்விற்கு இட்டுச் செல்லும் ஏணிப்படிகள் ஆசிரியர்கள் எம்மை கோபிப்பதும் தண்டிப்பதும் நியாயமானவை.

திருத்தங்கள் தண்டனைகள் என்பன ஒருவனைச் சிறந்த வழியில் இட்டுச் செல்லும் சாதனங்கள் இவர்கள் எப்படிப் போனாலும் என்ன? இவர்களைத் தண்டிப்பதால் நாம் எதைப் பெற்றுக் கொள்வது என்று ஆசிரியர்கள் இருந்தால் நாம் என்ன செய்வது எப்படி சிறந்தவர்களாக வாழ முடியும்.

முன்னைய காலங்களில் ஆசிரியர்களிடம் மாணவர்கள் கொண்ட பக்தியும் மதிப்பும் தற்காலத்தில் குறைந்து வருகின்றது. முற்காலத்தை விட தற்காலத்து ஆசிரியர்கள்மாணவர் நலன்கருதி மாணவ ரோடு மிக மிக நெருங்கி ஒரு நண்பர் போல் பழகுகின்றனர். இதனால் மாணவர்களிடம் நன்மதிப்பைப் பெறுகின்றனர். **"எழுத்தறி வித்தவன் இறைவன்"** மாணவர்கள் ஆசிரியரை மதித்து அவர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களுக்கு கோபத்தினை ஏற்படுத்தா வண்ணம் நடந்து கொண்டோமானால் குருவின் மனக் குளிர்ச்சியினால் நம் வாழ்வில் குளிர்மை கொலுவிருக்கும்.

மாணவர்கள் வெறுமனமே கல்வி கற்கும் பணியில் மாத்திரம் ஈடுபடக்கூடாது. பெரும் சக்திவாய்ந்ததொரு குழுவாக செயற்பட வேண்டும். சமூகத்தின் நல் நடத்தைக்கெதிரான சீர் கேடுகளை எதிர்த்து நிற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவ்வப்போது சமூகத்தில் பல தீய சக்திகள் ஆதிக்கத்தைச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கடமைகள் மட்டும் நமக்கு கடமையாகாது. சமூகத்தின் கண்ணும் நம் கடமை துலங்க வேண்டும்.

இன்றைய கல்வியின் நோக்கம் வினாக்களுக்கு விடையளிப்பதும் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதுமாகவே உள்ளது. கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிப்பதும் சித்தி பெறுவதும் மாத்திரம் சிறந்த கல்வி ஆகாது. ஒழுக்கம் நிறைந்த கடமை நிறைந்த கல்வியினை நாம் கற்க வேண்டும். எம்மால் எம் கல்வியால் உலகம் நல்ல பயன் பெற வேண்டும். நாம் கடமையும். பொறுப்பும் மிக்க மாணவராய் மிளிர்வோமாக




**செல்வி . இ. ரதிவதனா,**
தரம் : 11K,
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை),
களுவாஞ்சிகுடி.



# கல்வியின் உயர்வு



கல்வி எனும் செல்வத்தை
கருத்துடன் நாம் கற்றிட்டால்
கவலை இன்றி எந் நாளும்
கழித்திடலாம் காலத்தை

உயர்வு தரும் கல்விதனை
உயிர் உள்ளவரை கற்றிட்டால்
உலகில் எங்கு சென்றாலும்
உண்டு எமக்கு நன்மைகளே

செல்வங்களுள் அழியாத
செல்வமான கல்விதனை
சிறப்புற நாம் கற்றிட்டால்
சிறப்பாய் உலகினில் வாழ்ந்திடலாம்.




**செல்வன்.பத்மநாதன் ஹரிநாத்,**
தரம் -9K,
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை),
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோமசுந்தரப் புலவர்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்கு அணிசேர்த்த ஈழத்துப் பெயரியார்களுள் நவலியூர் சோமசுந்தரப் புலவரும் ஒருவர். நவாலியூர் சோமசுந்தரப் புலவரை ஈழத்தில் அறியாதவர்கள் இருக்க முடியாது. பாடசாலை செல்லும் எந்தப் பிள்ளையைக் கேட்டாலும் அந்தப் பருத்தித்துறை ஊராம், பவளக் கொடி பேராம், என்ற பவளக்கொடிக் கதைப்பாட்டுத் தாத்தாவா, என்றுதான் கேட்பார்கள். அவர் கருத்தாளம் மிக்க பல பாடல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய பாடல்கள் பல மனதைவிட்டு அகலாதவை.

சோமசுந்தரப் புலவர் கி.பி 1880ம் ஆண்டு ஆனி மாதம், 12ஆந் திகதி, நவாலியூரில் பிறந்தார். அவர் ஆரம்பக் கல்வியை மானிப்பாயில் இருந்த அருணாசல உபாத்தியாரிடமும், தமிழ் அறிஞரான தந்தையாரிடமும் கற்றார். அவர் தமது 15வது வயதில் பாடல்களை ஆக்கத் தொடங்கினார். அட்டகிரி முருகவேல் மீது பதிகம் பாடிய போது சிறுவயதில் இப்படி ஒரு திறமையா எனப் பலரும் வியந்தனர் யாப்பு இலக்கணம் கற்பதற்கு முன்னரே பல தனிப்பாடல்களை பாடினார். தனிப் பாடல்களைப் பாடும் வன்மை அவருக்கு இயல்பாகவே அமைந்தது அதனால் அவரை எல்லோரும் வரகவி என்று அழைத்தனர்.

சோமசுந்தரப் புலவர் தனிப்பாடல்களை மட்டுமல்ல கதைப் பாடல்களையும் இயற்றினார். எனினும் இவரது செய்யுளாக்கத் திறமையை சிறுவர் பாடல்களிலேயே காணமுடிகிறது. தாடி அறுத்த வேடன் என்ற கதைப்பாடல்கள் சிறுவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பவை வட்டுக்கோட்டையில் உள்ள ஆசிரியர் சின்னத்தம்பி என்பவரும் புலவரும் அவ்வூரிலே ஓர் ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்கினார். அப்பாடசாலையில் புலவர் நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அவர் மாணவர்களுக்கு தமிழ் மட்டுமமல்ல, ஆங்கிலம், இதிகாசம் போன்ற பாடங்களையும் கற்பித்தார். புலவரது நற்பணியினாலே தமிழும் சைவசமயமும் வளர்ந்தன. 1925ம் ஆண்டு உயிரிளங்குமாரன் என்னும் நாடகத்தை எழுதினார். அந்த நாடகத்தின் சிறப்பை உணர்ந்த இலங்கைத் தமிழ் புலவர் என்னும் பட்டத்தை அவருக்கு அளித்தனர். தங்கத்தாத்தா என அன்பாக அழைக்கப்பட்ட சோமசுந்தரப் புவலர் சிறுவர்களுக்காகப் பாடிய பாடல்கள் சிறுவர் செந்தமிழ் என்ற பெயரில் 1955ம் ஆண்டு வெளிவந்தது. சோமசுந்தரப் புலவர் சிறுவர்களுக்காக எழுதிய பாடல்களுள் ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி, புளுக்கொடியல், எலியும்சேவலும், பவளக்கொடி முதலான பாடல்கள் சிறுவர்களாலும் இன்னும் விரும்பிப் பாடப்படுகின்றன.

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்? - உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?


என்று அழகாகக் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சிறுவர் இலக்கியப் பாடசாலை மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டே எழுந்தது. ஈழத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடியாக கருதப்படும் நவலியூர் சோமசுந்தரப் புலவரை சிறுவர் பாடல்களை எழுதத் தூண்டியவர் கல்வி அதிகாரி க.ச.அருள்நிதி அவர்களாவார். சிறுவர் இலக்கியத்திற்காக முதன்முதலில் போட்டியை நடாத்தினார். அப் போட்டியில் சோமசுந்தரப் புலவர் பங்குபற்றி வெற்றியும் பெற்றார். அப்போட்டித் தேர்வுக் குழுவில் விபுலானந்த அடிகளாரும், சுவாமி ஞானப்பிரகாச சுவாமிகளும் இடம்பெற்றிருந்தனர். சிறுவர் இலக்கியப் போட்டிக்கு சிறுவர் பாடல் எழுத ஆரம்பித்து சோமசுந்தரப் புலவர் சிறுவர் பாடல்கள் மூலம் ஈழத் தமிழர் மத்தியில் புகழ் பெற்றார்.

ஈழத்தின் தமிழ் கவிதை வரலாற்றில் சிறுவர் பாடல்கள் வாயிலாக முக்கிய இடத்தைப் பெற்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கி.பி 1953 ம் ஆண்டு ஆடி மாதம், 10 ஆம் நாள் சிவபதமடைந்தார். அவரது பூதவுடல் மறைந்ததே ஒழிய புகழ் உடல் பாரெங்கும் பரவி நிலவுகிறது. தமிழ் வாழும் வரை புலவர் வாழ்வார் என்று முடிக்கின்றேன்.




**ந.தர்ஷிகா,**

தரம் : 09D,

மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,

தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.


## விழாக்கள்

1 ஆவது ஆண்டு நிறைவு விழா – கடதாசி விழா

2 ஆவது ஆண்டு நிறைவு விழா – பஞ்சு விழா/ பருத்தி விழா

3 ஆவது ஆண்டு நிறைவு விழா – தோல் விழா

4 ஆவது ஆண்டு நிறைவு விழா –பூ விழா

5 ஆவது ஆண்டு நிறைவு விழா – மர விழா

6 ஆவது ஆண்டு நிறைவு விழா – சர்க்கரை விழா/கற்கண்டு விழா

7 ஆவது ஆண்டு நிறைவு விழா – கம்பளி விழா/செம்பு விழா

8 ஆவது ஆண்டு நிறைவு விழா – வெண்கல விழா

9 ஆவது ஆண்டு நிறைவு விழா – மண்கல விழா

10 ஆவது ஆண்டு நிறைவு விழா – தகர விழா

20 ஆவது ஆண்டு நிறைவு விழா – பீங்கான் விழா

30 ஆவது ஆண்டு நிறைவு விழா – முத்து விழா

40 ஆவது ஆண்டு நிறைவு விழா – மாணிக்க விழா

50 ஆவது ஆண்டு நிறைவு விழா – தங்க விழா/பொன் விழா

60 ஆவது ஆண்டு நிறைவு விழா – மணிவிழா/வைரவிழா

80 ஆவது ஆண்டு நிறைவு விழா – அமுத விழா

100 ஆவது ஆண்டு நிறைவு விழா – நூற்றாண்டு விழா




**கு. அனாமிகன்**

தரம் :- 8P

மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,

தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




* செருப்பில்லை என்று நான் முனங்கிக் கொண்டிருந்தேன் கால் இல்லாதவனைக் காணும் வரை (அரேபியா)
* உன் வாயில் இருந்து வரும் வார்த்தைகளை உன் காதுகள் கேட்கட்டும் (துருக்கி)
* இரண்டு மொழிகள் தெரிந்த ஒரு மனிதன் இரண்டு மனிதர்களுக்குச் சமன (பிரான்ஸ்)
* சுயநலம் என்ற நெருப்பு முதலில் மற்றவர்களைப் புசிக்கின்றது பிறகு தன்னையே புசிக்கின்றது. (ரஷ்யா)
* தாயை யாருடனும் ஒப்பிடமுடியாது அவள் ஒப்பற்றவள் (பெல்ஜியம்)
* அமைதியான மனதிற்கு பார்ப்பதெல்லாம் விருந்து (இந்தியா)
* மனித வாழ்வு குழந்தை கையில் இருக்கும் முட்டை மாதிரி (ருமேனியா)
* பானையின் கவலைகள் அகப்பைக்கு மட்டுந்தான் தெரியும் (இத்தாலி)
* பள்ளிக் கூடத்தில் போய் படிப்பு வருவதில்லை (அமெரிக்கா)
* தாயையும் தந்தையையும் தவிர ஒருவன் எதையும் வாங்கலாம் (இந்தியா)

## சிந்திக்க சில ..........

சுலபமானதை முதலில் செய்யாதே. கடினமானதைச் செய்து பழகிக் கொள். - நெப்போலியன் -

புத்திசாலியுடனும் மடையனுடனும் வாதம் செய்யாதே. - சாணக்கியர் -

கல்மனம் படைத்த நண்பனை விட கொலைகாரன் என்றும் கொடியவனல்ல. - விவேகானந்தர் -

கர்வம் பிடித்தவன் பெருமையை இழந்து விடுவான். - ஷேக்ஸ்பியர் -

உழைப்பு பிழைப்புக்காக மட்டுமில்லாமல் உண்மைக்காகவும் இருக்க வேண்டும். - லெனின் -

புகழ்ச்சி என்பது நீதித் தராசைக் கூட சில சமயம் அசைத்து விடும். - பேகன் -

**ஆ.லோஷனன்**

தரம் 7 P

மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,

தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விநோத உயிரினங்கள்



அதிக நீர் அருந்தும் பறவை - புறா
மிகச்சிறிய முட்டையிடும் பறவை - தேன் சிட்டு
சத்தமிடாத விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
ஞாபகசக்தி கூடிய விலங்கு - யானை
நீல நிற இரத்தத்தை உடைய கடல் உயிர் - நண்டு. இறால்
பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு
கடல் நீரை பருகும் பறவை - பென்குயின்
பறக்கும் போது தூங்கும் பறவை - ஆல்பட்றாஸ்
மிகப் பெரிய வாயுள்ள விலங்கு - நீர்யானை
பித்தப்பை இல்லாத முலையூட்டி - எலி
நாக்கு இல்லாத ஊர்வன - முதலை
பறக்கும் முலையூட்டி - வௌவால்
பறக்க முடியாத பறவை - தீக்கோழி
அழகிய கூடு கட்டும் பறவை - தூக்கணாங்குருவி
மிகப் பெரிய முட்டையிடும் பறவை - தீக்கோழி
மிக வேகமாக தரையில் ஓடும் விலங்கு - சிறுத்தைப் புலி
வேகமாக பறக்கும் பறவை - பாடும் பறவை
சிரிக்கத் தெரிந்த விலங்கு - மனிதன்
நேராக மட்டும் பறக்கும் பறவை - காகம்
இறக்கை இல்லாத பூச்சி - பேன்
இறக்கையை மடக்க முடியாத பூச்சி - பட்டாம்பூச்சி
பறக்க மட்டுமே தெரிந்த பறவை - ஹம்மிங்பேட்
பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் - ஈசல்
இனிப்பின் சுவையை அறியாத உயிரினம் - பூனை
மிகச்சிறிய இதயம் உள்ள உயிரினம் - சிங்கம்
கண்கள் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் - முதலை







**செல்வி. குமாரசிங்கம் அங்கவி**
தரம் 3W
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா என்றொரு தெய்வம்

துன்பத்திலும் அம்ம இன்பத்திலும் அம்மா, எதிலும் அம்மா, எப்பொழுதும் அம்மா, எங்கும் அம்மா, எல்லோர்க்கும் அம்மா, எனவே தான் சுவாமி இராம கிருஷ்ணர் உலகமாதா எனது தாயானால் உலகப் பெண்மை அனைத்தும் எனக்குத் தாயாக வேண்டும் என வாழ்ந்தார்.

தாய்க்கு நிகர் தரணியில் யாருமில்லை இதனால்தான் நாயனார் கூட தாயினும் சிறந்த தலைவன் என்றடியார் தம்மை போன்றிசைப்பார்கள் என்றும் பாடி ஒப்பிடக் கூடிய மிக உயர்ந்த அன்பு தாயன்புதான் என்பதை வலியுறுத்தினார்.

உலகில் பிறந்ததும் நாம் பார்த்த தெய்வமானவள் இதனால்தான் ஔவையும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றார் உண்மை தெரியாத எமக்கு உதிரத்தைப் பாலாக்கி உரமாக ஊட்டுகின்றார்கள் அந்த உரமே உலகிற்கு ஈர்ந்து தனது உதிரத்தால் உடலும் தந்த தெய்வமானவள்.

அம்மாவுக்கு ஈடாக எந்தவொரு பொருளும் உலகில் இல்லை எதை இழந்தாலும் அம்மாவை இழக்க விரும்பமாட்டார்கள் அம்மாவை மதிப்பவன் அனைத்தையும் மதிப்பவனாகின்றான் அம்மாவை இழப்பவன் இந்த உலகில் வாழத் தகுதியற்றவன் நேராக நரகத்துக்கு தள்ளப்படுகின்றான்.

எனவே சான்றோனாக வாழ்ந்து என் அம்மாவை மகிழ்விப்பேன்.



நாவுக்கரசன் டிகாசனன்
தரம் : 2D
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.

"தனிமரம் தோப்பாகாது ஆனால்
அது தோப்பாவதற்கு துணைபுரியும்"


- அருணகிரிநாதர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்கள் இல்லாத விலங்கு எது என்று உங்களுக்குத் தெரியுமா? ஆமைக்குப் பற்கள் கிடையாது. கனத்த ஈறு போன்ற அமைப்பாலேயே அது உணவைக் கடித்து விழுங்குகின்றது.

தென்னை மரம்தான் அது சாகும் வரை மனிதனுக்கு எல்லா விதத்திலும் பயன் தருவது. இதற்கு இணையாக ஒரு திராட்சைக் கொடி உள்ளது. இது காய்க்க ஆரம்பித்து இருபது ஆண்டு காலம் வரை பலன்தரக் கூடியது.




பன்றிகளால் தலையை உயர்த்தி வானத்தைப் பார்க்க முடியாது?

நீரில் வாழும் மீன் தரையில் விழுந்தால் உடனே துடித்து இறந்து விடுகிறதே அது ஏன்? நீர்ப் பரப்பில் வாழும் மீன்மீது அதிகபட்ச காற்றழுத்தம் விழுகிறது. சுமார் மீது ஒரு கிலோமீற்றர் பரப்பளவுள்ள கடலில் வாழும் ஒரு மீனின் மீது சுமார் ஒரு தொன் எடையுள்ள காற்று அழுத்துகிறது. இப்படி வாழும் மீனைத் தரையில் போட்டால் அந்தக் காற்றழுத்தம் குறைந்து விட மீன் இறந்து விடுகிறது.

பறவைகளைப் போல ஆந்தை பறக்கும் போது படபடவென்ற சிறகொலி கேட்காது பெரும்பாலும் இரவு நேரத்தில் இரை தேடப் போகும் ஆந்தைகள் சிறகொலிக்கும் ஒலி கேட்டு இரை தப்பித்து விடாதபடி இயற்கை தந்த வரம் அது

**நாகேந்திரராசா சுபேத்தாசௌமியா**

தரம் 7 P

மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,

தேசிய பாடசாலை,

களுவாஞ்சிகுடி.

**அனுபவம் என்பது பெரிய ஆசிரியராகும். அது பல விடயங்களை நமக்கு கற்றுத்தருகிறது.**

- காந்திஜி -

**"தன் சுகத்தை பிறருடைய துன்பத்தின் மீது நிறுவுவதைப் போன்ற பாவம் உலகத்தில் வேறொன்றும் இல்லை."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. மகாவலி திசை திருப்புத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட விலங்கு?
யானை
02. இலங்கையின் வான் படையைக் குறிக்கும் சின்னம் எது?
கழுகு
03. உலகின் அதிக உயரமான கோபுரம் எது?
ஈபிள் கோபுரம்
04. உலகின் சிறிய தேசிய கீதத்தை உடைய நாடு எது?
ஜப்பான்
05. பெரிய காற்பந்து மைதானம் உள்ள நாடு எது?
பிறேசில்
06. இலங்கையின் காடுகளில் இல்லாத விலங்கு எது?
சிங்கம்
07. உலகின் நீளமான மலைத்தொடர் எது?
அந்தீஸ் மலைத்தொடர்
08. முதன் முதலாக நீராவி இயந்திரத்தை உருவாக்கியவர் யார்?
டிரவிதிக்
09. இணைய இணைப்பு வசதியை (WWW) வடிவமைத்தவர் யார்?
டிம் பர்னஸ்லீ
10. துலிப் மலர்கள் தோட்டத்திற்கு புகழ்பெற்ற நாடு எது?
பிரான்ஸ்
11. ஸ்கேயி தீவு எந்த நாட்டில் உள்ளது?
ஹொலண்ட்
12. மில்லியனம் டும் எனப்படும் உலகின் மிகப் பெரிய அரங்கம் எது?
கிறீன்விச்
13. விவேகானந்தர் நினைவுப் பாறை எங்குள்ளது?
கன்னியாக்குமாரியில்
14. முன்னர் பாலஸ்த்தீனம் என அழைக்கப்பட்ட நாடு இன்று இஸ்ரேல் ஆகும் முன்னர் கிழக்குப் பாலஸ்த்தீனம் என அழைக்கப்பட்ட நாடு எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
பங்களாதேஸ்
15. கைரேகையை வைத்துக் குற்றவவாளிகளை கண்டுபிடிக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
எட்வட் ஹென்றி
16. இலங்கையின் முதலில் வெளிவந்த சிங்களப் பத்திரிகை எது?
சிங்கள ஹென்ட்
17. 1971 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பங்களாதேஸ் நாட்டின் முதலாவது பிரதமர் யார்?
முஜபுர ரஹ்மான்
18. 50 ஓவர் ஒருநாள் கிரிக்கட் போட்டிகளில் 3 முறை ஹெட்ரிக் சாதனை படைத்துள்ள பந்து வீச்சாளர் யார்?
லஷித் மாலிங்க
19. எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி யார்?
ஹொஸ்னி முபாறக்
20. ஐக்கிய நாட்டின் மனித உரிமைகள் ஆணையாளர் யார்?
நவனிதம் பிள்ளை
21. இருளை நாடும் விலங்கு எது?
நத்தை
22. வெருட்சியான பார்வையுள்ள மிருகம் எது?
மான்
23. பூத்தவுடன் இறக்கும் தாவம் எது?
ரவல்சியா ஆர்னல்டி
24. மண்ணினுள் பூக்கும் செடி எது?
ரிசன் டெலியா காரடன்
25. மலைகளின் உயரத்தை அளக்கப் பயன்படும் கருவி எது?




*V.Chithdassan*
Grade 6[P]
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் புகழ் பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.

உலகை ஆட்டிவைத்த ஹிட்லருக்கும், உலகை சிரிக்க வைத்த ஷார்லி சப்ளிலுக்கும் அரை மீசை

## அறிந்து கொள்ளுங்கள்

எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்

மண்புழுவுக்கு 10 இதயங்கள்

வெள்ளை யானைகள் உள்ள நாடு தாய்லாந்து

உப்பு நீரை விரும்பி பருகும் உயிரினம் ஒட்டகம்

உலக வளி மண்டலவியல் தினம் மார்ச் 23

உலக உயிரினங்கள் தினம் ஒக்டோபர் 06

பாவேந்தர் என அழைக்கப்படுவர் பாரதிதாசன்

உலகிலேயே மிகவும் பரந்த கடல் தென் கடல்

பரசூட்டைக் கண்டுபிடித்தவர் ர. கே. கனேரின்

சீனாவின் துயரம் குவாங்கோ நதி

உலகின் கூரை திபெத்

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நோர்வே

உலகின் பெரிய தீவு - கிறின்லாந்து

உலக சனத்தொகை கூடிய நாடு - சீனா

**பி. லிசாகரி**
தரம் - 07
மட்/பட்டிருப்பு ம.ம. வி.
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.

---


## எலியின் புத்திசாலித்தனம்

### சிறுகதை

மட்டிப்பட்டி என்பது ஒரு அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் வரட்சி உண்டாகியது. அதனால் அங்கு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மட்டிப்பட்டியில் ஒரு எலி வசித்து வந்தது அந்த எலி அந்த ஊரில் ஏற்பட்ட பஞ்சத்தால் பக்கத்து ஊருக்குச் சென்றது. பக்கத்து ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் பூனைகள் இருந்தன. இது வந்த எலிக்குத் தெரியாது. எலி ஓர் வீட்டிற்குள் நுழைந்தது. அந்த வீட்டின் சமயலறைப் பக்கம் சென்றது. அங்கு ஓர் மேசையில் ரொட்டித்துண்டுகள், பழங்கள், தானியங்கள் என பல உணவுகள் இருந்தன. எலி அதை எடுத்து சாவகாசமாய் சாப்பிடத் தொடங்கியது.

திடீரென ஒரு சத்தம் கேட்டது அங்கே ஒரு பெரிய பூனை நின்றது. எலி திடுக்கிட்டு அருகிலிருந்த கதிரையில் ஒழிந்து கொண்டது. பூனை எலியை ஒழிய முன்பே கண்டுவிட்டதால் அதைத் தேடியது. எலி சிறிது நேரம் யோசித்தது. பின்பு கதிரையில் இருந்து எட்டிப் பார்த்தது. "வாருங்கள் வாருங்கள் நண்பர் நாயாரே இப்போதுதானா வருகின்றீர்" என்று உரத்த குரலில் கூறியது. இதைக் கேட்ட பூனை உண்மையில் நாய்தான் வருகின்றதென நினைத்து தலை தெறிக்க ஓடியது. எலி, ஓடும் பூனையைப் பார்த்து சிரித்தது. எலி தனது புத்தி சாதுரியத்தால் உயிர் பிழைத்தது.

**பி.கோவர்த்தனன்**
தரம் - 05k
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வரலாற்றில் அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்கள்

ஒரு பாடசாலை நடவடிக்கையில் பல தரப்பட்டோர் பங்குபற்றுகின்றனர் இதில் அதிபரின் வகிபாகம் முதன்மை பெற்று விளங்குவது நாம் அறிந்த விடயமாகும். இன்று இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்து விளங்கும் ஒவ்வொரு பாடசாலையினதும் வெற்றிக்கும் சாதனைக்கும் பின்னனியில் ஒரு அதிபரின் அர்ப்பணிப்புடன் கூடிய தூரநோக்கும் திடமான தலைமைத்துவமும் காரணிகளாக காணபப்டும் அத்தகையில் எமது பாடசாலையில் 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதியன்று ஒரு மத்திய மகா வித்தியாலமாக பொறுப்பேற்றுக் கொண்ட தற்போதய அதிபர் திரு பொன். வன்னியசிங்கம் அவர்கள் எமது கல்லூரியின் 94 ஆண்டுகால வராற்றின் ஒரு சரித்திரநாயகனாக கல்விச் சமூகத்தில் காத்திரமான ஓர் இடத்தைப் பெற்று நிற்கின்றார்.

தான் அதிபராக பதவியேற்ற அதே ஆண்டிலேயே ஒரு தேசிய பாடசாலையாக மத்திய அரசினால் பொறுப்பேற்கபப்பட்ட இப்பாடசாலையை பட்டிருப்பு தொகுதி மக்களின் வாழ்வியலை வளப்படுத்துகின்ற ஒரு மத்திய நிலையமாக மாற்றியமைத்த திரு. பொன். வன்னயசிங்கம் அவர்கள் தனது பதவிக்காலத்தை ஒரு பொற்காலமாக மாற்றியமைத்திருக்கின்றார்.

உள்ளும் வெளியும் இறைவனின் நாமத்தை உச்சரிக்கும் மூச்சைடைய எமது அதிபர் இளகிய மனதும் குளிர்பார்வையும் பூவைக்கூடபகைக்காது புன்னகை செய்து அன்பினால் எல்லோரையும் அணைத்திடும் வாஞ்சையும் கொண்டு தனக்கேயுரித்ததான தனித்துவமான முகாமைத்துவ முறைமையில் சென்று குறுகிய காலத்துள் எமது பாடசாலையை தலை நகரின் தலைசிறந்த பாடசாலைகளுக்கு நிகராக தலைநிமிர்ந்து சேவையாற்றுமளவு இப்பிராந்தியத்தில் தனித்துவ அந்தஸ்துள்ள ஒரு பாடசாலையாக மாற்றியமைத்திருக்கின்றார்.

பௌதீக வளங்கள் ஒரு பாடசாலையின் கல்வி மேம்பாட்டில் இன்றியமையாதவை. வளங்களின் கட்டுப்பாடு அல்லது போதாமை கல்வி அடைவுகளை பின்னோக்கித் தள்ளலாம் என்பதை நன்கு அறிந்திருந்த எமது அதிபர் இப்பாடசாலையின் பௌதீக அபிவிருத்தியில் தன்னைமுழுமையாக அர்ப்ணித்தார்.

அதன் முதற்படியாக தான் பதவியேற்ற அதே ஆண்டில் விசேட அதிரடிப்படையின் கட்டுப்பாட்டில் இருந்த பாடசாலை மைதானம், விடுதி மீண்டும் பொறுப்பேற்று 24.02.2003இல் 13 ஆண்டுகளின் பின்னர் இல்ல விளையாட்டுப் போட்டியினை வெகுகோலாகலமாக நடத்தியிருந்தார்.

தான் முன்னெடுக்கின்ற ஒவ்வொரு நிகழ்விலும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் பழைய மாணவர்சங்கம் ஆகியன உட்பட ஏனைய கல்வி அதிகாரியினதும் பூரணஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்கின்ற எமது அதிபர் தனது காத்திரமான அணுகுமுறையின் ஊடாக கணனிவள நிலையம் ஒன்றை பெற்றுத்தந்திருந்தார். அது 2003ம் ஆண்டு ஜீன் மாதம் 16ம் திகதியன்று அப்போதைய கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இதன் காரணமாக களுவாஞ்சிகுடி கிராமம் மாத்திரமின்றி பட்டிருப்புத் தொகுதியின் 36க்கு மேறப்பட்ட வறியகுடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தகவல் தொழிநுட்ப உலகுக்குள் பிரவேசித்தனர் மேலும் அடுத்த ஆண்டில் புதிய இரண்டு மாடிக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நடப்பட்டு அது 2005ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறான கால கட்டத்தில் அயல் கிராமங்களில் இருந்து அதிக மாணவர்கள் இப்பாடசாலையில் அனுமதி பெற்றதன் காரணமாகவும் மாணவர்களின் இடைவிலகல் சடுதியாக வீழ்ச்சியடைந்தமையினாலும் வகுப்பறை கட்டடங்களுக்கு மேலும் தேவை ஏற்பட்டது. அத்தேவையை நிவர்த்திக்கும் வகையில் **World vision** நிறுவனத்தினால் 2007ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் திகதியன்று புதிய 3 மாடிக் கட்டிடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறாக அதிபர் திரு பொன். வன்னியசிங்கம் அவர்களின் ஒப்பற்ற அர்ப்பணிப்பின் பயனாக 2002 தொடக்கம் 2007ம் ஆண்டுக்குட்பட்ட ஐந்து வருட காலப்பகுதியில் பாடசாலையின் பௌதீக வளங்கள் பன்மடங்காக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் தனியாரின் பூரண ஒத்துழைப்புடன் கட்டிடங்கள் அமைக்கப்படுவது அரிதான விடயமாகும். ஆனால் எமது அதிபர் அவர்களின் தொடர்பாடல் திறனுடன் கூடிய சமூக ஈர்ப்பு முயற்சியால் 2010ம் ஆண்டு ஜீன்மாதம் 7ம் திகதி அ. வாசுதேவன் என்பவரால் ஒரு முதலுதவி கட்டிடத்துக்கான அடிக்கல் நடப்பட்டு அவரின் பூரண நிதியுதவியுடன் 2010ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கல்வியின் அசைவாக்கத்தில் ஆசிரியர்களின் வகிபாகமே முன்னிலையில் உள்ளது. கல்வியமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய போதுமான ஆசிரியர்கள் சகல பாடசாலைகளிலும் இருத்தல் வேண்டும். ஆனால் இப்பாடசாலையைப் பொறுத்தவரையில் இவ்வாதம் கோட்பாட்டு ரீதியாக காணப்பட்டது. அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்களின் காலப்பகுதியில் இப்பாடசாலையில் அதிகளவு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கில ஆசிரியர்களுக்கான கடுமையான பற்றாக்குறை நிலவிவந்த இப்பாடசாலையில் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதுடன். கணிதம்,விஞ்ஞானம் ஆகிய முக்கிய பாடங்களுக்கான ஆசிரிய வளங்கள் முழுமையாக பெறப்பட்டனர். மேலும் உயர்தர விஞ்ஞான கலை, வர்த்தக பிரிவுகளுக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதோடு கலைப்பிரிவில் மாணவர்கள் விரும்பிய எந்தவொரு பாடத்தொகுதியையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திய பெருமை எம் அதிபரையே சாரும்.

போதுமான ஆசிரியர் வளங்களையும் கல்விசாரா உழியர்களையும் கொண்டு சிறந்த நிர்வாக கட்டமைப்பொன்றை தோற்றுவித்த எம் அதிபர்கள் தொடர்ந்தேற்சியாக நிலவிவந்த வளப்பற்றாக்குறைக்கு மத்தியிலும்கல்வி அபிவிருத்தியில் பாரிய வெற்றியை பெற்றிருந்தார். (க.பொ.த) சாதாரணதர அடைவு மட்டத்தில் தொடர்ச்சியான ஒரு அதிகரிப்பை பேணிவருகின்ற அதேவேளை தரம்5 புலமைப்பரீட்சையில் கடந்த ஆண்டுகளில் மாவட்டத்தில் முதன்மை பெற்று விளங்கும் அளவிற்கு ஆரம்பக்கல்வி நடவடிக்கைகளையும் காத்திரமான முறையில் கட்டியெழுப்பினார். உயர்தர விஞ்ஞான பிரிவின் வளர்ச்சிக்கு அரும்பங்காற்றிய அதிபர் பொன். வன்னியசிங்கம் அவர்கள் வருடாந்தம் மாணவர்கள் விஞ்ஞான பிரிவிலிருந்து மருத்துவம் பொறியியல், தகவல் தொழினுட்பம் போன்ற பல முக்கிய துறைகளில் பல்கலைக்கழகம் நுளைவதற்கு காலாக அமைந்து காணப்படுகின்றார். கலைத்துறையில் மிக அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற அதே வேளை வர்த்தகத்துறையில் கடந்த வருடம் 10 மாணவர்கள் 3 பாடங்களிலும் யுசித்தி பெற்று சாதனையை நிலை நாட்டியுள்ளனர். இவையனைத்தும் எமது அதிபர் அவர்களின் தூரநோக்குடன் கூடிய கல்வித்திட்டங்களின் விளைவுகளாகும்.


இணைப்பாடவிதான அபிவிருத்தியில் கூடிய கருசனை செலுத்திய எம் அதிபர் அவர்கள் நகர்ப் பாடசாலைகளுக்கு சவாலாக அமையும் வகையில் எமது மாணவர்கள் சகல விதமான இணைப்பாடவிதான செய்றபாடுகளிலும் தயார்படுத்தப்படுவதை உறுதி செய்து வருகின்றார். பாண்ட்வாத்திய அங்குரார்ப்பணம் ஆரம்பப் பரிவிற்கான தனியான் பாண்ட்வாத்தியக் குழுவினை நிறுவியமை 2004ம் ஆண்டில் நாடகம் நடைபெற்ற நாடகவிழா ஒன்றில் எமது பாடசாலை முதலிடம் பெற்றமை அதே ஆண்டில் எமது பாடசாலை நூலகம் மாகாணமட்டத்தில் சிறந்த நூலகமாக தெரிவு செய்யப்பட்டமை ஆசிரியர் தினவிழாக்கள் சரஸ்வதி பூஜை விழாக்கள் சாரணியக்குழுக்கள் சாதனையாளர் பாராட்டு விழாக்கள் என்பன உட்பட கடந்த ஆண்டு இடம்பெற்ற மாபெரும் இல்ல விளையாட்டுப் போட்டி இணையத்தளம் ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டமை போன்ற அம்சங்கள் இணைப்பாடவிதான அபிவிருத்தியில் அம் அதிபர் கண்ட வெற்றிகளின் வெளிப்பாடாகும்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நல்லதொரு சைவத்தொண்டராக விளங்கும் எமது அதிபர் அவர்கள் இக்கல்லூரியின் வரலாறு நெடுகிலும் எல்லா அதிர்பர்கலாலும் காணபட்டு வந்த தெய்வீக கனவை நனவாக்கியிருக்கின்றார்.

கடந்த ஆண்டு கல்லூரி முன்றலில் கலை மகளின் சிலையைகுறுநுகிய காலத்தில் லாவண்யா ஜீவலர்ஸ் உரிமையாளர் திரு. எஸ். யோகராஜா அவர்களின் தனித்துவ ஒத்துழைப்பு பெற்று நிறுவியமானது அவரது நாமம் காலம் காலமாக இக்கல்லூரியில் நிலை பெறுவதற்காக ஒரு சவாலாக அமையும் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பதவியேற்ற நாள் முதல் இன்று வரை இக்கல்லூரியில் தனது ஒவ்வொரு அசைவையும் வரலாற்றின் சுவடுகளாக பதிடந்திருக்கும் எம் அதிபர் திலகம் திரு பொன். வன்னியசிங்கம் அவர்கள் நாம் பெற்றெடுத்த ஓர் அரிய மனித வளமாகும் எமது அதிபர் அவர்களின் தீர்க்கதரிசனமான முகாமைத்தவம் மேலும் பல ஆண்டுகள் தொடரவேண்டும் எமது முதல்வர் நீண்ட ஆயுளைப் பெற்று பல்லாண்டு காலம் கல்விச்சமூத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டும் என இறைஞ்சி நிற்கின்றேன்.



**திரு.ஏ.எம்.பறாஸ்**
(ஆங்கில ஆசிரியர்),
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
(தேசிய பாடசாலை),
களுவாஞ்சிகுடி.

# பள்ளித்தாயே!




செல்வத்தில் செல்வம் கல்விச் செல்வமதை அள்ளி
வழங்கியின்று தொண்ணூற்றி நான்கு ஆண்டுகள் தாண்டி
களுவாஞ்சிகுடி பதி தன்னில் சென்னி நிமிர்ந்து நிற்கும்
நல்லதோர் பள்ளித்தாய் இதுவென்றால் பொய்யாமோ

அன்பான அதிபரோடு ஆசிரிய குழாம் மற்றும்
பண்பான பெற்றோரும் பழைய மாணவரும் சேர்ந்து
என்புருக உழைத்து உயர்த்திய இசைச் சாலையில்
தன்னை உயர்த்திய ஏணியெனக்கொள்வார்
தகையோர் பள்ளித் தாயே



எத்தனை அறிஞர்களை ஈன்று விட்டாய்
எங்கெல்லாம் உன் புகழ் பரப்பிவிட்டாய்
பண்புகள் எமக்கு ஊட்டி வளர்த்து
பட்டதாரிகள் பலரை படைத்து விட்டாய்
நல்லறிவூட்டி எமக்கு பார் தன்னில்
புகழ் பரப்பிவிட்டாய் பள்ளித் தாயே

**இன்பராஜா லிதுசாயினி ,**
தரம் - 08W.
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.

சாதிபேதம் சலிப்பு சலனம் பாராது
சஞ்சலம் எதுவும் பாராது சாலையாய் விளங்குகின்றாய்
அன்னையே எமக்கெல்லாம் ஆதாரமாய் நிற்கும்
கல்வியின் தெய்வமே கலைகளின் கருவூற்றே
என்றும் இளமையுடன் நீ வாழ்ந்து எல்லோருக்கும்
கல்விச் செல்வமதை அள்ளி வழங்க
வாழ்த்துகின்றேன் பள்ளித் தாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயமும் (தேசிய பாடசாலை) கணித விஞ்ஞானப் பிரிவும்

எருவிலைச் சேர்ந்த தம்பிராசா சங்குபதி தம்பதியினருக்கு இளைய மகனாகப்பிறந்த நான் ஆரம்ப கல்வியை மட்/எருவில் கண்ணகி மகாவித்தியாலயத்தில் கற்று வகுப்பு 6 தொடக்கம் 11 வரை மட்/ பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தில் கற்று கா.பொ.த உயர்தரப் படிப்பை கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் கற்று உயிரியல் விஞ்ஞானப் பிரிவிற்கு தெரிவாகி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து விஞ்ஞானமாணி ஆனேன் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக 1998 இல் நியமனம் பெற்று மட்/ கோவில் போரதீவு வி.வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையேற்று அண்ணளவாக மூன்று வருடங்கள் சேவையாற்றி தேவை நிமித்தம் 2001 ம் ஆண்டு மட் /பட்டிருப்பு ம.ம.வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று அதிபர் திரு.S. சாந்தலிங்கம் அவர்களின் தலமையின் கீழ் கடமையைப் பொறுப்பேற்றேன்.

இங்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடன் கணித விஞ்ஞானப் பிரிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆசிரியர்களாக திரு.S.சிவசங்கரலிங்கம் இணைந்த கணிதத்திற்கும், திருமதி ப.கிருபாகரன், திரு.K.யோகேந்திரராசா ஆகியோர் இரசாயனவியலுக்கும், திருமதி.கி.ரவீந்திரன், செல்வி.க.வினிதா ஆகியோர் உயிரியலுக்கும், திரு. நேசராசா பௌதீகவியலுக்கும் கற்பித்துக் கொண்டிருந்தனர் இவர்களுடன் நானும் இரசாயனவியல் பாடத்திற்கு இணைந்து கொண்டேன்.

இக்காலப்பகுதியில் எமது பாடசாலையில் கற்று கா.பொ.த (சா/த) பரீட்சை எடுத்த பின்னர் விஞ்ஞானப் பிரிவு படிப்பதற்காக மாணவர்கள் நகர்ப்புற பாடசாலையை நோக்கி சென்று கொண்டிருந்தது எமது பாடசாலையில் விஞ்ஞானப்பிரிவை வளர்ப்பதற்கு பாரிய பிரச்சனையாக இருந்தது.

2002 ம் ஆண்டு திரு.பொன்.வன்னியசிங்கம் அதிபர் அவர்கள் பாசாலையைப் பொறுப்பெடுத்து பாடசாலையை நடாத்திக் கொண்டிருக்கும் போது விஞ்ஞானப் பிரிவை தொடர்ச்சியாக வளர்ப்பதற்கு பெரும்பாடுபட்டார் மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம் வழங்காமல் மாணவர்களை இங்கே கணித விஞ்ஞானப்பிரிவு கற்குமாறு அறிவுரை வழங்கினார். இதனால் பல பெற்றோர்களின் எதிர்ப்பையும் அதிபர் அவர்கள் சம்பாதிக்க வேண்டிநிலை ஏற்பட்டது.

பெறு பேறுகளை நோக்கும் போது க.பொ.த (உ/த) பரீடசையில் விஞ்ஞானப் பிரிவில் 2001 ம் ஆண்டு எவரும் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவில்லை. 2002 ம் ஆண்டு பல சவால்களின் மத்தியில் 2004ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களை விஞ்ஞானப்பிரிவில் சேர்த்து பல உறுதிமொழிகளை பெற்றோருக்கு வழங்கி மாணவர்களை பிரத்தியேக வகுப்பிற்கு செல்ல வாகன ஒழுங்குகளும் செய்து கொடுத்து கற்றல் கற்பித்தல் நடைபெற்றது. 2002,2003 ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் உயிரியல் பிரிவுக்கு தெரிவான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லாமல் அடுத்த தடவைகள் பரீட்சை எடுக்கப் படித்ததால் இவ்வாண்டுகளிலும் பல்கலைக்கழக அனுமதி பதிவாகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி எடுத்தவர்கள் தோற்றுப் போனதாக சரித்திரமே இல்லை இதற்கமைய தரம் 1 இல் இருந்து 13 வரை கற்ற செல்வன்.ப.சதீஸ்குமார் அவர்கள் 2004 ம் ஆண்டு முதற் தடவையில் மருத்துவத்துறைக்கு தெரிவானார் இது எமது பாடசாலையின் ஒரு மைல் கல்லாக அமைந்தது. தொடர்ந்த பாடசாலையில் நம்பிக்கை கொண்டு புதிய மாணவர்களின் அனுமதியும் கணித விஞ்ஞானகப் பிரிவுக்கு அதிகரித்தது.

2005ம் ஆண்டு செல்வி ந. பிரசாந்தினி மருத்துவ பீடத்திற்குத் தெரிவானார். அத்துடன் செல்வி கோ. அமிர்தலோஜினி அவர்கள் பௌதீக விஞ்ஞானப்பிரிவுக்கு தெரிவாகிச் சென்றனர். 2006ம் ஆண்டு உயிரியல். பௌதீக விஞ்ஞானப்பிரிவுக்கு தெரிவான மாணவர்கள் 2ம் தடவை முயற்சித்தமையால் பல்கலைக்கழக அனுமதி பதிவாகவில்லை.

2007ம் ஆண்டு செல்வன் சோ. சஞ்சயன் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவானார். அத்துடன் செல்வி கேமநில்மியா மருத்துவ பீடத்திற்கு தெரிவானார். மேலும், செல்வன் சுதர்சன் அவர்கள் Environmental Concervation Management துறைக்கும் தெரிவானார். இவ்வாண்டு பாடசாலை பெரிய வெற்றி ஆண்டாக அமைந்தது. அத்துடன் கணித விஞ்ஞானப்பிரிவுக்கு சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

2008ஆம் ஆண்டு செல்வன் ம. தினேஸ் Health promotation துறைக்கும் செல்வன் உ. சசிகுமார் Bsc Nursing துறைக்கும் தெரிவாகிச் சென்றனர்.

2009ம் ஆண்டு செல்வன் T. தனுஜன் பொறியியல் பீடத்திற்கும் செல்வன் ர. மோகனப்ரசன்னா Food Science and Techonology இற்கும் செல்வன் S. லோகேஸ்வரம் Industrial stats management துறைக்கும் செல்வன் Y. வினோராஜ் computer science துறைக்கும் செல்வன் ஜெயசீலன் பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்கும் தெரிவானார்கள்

2009ம் ஆண்டு எமது பாடசாலையில் இருந்து கணித விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த திரு. திருநேசராசா, திருமதி வே. பத்மநாதன், திருமதி ப. கிருபாகரன் ஆகியோர் இடமாற்றம் பெற்று சென்றனர். இது பாரிய சிக்கலை ஏற்படுத்தியது இதற்கு முன்னர் திருமதி கி. ரவீந்திரன் இடமாற்றம் பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2010ம் ஆண்டு செல்வி க.வினிதா MSC in science education கற்கை நெறிக்காக 18 மாதங்கள் விடுமுறையில் சென்றார்.

இந்நிலையில் திரு. கோ. கோவண்ணன் ஆசிரியர் அவர்களை அதிபர் அவர்கள் தற்காலிகமாக இணைப்பதாக எமது பாடசாலைக்கு பெற்றெடுத்தார். திரு.P. செல்லத்துரை ஆசிரியர் அவர்களின் பெருமுயற்சியால் அவர் நிரந்தரமாக எமது பாடசாலையில் இணைத்துக் கொள்ளப்பட்டார். உயிரியல் பாடத்திற்கு ஆசிரியர் இல்லாத நிலையில் அதிபர் அவர்கள் திரு. மு. பிரதீபன் ஆசிரியர் அவர்களை தற்காலிகமாக இணைப்பாக வரவழைத்தார்.

2010ம் ஆண்டு செல்வன் கோ. நவநீதன் பொறியியல் பீடத்திற்கும் செல்வன் வ. டினேஸ்குமார் பௌதீக விஞ்ஞாப்பிரிவக்கும் தெரிவானார்கள்

2011ம் ஆண்டு செல்வி M. பிரசாந்தி உயிரியல் பாடத்திற்கு நியமனம் பெற்று வந்தார். அத்துடன் செல்வி R.D ஜெயராஜ் (தற்காலிக இணைப்பு) அவர்களும் உயிரியல் பாடத்திற்காக நியமிக்கப்பட்டு ஏதோ காரணத்தால் இருவரும் சிறிது காலத்தின் பின் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். மீண்டும் 2011 July மாதம் செல்வி க. வினிதா கற்கை நெறியை முடித்து சேவையில் இணைந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011ம் ஆண்டு செல்வன் ந. சுலக்சன் பொறியியல் பீடத்திற்கும் செல்வி ச. நிதர்சிகா பொறியியல் பீடம் (TM) இற்கும் செல்வி ச. டினோஜி கனிய அளவையியல் (Quantity Ser QS) இற்கும் செல்வன் ஆ. பகீசன் பௌதீக விஞ்ஞானப்பிரிவுக்கும் செல்வி ந. குளோஜியா BSC Nursing இற்கும் செல்வி கு. வினோஜா டீயுலினா விலங்கு மருத்துவ பீடத்திற்கும் செல்வன் க. சரணவணன் BSC Nursing பிரிவுக்கும் தெரிவாகிச் சென்றுள்ளனர்.

2012ம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களில் செல்வன் ஜீ. பிரசாந் 3B சித்திகளைப் பெற்று மாவட்ட நிலையில் 21 வது நிலையைப் பெற்றள்ளார். என்பதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். 2012ம் ஆண்டு திரு. தெய்வீகன் ஆசிரியர் இணைந்து கணிதப் பாடத்திற்கும் இடமாற்றம் பெற்று வந்தனர். அத்துடன் திரு. விஜயதர்சன் இணைந்த கணித பாடத்திற்கும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

2013ம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சை எடுப்பதற்கு கணிதப்பிரிவில் 28 மாணவர்களும் (22 ஆண்கள் 06 பெண்கள்) உயிரியல் பிரிவில் 21 பேரும் (07 ஆண்கள், 14 பெண்கள்) 2014 ம் ஆண்டு பரீட்சை எடுப்பதற்கு கணிதப்பிரிவில் 20மாணவர்களும் (15 ஆண்கள் 05பெண்கள்) உயிரியல் பிரிவில் 18 மாணவர்களும் (09 ஆண்கள் 09 பெண்கள் ) கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

2012 டிசம்பர் க.பொ.த (ச/த) பரீட்சை எடுத்து சித்தி எய்திய மாணவர்களில் எமது பாடசாலையைச் சேர்ந்த வேறுபாட பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் அனுமதி பெற்றுக் கொண்டிருந்தனர். விஞ்ஞானப் பிரிவுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை இதுவரை கணக்கிடப்படவில்லை.

2001 தொடக்கம் 2013 காலப்பகுதிவரை எமது பாடசாலையின் விஞ்ஞானப்பிரிவு துரித வளர்ச்சியடைந்துள்ளது. என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் அதிபர் திரு. பொன். வன்னியசிங்கம் அவர்களது காலப்பகுதியில் இவ்வளர்ச்சி அடைந்துள்ளது. என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளுவதுடன் இதற்கு விஞ்ஞானப்பிரிவு ஆசிரியர்களும் பாரிய பங்களிப்பு செய்துள்ளார்கள் என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

**திரு. த. கமலநாதன்**
*(Bsc, P.G.D.E, SI T & 2I)*
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் , தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிருப்பு மகா வித்தியாலயத்தின் விளையாட்டுத்துறையின் சாதனைகள்

## (2002 ம் ஆண்டிலிருந்து இன்று வரை ...............)

மட்/பட்டிருப்பு மகா வித்தியாலய தேசிய பாடசாலையானது பல துறைகளிலும் பல விதமான சாதனைகளை நாடத்திக் கொண்டு செல்கின்றது அவ்வரிசையில் விளையாட்டுத் துறையும் ஒன்றாகும்.

இத்துறையானது 2002ம் ஆண்டில் கோட்ட, வலய, மாவட்டகளில் பெருவிளையாட்டுக்களிலும் மெய்வல்லுனர் விளையாட்டுகளிலும் பல இடங்களைப் பெற்றுக் கொண்டது மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் 19 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் செல்வன்.ம. இந்துஜன் என்பவர் மாகாணமட்டத்தில் 4ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை இப்பாடசாலையின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

2003ம் ஆண்டு கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட பெருவிளையாட்டுக்களில் 8 முதலாம் இடங்களையும், 6 இரண்டாம் இடங்களையும் பெற்றது மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட 19 வயதின் கீழ் ஆண்களுக்கான வொலிபோல் போட்டியில் 2ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது இவ்வாண்டில் நடை பெற்ற மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 32 இடங்கள் கிடைக்கப் பெற்றன. இதில் 17 முதலாம் இடங்களையும் 15 இரண்டாம் இடங்களையும் கிடைக்கப்பெற்றன். மாவட்ட மட்டத்தில் 8 முதலாம் இடங்களையும், 5 இரண்டாம் இடங்களையும் 14 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது 19 வயதின் கீழ் பெண்களுக்காதன வொலிபோல் நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தஜனைப் பெற்றனர் மாகாண மட்டத்தில் 19 வயதின் கீழ் பெண்களுக்கான உயரம் பாய்தலில் செல்வி ளு. சுலக்கசனா என்பவர் 1ம் இடத்தினைத் தட்டிக் கொண்டார். இதேபோல் செல்வன் ம. இந்துஜன் நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் 4ம் இடத்தினையும் எஸ். சுவேந்திரன் என்பவர் 21 வயதின் கீழ் ஆண்களுக்கான 200அ நிகழ்ச்சியில் 4ம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

2004ம் ஆண்டு கோட்மட்டத்தில் நடாத்தப்பட்ட பெருவிளையாட்டுக்களில் 7 நிகழ்ச்சியில் இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டது தடகன போட்டி நிகழ்ச்சியில் 30 இடங்களைப் பெற்றது அதில் 9 1ம் இடங்களையும், 18 இரண்டாம் இடங்களையும் 3 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது வலய மட்டத்தில் நடந்த 3 பெரு விளையாட்டுக்களும் 20 தனி விளையாட்டுக்களும் தெரிவாகி மாகாணமட்டத்துக்குத் தகுதி பெற்றது. மகாண மட்டத்தில் நடந்த 10 தனி நிகழ்ச்சியில் இரண்டு நிகழ்ச்சிகள் தெரிவு செய்யப்பட்டது.19 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் செல்வன் ம. இந்துஜன் 1ம் இடத்தினையும் உயரம் பாயும் நிகழ்ச்சியில் 4ம் இடத்தினையும் தட்டிக் கொண்டார்.

2005ம் ஆண்டு நடைபெற்ற கோட்ட மட்டத்திலான பெரு விளையாட்டுக்களில் 5 இடங்களைப் பெற்றது. அதில் 1ம் இடம் இரண்டும் 2ம் இடம் மூன்றும் ஆகும். மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 41 நிகழ்ச்சிகள் தெரிவு செய்யப்பட்டு அதில் 25 முதலாம் இடங்களையும் 12 இரண்டாம் இடங்களையும் 5 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது. வலய மட்டப் போட்டியில் 4 பெரு விளையாட்டுக்களையும் 24 மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளையும் தட்டிக் கொண்டது. அதில் 12 1ம் இடங்களையும் 8 இரண்டாம் இடங்களையும் 5 மூன்றாம இடங்களையும் கெற்றுக் கொண்டது மாவட்ட மட்டத்தில் மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 10 இடங்களைப் பெற்று அதில் 5 முதலாம் இடங்களையும், 2 இரண்டாம் இடங்களையும் 3 மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டது மாகாண மட்டப் போட்டியில் 6 இடங்களை தனி நிகழ்ச்சியில் பெற்றுக் கொண்டது.அதில் 1ம் இடங்கள் இரண்டும் 3ம் இடங்கள் இரண்டும் 4ம், 6ம் இடங்களையும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006ம் ஆண்டு கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டியில் 8 பெரு விளையாட்டுக்களில் வெற்றி பெற்றது அதில் 4 1ம் இடத்தினையும், 4 இரண்டவும் இடத்தினையும் பெற்றதோடு அணிநடை போட்டியிலும் 1ம் இடத்தினைத் தட்டிக் கொண்டது. மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 46 நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியது. அதில் 29 நிகழ்ச்சிகளில் 1ம் இடங்களையும் 9 இரண்டாம் இடங்களையும் பெற்றது. வலய மட்டப் போட்டியில் 3 பெரு விளையாட்டுக்களிலும் 34 மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளிலும் வெற்றி பெற்றது அதில் 24 முதலிடங்களையும் 8 இரண்டாம் இடங்களையும் 2 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது. மாவட்ட மட்டப் போட்டியில் 3 பெரு விளையாட்டுக்களையும் 34 மெய்சல்லுனர் நிகழ்ச்சிகளிலும் வெற்றிபெற்றது. மாவட்டமட்டப் போட்டியில் 17 மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்று அதில் 9 நிகழ்ச்சிகளில் 1ம் இடங்களைப் பெற்றுக் கொண்டது 6 இரணடாம் இடங்களைப் பெற்றது 2 மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டது. மாகாண மட்த்தில் 21 வயதின் கீழ் ஆண்டுகளுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் செல்வன் ம. இந்துஜன் என்பவர் 1ம் இடத்தினையும் அதே மாணவன் தேசியமட்டத்தில் 6ம் இடத்தினையும் பெற்றுச் சிறப்பினை தேடித்தந்தார்.

2007ம் ஆண்டு கோட்ட மட்டத்திலான பெரு விளையாட்டுக்களில் 6 விளையாட்டுக்கள் தெரிவாகி 2 முதலிடங்களையும் மூன்று இரண்டாம் இடங்களையும் பெற்றது மெய் வல்லுனர் நிகழ்ச்சிகளில் 25 இடங்களைப் பெற்றது அதில் 8 முதலிடங்களையும் 6 இரண்டாம் இடங்களையும் ஏனையவை மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது. வலய மட்டத்தில் பெரு விளையாட்டுக்களில் மூன்று இடங்களையும், மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 32 இடங்களையும் பெற்றது அதில் 20 முதலிடங்களையும் 11 2ம் இடங்களையும் பெற்றுக்கொண்டது. மாவட்ட மட்டத்தில் மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 4 1ம் இடங்களையும் 9ம் இரண்டாம் இடங்களையும் 33ம் இடங்களையும் பெற்றுக்கொண்டது. மாகாண மட்டத்தில் 15 வயதின் கீழ் ஆண்களுக்கான 110அ தடைதாண்டல் நிகழ்ச்சியில் எஸ். யேசுவா என்பவர் மூன்றாம் இடத்தினையும், 21 வயதின் கீழ் ஆண்களுக்கான 4ஓ100அ அஞ்சல் ஓட்டத்தில்3ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

2008ம் ஆண்டு கோட்ட மட்ட விளையாட்டில் பெரு விளையாட்டுக்களில் 7 நிகழ்ச்சிகள் தெரிவாகி அதில் 4 முதலாம் இடங்களையும் பெற்றன. மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 32 நிகழ்ச்சியில் தெரிவு செய்யப்பட்டு 12 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தினையும், 11 நிகழ்ச்சிகள் இரண்டாம் இடத்தினையும் 9 நிகழ்ச்சிகள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. வலய மட்டத்தில் 15 வயதின் கீழ் ஆண்களுக்கான வொலிபோல் நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும், மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றது. 13 - 19 வயதின் கீழ் பெண்களுக்கான இரண்டு படியில் மாவட்ட மாகாண மட்டங்களில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர். 19 வயதின் கீழ் ஆண்களுக்கான வொலிபோல் நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தினைப் பெற்றது. வலய மட்ட மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 24 தனி நிகழ்ச்சிகளில் 17 முதலிடங்களையும் பெற்றது. மாவட்ட மட்டத்தில் செஸ் மூன்றாம் இடத்தினையும் 12 நிகழ்ச்சிகளில் இரண்டு முதலாம் இடங்களையும் ஐந்து இரண்டாம் இடங்களையும் 5 மூன்றாம் இடங்களையும் பெற்றது.

மெய் வல்லுனர் நிகழ்ச்சியில் மகாண மட்டத்தில் 21 வயதின் கீழ் பெண்களுக்கான நீளம் பாய்தலில் செல்வி உ. பிரேதினி மூன்றாம் இடத்தினையும் போலூன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் செல்வி. கு. கோகிதா இரண்டாம் இடத்ததையும் 19 வயதின் கீழ் பெண்களுக்கான உயரம் பாய்யும் நிகழ்ச்சியில் செல்வி தி.நியோமி . அகல்யா இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள்.

2009ம் ஆண்டு கோட்ட மட்டத்தில் நடைபெற்ற பெருவிளையாட்டுக்களில் 10 விளையாட்டில் 5 முதலிடங்களையும் 5 இரண்டாமிடங்களையும் பெற்றது மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 79நிகழ்சிகளில் 31 முதலிடங்களையும் ஏனைய நிகழ்ச்சிகள் 28 இரண்டாம் இடங்களையும் மூன்றாம் இடங்களையும் பெற்றது வலய மட்டத்தில் 6 பெருவிளையாட்டுக்களில் நான்கு முதலிடங்களையும் இரண்டு இரண்டாம் இடங்களையும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநிகழ்ச்சிகளில் 33 நிகழ்ச்சிகள் 15 முதலிடங்களையும் 18 இரண்டாம் இடங்களையும் பெற்று. மாவட்ட மட்டத்தில் 15 இடங்களில் 6 முதலிடங்களையும் 6 இரண்டாம் இடங்களையும் 3 மூன்றாம் இடங்களையும் பெற்றது. மாகாண மட்டப் போட்டியில் 13 வயதின் கீழ் ஆண்களுக்கான 100 மீற்றரில் ச.சதுர்சன் 1ம் இடத்தினையும், அதே வயதுப் பிரிவில் எஸ்.யதுசியன் 200 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 3ம் இடத்தினையும் 15 வயதின் கீழ் ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டலில் ரீ.டமராஜ் 4வது இடத்தினையும் 17 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் ந.மிதுர்சன் 3ம் இடத்தினையும் 21 வயதின் ஆண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் நிகழ்ச்சியில் பி.நிறோசன் 3ம் இடத்திகளையும் 22 வயதின் கீழ் பெண்களுக்கான உயரம் பாய்தலில் (இரண்டாம் இடம்) 100 மீற்றர் தடைதாண்டல் நிகழ்ச்சியில் ந.நியோமி அகல்யா 4ம் இடத்தினையும், 21 வயதின் கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் கு.கோகிதா இரண்டாம் இடத்தினையும் 15 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் எஸ்.சஞ்ஜெய் 2ம் இடத்தினையும் பெற்று சாதனை படைத்தனர். இதில் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட தடைகளப் போட்டியில் 15 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் ச.சஞ்ஜெய் என்பவர் 5.59 மீற்றர் தூரத்தினைப் பாய்ந்து 4ம் இடத்தினையும் தட்டிக் கொண்டார்.

2010ம் ஆண்டு கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் குழு விளையாட்டில் 12 நிகழ்ச்சிகள் தெரிவு செய்யப்பட்டு அதில் 7 முதலிடங்களையும் 5 இரண்டாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது. தனி நிகழ்ச்சியில் 56 நிகழ்ச்சிகளில் 19 நிகழ்ச்சிகள் முதலிடத்தினையும், 19 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடங்களையும் ஏனையவை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. வலய மட்ட விளையாட்டில் 10 பெருவிளையாட்டுக்கள் தெளிவு செய்யப்பட்டு 8 முதலிடங்களையும் 2 இரண்டாம் இடங்களையும் பெற்றது. அமய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 36 நிகழ்ச்சிகள் தெரிவாகி அதில் 18 நிகழ்ச்சிகள் முதலாம் இடத்தினையும் 17 நிகழ்ச்சிகள் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. மாவட்ட நிலையில் 13 - 19 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான எல்லே விளையாட்டில் மூன்றாம் இடத்தினைப் பெற்றது. அதேபோல் 17 வயதின் கீழ் ஆண் 19 வயதின் கீழ் ஆண்களுக்கான வொலிபோல் நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தினைத் தட்டிக் கொண்டது. 15 - 19 வயதின் கீழ் பெண்களுக்கான கபடி நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றது. மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 10 நிகழ்ச்சிகள் தெரிவாகி அதில் 8 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தினையும் ஏனையவை இரண்டாம், மூன்றாம் நிலைகளையும் பெற்றன. மாகாண மட்டத்தில் 9 நிகழ்ச்சிகள் தெரிவாகி அதில் செல்வி. ம. ஜினதா 19 வயதின் கீழ் பெண்களுக்கான உயரம் பாய்தலில் 1ம் இடத்தினையும் 21 வயதின் கீழ் பெண்களுக்கான உயரம் பாய்தல், 110அ சட்டவேலி நிகழ்ச்சிகளில் செல்வி. நி. நியோமி அகல்யா இரண்டாம் இடங்களையும் பெற்றார். 17 வயதின் கீழ் ஆண்களுக்கான முப்பாச்சல் நிகழ்ச்சியில் உ. ஜீவகுமார் மூன்றாம் இடத்தனையும், 17 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தல் 400அ சட்டவேலி ஆகிய நிகழ்ச்சிகளில் 4ம் இடங்களையும் பெற்றார் 21 வயதின் கீழ் 400அ சட்டவேலி நிகழ்ச்சியில் லூ. கிறிஸ்ரினா நிறோஜினி 4ம் இடத்தினைப் பெற்றார்.

2011ம் ஆண்டில் கோட்ட மட்ட விளையாட்டில் 15 பெருவிளையாட்டுக்கள் தெரிவாகி அதில் 12 முதலிடங்களையும் 3 இரண்டாம் இடங்களையும் பெற்றது. மெய் வல்லுனர் நிகழ்ச்சியில் 42 நிகழ்ச்சிகள் தெரிவாகி 32 முதலிடங்களையும் 4 இரண்டாம் இடங்களையும் 8 மூன்றாம் இடங்களையும் பெற்றனர். வலய மட்டத்தில் 12 பெரு விளையாட்டுக்கள் தெரிவு செய்யப்பட்டு 8 முதலிடங்களையும் 4 இரண்டாம் இடங்களையும் பெற்றது. மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 24 தெரிவாகி 13 நிகழ்ச்சிகள் முதலிடங்களையும் 11 நிகழ்ச்சிகள் இரண்டாம் இடங்களையும் பெற்றது. மாவட்ட மட்டத்தில் குழுவிளையாட்டில் இரண்டு முதலிடங்களையும், 1 இரண்டாம் இடத்தினையும் 1 மூன்றாம் இடத்தினையும் பெற்றது. மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 13 இடங்களைப் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவாகினர் மாகாண மட்டத்தில் வெல்வி. ம. ஜினதா உயரம் பாய்தலில் இரண்டாம் இடத்தினையும் 19 வயதின் கீழ் ஆண்களுக்கான முப்பாய்ச்சல் நிகழ்ச்சியில் செல்வன்.உ.ஜீவகுமார் 4 ம் இடத்தினையும் பெற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் ஆண்டு கோட்ட மட்டத்தில் 21 பெருவிளையாட்டுக்களில் 7 முதலிடங்களையும் 8 இரண்டாம் இடங்களையும் பெற்றது. மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 45 நிகழ்ச்சிகள் தெரிவாகி 18 முதலிடங்களையும் ஏனையவை இரண்டாம் மூன்றாம் நிலைகளையும் பெற்றது. வலய மட்டத்தில் பெருவிளையாட்டுக்கள் 15 தெரிவாகி 7 முதலிடங்களையும் 8 இரண்டாம் இடங்களையும் பெற்றது. தனி நிகழ்ச்சிகளில் 14 நிகழ்ச்சிகள் தெரிவாகி மாகாண மட்டத்திற்கு தகுதி பெற்றனர். மாகாண மட்டத்தில் 19 வயதின் கீழ் ஆண்களுக்கான அஞ்சல் ஓட்டம் 4ம் இடத்தினையும் 19 வயதின் கீழ் ஆண்களுக்கான 400அ சட்டவேலி நிகழ்ச்சியில் வி. கரிகரன் 4ம் இடத்தினையும் 17 வயதின் கீழ் ஆண்களுக்கான முப்பாய்ச்சல் நிகழ்ச்சியில் செல்வன். சே. சதுர்சன் 4ம் இடத்தினையும் 21 வயதின் கீழ் பெண்களுக்கான 100m சட்டவேலி நிகழ்ச்சியில் வெல்வி.எஸ்.சர்மிலா என்பவரும் 4ம் இடத்தினையும் பெற்றனர்.

2013ம் ஆண்டு கோட்ட மட்டத்தில் 23 பெருவிளையாட்டுக்களில் 17 முதலிடங்களையும் 6 இரண்டாம் இடங்களையும் பெற்று கோட்ட மட்டத்தில் முன்னணியினை வகித்துள்ளது. தனி நிகழ்ச்சிகளில் 24 நிகழ்ச்சிகள் தெரிவு செய்யப்பட்டு 17 நிகழ்ச்சிகள் வலய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன. வலய மட்டத்தில் 15 குழு விளையாட்டுக்கள மாகாண மட்டத்திற்கு தெரிவாகி உள்ளன. அதில் 8 முதலிடங்களையும் ஏனைய 7 நிகழ்ச்சிகளும் இரண்டாம் இடங்களையும் பெற்றது. மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் 15 நிகழ்ச்சிகள் தெரிவு செய்யப்பட்டு அதில் 10 நிகழ்ச்சிகள் முதலாம் இடத்தினையும் 5 இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். இவ் நிகழ்ச்சிகள் அனைத்தும் மாகாண மட்டத்தில் போட்டி இடுவதற்குத் தகுதி பெற்றுள்ளது. வெளி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள். 2004ம் ஆண்டில் வட கிழக்கு தமிழர் இளையோர் கழகத்தினால் நடாத்தப்பட்ட தடகளப் போட்டியில் 17 வயதின் கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் 1ம் இடத்தினை செல்வன். ர.ரமணா என்பவர் தட்டிக் கொண்டார்.

2006ம் ஆண்டில் தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளினால் பாடசாலையில் நடாத்தப்பட்ட அணிநடைப் போட்டியில் 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

2011ம் ஆண்டு ஜுளுஜ யினால் நடாத்திப்பட்ட 16 வயதின் கீழ் ஆண்களுக்கான வொலிபோல் நிகழ்ச்சியில் மூன்றாம் இடத்தினையும் 18 வயதின் கீழ் ஆண்களுக்கான வொலிபோல் நிகழ்ச்சியில் முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்காட்டியவாறு எமது பாடசாலையானது விளையாட்டுத் துறையில் 2002ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பலதுறைகளிலும் சாதனைகளைப் படைத்துள்ளது. இங்கு உள்ளக விளையாட்டிலும் வெளியக விளையாட்டிலும் மாணவர்கள் பங்கு பற்றி பாடசாலைக்குச் சிறப்பினை ஏறபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். எமது பாடசாலையில் உள்ளக விளையாட்டாக கரம், செல், பூப்பந்து ஆகிய நிகழ்ச்சிகளிலும் வெளியக விளையாட்டாக கபடி (ஆண், பெண்) வொலிபோல் ஆண்கள் 15,17,19 கிறிக்கட் (ஆண்) வலைப்பந்து 9பெண் 15,17,19) காற்பந்து (ஆண் 15,17, 19 வயதுப்பிரிவு) கூடைப்பந்து (ஆண், பெண்) ஆகிய குழுவிளையாட்டுக்களில் கோட்டம், வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் சிறப்பிடத்தினைப் பெற்றிருக்கின்றன. எனவே எதிர்காலத்திலும் எமது பாடசாலையில் விளையாட்டுத்துறை பல வகையான சாதனைகளைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

**உடற்கல்வி ஆசிரியர்கள்,**

மட் /பட்டிருப்பு ம.ம.வி
தேசியபாடசாலை,
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயம் தொடர்பான போட்டி முடிவுகளும் மாணவர்களது பெயர் விபரங்களும்

## 1. அறநெறிவிருத்தி இந்துசமய அறிவுப்போட்டி – 2011

**வலய மட்டம் - பொது**

பண்ணிசை - 3ம் இடம் - இ. ரிஷிகேசன்
கோலம் போடுதல் - 1ம் இடம் - தெ. யுவிதா
- இ. சுபாங்கனி

**முதலாம் பிரிவு**

பேச்சு - 2ம் இடம் - பி.லிசாகரி
பேச்சு - 3ம் இடம் - ஆ. லோஷனன்
பஞ்சபுராணமனனம் - 1ம் இடம் - வி.குவினா

**இரண்டாம் பிரிவு**

பஞ்சபுராணமனனம் - 1ம் இடம் - ம. சுரேகா
பேச்சு - 3ம் இடம் - பா. தர்ஷகா
வினாவிடை - 3ம் இடம் - க. தஷானி

**மூன்றாம் பிரிவு**

பேச்சு - 2ம் இடம் - இ. ரதிவதனா -
வினாவிடை - 1ம் இடம் - தே. லோஜனா
- 3ம் இடம் - ர. சுருதி
பஞ்சபுராணமனனம் - 2ம் இடம் - இ. மாதினி

**நான்காம் பிரிவு**

பேச்சு - 1ம் இடம் - ப. ராஜினி

## கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டி

கீழ்ப்பரிவு - கட்டுரை - செல்வி பிரபாகரன் லிசாகரி (ஆறுதல் பரிசு)
கீழ்ப்பிரிவு - கட்டுரை - செல்வன் ஆதவன் லோஷனன் (ஆறுதல் பரிசு)
மேற்பரிவு - கவிதை - 2ம் இடம் - செல்வி நடராஜா தனுஷ்கா

## சித்தாண்டி யோகர்சுவாமி சைவமகளிர் இல்லம் யோகர்சுவாமிகளின் குரு பூசையை முன்னிட்டு நடாத்திய நற்சிந்தனை பஞ்சபுராணமனனப் போட்டிகள் – 2012

**வலயமட்டம்**

ஆரம்பநிலை- தரம் 4, 5 - 3ம் இடம் - செல்வி பி. விபாஞ்சனி
முதல் நிலை - தரம் 6, 7 - 1ம் இடம் - செல்வி சா. சஸ்டிகா
சிறப்புப்பரிசு - செல்வி ஈ. சப்னா
இடைநிலை - தரம் 8, 9 - 1ம் இடம் - செல்வி நா. மிதுஷிகா
- 3ம் இடம் - செல்வி. இ. ரிஷிகேசவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுநிலை - தரம் 10, 11 - 2ம் இடம் - செல்வி பே. மோணுஜா
- 3ம் இடம் - வெல்வி சி. லுக்ஷியா

சிரேஸ்டநிலை - தரம் 12, 13
- பேச்சு - 1ம் இடம் - செல்வி தி. நிவேதா
- 2ம் இடம் - செல்வி ப. நிரோஜா

## சுவாமி விவேகானந்தரின் 150வது ஆண்டு நிறைவு நிகழ்வு
## கட்டுரைப்போட்டி

1ம் இடம் - ப. டிறேசியானா (தரம் - 10)
3ம் இடம் - பி. லிசாகரி (தரம் - 6)
சிறப்பு பரிசு - ர. வருணா
- ர. மதுவந்தி மேற்பிரிவு

---

# தாயன்பு



அன்புக்குப் பண்பாய்
அரவணைப்புக்குத் தாயாய்
என்றும் எமக்காக
வாழ்பவள் அன்னையே

அம்மா என்ற மூன்றெழுத்தில்
உலகையே அன்பால் ஆழுகிறாள்
அன்புக்கு இலக்கணம் என்று
பலரும் கூறுபவர்.

உறவுகளிலே பல உறவுகள் உண்டு
அதில் தாய், தந்தை உறவே
அன்பான உறவு

காலம் எனும் கண்ணீரில்
வாழ்ந்து காலங்கள் ஓடி விட்டாலும்
பொய்யாலும் நான் வாழ்ந்து - உன்
காலடியில் நான் வாழ்வேன்

உத்தமன் எனும் ஓசை நான் கேட்பேன்
உறவு எனும் காகிதத்தில் நான் வாழ்ந்தேன்
நியாயமான வாழ்க்கை எனும் வாழ்வு காட்டி
நிதமான வாழ்வு வாழ்ந்த என் தாயே
உன் வாழ்வு வளரட்டும்
உன் வையகம் வளரட்டும்....

**அருளானந்தம் ஐஸ்வரியா,**
12W
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்,
தேசிய பாடசாலை,
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
தேசியபாடசாலை
2033 தொடக்கம் 2013 வரையான மாணவர் தொகை விபரம்

| தொ.இல | ஆண்டு | 1-5 | 6-11 | 12-13 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2003 | 425 | 749 | 223 | 1397 |
| 2 | 2004 | 452 | 793 | 213 | 1458 |
| 3 | 2005 | 482 | 850 | 249 | 1581 |
| 4 | 2006 | 529 | 995 | 245 | 1769 |
| 5 | 2007 | 548 | 1075 | 277 | 1900 |
| 6 | 2008 | 552 | 1042 | 467 | 2061 |
| 7 | 2009 | 573 | 1064 | 488 | 2125 |
| 8 | 2010 | 573 | 1113 | 440 | 2126 |
| 9 | 2011 | 573 | 1133 | 421 | 2127 |
| 10 | 2012 | 600 | 995 | 624 | 2219 |
| 11 | 2013 | 618 | 1127 | 541 | 2286 |

## கடந்த 5 வருடங்களில் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

| ஆண்டு | 100 புள்ளிக்கு மேல் பெற்றோர் | புலமைப் பரிசில் பெற தகுதி பெறுவோர் |
|---|---|---|
| 2007 | 34 | 11 |
| 2008 | 18 | 20 |
| 2009 | 46 | 20 |
| 2010 | 47 | 24 |
| 2011 | 46 | 27 |
| 2012 | 59 | 31 |

## கடந்த 5 வருடங்களில் க.பொ.த (உயர் தரம்) வகுப்பில் சித்திபெற்ற மாணவர்களினது விபரம்

| ஆண்டு | பல்கலைக்கழக தகுதி பெற்றுள்ளமாணவர்கள் | பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளமாணவர்கள் |
|---|---|---|
| 2007 | 98 | 26 |
| 2008 | 107 | 22 |
| 2009 | 117 | 26 |
| 2010 | 92 | 25 |
| 2011 | 98 | 38 |

## கடந்த 5 வருடங்களில் க.பொ.த (சாதாரணதரம்)வகுப்பில் சித்திபெற்ற மாணவர்களினது விபரம்

| ஆண்டு | சித்திபெற்றோர் |
|---|---|
| 2007 | 94 |
| 2008 | 77 |
| 2009 | 73 |
| 2010 | 113 |
| 2011 | 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 94th Anniversary Celebrations










MARUTHY PRINTERS, KALUTHAVALAI. 0778842223.

noolaham.org | aavanaham.org